ஹகீகத் கிதாபவி வெளியீட்டகம் இல: 8

நம்பிக்கையும் இஸ்லாமும்

'இதிகாட் - நாமா' வின்
சிறுகுறிப்புடன் கூடிய மொழிபெயர்ப்பு

ஆசிரியர்:

மௌலானா தியாஅத்-தீன் க்ஹாலித் அல்-பக்தாதி

தலைசிறந்த வலீ, அல்லாஹ் தஆலாவின் அருட்கொடைகளின் ஒரு களஞ்சியம், சகல மதிப்பும் வாய்ந்த உயர்ந்த மனிதர், பெறுவதற்கரிய அறிவின் சிகரம், சத்தியத்தின், உண்மையின் மற்றும் மார்க்கத்தின் ஒரு சுடர்

துருக்கிய மொழிபெயர்ப்பு:

ஹுஸைன் ஹில்மி இஸிக்

ஆங்கில மொழிபெயர்ப்பு:

ஹகீகத் கிதாபவி

முப்பத்தி ஓராவது பதிப்பு

ஹகீகத் கிதாபவி

தாருஸ்ஸபீகா கேட். 53/A P.K.: 35

34083 பாதிஹ் - இஸ்தான்பூல்/துருக்கி

தொலைபேசி: 90.212.523 4556-532 5843 பெக்ஸ்: 90.212.523 3693

http://www.hakikatkitabevi.com

மின்னஞ்சல்: info@hakikatkitabevi.com

ஜூன்-2016

குறிப்பு

இதிகாட் - நாமா' வின் ஆசிரியர், மௌலானா தியாஅத்-தீன் க்ஹாலித் அல்-பக்தாதி அல்-உஸ்மானி (ஹிஜ்ரி:1192/ கி.பி 1778 இல் பக்தாதின் வட பகுதியான ஷஹ்ராஸூரில் பிறப்பு, ஹி.1242/ கி.பி 1826 இல் டமஸ்கஸில் மறைவு, குத்திஸ ஸிர்ருஹ்), அவர்கள் மூன்றாவது கலீபாவான உஸ்மான் துன்-நூரைன் 'ரழியல்லாஹு தஆலா அன்ஹு' அவர்களின் வம்சாவளியைச் சேர்ந்தவர் என்பதால் 'அல்-உஸ்மானி' என அழைக்கப்பட்டார்கள். அவர் தனது சகோதரரான ஹஸ்ரத் மௌலானா மஹ்மூத் ஸாஹிப் அவர்களுக்கு மிகப்பெரிய அறிஞரான அன்-நவவி அவர்களின் அல்-அஹாதீஸ் அல்-அர்பஊன் என்ற நூலிலிருந்து இரண்டாவது ஹதீஸ் ஷரீபான புகழ் பெற்ற ஹதீஸ் அல்-ஜிப்ரீலைக் கற்றுக் கொடுக்கும் போது ஹஸ்ரத் ஸாஹிப் தனது மூத்த சகோதரரிடம் அந்த ஹதீஸுக்கான ஒரு விளக்கவுரையை எழுதுமாறு வேண்டினார். மௌலானா க்ஹாலித் தனது சகோதரரின் இளகிய மனதிற்காகக் கருணை கொண்டு, அவரது வேண்டுகோளை ஏற்று, அந்த ஹதீஸ் ஷரீபிற்கு பாரசீக மொழியில் ஒரு நூலில் விளக்கமளித்தார். அதற்கு 'இதிகாட் - நாமா' எனத் தலைப்பிட்டார். அதன் துருக்கிய மொழிபெயர்ப்பான, 'ஹெர்கெஸ் லாஸிம் ஓலன் ஈமான்' ஆங்கிலத்திலும் (தற்போதைய வடிவமான நம்பிக்கையும் இஸ்லாமும்), பிரெஞ்சு மொழியிலும் (போய் எட் இஸ்லாம்), ஜெர்மனிய மொழியிலும் (க்லோப் அன்ட் இஸ்லாம்) 1969 இல் மொழிபெயர்க்கப்பட்டது. பின்னர் தமிழ், யொருபா, ஹவ்ஸா, மலையாளம் மற்றும் டென்மார்க் போன்ற ஏனைய பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது. இந்த நூலை வாசிப்பதற்கும் அஹ்ல் அஸ்-ஸுன்னா அறிஞர்கள் மூலம் எத்தி வைக்கப்பட்ட சரியான இதிகாட் (நம்பிக்கையைக்) கற்றுக் கொள்வதற்கும் அப்பாவி இளம் தலைமுறையினருக்கு அல்லாஹு தஆலா அருள்புரிவானாக!

பதிப்பாளர் குறிப்பு:

இந்த நூலை இதன் மூல வடிவத்திலோ அல்லது வேறு எந்த மொழியிலும் மொழிபெயர்த்தோ அச்சிடுவதற்கு விரும்புகின்ற யாருக்கும் அதற்கான அனுமதி முன்கூட்டியே வழங்கப்படுகின்றது. மேலும் இந்தப் பயனுள்ள அரும்பணியை மேற்கொள்ளும் மக்களுக்கு அங்கீகாரமும் இறை ஆசியும் கிடைப்பதற்காக நாம் அல்லாஹு தஆலாவிடம் அவர்களது பெயர்களை முன்கூட்டியே முன்வைக்கிறோம். அத்தோடு எமது நன்றியுணர்வையும் வாழ்த்துக்களையும் அவர்களுக்கு நாம் மிகவும் நன்றியோடு தெரிவித்துக் கொள்கிறோம். எனினும், அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்படும் தாள்கள் நல்ல தரமானவையாகவும் எழுத்து வடிவம் மற்றும் கட்டமைப்பு பிழைகளின்றி ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் அமைந்திருக்க வேண்டுமென்பது அனுமதி வழங்கப்படுவதற்கான நிபந்தனைகளாகும்.

குறிப்பு: கிறிஸ்தவ மிஷனரிகள் கிறிஸ்தவத்தை விளம்பரப்படுத்த கடும் பிரயத்தனம் எடுக்கின்றன. யூதர்கள் சோடிக்கப்பட்ட யூத ரப்பிகளின் வார்த்தைகளைப் பரப்புவதற்காக வேலை செய்கின்றனர். இஸ்தான்பூலில் அமைந்துள்ள ஹகீகத் கிதாபவி (புத்தக நிலையம்) இஸ்லாத்தை மக்கள்மயப்படுத்தப் போராடுகின்றது. பிரீமேஸன்கள் மதங்களை அழித்தொழிக்க முயற்சி செய்கின்றன. ஞானமும் அறிவும் மனசாட்சியுமுள்ள ஒருவர் இந்தத் தெரிவுகளில் சரியானதைத் தெரிவு செய்து மனித குலத்தைக் காப்பதற்காக அதனைப் பரவச் செய்ய உதவுவார். அதனை விட மனித குலத்துக்கு சேவை செய்ய சிறந்த வழியோ பெறுமதி வாய்ந்த விடயமோ இருக்க முடியாது.

"ஸுப்ஹான்-அல்லாஹி வ பி-ஹம்திஹீ ஸுப்ஹான்-அல்லாஹில்-அழீம்" இந்தப் பிரார்த்தனை கலிமா-இ-தன்ஸீஹ் என அழைக்கப்படுகிறது. இதனை நூறு தடவைகள் காலையிலும் அதே அளவு மாலையிலும் மொழிந்தால், அது ஒருவரது பாவங்கள் மன்னிக்கப்படவும், அவர் மீண்டும் பாவம் செய்வதிலிருந்து காக்கவும் காரணமாக அமையும். இப்பிரார்த்தனை (சிறப்புமிக்க வலீயும் அறிஞருமான இமாம் ரப்பானி 'குத்திஸ ஸிர்ருஹ்' அவர்களால் எழுதப்பட்ட) மக்தூபாத் என்ற நூலின் (முதல் பாகத்தில்) முன்னூற்றி ஏழாவது (307) மற்றும் முன்னூற்றி எட்டாவது கடிதங்களிலும், அதேபோன்று அதன் துருக்கிய மொழிபெயர்ப்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

யா ரஹ்மான், யா ரஹீம், யா அபுவ்வு யா கரீம்.

(இஸ்தான்பூல், பாதிஹ் இல் அமைந்துள்ள அருள்மயப்பட்ட புத்தக நிலையமான) ஹகீகத் கிதாபவியின் குறிக்கோள், எமது இஸ்லாமிய நம்பிக்கையைப் போதிப்பதும் அருள்புரியப்பட்ட எமது நாட்டை உலக மக்களின் கண்களுக்கு நேசத்துக்குரியதாக ஆக்குவதுமாகும். அல்லாஹ் தஆலா எமக்கு உதவும் மக்களுக்குக் கருணை புரியட்டுமாக! ஆமீன்.

அன்புக்குரிய வாசகருக்கு, அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மதுல்லாஹ்.

நாம் இந்த நூலிலுள்ள அனைத்து எழுத்துக்களையும் இஸ்லாமிய அறிஞர்களால் எழுதப்பட்ட நூல்களிலிருந்தே இரவலாகப் பெற்றுள்ளோம். நாம் இவற்றுடன் எமக்கு சொந்தமான எதனையும் சேர்க்கவில்லை. நாம் இந்தப் பயனுள்ள பணியை இரு குறிக்கோள்களான, மனித குலத்துக்கு சேவை செய்தலையும் மக்களின் மகிழ்ச்சிக்காகவும் அவர்களது உரிமைகளைக் காக்கவும் உழைப்பவர்களின் அங்கீகாரத்தைப் பெறுதலையும் இலக்கு வைத்தே மேற்கொண்டோம். இத்தகைய சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற மிகப்பெரிய அறிஞர்களின் எழுத்துக்களை நீங்கள் தகுந்த கவனத்தோடும் அவதானத்தோடும் வாசிக்கும் போது பயனுள்ள கருத்தியல் மற்றும் பொருட்சார்ந்த அறிவைப் பெற்றுக் கொள்வீர்கள், இன்ஷா-அல்லாஹ் தஆலா. உங்களுக்கு நாம் எமது ஸலாத்தையும் அன்பையும் முன்வைக்கின்றோம். அல்லாஹ் தஆலா உங்களுக்கு நல்ல ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் வழங்கி அருள்புரியட்டுமாக! ஆமீன்.

வ ஸல்லல்லாஹு அலா ஸய்யிதினா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மத் வபாரிக் அலா ஸய்யிதினா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மத். அல்லாஹும்ம ரப்பனா ஆதினா பித்துன்யா ஹஸனதன் வபில் ஆக்ஹிரத்தி ஹஸனதன் வ கினா அதாபன்னார் பிரஹ்மதிக யா அர்ஹமர்-ராஹிமீன்! ஆமீன்.

ஹகீகத் கிதாபவி

துருக்கியில் தட்டச்சு செய்து அச்சிட்டு வெளியிட்டோர்:

இஹ்லாஸ் கஸெடெசிலிக் ஏ.எஸ்.

மெர்கஸ் மாஹ். 29 எகிம் காட். இஹ்லாஸ் பிலாஸா இல: 11 A/41

34197 யெனிபொஸ்னா-இஸ்தான்புல் தொலை: 90.212.454 3000

முன்னுரை

பிஸ்மில்லாஹ் உடன் நாம் நூலை ஆரம்பிப்போம்.
அல்லாஹ்வின் பெயர்தான் மிகச் சிறந்த பாதுகாப்பு.
அவனது அருட்கொடைகளை எந்த அளவுகோலாலும் அளவிட முடியாது;
அவன் கருணையால் நிரம்பியவன். மன்னிப்பை விரும்புபவன்!

அல்லாஹுத் தஆலா பூமியிலுள்ள சகல மக்கள் மீதும் கருணை கொண்டவன். அவன் பயனுள்ளவற்றைப் படைத்து அனைவருக்கும் அனுப்புகிறான். முடிவற்ற பேரின்பத்திற்கான வழியை அவன் காட்டுகிறான். யார் தனது தீய எண்ணங்களாலும் மோசமான சகவாசத்தாலும் தீங்கு பயக்கும் புத்தகங்களாலும் ஊடகங்களாலும் ஏமாற்றப்பட்டு உண்மையான வழியை விட்டு விலகி குப்ர் (நிராகரிப்பையும்) நாஸ்திக வழியையும் பின்பற்றுகிறார்களோ அவர்களில் அவன் நாடியவர்களுக்கு நேர்வழி காட்டுகிறான். அவர்களை அவன் நிரந்தர அழிவிலிருந்து பாதுகாக்கின்றான். வரம்புகளை மீறிய கொடியவர்களுக்கு அவன் இந்த அருள்களை வழங்குவதில்லை. அவர்கள் விரும்பி ஆசை வைத்துள்ள குப்ரின் வழியிலேயே அவர்களை அவன் விட்டு விடுகிறான். மறுமையில் நரகம் செல்லும் குற்றவாளிகளான நம்பிக்கையாளர்களில் அவன் நாடியவர்களை மன்னித்து அவர்களை சுவனம் நுழைய அனுமதிப்பான். அவன்தான் தனியாக அனைத்துப் படைப்பினங்களையும் படைக்கின்றான். ஒவ்வொரு படைப்பையும் சகல பயத்திலிருந்தும் பேரச்சத்திலிருந்தும் காத்து ஒவ்வொரு கணமும் அவன் அவற்றை வாழ வைக்கின்றான். அல்லாஹுத் தஆலாவின் கண்ணியமிக்க நாமத்தில் நம்பிக்கை வைத்து, அவனது உதவியை எதிர்பார்த்தவர்களாக நாம் இந்த நூலை எழுத ஆரம்பிக்கின்றோம்.

அல்லாஹுத் தஆலாவுக்கே ஹம்த்[1] உரித்தானது. சாந்தியும் அருள்களும் அவனது அன்புக்குரிய இறைத்தூதர் முஹம்மத் 'அலைஹிஸ்-ஸலாம்' அவர்கள் மீது உண்டாகட்டும். சகல சுபசோபனங்களும் அவர்களது அஹ்ல் அல்-பைத் மற்றும் நேரிய வழி வாழ்ந்த தியாகிகளான அனைத்து நபித்தோழர்கள் (அஸ்- ஸஹாபாத் அல்-கிராம்) மீதும் உரித்தாகட்டும்.

இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடுகளையும் ஏவல் விலக்கல்களையும் பற்றி ஆயிரக்கணக்கான பெறுமதியான நூல்கள் எழுதப்பட்டுள்ளன. அவற்றில் பல நூல்கள் வேற்று மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு ஒவ்வொரு நாட்டிலும் விநியோகிக்கப்பட்டுள்ளன. மறு பக்கத்தில் தீய எண்ணமுள்ள குறுகிய மனப்பாங்குள்ள மனிதர்கள் இஸ்லாத்தின் பயனுள்ள, தாராளத்தன்மை வாய்ந்த ஒளிமயமான சட்டதிட்டங்கள் மீது தொடராகத் தாக்குதல் தொடுத்து, அவற்றில் குறை காண்பதற்கும், மாற்றுவதற்கும் முஸ்லிம்களை வழிகெடுப்பதற்கும் கடுமையாகப் பிரயத்தனம் செய்து வருகின்றனர்.

எனினும், அநேகமாக அனைத்து நாடுகளினதும் இஸ்லாமிய அறிஞர்கள் இஸ்லாத்தைக் காப்பதற்காக மிகுந்த பிரயத்தனம் செய்து வருவது நன்றியுணர்வோடு அவதானிக்கத்தக்கது.

இன்னொரு புறம் அஹ்ல் அஸ்-ஸுன்னா அறிஞர்களால் எழுதப்பட்ட புத்தகங்களை வாசிக்காத அல்லது புரிந்து கொள்ளாத சிலரால் பொருத்தமற்ற உரைகளும் கட்டுரைகளும் வெளிவருவதைக் காண முடிகின்றது. அவை அல்குர்ஆன் அல்-கரீம் மற்றும் ஹதீஸ் அஷ்-ஷரீப்களிலிருந்து பெறப்பட்டவை என்று கூறப்பட்ட போதிலும் அவை பிழையான புரிதலினால் வெளிப்பட்டவை. இந்த உரைகளும் கட்டுரைகளும் அவர்களது முகவர்களின் அறியாமையை சுட்டிக் காட்டுகின்றனவே தவிர, எமது முஸ்லிம் சகோதரர்களின் உறுதியான ஈமானுக்கு எதிராக எந்தப் பாதிப்பையும் தாக்கத்தையும் விளைவிக்கவில்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

[1] புகழும் நன்றியும்

ஒரு நபர் தன்னை ஒரு முஸ்லிம் என்று கூறி, அவர் கூட்டாகத் தொழுகையை நிறைவேற்றுவதைக் காண முடியுமாக இருந்தால் அவர் முஸ்லிமாகவே பார்க்கப்பட வேண்டும். அதன் பிறகு அவரது பேச்சிலோ எழுத்திலோ நடத்தையிலோ அஹ்ல் அஸ்-ஸுன்னா அறிஞர்களால் எடுத்துரைக்கப்பட்ட ஈமானிய அறிவுக்கு முரணான அம்சங்கள் காணப்பட்டால், அவர் இறை நிராகரிப்பில் அல்லது நாஸ்திகத்தில் இருப்பதாகவே கூறப்படும். அதனை விட்டும் தன்னை விலக்கி பாவமீட்சி பெறுமாறு அவருக்குக் கூறப்படும். அவரது குறுகிய மனப்பாங்கு மற்றும் வரட்டு வாதங்களின் காரணமாக தன்னை அவர் மாற்றிக் கொள்ள முடியாது எனப் பதிலளித்தால் அது அவர் ஒரு இறைமறுப்பாளர் அல்லது நிராகரிப்பாளர் என்பதனையே உணர்த்தும். அவர் ஐவேளைத் தொழுகையைத் தொடர்ந்து நிறைவேற்றி வந்த போதும், ஹஜ் மற்றும் அனைத்து வணக்கங்களையும் செய்து வந்த போதும் நிராகரிப்பை ஏற்படுத்தும்; தௌபாவை[1] வேண்டி நிற்கும் அம்சங்களையும் செயல்களையும் விட்டு விலகாதவரை அவர் இந்தப் பேரழிவிலிருந்து தப்ப முடியாது. அவர் ஒரு முஸ்லிமாக மாட்டார். இறை நிராகரிப்பை ஏற்படுத்தும் விடயங்களை நன்கு கற்றுத் தேர்வதன் மூலம், நிராகரிப்பாளனாக மாறுவதை விட்டும் ஒவ்வொரு முஸ்லிமும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். முஸ்லிம்களாக நடிக்கும் இறைநிராகரிப்பாளர்களையும் அப் பொய்யர்களையும் பற்றி நன்கறிந்து, குறிப்பாக, பிரித்தானிய உளவாளிகளைப் பற்றி நன்கறிந்து, ஒவ்வொரு முஸ்லிமும் அவர்களின் தீங்குகளிலிருந்து தூர விலகி இருப்பது அவசியமாகும்.

தவறான, போலியான கருத்துக்கள் குர்ஆன் அல்-கரீமிலிருந்தும் ஹதீஸ் ஷரீபிலிருந்தும் எடுக்கப்பட்டு எழுபத்தி இரண்டு இறைமறுப்புக் குழுக்கள் தோற்றம் பெறும் என ரஸூலுல்லாஹ் 'ஸல்-அல்லாஹு தஆலா அலைஹி வ ஸல்லம்' ஒரு ஹதீஸ் ஷரீபில் குறிப்பிட்டார்கள். இந்த ஹதீஸ் ஷரீப், அல்-பெரீகா மற்றும் அல்-ஹதீகா என்ற பெயரிலான நூலில் விளக்கப்பட்டுள்ளது. அந்நூல் இதனை புகாரி மற்றும் முஸ்லிம் (ஆகிய இரு புகழ்பெற்ற ஹதீஸ் ஷரீப் நூல்களை) ஆதாரமாகக் கொண்டு குறிப்பிட்டுள்ளது. 'மிகப்பெரிய இஸ்லாமிய அறிஞர்' அல்லது 'மார்க்கத்தின் பேராசிரியர்' போன்ற பெயர்களில் தம்மை அடையாளப்படுத்தும் இந்தக் குழுக்களைச் சேர்ந்தவர்களின் நூல்களையும் விரிவுரைகளையும் நாம் நம்பக் கூடாது. அத்தோடு நாம் அந்த இறைநம்பிக்கைத் திருடர்களின் சதிவலைகளில் வீழ்வதை விட்டும் மிகவும் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும்.

இந்தக் கற்றறியாத முஸ்லிம்களின் ஒரு பக்கத்தில் கம்யூனிஸ்ட்களும் பிரீமேஸன்களும் கிறிஸ்தவ மிஷனரிகளும், மறுபக்கத்தில் பிரித்தானிய சதிகாரர்களும் யூத சியோனிஸ்ட்களும் பின்னாலிருந்து இயக்கும் வஹாபிகளும், அடுத்த பக்கத்தில் புத்தம் புதிய வழிமுறைகளில் முஸ்லிம் சிறார்களை வழிகெடுப்பதற்காகக் கடுமையாக உழைப்பவர்களும் உள்ளனர். இஸ்லாத்தையும் ஈமானையும் துவம்சம் செய்வதற்காக, நம்ப வைக்கும் விதமான கட்டுரைகள், திரைப்படங்கள், வானொலி தொலைக்காட்சி ஒலிபரப்புகள் (மற்றும் இணையத்தளங்கள்) போன்ற வழிமுறைகளைக் கையாண்டு அவர்கள் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர். அவர்கள் இந்த நோக்கத்திற்காக மில்லியன்களை செலவு செய்கின்றனர். இஸ்லாமிய அறிஞர்கள் 'ரஹிமஹுமுல்லாஹ்' இத்தகைய அனைவருக்கும் அவசியமான மறுமொழிகளை வழங்கி, அல்லாஹு தஆலாவின் மார்க்கத்தையும் மகிழ்ச்சி மற்றும் ஈடேற்றத்தின் பாதையையும் வெளிக்காட்டியுள்ளனர்.

நாம் தெரிவு செய்த இதிகாட் நாமா என்ற நூலை எழுதிய, நன்கறியப்பட்ட ஓர் இஸ்லாமிய அறிஞரான மௌலானா தியாஅத்-தீன் க்ஹாலித் அல்-பக்தாதி அல்-உஸ்மானி 'குத்திஸ ஸிர்ருஹ்' அத்தகைய அறிஞர்களில் ஒருவராவார். இதிகாட் நாமா ஆரம்பமாக துருக்கிய மொழிக்கு, எர்ஸின்கான், கேமாஹ்வின் எபந்தி காலம்சென்ற ஹாஜி பைஸுல்லாஹ் அவர்களால், 'பராஇத் அல்-பவாஇத்' என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்டு, ஹிஜ்ரி 1312 இல் எகிப்தில் அச்சிடப்பட்டது. இம்மொழிபெயர்ப்பு 'நம்பிக்கையும் இஸ்லாமும்' என்ற பெயரில் எளிமைப்படுத்தப்பட்டது. அதன்

[1] (உமது பாவத்திற்கு) தௌபா செய்தல் என்பது, பாவம் செய்தமைக்காக வருந்தி, அல்லாஹு தஆலாவிடம் பாவமன்னிப்பை இறைஞ்சி, உதாரணமாக பின்வரும் பிரார்த்தனையை மொழிய வேண்டும்: "அஸ்தக்பிருல்லாஹ் அல்-அழீம் அல்-லதீ, லா இலாஹ இல்லா அன்த ஹுவல் ஹய்-அல்-கய்யும் வ அதூபு இலைஹ்," அத்தோடு, மீண்டும் பாவம் செய்ய மாட்டேன் என இறைவனுக்கு வாக்குறுதி அளிக்க வேண்டும்.

முதல் பதிப்பு 1966 இல் பூர்த்திசெய்யப்பட்டது. எமது சொந்த விளக்கங்கள் சதுர அடைப்புக் குறிகளுக்கு இடையே வழங்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் இந்நூல் முப்பத்தி ஓராம் தடவையாக வெளிவருவதற்கு அளவற்ற அருள் புரிந்த அல்லாஹ் தஆலாவுக்கு நாம் நன்றி செலுத்துகின்றோம். இதிகாட் நாமா எனும் இந்நூலின் மூலப் பிரதி பாரசீக மொழியில், இஸ்தான்புல் பல்கலைக்கழக நூலகத்தில் இருக்கின்றது. (இப்னுல் எமின் மஹ்மூத் கமால் திணைக்களம் F.2639)

'துர் அல்-முக்தார்' என்ற நூலில் 'நிராகரிப்பாளரின் திருமணம்' எனும் தலைப்பின் இறுதியில் இது எழுதப்பட்டுள்ளது: "ஒரு முஸ்லிம் பெண் நிகாஹ் (இஸ்லாம் ஏற்படுத்தியுள்ள திருமண ஒப்பந்தம்)[1] செய்தால், அவள் பருவ வயதை அடையும் போது இஸ்லாம் பற்றி அறியாதிருந்தால், அவளது திருமணம் செல்லுபடியற்றது [அவள் மதத்தைத் துறந்தவளாக மாறுகிறாள்]. அல்லாஹ் தஆலாவின் பண்புகளை அவளுக்குப் போதித்து வழிநடாத்துவது அவசியம். அவள் அவற்றை திரும்பக் கூறி, "நான் இவற்றை நம்புகிறேன்" என்று கூற வேண்டும். இதனை இப்ன் ஆபிதீன் 'ரஹிமஹுல்லாஹ் தஆலா' விளக்கும் போது பின்வருமாறு கூறுகிறார்: "அப்பெண் சிறுமியாக இருந்தால், அவள் அவளது பெற்றோரின் மார்க்கத்தைச் சேர்ந்தவள்; அவள் ஒரு முஸ்லிம். அவள் பருவ வயதை அடைந்தால், அதன் பிறகு அவள் அவளது பெற்றோரின் மார்க்கத்தைச் சேர்ந்தவளாக மாட்டாள். இஸ்லாம் பற்றிய அவளது அறியாமை காரணமாக, அவள் பருவமடையும் போது மதத்தைத் துறந்தவளாக மாறுகிறாள். அவள் இஸ்லாத்தின் ஆறு நம்பிக்கைக் கோட்பாடுகளைக் கற்று நம்பிக்கை கொள்ளாதவரை, இஸ்லாத்தில் வாழ்வது அவசியம் என்று அவள் நம்பாதவரை, கலிமத் அத்-தவ்ஹீதை அவள் மொழிந்தபோதும் ஒரு முஸ்லிமாக தொடர்ந்திருக்க மாட்டாள். கலிமத் அத்-தவ்ஹீத் என்பது, 'லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுன் ரஸூலுல்லாஹ்' என்று மொழிவதாகும். 'ஆமன்து பில்லாஹி...' என்று வரும் ஆறு அடிப்படை நம்பிக்கைகளை அவள் விசுவாசம் கொள்ள வேண்டும். அத்தோடு, "நான் அல்லாஹ் தஆலாவின் ஏவல்களையும் விலக்கல்களையும் ஏற்றுக் கொள்கிறேன்' என்று கூற வேண்டும்." இறைநம்பிக்கை அற்ற ஒருவர் கலிமத் அத்-தவ்ஹீதை மொழிந்து அதன் கருத்தை நம்பிக்கை கொண்டு விட்டால் அவர் அப்போதே முஸ்லிமாக மாறுகிறார் என்பதனையே இப்ன் ஆபிதீன் அவர்களது இந்த விளக்கம் எடுத்துக் காட்டுகின்றது.

ஆயினும் அவர் ஏனைய முஸ்லிம்களைப் போன்று, அவருக்கு வாய்ப்புக் கிடைத்தால் பின்வரும் வார்த்தைகளை மனனமிடவும் அதன் கருத்தைத் துல்லியமாகக் கற்றுக் கொள்ளவும் வேண்டும்: "ஆமன்து பில்லாஹி வ மலாஇகதிஹி வ குதுபிஹி வ ருஸுலிஹி வல்-யவ்மில்-ஆகிறி வ பில்-கதரி கைரிஹி வ ஷர்ரிஹி மினல்லாஹி தஆலா வல்பஃசு பஃதல் மவ்த் ஹக்குன் அஷ்ஹது அன் லா இலாஹ இல்லல்லாஹ் வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வ ரஸூலுஹு." அதேபோன்று, ஒரு முஸ்லிம் சிறுவன் இந்த ஆறு நம்பிக்கைக் கோட்பாடுகளையும் கற்காமல், அவற்றை விசுவாசிப்பதாகக் கூறாமல் இருந்தால் அவன் பகுத்தறிவைப் பெற்று பருவ வயதை அடையும் போது மதத்தைத் துறந்த ஒருவனாக மாறுகிறான். (இந்த ஆறு நம்பிக்கைக் கோட்பாடுகளையும் கற்று, விசுவாசித்து, அதன்மூலம்) அவன் ஈமானைப் பெற்றால், இஸ்லாத்தின் போதனைகளைக் கற்றுத் தேர்வது அவனுக்கு உடனடியாக பர்ளாக மாறும். உதாரணமாக, பர்ள் (என அழைக்கப்படும் இஸ்லாத்தின் ஏவல்கள்) மற்றும் ஹராம் (என்று அழைக்கப்படும் அதன் விலக்கல்கள்), வழு செய்யும் ஒழுங்கு, குளிக்கும் ஒழுங்கு, தொழுகையை நிறைவேற்றும் ஒழுங்கு மற்றும் தனது மறைக்கப்பட வேண்டிய 'அவ்ரத்' பகுதிகளை மறைத்துக் கொள்ளும் ஒழுங்கு என்பன. அவன் (இந்தப் போதனைகள் பற்றி) ஒருவரிடம் வினவினால், அவனுக்குக் கற்றுக் கொடுப்பதும் அல்லது ஒரு உண்மையான இஸ்லாமிய நூலைத் தேடிப்பெற உதவுவதும் அவர் மீது (இஸ்லாமிய ஏவலான) பர்ளாக மாறுகிறது. அவனுக்கு எந்த ஒருவரையோ அல்லது எந்தொரு உண்மையான நூலையோ கண்டுகொள்ள முடியாது போனால், அதில் ஒன்றைத் தேடிப் பெறுவது அவன் மீது பர்ளாகும். (ஒரு முஸ்லிம் பெண்ணுக்கும் இதே பொறுப்புகளே பிரயோகிக்கப்படும்). ஒருவரை அவன் தேடாவிட்டால் இறைநம்பிக்கை அற்றவனாக மாறுவான். (அவன் இப்பொறுப்புகளைக் கற்றுக் கொள்வதற்காக ஒரு நபரையோ உண்மையான இஸ்லாமிய நூலொன்றையோ கண்டுபிடிக்கும் வரை) பொறுப்புகளைப் பற்றிய விழிப்புணர்வற்றவன் என்ற வகையில் அவனுக்கு 'உத்ர்' உள்ளது.

[1] தயவு செய்து 'Endless Bliss' நூலின் ஐந்தாம் தொகுதியின் 12 ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

(உத்ர் என்பது இஸ்லாமிய ஏவல்களைக் கடைபிடிப்பதிலிருந்து விலகியிருக்க ஒரு முஸ்லிமுக்கு வழங்கப்படும் மன்னிப்பாகும்.) ஒரு முஸ்லிம் பர்ளான செயல்களை அவற்றுக்குரிய நேரத்தில் நிறைவேற்றாவிட்டால் அல்லது ஹராமானவற்றில் ஈடுபட்டால் அவர் நரகில் வேதனைக்கு உட்படுவார். நம்பிக்கையும் இஸ்லாமும் என்ற இந்த ஆக்கம் அந்த ஆறு நம்பிக்கைக் கோட்பாடுகளையும் பற்றிய விரிவான விளக்கங்களை உள்ளடக்கியுள்ளது. இந்த நூலை ஒவ்வொரு முஸ்லிமும் நன்கு வாசிக்க வேண்டும். அவரது பிள்ளைகளும் பழக்கத்துக்குரியவர்களும் இதனை வாசிப்பதற்காக அவர் மிகச் சிறப்பாக செயலாற்ற வேண்டும். அவ்ரத்தின் பகுதிகள் *Endless Bliss* நூலின் நான்காம் பாகத்தில் விளக்கப்பட்டுள்ளன.

நூலில், ஆயாத் கரீமா- குர்ஆனிய வசனங்களின் கருத்து 'மஆல்' ஆகவே இடம்பெற்றுள்ளன. தப்ஸீர் அறிஞர்கள் குறிப்பிடுவதன் படி அது 'கருத்து' என்ற பொருளைத் தருகிறது. ஆயாத் கரீமாவின் கருத்துக்கள் ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்' அவர்களால் மாத்திரமே புரிந்து கொள்ளப்பட முடியுமாக இருந்தன. பிறகு அவர்கள் இந்தக் கருத்துக்களைத் தமது ஸஹாபாக்களுக்குப் போதித்தார்கள். தப்ஸீர் (குர்ஆன் அல்-கரீமுக்கு விளக்கமளிக்கும் கலை) அறிஞர்கள் இந்த ஹதீஸ்களை முனாபிக்களும் பிரித்தானிய சதிகாரர்கள் பின்னாலிருந்து இயக்கும், ஒரு குறிப்பிட்ட மத்ஹபின்றி மத போதகர்கள் என தவறாக வழிநடாத்தப்பட்ட ஸின்திக்களும் இட்டுக்கட்டிய போலியானவற்றிலிருந்து பிரித்துக் காட்டினார்கள். குர்ஆன் அல்-கரீமுக்கு விளக்கமளிக்கும் அந்த ஹதீஸ் ஷரீப்களை தப்ஸீர் அறிஞர்களால் கண்டுபிடிக்க முடியாத போது, அவர்கள் அந்த ஆயத்களுக்கு தப்ஸீர் கலையை (அதன் சட்டதிட்டங்கள் மற்றும் கொள்கைகளை)ப் பின்பற்றி தமது கருத்துக்களை வழங்கினர்.

இஸ்லாமியக் கலைகளைக் கற்றிராத, அரபு மொழி பேசக்கூடிய, ஆனால் தப்ஸீர் பற்றிய எந்த அறிவுமற்ற மனிதர்களால் புரிந்துகொள்ளப்படுபவை குர்ஆனுக்கான தப்ஸீர் (விளக்கம்) என அழைக்கப்பட மாட்டாது.அதனால்தான் ஒரு ஹதீஸ் ஷரீப் கீழ்வருமாறு கூறுகிறது: 'யார் குர்ஆன் அல்-கரீமுக்கு தனது சொந்தப் புரிதலிலிருந்து கருத்துக்களை வழங்குகின்றாரோ அவர் இறைநம்பிக்கை அற்றவராக மாறுகிறார்.' அறபுப் பதங்களுக்கான சொற்களஞ்சியமும் ஏனைய தமிழ் மொழியல்லாத, தமிழ் வாசகருக்குப் பரிச்சயமற்ற பதங்களும் பின்னிணைக்கப்பட்டுள்ளன.

அல்லாஹு தஆலா எம்மனைவரையும் அஹ்ல் அஸ்-ஸுன்னா அறிஞர்கள் காண்பித்த நேரான பாதையில் நிலைக்கச் செய்வானாக! 'மிகப்பெரிய இஸ்லாமிய அறிஞர்' போன்ற பெயர்களை மோசடி செய்யும் இஸ்லாத்தின் எதிரிகளதும் லா-மத்ஹபி மனிதர்களதும் போலிகளையும் வழிகேடுகளையும் நயவஞ்சகத்தனமான பொய்களையும் நம்புவதை விட்டு அவன் எம்மைக் காப்பானாக!

பல்வேறு மொழிகளிலும் வெளியிடப்படும் அனைத்து நூல்களும் இணைய வழி ஊடாக உலகம் முழுவதும் பரவலாக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பு: கிறிஸ்தவ மிஷனரிகள் கிறிஸ்தவத்தை விளம்பரப்படுத்த கடும் பிரயத்தனம் எடுக்கின்றன. யூதர்கள் 'தல்முதை' பிரச்சாரம் செய்ய முனைகின்றனர். ஹகீகத் கிதாபவி இஸ்லாத்தை மக்கள்மயப்படுத்தப் போராடுகின்றது. பிரீமேஸன்கள் மதங்களை அழித்தொழிக்க முயற்சி செய்கின்றன. ஞானமும் அறிவும் மனசாட்சியுமுள்ள ஒருவர் தனது தர்க்க அறிவைப் பயன்படுத்தி இவற்றில் சரியானதைத் தெரிவு செய்வார். சரியானதைப் பிரகடனப்படுத்த உதவுவதன் மூலம் மனித குலம் இவ்வுலகிலும் மறுமையிலும் மகிழ்ச்சியடையும் வழிகளாக அவர்கள் செயற்படுவார்கள்.

தற்கால உலக முஸ்லிம்கள் மூன்று பிரதான குழுக்களாகப் பிரிந்துள்ளனர். முதலாவது குழுதான் ஸஹாபாக்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் உண்மையான முஸ்லிம்கள். அவர்கள் அஹ்ல் அஸ்-ஸுன்னத் அல்லது ஸுன்னி முஸ்லிம்கள் அல்லது பிர்கா நஜிய்யா, அதாவது நரக நெருப்பிலிருந்து தம்மைக் காத்துக் கொண்ட குழு என அழைக்கப்படுகின்றனர். இரண்டாவது குழு ஸஹாபாக்களின் எதிரிகளாவர். அவர்கள் ஷீயாக்கள் (ஷீஆத்) அல்லது பிர்கா தால்லா, அதாவது வழிகெட்ட குழு என அழைக்கப்படுகின்றனர். மூன்றாவது குழு, ஸுன்னிகள் மற்றும் ஷீயாக்கள் ஆகிய இரு குழுக்களதும் எதிரிகளாவர். அவர்கள் வஹ்ஹாபிகள் அல்லது அரேபியாவிலுள்ள அவர்களது பிறப்பிடமான

நஜ்திலிருந்து வரும் நெஜ்திகள் (அல்லது நஜ்திகள்) என அழைக்கப்படுகின்றனர். அவர்கள் பிர்கா மல்ஊனா (சபிக்கப்பட்ட குழு) எனவும் அழைக்கப்படுகின்றனர். ஏனெனில் அக்குழுவில் உள்ளவர்கள் முஸ்லிம்களை 'இறைநிராகரிப்பாளர்கள்' என்றழைப்பதாக எமது வெளியீடுகளான *Endless Bliss* மற்றும் *The Rising and the Hereafter* என்ற நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. முஸ்லிம்களை அவ்வாறு அழைப்பவர்களை எமது அருள்மயப்பட்ட இறைத்தூதர் சபித்துள்ளார். முஸ்லிம் உலகம் இந்த மூன்று பிரிவுகளாகப் பிரிந்திருப்பது யூத மற்றும் பிரித்தானிய சூழ்ச்சிகளின் விளைவாகும்.

ஒவ்வொரு முஸ்லிமும் அடிக்கடி தன்னிடம் இயல்பாக உள்ளார்ந்துள்ள அறியாமை மற்றும் பாவநிலையிலிருந்து தனது ஆன்மாவைத் தூய்மைப்படுத்தும் பொருட்டு, "லா இலாஹ இல்லல்லாஹ்" என்று கூற வேண்டும். அத்தோடு தனது உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்த, அதாவது தீங்கு விளைவிக்கும் வாசிப்பினாலும் ஆத்மாவை தீய ஷைத்தானிய சகவாசத்தில் ஈடுபடுத்தியதன் விளைவாகவும் தனது உள்ளத்தை அடைத்துக் கொண்டுள்ள பாவக்கரையிலிருந்தும் இறை நம்பிக்கையீனத்திலிருந்தும் தன்னைக் காப்பதற்காக, "அஸ்தக்ஹ்பிருல்லாஹ்" என்ற பிரார்த்தனையை அடிக்கடி மீட்ட வேண்டும்.

இஸ்லாத்திற்குக் கீழ்படிந்து, தமது பாவங்களுக்காக தௌபா செய்யும் மக்களது பிராத்தனைகள் (அல்லாஹ் தஆலாவினால்) ஏற்றுக் கொள்ளப்படும். ஒருவர் தனது அன்றாட (ஐவேளைத்) தொழுகையை நிறைவேற்றாமல், ஒழுங்காக தம்மை மறைத்துக் கொள்ளாத பெண்களையும் அடுத்தவர்களின் வெளிப்பட்டுள்ள அவ்ரத் பகுதிகளையும் பார்க்கின்ற, ஹராமானவற்றை சாப்பிடுகின்ற, குடிக்கின்ற நிலை இருந்தால் அவர் இஸ்லாத்திற்குக் கட்டுப்படவில்லை என்ற முடிவுக்கே வர வேண்டும். அவரது பிரார்த்தனைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மீலாதீ	ஹிஜ்ரீ ஷம்ஸீ	ஹிஜ்ரீ கமரீ
2001	1380	1422

ஹுஸைன் ஹில்மி இஸிக்

'ரஹ்மத்-அல்லாஹி அலைஹி'

ஹகீகத் கிதாபவி வெளியீட்டகத்தின் வெளியீட்டாளரான ஹுஸைன் ஹில்மி இஸிக் *'ரஹ்மத்-அல்லாஹி அலைஹி'* இஸ்தான்புல், எய்யூப் ஸுல்தானில் ஹி.1329 (கி.பி 1911) இல் பிறந்தார்.

அவர் வெளியிட்ட நூற்றி நாற்பத்தி நான்கு புத்தகங்களில் அறுபது அறபு மொழியிலும் இருபத்தைந்து பாரசீகத்திலும் பதினான்கு துருக்கியிலும் ஏனைய புத்தகங்கள் பிரெஞ்சு, ஜேர்மன், ஆங்கிலம், ருஷ்ய மற்றும் பிற மொழிகளிலும் உள்ளன.

(மார்க்கத்தில் ஆழ்ந்த புலமையும் தஸவ்வுப் நல்லொழுக்கத்தில் நிறைவும் சீடர்களை முழுமையாக முதிர்ச்சியுடன் வழிகாட்டும் ஆற்றலும் பெற்ற, சிறப்புகளும் ஞானமும் வாய்க்கப்பெற்ற அறிஞரான ஸெய்யித் அப்துல் ஹகிம் அர்வாஸீ *'ரஹ்மத்-அல்லாஹி அலைஹி'* அவர்கள் மூலம் வழிகாட்டப்பட்ட) ஹுஸைன் ஹில்மி இஸிக் *'ரஹ்மத்-அல்லாஹி அலைஹி'* அவர்கள் இன்பத்தின் பக்கம் வழிகாட்ட முடியுமான திறமைவாய்ந்த ஒரு பெரும் இஸ்லாமிய அறிஞராவார். அவர் 2001 ஒக்டோபர் 25 (8 ஷஃபான் 1422) இற்கும் 2001 ஒக்டோபர் 26 (9 ஷஃபான் 1422) இற்கும் இடையேயான ஓர் இரவுப் பொழுதில் மரணமானார். அவரது பிறப்பிடமான எய்யுப் ஸுல்தானில் அவர் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

அறிமுகம்

[அருள்மிகு, அழகிய ஆரம்பத்திற்காக, மௌலானா க்ஹாலித் அல்-பக்தாதி 'குத்திஸ ஸிர்ருஹ்' அவர்கள் தமது நூலை அல்-இமாம் அர்-ரப்பானி அஹ்மத் அல்-பாருகீ அஸ்-ஸிர்ஹின்தி[1] 'ரஹ்மதுல்லாஹி அலைஹி' அவர்களது மக்தூபாத் நூலின் மூன்றாம் பாகத்தின் 17 ஆவது கடிதத்தை மேற்கோளிட்டுத் தொடங்குகின்றார். இமாம் அர்-ரப்பானி 'குத்திஸ ஸிர்ருஹ்' அக்கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்]:

நான் எனது கடிதத்தை பஸ்மலா உடன் தொடங்குகிறேன். அளவற்ற அருளும் நன்றியும் எமக்கு அனைத்து வகையான நலவுகளையும் அருளி, எம்மை முஸ்லிம்களாக ஆக்கி கண்ணியப்படுத்திய, மிக உயர்ந்த அருளான ரஸூலுல்லாஹ் முஹம்மத் ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்களது உம்மாவாக -சமூகமாக- எம்மை ஆக்கி மகிமைப்படுத்திய அல்லாஹு தஆலாவுக்கே உரித்தாகட்டும்.

சகலருக்கும் சகல நலவுகளையும் ஏற்படுத்துவது அல்லாஹு தஆலா மாத்திரமே என்பதனை நாம் நிதானித்து, உணர்ந்து கொள்ள வேண்டும். சகலதையும் படைப்பது அவன் மாத்திரமே. சகல படைப்பினங்களின் இருப்பையும் நிலைக்கச் செய்வது அவன் ஒருவன் மாத்திரமே. மனிதர்களின் உயர்ந்த நல்ல பண்புகள் அனைத்தும் அவனது அருளினாலும் தயவினாலும் வாய்க்கப் பெற்றவை. எமது வாழ்வு, காரணம், அறிவு, பலம், செவிப்புலன் மற்றும் பேச்சுத் திறன் ஆகிய சகலதும் அவனிடமிருந்தே கிடைக்கப்பெற்றுள்ளன.

எண்ணிலடங்காத அருள்களையும் நலவுகளையும் அவன் ஒருவனே எப்போதும் அனுப்புகிறான். அவன் ஒருவனே மனிதர்களை பிரச்சினைகளை விட்டும் துன்பங்களை விட்டும் காக்கிறான். அவனே பிரார்த்தனைகளை அங்கீகரித்து, இடர்களையும் ஆபத்துக்களையும் விலக்கி விடுகிறான். வாழ்வாதாரங்களைப் படைத்து அவை எம்மை வந்தடைய வழிவகுப்பது அவன் மாத்திரமே. அவனது அருள் மிகவும் விசாலமானது; பாவங்களில் ஈடுபடுவர்களது வாழ்வாதாரங்களையும் அவன் தடுத்து விடுவதில்லை.

பாவங்களை மறைத்து விடும் அவனது செயல் மிக உன்னதமானது. அவனது கட்டளைகளுக்கு அடிபணியாத, தடுத்தவற்றிலிருந்து விலகியிருக்காதவர்களின் கண்ணியம் என்ற முகத்திரையை அவன் கிழித்து விடுவதில்லை; அவர்களை இழிவு படுத்தி, வெறுத்து விடுவதுமில்லை. அவன் மிகவும் மன்னிப்பவன்; அருள் நிறைந்தவன்; தண்டனைக்கும் வேதனைக்கும் (அதாப்) தகுதியானவர்களை அவசரப்பட்டு அவன் தண்டிப்பதில்லை. அவனது அருள்களையும் நலவுகளையும் அவன் விரும்புகின்றவர்கள், அவனது எதிரிகள் ஆகிய இரு சாராருக்குமே விஸ்தரித்துள்ளான். அவன் எதனையும் எவரிடமிருந்தும் ஒதுக்கி வைப்பதில்லை. அவனது அதி உன்னத, மிகப் பெறுமதி வாய்ந்த உபகாரமாக, மகிழ்ச்சிக்கும் ஈடேற்றத்துக்குமான அவனது சரியான பாதையை அவன் காட்டுகிறான். நாம் வழிதவறிச் செல்வதை விட்டும் அவன் எம்மை எச்சரித்து, சுவனம் செல்ல வைக்கிறான். அவனது அன்புக்குரிய இறைத்தூதர் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்களை நாம் பின்பற்றி நடப்பதற்கு அவன் எமக்குக் கட்டளையிடுகிறான். அதன் மூலமே நாம் முடிவில்லாத அருள்களையும் வற்றாத சுவனத்து இன்பங்களையும் அவனது கருணையையும் நேசத்தையும் அடைய முடியும். அல்லாஹு தஆலாவின் அருள்கள் சூரியனைப் போன்று வெளிப்படையானவை. பிறரால் வரும் நலவுகளும், உண்மையில், அவனிடமிருந்தே வருகின்றன. மீண்டும், அவன் ஒருவன்தான், அடுத்தவர்களை மத்தியஸ்தர்களாக ஆக்கி நலவுகளை செய்வதற்கான நாட்டம், சக்தி மற்றும் பலத்தை அளிக்கின்றான். இந்த வகையில், எப்போதும் நலவுகளை எல்லா மக்களிடமும் எல்லா இடங்களுக்கும் அனுப்புகின்றவன் அவன் ஒருவனே.

---

[1] *இமாம் ரப்பானி ஹிஜ்ரி: 1034 [கி.பி 1624] இல் வபாத்தானார்.*

அவனல்லாத யாரிடமும் நலவுகளை நாடுவது (உரிமையாளனை அன்றி) காவலனிடம் ஏதாவது உதவி வேண்டுவதைப் போன்றது அல்லது ஏழையிடம் தருமம் கேட்பதைப் போன்றது. அறிவீனர்களும் அதே போன்று கற்றவர்களும், மடையர்களும் புத்திசாலிகளும் மதிநுட்பம் வாய்ந்தவர்களும் என அனைவரும் நாம் இங்கு சொல்வது என்ன என்பதை சரியாக, தெளிவாக அறிவார்கள். சொல்லப்படும் அனைத்தும் வெளிப்படையான உண்மைகள். அளவுக்கதிகம் யோசிக்க வேண்டிய அவசியமே இல்லை.

யார் உபகாரம் செய்கிறாரோ அவர் நன்றி செலுத்தப்படவும் கண்ணியப்படுத்தப்படவும் வேண்டும். அதனால்தான், இந்த உபகாரங்களை அருளிய அல்லாஹ் தஆலாவுக்கு நன்றி செலுத்துவது ஒவ்வொரு மனிதனதும் மானிடக் கடமையாகும். அது அறிவு ஞானம் ஏவுகின்ற ஒரு கடனாகவும் கடப்பாடாகவும் உள்ளது. ஆனால் அவனுக்குரிய இந்த நன்றி நவிலுதலைச் செய்வது மனிதர்களைப் பொருத்தவரை இலகுவானதல்ல. அவர்கள் தொடக்கத்தில் சூன்யத்திலிருந்து படைக்கப்பட்டவர்கள்; அவர்கள் பலவீனமானவர்கள், எளியவர்கள், குறைபாடுகளும் தவறுகளும் நிறைந்தவர்கள். அல்லாஹ் தஆலா எப்போதும் நிரந்தரமாக நிலைத்திருப்பவன். அவன் குறைபாடுகளை விட்டும் முழுமையாக நீங்கியவன். சகல பெருமைகளும் அவனுக்கு மாத்திரமே சொந்தமானவை. அல்லாஹ் தஆலாவுக்கு ஒப்பாக அல்லது நெருக்கமாக மனிதர்கள் எந்தவொரு தன்மையையும் பெற்றவர்களல்ல. மிகவும் தாழ்ந்த நிலையிலுள்ள மனிதர்களால் மிக உயர்ந்தவனான அல்லாஹ் தஆலாவின் பெருமைக்குத் தகுந்த நன்றியை செலுத்த முடியுமா? மனிதர்கள் அழகானவை, பெறுமதி வாய்ந்தவை என்று கருதும் பல அம்சங்கள் உள்ளன. ஆனால் அவை தீயவை என்பதை அவன் அறிகிறான்; அவற்றை அவன் வெறுக்கிறான். நாம் சங்கைக்குரியவை, நன்றிக்குரியவை என்று கருதும் விடயங்கள் எப்போதும் அவ்வாறு அமையாமல் சாதாரண விடயங்களாக காணப்படலாம். இதன் காரணமாக, மனிதர்கள் தமது குறைமதிகளுடனும் குறுகிய பார்வைகளுடனும் அல்லாஹ் தஆலாவுக்கு நன்றி செலுத்தி வணங்கும் விடயங்களை பகுத்தறிய முடியாது. அல்லாஹ் தஆலாவுக்கு நன்றி செலுத்தி, சங்கைப்படுத்தும் வழிகளை அவன் காட்டியிருக்காவிடின், அவனைப் புகழும் செயல்கள் என்று கருதுபவை சிலவேளை அவனை இகழும் செயற்பாடுகளாகவும் அமைந்திருக்கலாம்.

எனவே, அல்லாஹ் தஆலாவுக்கு நன்றி செலுத்துவதும், உள்ளத்தால், நாவால் மற்றும் உடலால் அவனுக்கு செய்ய வேண்டிய மானிடக் கடமைகளும் அல்லாஹ் தஆலாவால் நிர்ணயிக்கப்பட்டு, அவனது அருமைத் தூதர் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் தஆலா காட்டியுள்ள, அவன் ஏவியுள்ள மானிடக் கடமைகள் இஸ்லாம் என அழைக்கப்படுகின்றது. அவனது இறைத்தூதர் போதித்த வழியைப் பின்பற்றுவதன் மூலம் ஒருவர் அவனுக்கு நன்றி செலுத்துகிறார். இந்த வழிக்கு முரணான அல்லது வெளியில் அமைந்த எந்த நன்றியையும், எந்த வணக்கத்தையும் அல்லாஹ் தஆலா விரும்புவதோ ஏற்றுக் கொள்வதோ இல்லை. ஏனெனில் அழகானவை என்று மனிதர்கள் கருதும் பல விடயங்கள் அவ்வாறின்றி, இஸ்லாம் ஏற்றுக் கொள்ளாத அசிங்கமாகக் கருதும் விடயங்களாக உள்ளன.

ஆகவே, அல்லாஹ் தஆலாவுக்கு நன்றி செலுத்தும் போது மக்கள் ஹஸ்ரத் முஹம்மத் 'அலைஹிஸ் ஸலாம்' அவர்களைப் பின்பற்றி நடப்பது அவசியமாகும். அவரது வழிதான் இஸ்லாம் என்று அழைக்கப்படுகிறது. முஹம்மத் 'அலைஹிஸ் ஸலாம் அவர்களைப் பின்பற்றும் ஒருவர் முஸ்லிம் என்று அழைக்கப்படுகிறார். முஹம்மத் 'அலைஹிஸ் ஸலாம்' அவர்களைப் பின்பற்றி அல்லாஹ் தஆலாவுக்கு நன்றி செலுத்துவது 'இபாதா' (வணக்கம்) என அழைக்கப்படுகிறது. இஸ்லாத்தின் போதனை இரு பகுதிகளைக் கொண்டது: ஆன்மீகப் பகுதி மற்றும் அறிவியல் பகுதி.

1) உள்ளத்தால் ஏற்று கட்டாயம் நம்பப்பட வேண்டிய போதனைகள் உஸூல்-தீன் அல்லது ஈமான் பற்றிய போதனைகள் என அழைக்கப்படுகின்றன. சுருக்கமாக, ஈமான் என்பது முஹம்மத் 'அலைஹிஸ் ஸலாம்' அவர்களால் போதிக்கப்பட்ட ஆறு நம்பிக்கைக் கோட்பாடுகளை நம்புவதும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதும் இறை நிராகரிப்புக்குரிய வார்த்தைகளையும் அடையாளங்களையும் தவிர்ப்பதுமாகும். ஒவ்வொரு முஸ்லிமும் இறை நிராகரிப்புக்குரிய (குப்ர்) அடையாளங்களைக் அறிந்து, அவற்றைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். ஈமான் உள்ள ஒருவர் முஸ்லிம் என அழைக்கப்படுகிறார்.

2) வணக்கத்துக்கான போதனைகள் என்பது உடலாலும் உள்ளத்தாலும் பின்பற்றப்பட வேண்டியவற்றையும் உடலாலும் உள்ளத்தாலும் தவிர்க்கப்பட வேண்டியவற்றையும் கொண்டன. பின்பற்றப்பட வேண்டிய போதனைகள் பர்ள் என்றும் தவிர்க்கப்பட வேண்டிய விடயங்கள் ஹராம் என்றும் அழைக்கப்படுகின்றன. இந்தப் போதனைகள் புரூஉ தீன் அல்லது அஹ்காம் இஸ்லாமிய்யா அல்லது இஸ்லாமிய போதனைகள் என அழைக்கப்படுகின்றன.

[கலிமா தௌஹீதை மொழிதலும் அதன் கருத்தை நம்புவதும் ஒவ்வொரு முஸ்லிமும் கட்டாயம் செய்ய வேண்டிய ஆரம்ப செயலாகும். கலிமா தௌஹீத் என்பது: "லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுன் ரஸூலுல்லாஹ்". அதன் பொருள்: "அல்லாஹ் ஒருவன் மாத்திரமே. முஹம்மத் 'அலைஹிஸ் ஸலாம்' அவனது இறைத்தூதர் ஆவார்கள்." இந்த உண்மையை நம்புவது என்பது "ஈமான் கொள்ளுதல்", "முஸ்லிமாக மாறுதல்" ஆகும். ஈமான் உள்ள ஒருவர் 'முஃமின் (விசுவாசி)' என்றும் 'முஸ்லிம்' என்றும் அழைக்கப்படுவார். ஈமான் தொடர்ந்திருக்க வேண்டும். அதனால், இறைநிராகரிப்பை ஏற்படுத்தும் செயல்களையும் இறைநிராகரிப்பை (குப்ரை) அடையாளப்படுத்தும் விடயங்களைப் பயன்படுத்துவதையும் தவிர்ப்பது அவசியமாகும்.

குர்ஆன் அல்-கரீம் என்பது அல்லாஹ்வின் வார்த்தையாகும். அல்லாஹு தஆலா அவனது வார்த்தையை முஹம்மத் 'அலைஹிஸ் ஸலாம்' அவர்களுக்கு ஜிப்ரஈல் (ஜெப்ரேல்) 'அலைஹிஸ் ஸலாம்' என்ற வானவர் மூலம் ஒரு தூதாக அனுப்பினான். குர்ஆன் அல்-கரீமில் சொற்கள் அரபு மொழியில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் அவை அல்லாஹு தஆலாவால் ஒன்று சேர்த்து ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. குர்ஆன் அல்-கரீமில் உள்ள சொற்கள் ஆயாத்களாக இறங்கின. அதாவது, எழுத்துக்களும் சொற்களும் அல்லாஹு தஆலாவால் ஒன்றசேர்த்து ஒழுங்குபடுத்தப்பட்டது. இந்த எழுத்துக்களும் சொற்களும் வழங்கும் கருத்துக்கள் கலாம் இலாஹி (அல்லாஹு தஆலாவின் வார்த்தை)யை அறிவிக்கின்றன. இந்த எழுத்துக்களும் வார்த்தைகளும் (மொத்தமாக) குர்ஆன் அல்-கரீம் என்று அழைக்கப்படுகின்றது. கலாம் இலாஹியைப் பொதிந்துள்ள கருத்துகளும் கூட குர்ஆன் அல்-கரீமாகும். குர்ஆன் அல்-கரீமின் இந்த அம்சம், அதாவது, கலாம் இலாஹி ஒரு படைப்பல்ல. அது அல்லாஹு தஆலாவின் ஏனைய இயல்புகளைப் போல நிரந்தரமான, முடிவற்ற ஒன்றாகும். ஜிப்ரஈல் 'அலைஹிஸ் ஸலாம்' ஒவ்வொரு வருடமும் அல்லாஹ்வின் தூதரைத் தரிசித்து, ஏற்கனவே அருளப்பட்ட குர்ஆன் அல்-கரீமை (அதன் ஆயத்களை) லவ்ஹ் மஹ்பூழில்[1], பதிவு செய்யப்பட்டுள்ள அதே ஒழுங்கில் ஓதிக் காட்டுவார்கள். எமதருமை இறைத்தூதர் பிரதான வானவரைப் பின்தொடர்ந்து அதனை மீட்டுவார்கள். மனித குலத்தில் மிகச் சிறந்தவர் தனது அருள்மயப்பட்ட இருப்பால் மறுமையை கண்ணியப்படுத்த காலம் அண்மித்த போது மகத்துவமிக்க வானவர் குர்ஆன் அல்-கரீமை மீட்டுவதற்காக இருமுறை அவரை தரிசித்தார்.

எமது அருமை இறைத்தூதரும் பெரும்பாலான ஸஹாபாக்களும் குர்ஆன் அல்-கரீமை முழுமையாக மனனமிட்டவர்களாக இருந்தார்கள். அல்லாஹு தஆலாவின் அருமை நேசர் தனது அருள்நிறைந்த இருப்பினால் மறுமையை சிறப்பித்த குறித்த வருடத்தில் அல்லாஹ்வின் தூதரின் ஆரம்ப கலீபாவான அபூ பக்ர் அஸ்ஸித்தீக் அவர்கள் குர்ஆன் அல்-கரீமை மனனமிட்டிருந்த ஸஹாபாக்களையும் ஏற்கனவே எழுப்பட்ட பகுதிகளையும் ஒன்று திரட்டி, பிரத்தியேகக் குழுவொன்றை அமைத்தார்கள். அவ்வாறுதான் குர்ஆன் அல்-கரீம் முழுமையாக எழுத்து வடிவத்தில் எழுதி முடிக்கப்பட்டது. எனவே, வானலோக நூலான குர்ஆன் அல்-கரீமின் எழுதப்பட்ட (அல்லது அச்சிடப்பட்ட) பிரதி முஸ்ஹப் என அழைக்கப்படுகிறது. முப்பத்தி மூன்றாயிரம் ஸஹாபாக்கள் ஒன்று சேர்ந்து, முஸ்ஹபில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் சரியான, அதற்குரிய இடத்தில் வந்துள்ளது என்பதனை ஒருமித்து ஏற்றுக் கொண்டனர்.

முஹம்மத் 'அலைஹிஸ் ஸலாம்' மொழிந்தவை ஹதீஸ் ஷரீப் என அழைக்கப்படுகின்றது. ஹதீஸ் ஷரீபின் கருத்து அல்லாஹு தஆலாவினால் ஏவப்பட்டு, ஆயினும் முஹம்மத் 'அலைஹிஸ் ஸலாம்' அவர்களால் மொழியப்பட்டிருந்தால் அவை ஹதீஸ் குத்ஸி எனப்படுகிறது. ஹதீஸ் ஷரீபுக்கான பல நூல்கள் காணப்படுகின்றன. புகாரி மற்றும் முஸ்லிம் ஆகியன மிகவும் பரவலாக அறியப்பட்டவை.

[1] *தயவு செய்து Endless Bliss இன் மூன்றாம் பாகத்தின் முப்பத்தி ஆறாம் அத்தியாயத்தை பார்க்கவும்.*

அல்லாஹ் தஆலாவின் கட்டளையின் படி நம்பிக்கை சார் விடயங்களை ஏவும் போதனைகள் ஈமான் எனப்படுகிறது; கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டியவை பர்ள் எனப்படுகிறது; தடுக்கப்பட்டவை ஹராம் எனப்படுகிறது. பர்ள் மற்றும் ஹராம் என்பன மொத்தமாக அஹ்காம் இஸ்லாமிய்யா என அழைக்கப்படுகிறது. ஒருவர் இஸ்லாத்தின் போதனைகளில் ஏதேனும் ஒன்றை நிராகரித்தாலும் அவர் காபிர் (நிராகரிப்பாளர்) எனப்படுவார்.

ஒருவர் செய்ய வேண்டிய இரண்டாவது அடிப்படை விடயம், இதயத்தைப் பரிசுத்தப்படுத்தலாகும். நாம் "இதயம்" என்று கூறும் போது இரு விடயங்கள் புரிந்து கொள்ளப்படும். எமது நெஞ்சுப் பகுதியில் உள்ள சதைப் பிண்டம்தான் இதயம் என்று அநேகமாக அனைவராலும் அழைக்கப்படுகின்றது. இக்கருத்தின் படி மிருகங்களிடமும் இதயம் என்பது உள்ளது. இரண்டாவது இதயம் என்பது (சட ரீதியான) இதயத்துடன் இணைந்துள்ள கட்புலனாகாத இதயமாகும். இந்த இரண்டாவது இதயம் 'உள்ளம்' எனவும் அழைக்கப்படுகிறது. இந்த உள்ளம்தான் மதம் சார் நூல்களில் எழுதப்பட்டுள்ளது. இந்த உள்ளம்தான் இஸ்லாத்தின் போதனைகளை ஏற்றுக் கொள்கின்றது. மேலும், நம்பிக்கை கொள்வதும் நிராகரிப்பதும் இந்த உள்ளம்தான். நம்பிக்கை கொள்ளும் இதயம் தூய்மையானது. நிராகரிக்கும் உள்ளம் அழுக்கானது. அது இறந்து போனது. கடுமையாக முயற்சி செய்து உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதுதான் எமது முதலாவது கடமை. வணக்க வழிபாடு, குறிப்பாக தொழுகையை நிறைவேற்றுவதும் இஸ்திஃபார் (எனப்படும் விஷேட பிரார்த்தனையை) மொழிவதும் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துகின்றன. "அதிகமதிகம் இஸ்திஃபாரை மொழியுங்கள்! ஒரு முஸ்லிம் இஸ்திஃபார் என்ற பிரார்த்தனையை சீராக மொழிந்து வந்தால் அல்லாஹ் தஆலா அவர்களை அனைத்து வகையான நோய்களை விட்டும் துன்பங்களை விட்டும் பாதுகாப்பான். அவர்களுக்கு அவன் ரிஸ்கை (உணவு, வாழ்வாதாரம்) அவர்கள் எதிர்பார்க்காத இடங்களிலிருந்தெல்லாம் அனுப்பி வைப்பான்." என எமது அருள்பெற்ற இறைத்தூதர் கூறினார். இஸ்திஃபார் என்பது, "அஸ்தஃபிருல்லாஹ்" என்று கூறுவதாகும். பிரார்த்தனைகள் ஏற்றுக் கொள்ளப்பட, பிரார்த்திப்பவர் முஸ்லாமாக இருக்க வேண்டும்; செய்த பாவங்களுக்கு தௌபா செய்ய வேண்டும்; பிரார்த்தனையை கருத்துணர்ந்து நம்பிக்கையோடு மொழிய வேண்டும்.

இருண்ட உள்ளத்துடன் மொழியப்படும் பிரார்த்தனைகள் (அல்லாஹ் தஆலாவால்) அங்கீகரிக்கப்பட மாட்டாது. தனது உள்ளத்தால் மூன்று தடவைகள் பிரார்த்தனையை மொழிகின்ற, தினமும் ஐவேளையும் நிலையாகத் தொழுது வருகின்ற ஒருவர் தொழுகைகளைத் தொடர்ந்து பிரார்த்தனையை ஆரம்பிப்பார். உள்ளத்தால் அன்றி வாயினால் மாத்திரம் மொழியப்படுகின்ற பிரார்த்தனை பயனற்றதாகும்.

இஸ்லாமிய மார்க்கத்தின் கட்டளைப்படி அமைந்த சன்மார்க்கப் போதனைகள் அஹ்ல் அஸ்-ஸுன்னத் அறிஞர்களின் நூல்களில் எழுதப்பட்டுள்ளன. அஹ்ல் அஸ்-ஸுன்னத் அறிஞர்களால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பத்தகுந்த இஸ்லாமிய போதனைகளின் மத்தியில் நஸ் என அழைக்கப்படும் ஆயாத் கரீமாக்களும் ஹதீஸ் ஷரீப்களும் வெளிப்படையான நேரடிக் கருத்துக்களுடன் இடம்பெற்றுள்ளன. ஒருவர் அவற்றில் ஏதேனும் ஒன்றைக் கூட நிராகரித்தால் அவர் காபிர் (நிராகரிப்பாளர்) ஆகிவிடுகிறார். அவர் தனது நிராகரிப்பை மறைத்து வைத்துக் கொண்டால் முனாபிக் என்று அழைக்கப்படுவார். அவர் தனது நிராகரிப்பை மறைத்துக் கொண்டு, முஸ்லிமைப் போன்று நடித்து, முஸ்லிம்களை வழிகெடுக்க முயற்சி செய்தால் அவர் ஸின்திக் என்று அழைக்கப்படுவார். ஆனால் தெளிவற்ற கருத்துள்ள நஸ்ஸுக்கான தவறான விளக்கத்தினால் ஏற்படும் நம்பிக்கையீனம் ஒருவரை காபிராக மாற்ற மாட்டாது. எனினும் சரியான அஹ்ல் அஸ்-ஸுன்னத் வழியிலிருந்து பிரிந்து சென்ற காரணத்தால் அது அவரை நரகத்திற்கு இட்டுச் செல்லும். நஸ்களின் வெளிக் கருத்துக்களை அந்த நபர் நம்பியதன் காரணமாக, நரக வேதனையில் நிரந்தரமாக அவர் தங்கியிருக்க மாட்டார். நரகிலிருந்து மீட்கப்பட்டு, அவர் சுவர்க்கத்திற்கு அனுப்பப் படுவார். இந்த வகையான மக்கள் பித்அத்துக்குரிய மக்கள் அல்லது தலாலத்துக்குரிய குழுக்கள் எனப்படுகின்றனர். தலாலத்துக்குரிய எழுபத்தி இரண்டு குழுக்கள் உள்ளன. இந்த மக்கள் அல்லது நிராகரிப்பாளர்கள் அல்லது நாஸ்திகர்கள் செய்யும் எந்த வணக்க வழிபாடுகளும் மனித சமூகத்துக்கான சேவைகளும் நலவுகளும் (அல்லாஹ் தஆலாவால்) ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

அவர்களது தானதர்ம செயற்பாடுகள் மறுமையில் அவர்களுக்கு எந்த நன்மையும் செய்யாது. சரியான நம்பிக்கையுடன் உள்ள முஸ்லிம்கள் அஹ்ல் அஸ்-ஸுன்னத் வல்-ஜமாஅத் அல்லது ஸுன்னி முஸ்லிம்கள் என அழைக்கப்படுகின்றனர். ஸுன்னி முஸ்லிம்கள் தமது வணக்க வழிபாடுகளை நிறைவேற்றும் விடயத்தில் நான்கு (சரியாக வழிகாட்டப்பட்ட) உப குழுக்களாகப் பிரிந்துள்ளனர். அவர்கள் ஒருவரை மற்றவர் (அடிப்படை அம்சங்களை நம்பிக்கை கொண்ட குழுவான) அஹ்ல் அஸ்-ஸுன்னத் முஸ்லிம்களாகவே பார்க்கின்றனர். மேலும் அவர்கள் ஒருவரை மற்றவர் நேசிக்கின்றனர்.[1] இந்த நான்கு குழுக்களில் (மத்ஹப்கள்) எந்த ஒன்றிலும் இல்லாத ஒருவர் ஸுன்னி முஸ்லிம் அல்ல. ஸுன்னி முஸ்லிமல்லாத ஒருவர் ஒரு காபிராக அல்லது பித்அத்துக்குரியவராக இருப்பார் என்பது ஹஸ்ரத் இமாம் ரப்பானி அவர்களால் எழுதப்பட்ட கடிதங்களில் எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக, (அவரது மிகச் சிறந்த பணியான மக்துபாத்தின்) முதல் பாகத்திலுள்ள இருநூற்றி என்பத்தி ஆறாம் கடிதத்தில் உள்ளது. அதேபோன்று, துர்ருல் முக்தார் என்ற நூலுக்கான தஹ்தாவி அவர்களின் விளக்கக் குறிப்பில், ஸெபாயிக் என்ற அத்தியாயத்திலும், அல் பஸாஇர் லி முன்கிரித் தவஸ்ஸுல் பி அஹ்லில் மகாபிர் என்ற நூலிலும் ஆவணங்களுடனும் ஆதாரப் பதிப்புடனும் உள்ளது.

பிந்தியது இந்தியாவில் எழுதப்பட்டு, 1395 [கி.பி 1975] இல் அச்சிடப்பட்டது. துருக்கி இஸ்தான்புலில் உள்ள ஹகீகத் கிதாபவி அந்நூலை மீளாக்கம் செய்து அச்சிட்டு பல தடவைகள் இஸ்தான்புலில் வெளியிட்டது.

வணக்க வழிபாடுகளை அந்த நான்கு மத்ஹப்களில் ஒன்றைப் பின்பற்றி மேற்கொள்ளும் ஒருவர் பாவம் செய்தால், அல்லது வணக்க வழிபாடுகளில் ஏதாவது தவறிழைத்தால், அவர் தௌபா செய்தால் அல்லாஹ் தஆலா அவரை மன்னிப்பான். அவர் தௌபா செய்யவில்லையெனில், அல்லாஹ் தஆலா நாடினால் அவரை மன்னிப்பான். அவரை ஒருபோதும் நரகில் போட மாட்டான். ஆயினும் அவன் நாடினால் அவரை வேதனை செய்வான். ஆனால் அவர் பிறகு நரக வேதனையிலிருந்து விடுவிக்கப்படுவார். அறிவற்ற மக்களிடமிருந்தும் கேட்க முடியுமான இஸ்லாத்தில் அடிப்படையாக நம்ப வேண்டிய இந்தத் தெளிவான உண்மைகளை யார் நம்பவில்லையோ அவர் காபிர் (நிராகரிப்பாளர்) எனப்படுகிறார். அவர் நரகத்தில் நிரந்தரமான வேதனைக்கு உட்படுவார்.

காபிர்கள் இரு வகைப்படுகின்றனர்: வேத நூலொன்றை வைத்துள்ள காபிர், மற்றும் புனித வேத நூலொன்றில்லாத காபிர். முஸ்லிம் பெற்றோர் உள்ள ஒருவர் இஸ்லாத்தைத் துறந்தால், அவர் "முர்தத்" (மதத்தைத் துறந்தவர், மதம் மாறியவர்) என அழைக்கப்படுவார். ஷிர்க் (பல தெய்வ வழிபாடு, நம்பிக்கையீனம்) காரணமாக, நிகாஹ் (இஸ்லாமிய திருமண ஒப்பந்தம்) ஹராமாகிய (தடுக்கப்பட்ட, செல்லுபடியற்ற) மனிதர்களைப் பற்றிப் பேசும் போது இப்ன் ஆபிதீன் 'ரஹிமஹுல்லாஹு தஆலா' பின்வருமாறு குறிப்பிடுகிறார். முஸ்லிம்களில் எழுபத்தி இரண்டு முரண்பட்ட குழுக்களைச் சேர்ந்த மக்களில் எவரது மார்க்க முரண்பாடு மதச்சார்பின்மை என்ற நிலைக்கு மூழ்கியுள்ளதோ அவர்களும் மதம் மாறியோர், மதச் சார்பற்றோர், நெருப்பு வணங்கிகள், [பிராமணர்கள், பௌத்தர்கள்] என அழைக்கப்படுவோர், பாதினீக்கள், இபாஹதீகள், துர்ஸீகள் (த்ரூஸ்கள்), சிலைவணங்கிகள், புராதன கிரேக்க தத்துவ ஞானிகள் மற்றும் முனாபிக்கள் ஆகிய அனைவரும் வேத நூலற்ற நிராகரிப்பாளர்கள் ஆவர். கம்யூனிஸ்ட்களும் பிரீமேஸன்களும் வேத நூல்களற்ற நிராகரிப்பாளர்கள் ஆவர். பிற்காலத்தில் இடைச்செருகலுக்கு உட்பட்ட தௌராஹ் மற்றும் பைபிள் ஆகிய வேத நூல்களை நம்பிக்கை கொள்ளும் கிறிஸ்தவர்களும் யூதர்களும் வேதத்தையுடைய நிராகரிப்பாளர்கள் ஆவர். குறிப்பிட்ட சில படைப்பினங்களைக் கடவுளாகக் கருதி வணங்குபவர்கள் முஷ்ரிக்கள் (பல தெய்வ வழிபாட்டாளர்கள்) ஆவர். அல்லாஹ் தஆலாவின் பண்பியல்புகளான ஸிபாத் ஸுபூதிய்யா மற்றும் ஸிபாத் தாதிய்யா என்பன தெய்வீகப் பண்புகள் (உலூஹிய்யாத்) என அழைக்கப்படுகின்றன.

[1] இந்த நான்கு குழுக்களும் (மத்ஹப்களும்) பின்வருவன: 1- ஹனபி மத்ஹப் 2- ஷாபிஈ மத்ஹப் 3- மாலிகி மத்ஹப் 4- ஹன்பலி மத்ஹப்

வேதத்தையுடைய அல்லது வேதமற்ற நிராகரிப்பாளர் ஒருவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் அவர் நரகத்திற்கு செல்வதை விட்டும் தப்பித்துக் கொள்வார். அவர் ஒரு பாவமற்ற, தூய முஸ்லிமாக மாறுவார். ஆயினும் அவர் ஒரு ஸுன்னி முஸ்லிமாக இருக்க வேண்டும். ஸுன்னி முஸ்லிமாக இருத்தல் என்பது (சத்தியத்தின் வழியான) அஹ்ல் அஸ்-ஸுன்னாவைச் சேர்ந்த யாராவது ஓர் அறிஞர் மூலம் எழுதப்பட்ட நூலொன்றை வாசித்து, கற்றுக் கொண்டு, அவற்றை தனது ஈமானிலும், செயற்பாடுகளிலும் பேச்சிலும் எடுத்து நடப்பதாகும். உலகில் ஒருவர் தரூரா (மிகக் கட்டாய அல்லது நிர்ப்பந்த) நிலையிலன்றி, பேசும் தெளிவான வார்த்தைகள், செய்யும் செயற்பாடுகள் மூலம் அவர் முஸ்லிமா இல்லையா என்பதைப் புரிந்து கொள்ள முடியும். ஒருவரது இறுதி மூச்சின் போது அவர் மறு உலகுக்கு ஈமானுடன் செல்கிறாரா என்பது உறுதியாகும். பெரும்பாவங்கள் செய்த ஒரு முஸ்லிம் அவ்றறுக்காக தௌபா கேட்டால், அந்த ஆண் அல்லது பெண் நிச்சயமாக மன்னிப்பு வழங்கப்பட்டு, பாவமற்ற தூய முஸ்லிமாக மாறுவார். இது விரிவாக இல்ம் அல்-ஹால் நூல்களில் விளக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, Belief and Islam (இந்த நூல்) மற்றும் Endless Bliss நூலின் ஆறாம் பாகத்தில் தௌபா என்றால் என்ன, அது எவ்வாறு செய்யப்படும் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.]

ஈமானும் இஸ்லாமும்

இதிகாட் நாமா என்ற இந்த நூலில் ஈமான் மற்றும் இஸ்லாம் பற்றிக் கவனம் செலுத்தும் இறைத்தூதர் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்களின் ஹதீஸ் ஷரீப் விபரிக்கப்பட உள்ளது. இந்த ஹதீஸ் ஷரீபின் பாக்கியத்தினால் முஸ்லிம்களின் விசுவாசம் சீர்பெற்று, அதனால் அவர்கள் ஈடேற்றத்தையும் மகிழ்ச்சியையும் அடைவார்கள் என நான் நம்புகிறேன். மேலும், பாவங்கள் நிறைந்த க்ஹாலித் ஆகிய நான் பாதுகாக்கப்படுவதற்கு இது காரணமாக அமையுமென நம்புகிறேன். நான் அழகாக விசுவாசம் கொண்டுள்ள அல்லாஹு தஆலா எந்தத் தேவையும் அற்றவன்; அவனது நலவுகளும் அருள்களும் ஏராளமானவை; அவன் அவனது அடியார்களுக்கு அதிகமதிகம் கருணை காட்டுபவன். அத்தகையவன் இந்த எளிய, மிகச் சொற்பமாக நன்மைகளைச் சேர்த்துள்ள, உள்ளம் மிகவும் இருண்ட நிலையிலுள்ள க்ஹாலிதை, இவனது தகுதியற்ற வார்த்தைகளுக்காக மன்னிப்பானாக. இவனது குறைபாடுள்ள வணக்க வழிபாடுகளை ஏற்றுக் கொள்வானாக. மோசடிக்கார, பொய் பேசும் சாத்தான்களின் தீங்குகளிலிருந்தும் [இஸ்லாத்தின் எதிரிகளின் பொய்யாலும் பிழையான வார்த்தைகளாலும் எழுத்துக்களாலும் ஏமாற்றப்படுவதிலிருந்தும்] எம்மைக் காப்பாற்றுவானாக. மேலும் எம்மை மகிழ்ச்சியானவர்களாக ஆக்குவானாக. அவன்தான் கருணையாளர்களையெல்லாம் மிகைத்த கருணையாளன், பெருந்தன்மை வாய்ந்தவர்களுக்கெல்லாம் மிகையான பெருந்தன்மை வாய்ந்தவன்.

பகுத்தறிந்து கொள்ளும் பருவ வயதை அடைந்த முகல்லபான ஒவ்வொரு முஸ்லிம் ஆணும் அல்லது பெண்ணும் அல்லாஹு தஆலாவின் அஸ்-ஸிபாத் அத்-தாதிய்யாவையும்[1] அஸ்-ஸிபாத் அஸ்-ஸூபூதிய்யாவையும்[2] சரியாக அறிந்து, நம்பிக்கை கொள்ள வேண்டும் என இஸ்லாமிய அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். அது அனைவருக்குமான ஒரு முதன்மையான (பர்ள்) கடமையாகும். தெரியாமல் இருப்பது என்பது மன்னிக்க முடியுமான ஒரு நியாயமல்ல; அது ஒரு பாவமாகும். க்ஹாலித் இப்ன் அஹ்மத் அல்-பக்தாதி இந்த நூலை எழுதுவது பிறருக்கு தனது மேன்மையையும் அறிவாற்றலையும் வெளிக்காட்டுவதற்காகவோ பிரபலமாவதற்காகவோ அல்ல. மாறாக ஒரு நினைவூட்டலை வழங்கும் பணிதான் இதன் பின்னால் உள்ளது. அல்லாஹு தஆலா தாழ்மையுள்ள க்ஹாலிதுக்கு[3] அவனது சக்தியைக் கொண்டும் அவனது இறைத்தூதரின் பாக்கியம் வாய்ந்த ஆன்மாவினூடாகவும் உதவி புரிவானாக! ஆமின்.

அல்லாஹு தஆலா அல்லாத ஏனைய சகல விடயங்களும் மா-ஸிவா அல்லது ஆலம் (படைப்பினங்கள், பிரபஞ்சம்) எனப்படுகின்றன. அது தற்போது "இயற்கை" என்று

---

[1] அல்லாஹு தஆலாவுக்கு ஆறு பண்புகள் உள்ளன. அவை அஸ்-ஸிபாத் அத்-தாதிய்யா எனப்படுகின்றன: அல்-வுஜூத், இருப்பு நிலை; அல்-கிடாம், தொடக்கமற்ற இருப்பு நிலை, மற்றும் இறந்த காலத்தில் நித்திய நிலை; அல்-பகா, முடிவற்ற இருப்பு நிலை, மற்றும் எதிர்கால நித்திய நிலை, அல்-வஹ்தானிய்யா, இணை துணை அற்ற நிலை, அல்-முக்ஹாலபது லில்-ஹவாதிஸ், எந்தப் படைப்பினத்தையும் எந்த வகையிலும் ஒத்திராத தன்மை; அல்-கியாமு பி நப்ஸிஹி, சுய இருப்பு நிலை அல்லது தனது இருப்புக்காக எதிலும் தேவையற்ற தன்மை. இந்தப் பண்புகளைப் பெற்ற எந்த ஒரு படைப்பினமும் இல்லை; அவற்றுக்கு இவற்றோடு எந்தத் தொடர்புமில்லை. அவை முற்றிலும் அல்லாஹு தஆலாவுக்கே சொந்தமானவை. அல்-முக்ஹாலபது லில்-ஹவாதிஸ் மற்றும் அல்-வஹ்தானிய்யா என்ற இரண்டும் ஒரே அம்சம் எனவும் அதனால் அஸ்-ஸிபாத் அத்-தாதிய்யா ஐந்தாகும் எனவும் சில இஸ்லாமிய அறிஞர்கள் கூறியுள்ளனர்.

[2] பார்க்க: பக்கம் 6, 19 மற்றும் 33

[3] க்ஹாலித் அல்-பக்தாதி ஹிஜ்ரி 1247 [கி.பி 1826] இல் டமஸ்கஸில் வபாத்தானார்.

அழைக்கப்படுகின்றது. அனைத்துப் படைப்பினங்களும் ஆரம்பத்தில் இல்லாதிருந்தன. அல்லாஹ் தஆலா ஒருவன் மாத்திரம்தான் அவை அனைத்தையும் படைத்தான்.

அவை அனைத்தும் மும்கின் (அதாவது இல்லாமையிலிருந்து தோன்ற முடியுமானவை) மற்றும் ஹாதிஸ் (எதுவுமில்லாத நிலையிலிருந்து ஏற்பட முடியுமானவை) ஆகும். அதாவது, அவை இல்லாமையிலிருந்து தோன்றுவதற்கு சாத்தியமானவை, மேலும் அவை எதுவுமற்ற நிலையிலிருந்து ஏற்படக் கூடியவை. 'அல்லாஹ் தஆலா தொடக்கமற்ற இருப்புடையவன், வேறு எதுவும் தொடக்கமற்ற இருப்பைக் கொண்டதல்ல' என்ற ஹதீஸ் ஷரீப் இதனை உண்மைப்படுத்துகின்றது.

முழுப் பிரபஞ்சமும் சகல படைப்பினங்களும் ஹாதிஸ் என்ற யதார்த்தமாகும்; அதாவது படைப்பினங்கள் நிலைமாறுவதுடன் எல்லா நேரமும் ஒன்றிலிருந்து மற்றொரு நிலைக்கு மாற்றமுறுகின்றன என்பதனை இரண்டாவது ஆதாரம் எடுத்துக் காட்டுகின்றது. உண்மையில், காதிம் (தொடக்கமற்ற நிலை) உள்ள எதுவும் ஒரு போதும் மாற்றமடைய முடியாது. அல்லாஹ் தஆலாவின் தாத் (தன்னிலை மற்றும் தன்மை)யும் பண்புகளும் காதிமாகவும் ஒருபோதும் மாறாதவையாகவும் உள்ளன.[1] படைப்பினங்களில் மாற்றம் நிகழ்வது நித்தியமான இறந்த காலத்திலிருந்து ஏற்பட முடியாது. அவற்றுக்கு நிச்சயமாக ஒரு தொடக்கம் இருக்க வேண்டும். அவை இல்லாமையிருந்து படைக்கப்பட்ட ஒரு மூலப் பொருளிலிருந்து அல்லது ஒரு பருப்பொருளிலிருந்து தோன்றியிருக்க வேண்டும்.

பிரபஞ்சம் என்பது மும்கின், அதாவது அது ஒன்றுமில்லாத சூன்ய நிலையிலிருந்து தோன்றியதாகும் என்பது இந்த உண்மைக்கான இன்னொரு ஆதாரமாகும். நாம் பார்ப்பதைப் போன்று படைப்பினங்கள் ஹாதிஸ் ஆகும். அதாவது அவை இல்லாத நிலையிலிருந்து இருப்பு நிலையைப் பெறுகின்றன.

இங்கு மும்கின் மற்றும் வாஜிப்[2] என்ற இரு இருப்பு நிலைகள் உள்ளன. மும்கின் மத்திரம்தான் இருந்திருக்குமாக இருப்பின், அல்லது வாஜிப் அல்-வுஜூத் இல்லாது இருந்திருப்பின் எதுவுமே இருந்திருக்க மாட்டாது.[3] இதன் காரணத்தால், மும்கின் சுயமாக இருப்பு நிலையைப் பெறவோ தோன்றவோ முடியாது.

---

[1] எனினும், பிரபஞ்சத்தில் பருப்பொருட்களின் நிலை பௌதீக நிகழ்வுகளால் மாற்றமுறுகின்றது. இரசாயன தாக்கத்தினால் பருப்பொருட்களின் மூலக்கூறு அல்லது கட்டமைப்பு மாற்றமுறுகின்றது. பொருட்கள் அல்லது பருப்பொருட்களின் இருப்பு முற்றுப் பெறுவதையும் வேறு பருப்பொருட்களாக மாற்றமடைவதையும் நாம் காண்கிறோம். இன்று, அண்மையில் கண்டறியப்பட்ட அணு மாற்றங்களிலும் அணுத் தாக்கங்களிலும் மூலக்கூறுகளும் பொருட்களும் கூட தமது இருப்பு நிலையை முடித்துக் கொள்வதுடன் அவை சக்தியாக மாறுகின்றன.

[2] வுஜூத் என்பது 'இருப்பு நிலை, இருத்தல்' ஆகும். மூன்று வகையான இருப்பு நிலைகள் உள்ளன. கட்டாயமான இருப்பது; வாஜிப் அல்-வுஜூத் என்பது முதல் வகையாகும். அவன் எப்போதும் இருக்கின்றான். அவன் இல்லாத ஒரு நிலை முன்னர் இருந்ததில்லை. நித்தியமான எதிர்காலத்திலும் அவன் இருப்பை முடித்துக் கொள்வதில்லை. அல்லாஹ் தஆலா மாத்திரே வாஜிப் அல்-வுஜூத். இருக்க முடியாதது: மும்தனீ அல்-வுஜூத் இரண்டாவது வகையாகும். அது ஒருபோதும் இருக்கவே முடியாது. உதாரணமாக, ஷாரிக் அல்-பாரி (அல்லாஹ் தஆலாவுக்கு இணை) அல்லாஹ் தஆலாவுக்கு இணையான இன்னொரு இறைவன் அல்லது அவனை ஒத்த ஒன்று ஒருபோதும் இருக்கவே முடியாது. இருக்க முடியுமானது அல்லது முடியாதது; மும்கின் அல்வுஜூத் என்பது மூன்றாவது வகையாகும். பிரபஞ்சமும், விதிவிலக்கின்றி சகல படைப்பினங்களும் இந்த வகையாகும். வுஜூத் இற்கு எதிரானது அதம் (இல்லாமை) ஆகும். அனைத்துப் படைப்பினங்களும் தோன்றுவதற்கு முன்னர் எந்த இருப்புமற்ற அதமில் இருந்தன.

[3] இல்லாமையிலிருந்து இருப்பு நிலைக்கு வருவது ஒரு மாற்றமாகும்; அது ஒரு நிகழ்வாகும். எமது பௌதீக அறிவின் அடிப்படையில் நோக்கின், பருப்பொருளொன்றின் மீது மாற்றமொன்று

ஏதோ ஒரு சக்தி அதன் மீது தாக்கம் செலுத்தியிறாவிட்டால் அது எப்போதும் இருப்பற்ற ஒன்றாக இருந்திருக்கும்; இருப்பு நிலையை அது பெற்றிருக்க முடியாது. மும்கினுக்கு தன்னைத் தானே தோற்றுவிக்க முடியாதென்பதால் அதற்கு இயல்பாகவே பிற மும்கின்களைப் படைக்க முடியாது. எனவே, மும்கினைப் படைத்தது நிச்சயமாக வாஜிப் அல்-வுஜூத் ஆகத்தான் இருக்க வேண்டும். ஆலம்-பிரபஞ்சத்தின் இருப்பு என்பது அதனை இல்லாமையிலிருந்து படைத்த ஒரு படைப்பாளன் உள்ளான் என்பதனையே காட்டுகின்றது. எனவே அனைத்து மும்கின் படைப்புகளையும் படைத்த தனித்துவமான படைப்பாளன் ஹாதிஸாகவோ மும்கினாகவோ இல்லாத, எப்போதும் இருக்கக் கூடிய, காதிம் (நித்தியமான) ஒரே ஒரு வாஜிப் அல்-வுஜூத் ஆவான். வாஜிப் அல்-வுஜூத் என்பது பிற ஏதேனும் ஒன்றிலிருந்து தோன்றாத, சுயமாகத் தோன்றியுள்ள, இன்னொன்றினால் படைக்கப்படாத, எப்போதும் சுய இருப்புள்ள ஒன்றைக் குறிக்கிறது. இவ்வாறு அது காணப்படாவிடின் அது வேறொன்றினால் படைக்கப்பட்ட ஒரு படைப்பாக (மும்கின் மற்றும் ஹாதிஸாக) இருந்திருக்க வேண்டும். மேலும் இது மேலே அனுமானித்தற்கு முரணாக உள்ளது. பாரசீக மொழியில் 'க்ஹுதா' (அல்லாஹ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு பெயர்) என்பது, 'எப்போதும் நிலையாக வாழும், நித்தியமானவன்' என்று பொருள்படுகிறது.

படைப்பினங்களின் வகைகள் பிரமிப்பூட்டும் ஒழுங்கில் அமைந்துள்ளதையும் விஞ்ஞானம் வருடாந்தம் இந்த ஒழுங்கில் புதிய விதிகளைக் கண்டுபிடிப்பதையும் நாம் காண்கிறோம். இந்த ஒழுங்கைப் படைத்தவன் நிச்சயமாக ஹய் (நித்திய ஜீவன்), ஆலிம் (சகலதையும் நன்கறிந்தவன்), காதிர் (வல்லமையுள்ளவன்), முரீத் (சகலதையும் நாடுபவன்), ஸமீ (சகலதையும் கேட்பவன்), பாஸிர் (சகலதையும் பார்ப்பவன்), முதகல்லிம் (பேச்சாற்றல் வாய்ந்தவன்) மற்றும் க்ஹாலிக் (படைப்பாளன்)[1] ஆக இருக்க வேண்டும்; மரணித்தல், அறியாமை, இயலாமை அல்லது பிறரின் நிர்ப்பந்தத்துக்கு உட்பட்டிருத்தல், செவிடு, குருடு மற்றும் ஊமை ஆகியன சகல குறைபாடுகளாகவும் பலவீனங்களாகவும் உள்ளன. இந்த ஆலம் அல்லது காஇனாத் (சகல படைப்பினங்களையும்) ஓர் ஒழுங்கில் படைத்த, அவற்றை அழிவிலிருந்து காக்கும் படைப்பாளன் குறைபாடுள்ள பண்புகளைப் பெற்றிருக்க முடியாது.[2]

அத்தோடு, மேலுள்ள பூரணமான பண்புகளை படைப்பினங்களிலும் நாம் காண்கிறோம். அவற்றை அவன் அவனது படைப்புகளிலும் ஏற்படுத்தியுள்ளான். அத்தகைய பண்புகள் அவனிடம்

ஏற்பட வேண்டுமாயின், அப்பருப்பொருள் வெளிச் சக்தியொன்றினால் இயக்கப்பட வேண்டும். அது பருப்பொருளுக்கு முந்திய ஒரு மூலமாக இருக்க வேண்டும்.

[1] இவை அல்லாஹ் தஆலாவின் எட்டு ஸிபாத் அஸ்-ஸுபூதிய்யா ஆகும்.

[2] அணு முதல் நட்சத்திரம் வரை சகல படைப்பினங்களும் ஒரு சில கணிப்பீடுகளையும் விதிகளையும் கொண்டே படைக்கப்பட்டுள்ளன. அறியப்பட்ட பௌதீக, இரசாயன, வானியல் மற்றும் உயிரியல் விதிகளின் ஒழுங்குமுறை மனிதப் புத்தியை பிரமிக்கச் செய்கின்றது. கண்ணின் கட்டமைப்பில் உள்ள நேர்த்தியையும் ஒழுங்கையும் பற்றி சிந்திக்கும் போது பைத்தியமாவதைப் போன்று உணர்வதாக டார்வின் கூடக் கூறியுள்ளார். வளிமண்டலமானது (78%) நைட்ரஜனையும் (21%) ஒக்ஸிஜனையும் (1%) உயர் (மந்த நிலை) வாயுவையும் கொண்ட கலவையாகும். அது ஒரு கலவை; சேர்க்கை அல்ல. ஒக்ஸிஜன் 21 சதவீதத்தை விடக் கூடுதலாக இருந்திருப்பினும் அது எமது சுவாசப்பைகளை எரித்து விட்டிருக்கும். 21 சதவீதத்தை விடக் குறைவாக இருந்திருப்பின் இரத்தத்திலுள்ள ஊட்டச் சத்துக்களை தகனமடையச் செய்வது அசாத்தியமாகியிருக்கும். அதனால மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் வாழ முடியாத நிலை ஏற்பட்டிருக்கலாம். இந்த 21 சதவீதம் என்பது ஒருபோதும் எங்கு வைத்தும், மழை பொழியும் போது கூட மாற்றமடையாது. எனவே அந்த வகையில் அது ஒரு மகத்தான அருள். இந்த அற்புதத்துடன் ஒப்பிடுகையில் கண்ணின் கட்டமைப்பு என்பது ஒரு பொருட்டே அல்ல. விஞ்ஞான அறிவு என்ற பெயரில் போதிக்கப்படும் சகல விதிகளையும் படைத்த, கணிப்பீடுகளையும், சூத்திரங்களையும் நுட்பமாக ஏற்படுத்திய படைப்பாளன் குறைபாடுள்ளவனாக இருப்பது சாத்தியமா?

இல்லாதிருந்தால், எவ்வாறு அவனது படைப்பினங்களில் அவற்றை ஏற்படுத்தியிருக்க முடியும், மேலும் அவனது படைப்புக்கள் அவனை மிகைத்தனவாக இருந்திருக்கும்.

இந்த சகல படைப்பினங்களுக்குமான அகிலங்களினதும் படைப்பாளன் நிச்சயமாக பூரணத்துவமான பண்புகளையும் மேன்மையையும் பெற்றிருப்பதுடன் குறைபாடுள்ள எந்தப் பண்பையும் பெறாத ஒருவனாக இருக்க வேண்டும். குறைபாடுள்ள பண்புகளைப் பெற்ற ஒருவரிடம் படைப்பாற்றல் இருக்க முடியாது.

இந்த ஆதாரங்கள் ஒருபுறமிருக்க, ஆயாத் கரீமாக்களும் ஹதீஸ் ஷரீப்களும் அல்லாஹ் தஆலா பூரணமான பண்புகளைக் கொண்டவன் என்பதைத் தெளிவாக விளக்குகின்றன. எனவே, அது பற்றி சந்தேகிப்பது அனுமதிக்கத்தக்க ஒன்றல்ல. சந்தேகம் இறை நிராகரிப்பை ஏற்படுத்தும். மேற்சொன்ன எட்டு பூரணமான பண்புகளும் அஸ்-ஸிபாத் அஸ்-ஸுபூதிய்யா என அழைக்கப்படுகின்றன. அல்லாஹ் தஆலா பூரணமான இந்த எட்டுப் பண்புகளையும் உடையவன். அதில் எந்த ஒரு குறைபாடும் ஒழுங்கீனமும் அல்லது அவனது தன்மையில், பண்புகளில், அடிப்படையில், செயல்களில் மாற்றமும் கிடையாது. ஸிபாத் அத்-தாதிய்யா மற்றும் ஸிபாத் அஸ்-ஸுபூதிய்யா என்பன உலூஹிய்யா (தெய்வீகப்) பண்புகள் என அழைக்கப்படுகின்றன. ஒரு படைப்பு உலூஹிய்யா பண்புகளை பெற்றுள்ளதாக ஒருவர் நம்பினால் அவர் முஷ்ரிக் (இணைவைப்பாளர்) ஆக மாறுகிறார்.

இஸ்லாத்தின் அடிப்படைகள்

சகல ஆலம் - அகிலங்களின் இருப்பையும் நிலைக்கச் செய்துள்ள, சகல நலவுகளையும் கொடைகளையும் வழங்குகின்ற, ஒருபோதும் தூங்காத அல்லாஹ் தஆலா வழங்கியுள்ள உதவியோடும் ஆற்றலோடும் எமது இறைத்தூதர் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்களது பாக்கியம் வாய்ந்த வார்த்தையை நாம் இப்போது விளக்கத் தொடங்குகின்றோம்.

முஸ்லிம்களின் வீரத் தலைவராக இருந்த, இறைத்தூதரின் மிக உயர்ந்த தோழர்களில் ஒருவரான, தனது உண்மைத் தன்மையினால் புகழ்பெற்ற எமது அன்புக்குரிய ஹஸ்ரத் உமர் இப்னு அல்-க்ஹத்தாப் 'ரழியல்லாஹு தஆலா அன்ஹ்' அவர்கள் கூறுகிறார்கள்:

"ஒரு நாள் ஸஹாபாக்களாகிய எங்களில் சிலர் ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்களது சபையில் பணிவிடை செய்தவர்களாக இருந்தோம். அந்த நாள் அந்த மணித்தியாலம் மிகவும் பாக்கியம் வாய்ந்ததாக, பெறுமதி வாய்ந்ததாக இருந்தது. இன்னொரு தடவை அவ்வாறான ஒரு நாளில் வாழ சந்தர்ப்பம் கிடைப்பது மிகவும் கடினமானது. அந்நாளில், இறைத்தூதரின் கூட்டமாக, அவருக்கு அருகே நாமிருந்தமையும், ஆன்மாக்களுக்குக் கண்குளிர்ச்சியும் மகிழ்ச்சியுமூட்டும், ஆத்மாக்களுக்கு உணவாகவும் அமைந்த அவரது அழகான முகத்தைப் பார்க்கக் கிடைத்தமையும் நாம் பெற்ற கண்ணியம் என்பதை உணர்ந்தோம். பாக்கியம் பெற் ஸஹாபி அந்த நாளின் மகத்துவத்தை வலியுறுத்த, "அது அத்தகைய ஒரு நாள்" எனக் கூறுகிறார். ஜிப்ரஈல் (வானவர்களின் தலைவர் ஜெப்ரேல் அலைஹிஸ் ஸலாம்) அவர்களின் மனிதத் தோற்றத்தைக் காண்பதற்கும், அவரது குரலைக் கேட்பதற்கும், மனிதர்களுக்கு அவசியமான அறிவை எவ்வளவு அழகாகவும் தெளிவாகவும் முடியுமோ அவ்வளவு அழகாக, இறைத்தூதர் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்களது அருள்மயப்பட்ட வாயினால் கேட்பதற்கும் ஒருவருக்கு இன்னொரு கண்ணியமிக்க, பெறுமதி வாய்ந்த நாள் கிடைக்க முடியுமா?

"அந்த நேரத்தில், பௌர்ணமி உதயமாவதைப் போன்று ஒரு மனிதர் எமக்கருகே வந்தார். அவரது ஆடைகள் மிகவும் வெண்மையாக இருந்தன. அவரது தலைமுடி கடும் கருமை நிறத்தில் இருந்தது. பிரயாணம் செய்தமைக்கான தடயங்களான தூசோ வியர்வையோ அவர் மீது தென்படவில்லை. இறைத்தூதர் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்களது ஸஹாபாக்களான எம்மில் யாரும் அவரை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. அதாவது, அவர் நாம் கண்டுள்ள மனிதர்களில் ஒருவராகவோ அறிந்த ஒருவராகவோ இருக்கவில்லை. அவர் இறைத்தூதர் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்களது முன்னிலையில் அமர்ந்தார். அவர் தனது முழங்கால்களை இறைத்தூதரின் பாக்கியமிக்க முழங்கால்களுக்கு அருகே வைத்தார். மனித தோற்றத்தில் வந்துள்ள அந்த நபர்தான் ஜிப்ரஈல் என்ற வானவர் ஆவார். அவர் அமர்ந்துள்ள விதம் ஒழுக்கத்திற்கு (ஆதாப்) ஒத்திசையாத அமைப்பில் இருந்தபோதும் அது எமக்கு மிக முக்கிய உண்மையை சுட்டிக்காட்டியது: மார்க்க அறிவைக் கற்கும் போது கூச்ச உணர்வுக்கு இடமில்லை; பெருமைக்கோ அல்லது கர்வத்துக்கோ அதிகாரம் செலுத்த முடியாது. ஒவ்வொருவரும் இஸ்லாம் பற்றித் தனக்கு அறிந்து கொள்வதற்குத் தேவையானவற்றை ஆசான்களிடம் தயக்கமின்றி தாராளமாகக் கேட்பது அவசியமாகும் என்பதனையும் இஸ்லாத்தைக் கற்பதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் அல்லாஹ் தஆலாவுக்கான ஒருவரது கடமையைக் கற்றல் கற்பித்தலிலும் தர்மசங்கடப்படக் கூடாது என்பதனையும் ஹஸ்ரத் ஜிப்ரஈல் ஸஹாபாக்களுக்குக் காண்பிக்க நாடினார்.

அந்த மேன்மைக்குரிய நபர் தனது கைகளை ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்களது பாக்கியமிக்க முழங்காலின் மேல் வைத்தார். "அல்லாஹ்வின் தூதரே! இஸ்லாம் என்றால் என்ன என்பதையும் ஒரு முஸ்லிமாக இருப்பது எப்படி என்பதையும் எனக்குக் கூறுங்கள்" என அவர் ரஸூலுல்லாஹ்விடம் கேட்டார்.

'இஸ்லாம்' என்பதன் மொழிக் கருத்து, ' 'கீழ்படிந்து தலைவணங்குதல்' என்பதாகும். ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்கள், இஸ்லாம் என்பது பின்வரும் ஐந்து அடிப்படை அம்சங்களின் மொத்த வடிவம் என்பதை விளக்கினார்கள்:

1. ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்கள் ஐந்து அடிப்படை அம்சங்களில் முதலாவது, ''கலிமத் அஷ்-ஷஹாதா மொழிவதாகும்'' எனக் கூறினார்கள். அதாவது, ஒருவர், "அஷ்ஹது அன் லா இலாஹ இல்லல்லாஹ் வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வரஸூலுஹு" என்று கூற வேண்டும். இன்னொரு விதமாகக் கூறின், பகுத்தறிவுள்ள ஒருவர் பருவ வயதை அடைந்தால், அவருக்குப் பேச முடியுமாக இருந்தால், அவர், "வானத்திலோ அல்லது பூமியிலோ வணங்கப்படத் தகுதியான ஒருவன் அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு யாரும் இல்லை. உண்மையாக, வணங்கப்பட வேண்டிய ஒருவன் அல்லாஹு தஆலா ஒருவன் மாத்திரமே. அவன்தான் வாஜிப் அல்-வுஜூத். சகல விதமான மேன்மைகளும் அவனிடமே உள்ளன. அவனிடம் எந்தக் குறையும் இல்லை. அவனது பெயர் அல்லாஹ்" என வாயால் மொழிய வேண்டும். இதனை முழுமையாக உளமார ஏற்று நம்பிக்கை கொள்ள வேண்டும். அத்தோடு, "மிக உன்னத மனிதரான, இளஞ்சிவப்பு நிறத்திலான தோலையும், சிவந்த வெண்ணிற, பிரகாசமான, அன்பான முகத்தையும், கருமையான கண்களையும் புருவங்களையும் அகன்ற நெற்றியையும் கொண்ட, அழகிய குணங்களையும் நடத்தையையும் பெற்ற, தனது நிழல் ஒருபோதும் நிலத்தில் விழாத, மென்மையாகப் பேசக்கூடிய, மக்காவின் ஹாஷிம் குலத்தில் பிறந்ததால் அராபியர் என அழைக்கப்படுகின்ற, முஹம்மத் இப்னு அப்துல்லாஹ், அல்லாஹு தஆலாவின் மனித அடியாரும் (அப்த்) தூதரும் (ரஸூல்) ஆவார் என ஒருவர் மொழிந்து, நம்ப வேண்டும். இறைத்தூதரின் தாய் ஹஸ்ரத் ஆமினா பின்த் வஹப் ஆவார். இறைத்தூதர் [கி.பி 571, ஏப்ரல் 20 ஆம் திகதி, திங்கட்கிழமை அதிகாலையில்] மக்காவில் பிறந்தார். அவரது நாற்பதாவது வயதில், 'பைதாத்' என்ற குறிப்பிட்ட வருடத்தில், அவர் ஒரு இறைத்தூதர் என்பது அவருக்கு அறிவிக்கப்பட்டது. அதன் பின், அவர் மக்காவில் பதின்மூன்று வருடங்கள் மக்களை இஸ்லாத்தின்பால் அழைத்தார். பின்னர், அல்லாஹு தஆலாவின் கட்டளைப்படி அவர் மதீனாவுக்குக் குடிபெயர்ந்தார். அங்கிருந்து அவர் இஸ்லாத்தை எல்லா இடங்களுக்கும் பரப்பினார். ஹிஜ்ரத் (ஹெஜிரா) இற்குப் பின்னர் பத்து வருடங்கள் கழித்து, அவர் மதீனாவில் ரபீஉல் அவ்வல் திங்கட்கிழமை 12 ஆம் நாள் (கி.பி 632, ஜூலை) வபாத்தானார்.[1]

2. இஸ்லாத்தின் ஐந்து அடிப்படை அம்சங்களில் இரண்டாவது, "தொழுகை (அல்லது ஸலாத்) (எனப்படும் வழிபாட்டை) தினமும் ஐவேளை, அதன் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து, (ஒவ்வொரு) தொழுகை நேரத்தை அடையும் போதும், அதன் பர்ள் (எனப்படும் அடிப்படைகளைக்) கவனத்திற் கொண்டு நிறைவேற்றுதலாகும்." தினமும் ஐவேளைகள் தொழுகையை நிறைவேற்றுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் பர்ள் ஆகும். ஒவ்வொரு தொழுகையையும் முன்னதாகவோ,

---

[1] *வரலாற்றாசிரியர்களின் கருத்தின் படி, இறைத்தூதர் மக்கா முகர்ரமாவிலிருந்து மதீனா முனவ்வராவுக்கான தனது குடிபெயர்வின் போது, கி.பி622 ஸபர் மாதம் 27ஆம் திகதி வியாழக்கிழமை மாலையில் ஸவ்ர் மலையிலுள்ள குகையில் நுழைந்தார். திங்கட்கிழமை இரவு குகையிலிருந்து சென்று, ரபீஉல் அவ்வல் 8ஆம் திகதி திங்கட்கிழமை (ஜோர்ஜியன் நாட்காட்டியின் படி செப்டம்பர் 20ஆம் திகதி, மற்றும் ஜூலியன் நாட்காட்டியின் படி செப்டம்பர் 7ஆம் திகதி) மதீனாவுக்கு காற்பங்களவு நெருக்கமான குபாவை அடைந்தார். (இந்த மகிழ்ச்சிகரமான தினம்தான் முஸ்லிம்களின் ஹிஜ்ரி (ஹெஜிரல்) - ஷம்ஸீ (சூரிய) நாட்காட்டியின் தொடக்கமாக மாறியது). ஷீயாக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹிஜ்ரி ஷம்ஸீ நாட்காட்டியின் தொடக்கம் இதற்கு ஆறு மாதங்கள் முன்னதாக ஆரம்பிக்கின்றது. அதுதான், மார்ச் 20ஆம் திகதி ஆரம்பிக்கும் மஜூஸி (நெருப்பு வணங்கிகளான) இறைநிராகரிப்பாளர்களின் நவ்ருஸ் பண்டிகையாகும். உலகில் அனைத்து இடங்களிலும் இரவும் பகலும் சம அளவு நீளத்தில் இருந்த வியாழக்கிழமை தினமொன்றில் குபாவில் தங்கிவிட்டு, வெள்ளிக் கிழமை காற்பகுதியில் அங்கிருந்து சென்று, அதே தினத்தில் மதீனாவை அடைந்தார். அதே வருடம் முஹர்ரம் மாதத்தின் ஆரம்ப தினம் (ஜூன் 16ஆம் திகதி, வெள்ளிக்கிழமை) ஹிஜ்ரி கமரீ நாட்காட்டியின் ஆரம்பமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்த கமரீ (சந்திர) வருடத்தின் புது வருட தினம் ஜூலை 16ஆம் திகதி, ஒரு வெள்ளிக்கிழமை அமைந்தது. ஹிஜ்ரி ஷம்ஸீ வருடம் மேற்கத்தேய புதுவருட தினத்தோடு 622 வருடங்கள், அந்த மேற்கத்தேய புதுவருடத்தை முந்தியதாக ஒத்திசைந்துள்ளது. அத்துடன், மேற்கத்தேய வருடம் எந்தவொரு ஹிஜ்ரி ஷம்ஸீ வருடத்தின் தினத்திற்கும் 621 வருடங்கள், ஹிஜ்ரி ஷம்ஸீ புதுவருடத்தை விட்டும் பிந்தியதாக ஒத்திசைந்துள்ளது.*

தாமதமாகவோ அன்றி, அதற்காக வரையறுக்கப்பட்ட நேரத்தில் தொழ வேண்டும். அத்தோடு தொழுகையொன்றை அதற்கு வரையறுக்கப்பட்ட நேரத்திற்குள் நிறைவேற்ற அறிந்திருப்பது அவசியமாகும்.[1] ஒரு தொழுகையை அதற்குரிய நேரத்திற்கு முன்னர் தொழுவது பெரும்பாவமாகும். அறிவற்ற மற்றும் லா மத்ஹபி மக்கள் உருவாக்கிய பிழையான நாட்காட்டியைப் பயன்படுத்துவதால் இந்தப் பெரும்பாவம் நிகழ்கிறது. அந்தத் தொழுகை ஸஹீஹானதல்ல (செல்லுபடியானதல்ல). (நான்கு மத்ஹப்களில் எந்த ஒரு மத்ஹபையும் ஏற்றுக் கொள்ளாதவர்களே லா மத்ஹபி மக்கள் ஆவர்.) இந்தப் பிழையான வழிகாட்டுதல் முற்பகல் தொழுகையின் முன் சுன்னத்தான பகுதியையும மாலைத் தொழுகையின் பர்ளான பகுதியையும் கெராஹத் (அல்லது கராஹத்) எனப்படும் அவற்றின் (பாவமான) நேரத்தில் நிறைவேற்ற முஸ்லிம்களுக்கு வழிவகுக்கிறது. (கராஹத்துக்குரிய நேரங்கள் *Endless Bliss* நூலின் நான்காவது பாகத்தில் விளக்கப்பட்டுள்ளது. அத்தோடு மிப்தாஹுல் ஜன்னா என்ற நூலின் மென் அட்டையின் உட்பக்கத்திலும் உள்ளது. தயவு செய்து கீழுள்ள அடிக்குறிப்பையும்[1] பார்க்க.) தொழுகை அதன் பர்ள், வாஜிப் மற்றும் ஸுன்னா ஆகியவற்றில் கவனம் செலுத்தி, உள்ளத்தை அல்லாஹு தஆலாவிடம் ஒப்படைத்து, அதன் விதிக்கப்பட்ட நேரம் முடிவடைய முன்னர் நிறைவேற்றப்பட வேண்டும். குர்ஆன் அல்-கரீமில் தொழுகை 'ஸலாத்' எனப்படுகின்றது. ஸலாத் என்பது மனிதனின் பிரார்த்தனையாகவும்; வானவரின் இஸ்திஃபாராகவும், அல்லாஹு தஆலாவின் கருணையையும் இரக்கத்தையும் பெறுவதாகவும் உள்ளது. இஸ்லாத்தில் தொழுகை என்பது குறிப்பிட்ட செயற்பாடுகளை செய்தலும் இல்ம் அல்-ஹால் நூல்களில் காட்டியுள்ள அமைப்பில் குறிப்பிட்ட விடயங்களை ஓதுவதுமாகும். தொழுகையானது 'அல்லாஹு அக்பர்' என்ற வார்த்தையுடன் ஆரம்பிக்கப்படுகிறது. அது, 'தக்பீர் அல்-இப்திதாஹ்' எனப்படும். கைகளை காதின் அளவுக்கு உயர்த்தியதன் பின்னர் அது மொழியப்பட்டு, (ஆண்களுக்கு) தொப்புளின் கீழே கைகளை வைத்துக் கட்டிக் கொள்வதுடன் பூரணமாகும். இறுதி இருப்பு நிலையில் தலையை வலது மற்றும் இடது தோள்களின் பக்கம் திருப்பி மேற்கொள்ளப்படும் ஸலாமுடன் தொழுகை முடிவடைகிறது.

3. இஸ்லாத்தின் மூன்றாவது அடிப்படை, "ஒருவரது செல்வத்திற்கான ஸகாத்தை நிறைவேற்றல்" ஆகும். ஸகாத்தின் மொழிக் கருத்து, 'தூய்மை, புகழ்தல் மற்றும் நல்லதாக, அழகானதாக மாறுதல்' என்பதாகும். இஸ்லாத்தில் ஸகாத் என்பது, 'யார் ஸகாத்தின் செல்வத்தை தனது தேவைக்கு மேலதிகமாக, நிஸாப் எனப்படும் குறிப்பிட்ட அளவுக்கு வைத்துள்ளாரோ, அவர் தனது செல்வத்தில் குறிப்பிட்ட அளவை குர்ஆன் அல்-கரீமில் குறிப்பிடப்பட்டுள்ள முஸ்லிம்களுக்கு தேய்வின்றி வழங்குதல் ஆகும்.' ஸகாத் ஏழு வகையான மக்களுக்கு வழங்கப்படுகின்றது. நான்கு மத்ஹப்களிலும் நான்கு வகையான ஸகாத் உள்ளது: தங்கம் மற்றும் வெள்ளிக்கான ஸகாத், வியாபாரப் பொருட்களுக்கான ஸகாத், அரை வருடத்திற்கு அதிகமாக மேய்ப்பு நிலங்களில் மேயும் கால்நடைகளுக்கான ஸகாத் (செம்மறி ஆடுகள், ஆடுகள் மற்றும் மந்தை) மற்றும் பூமியிலிருந்து எடுக்கப்படும் அனைத்து வகையான அவசியமான பொருட்களுக்குமான ஸகாத். இந்த நான்காவது வகை ஸகாத் உஷ்ர் எனப்படுகின்றது. அது விளைச்சல் அறுவடை செய்யப்பட்டவுடன் உடனடியாக செலுத்தப்படுகிறது. மற்ற மூன்றும் நிஸாப் அளவை அடைந்து, ஒரு வருடத்தில் செலுத்தப்படுகின்றன.

4. இஸ்லாத்தின் நான்காவது அடிப்படை, "ரமதான் மாதத்தில் ஒவ்வொரு நாளும் நோன்பு நோற்பதாகும்." நோன்பு 'ஸவ்ம்' என அழைக்கப்படுகின்றது. ஸவ்ம் என்பது ஒரு விடயத்தை வேறொன்றை விட்டும் பாதுகாத்தல் எனப் பொருள்படும். இஸ்லாத்தில், ஸவ்ம் என்பது அல்லாஹு தஆலாவின் கட்டளையின் படி, ஒருவர் ரமதான் மாதத்தில் [பகல் பொழுதில்] தன்னை மூன்று விடயங்களான உண்ணல், பருகுதல் மற்றும் உடலுறவு கொள்ளல் ஆகியவற்றை விட்டும் பாதுகாத்துக் கொள்வதாகும். (மேற்கு) அடிவானத்தில் புதிய சந்திரனைக் காண்பதன் மூலம் ரமதான்

[1] தயவு செய்து, தொழுகை பற்றிய விரிவான தகவல்களுக்கு *Endless Bliss* இன் நான்காம் பாகத்தை வாசிக்கவும். அத்தோடு, மிப்தாஹுல் ஜன்னா என்ற நூலையும் பார்க்கவும். அதன் ஆங்கில வடிவம், துருக்கி, இஸ்தான்பூல், ஹகீகத் கிதாபவியில் கிடைக்கிறது.

மாதம் ஆரம்பிக்கின்றது. நாட்காட்டியில் கணிக்கப்பட்டுள்ளதன் படி அது ஆரம்பிக்காமல் இருக்கலாம்.

5. இஸ்லாத்தின் ஐந்தாவது அடிப்படை, "ஹஜ் (புனித யாத்திரையை) நிறைவேற்ற முடியுமான ஒருவர், தனது வாழ்நாளில் ஒரு முறை அதனை நிறைவேற்றல்" ஆகும். மக்கா நகரத்திற்கு சென்று வருவதற்கான போதுமான பணமுள்ள, தான் திரும்பி வரும் வரை தனது குடும்பத்தின் வாழ்வாதாரத்திற்கான செல்வங்களை விட்டுச் செல்ல முடியுமான, பயணப் பாதை பாதுகாப்பாகவும், உடலாரோக்கியமாகவும் உள்ள ஒருவர் தனது வாழ்நாளில் ஒரு தடவை கஃபாவைச் சுற்றி தவாப் செய்வதும், அரபா வெளியில் வக்பாவை நிறைவேற்றுவதும் பர்ள் ஆகும்.

"ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்களிடமிருந்து இந்தப் பதிலை செவிமடுத்த போது, அந்த நபர் 'யா ரஸூலுல்லாஹ்! நீங்கள் உண்மை உரைத்து விட்டீர்' என்று கூறினார்." அங்கிருந்த ஸஹாபாக்கள், இந்த நபர், அவரே கேள்வியைக் கேட்டு, அவரே அந்த விடை சரியானது என்று கூறும் அவரது நடத்தையைக் கண்டு ஆச்சரியப்பட்டனர் என ஹஸ்ரத் உமர் 'ரழியல்லாஹு அன்ஹ்' கூறினார். ஒருவர் தனக்குத் தெரியாததை கற்றுக் கொள்ளும் நோக்கத்தில் கேட்கின்றார். ஆனால் அவரே, " நீங்கள் உண்மை உரைத்து விட்டீர்' என்று கூறுவது, அவருக்கு அது ஏற்கனவே தெரிந்துள்ளது என்பதனைச் சுட்டிக் காட்டுகின்றது.

மேலே பட்டியல்படுத்திய ஐந்து அடிப்படை அம்சங்களில் மிகவும் உயர்ந்தது, கலிமத் அஷ்-ஷஹாதாவை மொழிந்து, அதன் கருத்தை ஏற்றுக் கொள்வதாகும். இரண்டாவது உயர்ந்த விடயம், தொழுகையை நிறைவேற்றுவதாகும். அடுத்தது, நோன்பு நோற்றல். அதன்பிறகு ஹஜ் வருகிறது. இறுதியான விடயம், ஸக்த்தை செலுத்துவதாகும். கலிமத் அஷ்-ஷஹாதாதான் மிகவும் உயர்ந்தது என்பது ஏகமனதான விடயமாகும்.

ஏனைய நான்கினதும் வரிசைத் தொடரைப் பொருத்தவரை, பெரும்பாலான இஸ்லாமிய அறிஞர்கள் நாம் மேலே கூறியதையே கூறியுள்ளனர். கலிமத் அஷ்-ஷஹாதாதான் இஸ்லாத்தின் தொடக்கமாக, முதலாவது பர்ளாக வந்தது. அன்றாட ஐவேளைத் தொழுகை பிஃஸ்தின் பன்னிரண்டாவது வருடத்தில், ஹிஜ்ரத்திற்கு ஒரு வருடமும் சில மாதங்களும் முன்னதாக, மிஃராஜ் இரவில்தான் பர்ளாக மாறியது. ரமழானில் நோன்பு நோற்பது ஹிஜ்ரி இரண்டாவது வருடத்தில், ஷஃபான் மாதத்தில் பர்ளாக மாறியது. ஸகாத்தை செலுத்துவது, நோன்பு கடமையாக்கப்பட்ட அதே வருடம், ரமழான் மாதத்தில்தான் பர்ளாக மாறியது. அத்தோடு ஹிஜ்ரி பத்தாம் வருடமே ஹஜ் பர்ளாகியது.[1]

ஒருவர் இஸ்லாத்தின் இந்த ஐந்து அடிப்படைகளையும் மறுத்து, நிராகரித்து, புறக்கணித்து, விளையாட்டாக அல்லது ஏளனமாக எடுத்துக் கொண்டால் அவர் இறைநம்பிக்கை அற்றவராக மாறுவார். அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக! அதேபோன்று, ஏகமனதாக, தெளிவாக ஹலால் (அனுமதிக்கப்பட்டது) அல்லது ஹராம் (தடுக்கப்பட்டது) என்று கூறப்பட்டுள்ள விடயங்களை யார் ஏற்றுக் கொள்ளவில்லையோ அல்லது ஹலாலை ஹராமென்றும் ஹராமை ஹலாலென்றும் கூறுகிறாரோ அவர் இறைநம்பிக்கை அற்றவராக மாறுகிறார். ஒருவர் இஸ்லாத்தின் மிகவும் இன்றியமையாது அறியப்பட்ட போதனையொன்றை, அதாவது முஸ்லிம் நாடுகளில் வாழும் பொது மக்களும் அறிந்துள்ள அல்லது கேட்டுள்ள போதனைகளில் ஒன்றை விரும்பாவிட்டால் அல்லது

[1] தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் மற்றும் மிஃராஜ் பற்றிய விரிவான தகவலை முறையே, *Endless Bliss* இன் நான்காம் பாகத்திலிருந்தும், ஐந்தாம் பாகத்தின் இரண்டாம், முதலாம், ஏழாம் அத்தியாயத்திலிருந்தும், மூன்றாம் பாகத்தின் அறுபதாவது அத்தியாயத்திலிருந்தும் பெற முடியும். பிஃஸத் என்பது அல்லாஹ் தஆலா அவனது பாக்கியமிக்க வானவர் தலைவரான ஜிப்ராஈலை தனது நேசத்திற்குரிய தூதரிடம், அவர்தான் இறுதி இறைத்தூதர் என்பதை அறிவிப்பதற்காக அனுப்பி வைத்ததைக் குறிக்கிறது. ஹெஜிரா (ஹிஜ்ரத்) என்பது ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்' அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்குக் குடிபெயர்ந்ததைக் குறிக்கிறது.

வெறுத்தால், அவர் இறைநம்பிக்கை அற்றவராக மாறுகிறார்.[1] ஒரு சாதாரண நபர், பொதுவாகப் பரவலற்ற, அல்லது தனக்கு அறிய வேண்டிய அத்தியாவசியமற்ற போதனைகளை அறியாவிட்டால், அவர் நிராகரிப்பில் (குப்ரில்) இல்லை; அவர் பாவத்தில் (பிஸ்கில்) உள்ளார்.

---

[1] உதாரணமாக, பன்றி இரைச்சியை சாப்பிடுவது, மதுபானம் அருந்துவது, சூதாட்டம், ஒரு யுவதியை அல்லது பெண்ணைப் பொருத்தவரை அவர் தனது தலையை, முடியை, தோள் புஜங்களை மற்றும் கால்களை மறைக்காமல் பிறருக்கு தன்னை வெளிப்படுத்துவது; ஆணைப் பொருத்தவரை, தனது முழங்காலுக்கும் தொப்புளுக்கும் இடைய உள்ள பகுதியை மறைக்காமல் பிறருக்கு தன்னை வெளிப்படுத்துவது ஆகியன அனைத்தும் ஹராமாகும். ஏனெனில் அல்லாஹு தஆலா இந்த செயல்களைத் தடைசெய்துள்ளான். அல்லாஹு தஆலாவின் ஏவல்களையும் விலக்கல்களையும் விபரிக்கும் நான்கு மத்ஹப்களும் மனித உடலில் அவ்ரத் பகுதிகளை வரையறுப்பதில் வித்தியாசமான பதிவுகளைக் கொண்டுள்ளன. உதாரணமாக, பிறருக்கு வெளிக்காட்டுவது ஹராமான (தடுக்கப்பட்ட) ஆணின் உடல் பகுதிகள். ஒரு முஸ்லிம் சார்ந்துள்ள மத்ஹப் விபரிப்பதன் படி அந்த உடற் பகுதிகளை மறைப்பது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் பர்ளாகும். அத்துடன், தமது உடற்பகுதிகளை மறைக்காதவர்களை அடுத்தவர்கள் பார்ப்பதும் ஹராமாகும். தமது தலையை, முடியை, தோள் புஜங்களை, கால்களை மறைக்காமல் வெளியே செல்வதும், மெல்லிய மற்றும் இறுக்கமான ஆடை அணிந்து, அலங்கரித்து, வாசனை பூசிய ஆடைகளுடன் வெளியே செல்வதும் பெண்களுக்கும் யுவதிகளுக்கும் ஹராமாகும் என்பது கிம்யாயி ஸஆதத் என்பதில் எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் வெளியே செல்வதை அனுமதிக்கும், இவை அவர்களுக்குத் தகுந்தவை என நினைக்கும், மேலும் அவர்களைக் கண்டுகொள்ளாது விடும் அவர்களது தாய்மார், தந்தைமார், கணவன்மார் மற்றும் சகோதரர்களும் அவர்களது பாவத்திலும் தண்டனையிலும் பங்கு பெறுவார்கள். அதாவது, அவர்கள் அனைவருமே ஒன்றாக நரகத்தில் எரிக்கப்படுவார்கள். அவர்கள் தௌபா செய்தால், அவர்கள் மன்னிக்கப்படுவடுவதன் நரகத்தில் எரிக்கப்படவும் மாட்டார்கள். அல்லாஹு தஆலா தௌபா செய்பவர்களை விரும்புகின்றான். ஹிஜ்ரி மூன்றாம் வருடம், பருவ வயதை அடைந்த யுவதிகளும் பெண்களும் தம்மை மஹ்ரமல்லாத ஆண்களுக்கு வெளிக்காட்ட வேண்டாம் எனவும் தம்மை மறைத்துக் கொள்ளும்படியும் ஏவப்பட்டார்கள். (தயவு செய்து, *Endless Bliss* இன் நான்காம் பாகத்தின் எட்டாம் அத்தியாயத்தைப் பார்க்கவும்)

பிரித்தானிய உளவாளிகள் உட்செருகி, அவர்களது வஞ்சிக்கப்பட்ட அடிவருடிகளால் மீட்டப்படும் பொய்களை நாம் விசுவாசிக்கக் கூடாது. ஹிஜாபுடைய (பெண்கள் தம்மை மறைத்துக் கொள்ளும்) ஆயத் அருளப்பட முன்னர் பெண்கள் தம்மை மறைப்பவர்களாக இருக்கவில்லை என்றும் பின்னர் பிக்ஹ் எனப்படும் (இஸ்லாமியக் கலை) அறிஞர்களால் புனையப்பட்ட கட்டளைகளில்தான் இவ்வாறு உள்ளது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

தன்னை முஸ்லிம் என்று கூறும் ஒருவர், தான் செய்யும் விடயம் இஸ்லாத்துடன் இசைந்து செல்கிறதா இல்லையா என்பதை அறிந்திருக்க வேண்டும். அவர் அறியாவிட்டால், அஹ்ல் அஸ்-ஸுன்னத் அறிஞர் ஒருவரிடம் கேட்பதன் மூலம் அல்லது அந்த வகை அறிஞர்களால் எழுதப்பட்ட நூல்களை வாசிப்பதன் மூலம் கற்றுக் கொள்ள வேண்டும். அவரது செயல் இஸ்லாத்துக்கு முரணாக அமைந்தால் அவர் அச்செயலின் மூலம் கிடைக்கும் பாவத்தை விட்டும் அல்லது மத நிந்தனையை விட்டும் விதிவிலக்கு அளிக்கப்பட மாட்டார். அவர் தினமும் உண்மையான உணர்வுடன் தௌபா செய்ய வேண்டும். தௌபா செய்யப்பட்டால், பாவம் அல்லது (அந்த செயலால் நிகழ்ந்த) மத நிந்தனை நிச்சயமாக மன்னிக்கப்படும். அவர் தௌபா செய்யவில்லையெனின் அவர் உலகிலும் நரகத்திலும் அதற்கான விலையை செலுத்துவார். (அவர் மீது விதிக்கப்படும்) தண்டனையின் வகைகள் எமது நூலில் பல்வேறு பகுதிகளில் எழுதப்பட்டுள்ளன. (தயவு செய்து, *Endless Bliss* இன் ஆறாம் பாகத்தின் பத்தாம் அத்தியாயத்தையும் பார்க்கவும்)

ஆண்கள் மற்றும் பெண்கள் தொழுகையிலும் வேறு இடங்களிலும் மறைக்க வேண்டிய உடலின் பகுதிகள் 'அவ்ரத் பகுதிகள்' எனப்படுகின்றன. குறிப்பிட்ட ஒரு பகுதியை அவ்ரத் என இஸ்லாம்

பரிந்துரைக்கவில்லை என்று ஒருவர் கூறினால் அவர் இறைநம்பிக்கை அற்றவராக மாறுகிறார். உடலின் சில பகுதிகள் எல்லா நான்கு மத்ஹப்களினதும் இஜ்மாவின் (ஒருமித்த, ஏகமனதான கருத்தின்) அடிப்படையில் அவ்ரத் ஆகும், (இந்த அவ்ரத் பகுதிகள் பாலினத்திற்கு ஏற்ப வேறுபடுகின்றன). ஒருவர் தனது உடலின் இப்பகுதிகளை மறைப்பதன் மற்றும் பிறரின் வெளிக்காணும் அவ்ரத்தை பார்க்காமல் இருப்பதன் முக்கியத்துவத்தை அலட்சியப்படுத்தினால், அதாவது அந்த ஆணோ பெண்ணோ இந்தத் தடையை மீறுவதால் விதிக்கப்படும்) தண்டை குறித்து எந்தப் பயத்தையும் உணராவிட்டால், அந்த ஆண் அல்லது பெண் இறை நிராகரிப்பாளராக மாறுகிறார். ஆணொருவரின் உடலில் இடுப்பு முதல் முழங்கால் வரையான பகுதி ஹன்பலி மத்ஹபில் அவ்ரத் அல்ல.

ஒருவர், "நான் ஒரு முஸ்லிம்" என்று கூறினால், இஸ்லாத்தின் கோட்பாடுகளையும், பர்ளான (கட்டாயமான) மற்றும் ஹராமான (தடுக்கப்பட்ட) செயல்களையும் நான்கு மத்ஹப்களும் (இஜ்மா) கருத்தொற்றுமைப்படும் அம்சங்களுடன் கற்றுக் கொள்வதும், இதற்கு தகுந்த முக்கியத்துவத்தை வழங்குவதும் அவசியமாகும். அறியாதிருப்பது என்பது ஏற்கக்கூடிய நியயமல்ல. அது வேண்டுமென்றே இறை நம்பிக்கையின்மையுடன் இருப்பதை ஒத்தது. நான்கு மத்ஹப்களினதும் படி ஒரு பெண்ணின் இரு கைகள் மற்றும் முகம் தவிர்ந்த முழு உடலும் அவ்ரத் ஆகும். ஒரு பெண் தனது அவ்ரத்தை வெளிக்காட்டுவதும், பாடுவதும் அல்லது ஆண்களுக்கு முன்னால் மவ்லித் (எனப்படும் சப்தமிட்டு துதிபாடுவதும்) அவ்வாறானதாகும். ஒருவர் இஜ்மாவுடன் இல்லாத அவ்ரத் வகையைச் சேர்ந்த, அதாவது, அது ஏனைய மூன்று மத்ஹப்களிலும் அவ்ரத் அல்லாத (ஆயினும் தனது சொந்த மத்ஹபின் படியும் அடுத்த மூன்று மத்ஹப்களில் இரண்டின் படியும் அவ்ரத்தாக உள்ள) தனது உடல் பகுதியொன்றை லேசாக வெளிக்காட்டினால் அவர் ஒரு பெரும்பாவத்தை செய்தவர் ஆகின்றார். ஆயினும் இந்த அத்துமீறல் அவரை ஒரு இறை நம்பிக்கையற்றவராக மாற்றாது. உதாரணமாக, இந்த மனிதர் தனது இடுப்புக்கும் முழங்காலுக்கும் இடைப்பட்ட கால்ப்பகுதிகளை (இது நாம் ஏற்கனவே கூறியதைப் போன்று, ஹன்பலி மத்ஹபில் அவ்ரத் அல்ல, ஆயினும் அடுத்த மூன்று மத்ஹப்களிலும் அவை அவ்ரத் ஆகும்) வெளிக்காட்டுகின்றார். நீங்கள் அறியாத இஸ்லாமியக் கோட்பாடுகளைக் கற்பது பர்ளாகும். நீங்கள் முடிந்தளவு அவசரமாக அவற்றைப் படிப்பதும், தெளபா கேட்பதும் (உங்களது உடலின் அவ்ரத் பகுதி என்ற விழிப்புணர்வின்மையின் காரணமாக மறைக்காமல் விட்ட) உங்களது அவ்ரத் பகுதிகளை மறைத்துக் கொள்வதும் கட்டாயமாகும்.

பொய், வீண்பேச்சு,புறம் பேசுதல், அவதூறு, களவு, மோசடி, துரோகம், ஒருவரது உணர்வுகளைக் காயப்படுத்தல், விஷமம் புரிதல், அனுமதியின்றி ஒருவரின் செல்வத்தைப் பயன்படுத்தல், ஊழியர்களின், கூலியாட்களின் ஊதியத்தை வழங்காதிருத்தல், கிளர்ச்சி செய்தல்; அதாவது, அரசாங்கத்தின் கட்டளைகளையும் சட்டங்களையும் எதிர்த்தல் மற்றும் வரிகளை செலுத்தாதிருத்தல் என்பனவும் பாவங்களாகும். அவற்றை இறைநிராகரிப்பாளர்களுக்கோ அல்லது முஸ்லிமல்லாத நாடுகளிலோ செய்தாலும் ஒரே சமமான ஹராமாகும்.

ஈமானின் அடிப்படைகள்

இந்த மேன்மைக்குரிய நபர் மீண்டும், 'யா ரஸூலுல்லாஹ்! இப்போது எனக்கு ஈமான் என்றால் என்ன என்று கூறுங்கள்." என வினவினார். இஸ்லாம் என்றால் என்ன என்று கேட்டு, அதற்கான பதில் வழங்கப்பட்டதுடன் ஹஸ்ரத் ஜிப்ராஈல் 'அலைஹிஸ் ஸலாம்' எமது தலைவர் ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்களிடம் ஈமானின் மையக்கருத்தையும் அதன் யதார்த்தத்தையும் விளக்குமாறு வேண்டினார். மொழிக் கருத்தின் படி ஈமான் என்பது ' நிறைவான, உண்மையான, அவர்மீது நம்பிக்கை வைக்கக் கூடிய ஒருவரை அறிதல்' என்பதாகும். இஸ்லாத்தில், ஈமான் என்பது, ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்கள் அல்லாஹு தஆலாவின் இறைத்தூதர், அதாவது அல்லாஹ்வால் தெரிவு செய்யப்பட்ட ஒரு தூதர், நபி என்ற உண்மையை நம்பிக்கை கொள்ளல்; இதனை உள்ளத்தால் நம்பியவராக மொழிதல்; அவர் அல்லாஹு தஆலாவிடமிருந்து சுருக்கமாக எத்திவைத்தவற்றையும் விரிவாக விளக்கி முன்வைத்தவற்றையும் அவ்வாறே ஏற்று நம்புதல், அத்தோடு முடியுமான பொழுதெல்லாம் கலிமத் அஷ்-ஷஹாதாவை மொழிதல் என்பனவாகும். உறுதியான ஈமான் என்பது, நெருப்பு சுட்டெரிக்கும் என்பதையும் பாம்புகள் விஷத்தால் கொலை செய்யும் என்பதையும் நாம் உறுதியாக நம்பி, அவற்றை விட்டும் தவிர்ந்திருப்பதைப் போன்று நாம் அல்லாஹு தஆலாவுக்குக் கீழ்படிய வேண்டும். அவனது பண்புகள் மக்த்தானவை, இதனை மிகவும் உறுதியாக உள்ளத்தால் விசுவாசிக்க வேண்டும்; அவனது திருப்தியை (ரிழாவைப்) பெற பாடுபட வேண்டும்; அவனது அழகின் (ஜமாலின்) பால் விரைந்தோட வேண்டும்; அவனது சினத்தை (கஃலபை) விட்டும் தண்டனையை (ஜலாலை) விட்டும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இந்த ஈமானை நாம் எமது உள்ளத்தில் கல்வெட்டைப் போன்று உறுதியாக எழுவது அவசியமாகும்.

ஈமானும் இஸ்லாமும் ஒன்றாகும். இரண்டிலும், ஒன்று கலிமத் அஷ்-ஷஹாதாவின் பொருளை நம்புதல் உள்ளது. இரண்டும் பொதுவாகவும் குறிப்பாகவும் வேறுபட்டிருப்பினும், வேறுபட்ட மொழிக்கருத்துக்களை கொண்டிருந்தாலும் இஸ்லாத்தில் அவற்றுக்கு மத்தியில் வேறுபாடு கிடையாது.

ஈமான் என்பது ஒரு விடயமா, அல்லது அது பகுதிகளின் சேர்க்கையா? அது ஒரு சேர்க்கையாக இருப்பின், எத்தனை பகுதிகளால் அது உருவாக்கப்படுகிறது? செயல்கள் அல்லது இபாதாத்[1] ஈமானில் உள்ளடங்குமா அல்லது மாட்டாதா? "என்னிடம் ஈமான் உள்ளது" என்று கூறும் போது, "இன்ஷா அல்லாஹ்" என்பதை சேர்ப்பது சரியா அல்லது தவறா? ஈமானில் குறைந்த நிலை அல்லது அதிகமான நிலை உள்ளதா? ஈமான் என்பது ஒரு படைப்பா? அது ஒருவரது நம்புழதற்கான ஆற்றலில் உள்ளதா, அல்லது நம்பிக்கையாளர்கள் நிர்ப்பந்த நிலையில் நம்பிக்கை கொள்கின்றனரா? நம்பிக்கை கொள்வதில் ஒரு பலவந்தமோ நிர்ப்பந்தமோ இருப்பின், ஏன் ஒவ்வொருவரும் நம்பிக்கை கொள்ள ஏவப்பட வேண்டும்? இவற்றை ஒவ்வொன்றாக விளக்குவதாக இருப்பின் மிக நீண்ட நேரம் எடுக்கும்.

அதனால், நான் இவற்றைத் தனித்தனியாக இங்கே விளக்குவதில்லை. ஆனால் அஷ்அரி மத்ஹப் மற்றும் முஃதஸிலாக்களின் கருத்துப்படி, சாத்தியமில்லாத ஒன்றை எமக்கு செய்யுமாறு ஏவுவது அல்லாஹு தஆலாவுக்கு ஜாஇஸ் (சாத்தியமானது) அல்ல என்பதனை கட்டாயம் அறிந்திருக்க வேண்டும். அத்தோடு, முஃதஸிலாக்களின் கருத்துப்படி, சாத்தியமான, ஆனால் மனிதனது சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்றை ஏவுவது அல்லாஹு தஆலாவுக்கு ஜாஇஸ் அல்ல. அஷ்அரியின் கருத்துப்படி, அவன் அதனை இதுவரை ஏவாதபோதும் அது ஜாஇஸாகும். மனிதர்களுக்கு ஆகாயத்தில்

[1] வணக்க வழிபாடு

பறக்குமாறு ஏவுவது இந்த வகையைச் சார்ந்தது. ஈமானின் விடயத்திலோ அல்லது இபாதத்தின் விடயத்திலோ ஒருபோதும் அல்லாஹ் தஆலா தனது படைப்புகளுக்கு அவர்களுக்கு செய்ய முடியாததை ஏவுவதில்லை. இதன் காரணமாக, ஒருவர் முஸ்லிமாக இருக்கும் நிலையில் அவர் பைத்தியமாக மாறினால் அல்லது ஃகாபில் (மறதி நிலை, ஞாபக மறதி) ஏற்பட்டால் அல்லது தூங்கிவிட்டால் அல்லது இறந்தால், அவர் தன்னை முஸ்லிம் என உறுதிப்படுத்தும் நிலையில் இல்லாவிடினும், தொடர்ந்தும் அவர் முஸ்லிமாகவே இருப்பார்.

நாம் இந்த ஹதீஸ் ஷரீபில் 'ஈமானின்' மொழிக்கருத்தைப் பற்றி சிந்திக்கக் கூடாது. ஏனெனில், அன்று அரேபியாவில் சாதாரண ஒருவர் கூட அதன் மொழிக்கருத்தான, 'கவனம் செலுத்துதல், உண்மையுள்ள நிலை, நம்பிக்கை' என்பதனை அறியாதவராக இருக்கவில்லை. நிச்சயமாக, ஸாஹாபாத் அல்-கிராம் 'ரழியல்லாஹு தஆலா அன்ஹும் அஜ்மஈன்' ஆகியவர்களும் அதனை அறிந்திருந்தனர். ஆனால், ஜிப்ராஈல் 'அலைஹிஸ் ஸலாம்' இஸ்லாத்தில் ஈமான் என்றால் என்ன என்று வினவியதன் மூலம் அவர் ஸஹாபாத் அல்-கிராமிற்கு ஈமானின் பொருளைக் கற்றுக்கொடுக்க விரும்பினார். அத்துடன், ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்கள் ஈமான் என்பது குறிப்பிட்ட ஆறு உண்மைகளை நம்புவதாகும் என்று கூறினார்:

1. "முதலாவது, அல்லாஹ் தஆலாவை நம்பிக்கை கொள்ளல்" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். ஈமான் என்பது கஷ்ப் (இறைவழி வெளிப்பாடு) மூலம் அல்லது விஜ்தான் (மனச்சாட்சி) மூலம் அல்லது அக்ல் (புத்தி, பகுத்தறிவு) மூலமான ஓர் ஆதாரத்தின் வழியான புரிதலின் ஊடாக அல்லது புகழ்பெற்ற, ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கூற்றை நம்பி அதனை நாவினால் உறுதிப்படுத்தல் ஊடாக குறிப்பிட்ட ஆறு உண்மைகளை நேர்மையாக நம்பிக்கை கொள்வதாகும்.

இந்த ஆறு உண்மைகளில் முதலாவது, அல்லாஹ் தஆலா வாஜிப் அல்-வுஜூத் மற்றும் மெய்யான மஃபூத் (வணக்கத்துக்குரிய ஒருவன்) என்பதும் சகல படைப்புகளதும் படைப்பாளன் என்பதுமாகும். அவன் ஒருவன் தனியாக அனைத்தையும் [சகல மூலப் பொருட்களையும், அணுக்களையும், மூலகங்களையும், மூலக்கூறுகளையும், சேர்வைகளையும், இயற்கைப் பொருட்களையும், கலங்களையும், வாழ்வையும், மரணத்தையும், ஒவ்வொரு நிகழ்வையும், ஒவ்வொரு எதிர்வினையையும், அனைத்து வகையான ஆற்றல்களையும் அனைத்து வகையான சக்திகளையும், இயக்கங்களையும், விதிகளையும், ஆத்மாக்களையும், வானவர்களையும், உயிருள்ள உயிரயற்ற, எதுவுமற்ற சகல படைப்பினங்களையும்] இந்த உலகிலும் மறு உலகிலும் மூலப் பொருட்களின்றி, காலமின்றி, ஒப்புவமை இன்றி, இல்லாமையிலிருந்து படைத்தான் என உறுதியாக நம்ப வேண்டும்.

அவன் பிரபஞ்சத்தில் சகல படைப்புகளையும் [அவை ஒன்றுமே இல்லாத நிலையில் ஒரு கணத்தில்] படைத்ததைப் போன்று, அவன் [அவற்றில் சிலவற்றை ஒன்றை மற்றொன்றிலிருந்து படைக்கிறான். மேலும் இறுதித் தீர்ப்பு நாள் வரும் போது, ஒரு கணத்தில் அவன்] அனைத்தையும் அழித்து விடுவான். அவன்தான் படைப்பாளன், சொந்தக்காரன், சகல படைப்புகளினதும் தன்னிகரற்ற ஆட்சியாளன். அவன் மீது ஆதிக்கம் செலுத்தவோ, அவனுக்குக் கட்டளையிடவோ, அவனை மிகைத்த யாருமே கிடையாது என்பதனை அறிந்து கொண்டு, நம்பிக்கை கொள்வது அவசியமாகும். சகல வகையான மேன்மையும், பூரணத்துவத்தின் அனைத்துப் பண்புகளும் அவனுக்கு மாத்திரமே உரியன. குறையுள்ள, குறைபாடான எந்தப் பண்பும் அவனிடம் கிடையாது. அவன் தான் நாடுவதை செய்யும் ஆற்றல் பெற்றவன். அவன் செய்வது அவனுக்கு நன்மையளிப்பதற்காக அல்ல; பிறருக்கே அது நன்மையானது. அவன் எந்த ஒன்றையும் வெகுமானத்திற்காக செயவதில்லை. அவன் செய்யும் சகல விடயங்களிலும், எப்போதுமே நியாயங்களும் (ஹிக்மா), பயன்களும் அருள்களும் நலவுகளும் இருக்கும்.

அல்லாஹ் தஆலா தனது படைப்பினங்களுக்கு நன்மையான, பயனுள்ள விடயங்களை செய்ய வேண்டும் என்ற கடமை அவனுக்குக் கிடையாது, அதேபோன்று மக்களில் சிலருக்குக் கூலி கொடுக்கவும், சிலருக்குத் தண்டனை கொடுக்கவும் வேண்டிய பொறுப்பு அவனுக்குக் கிடையாது. அவன் சகல பாவிகளையும் சொர்க்கத்திற்கு அனுப்பினாலும் அது அவனது கருணை மற்றும் மகிமைக்குத் தகுந்தது. அவன் தனக்கு அடிபணிந்து வணங்கியவர்களை நரகத்திற்கு அனுப்பினாலும் அது அவனது நீதியாகவே அமையும். இருப்பினும் அவன் முஸ்லிம்களையும், தன்னை

வணங்கியவர்களையும் சுவனத்தில் நுழைவித்து, அவர்களுக்கு நலவுகளை அருள்வதாகவும், இறை நிராகரிப்பாளர்களை நரகத்தில் நிரந்தரமாகத் தண்டிப்பான் என்றும் தீர்மானித்துப் பிரகடனப்படுத்தியுள்ளான். அவன் தனது வார்த்தையை வாபஸ்பெற மாட்டான். சகல படைப்பினங்களும் மொத்தமாக அவனை நம்பி வணங்கினாலும் அதனால் அவனுக்கு எந்தப் பயனும் இல்லை. சகல படைப்பினங்களும் மொத்தமாக இறை நிராகரிப்பாளர்களாக, அவனுக்குக் கீழ்படியாத, அநியாயக்காரர்களாக மாறினாலும் அதனால் அவனுக்கு எந்தத் தீங்கும் இல்லை. மனிதன் எதையேனும் செய்ய நாடினால், அல்லாஹ் தஆலா அதனை நாடினால்தான் அவன் அதனை நிகழ்த்துவான். அவன் மாத்திரமே மனித படைப்புகளது சகல அசைவுகளையும் அனைத்து விடயங்களையும் படைக்கிறான். அவன் படைக்கவோ நாடவோ இல்லையெனின், எதுவுமே அசையாது. அவன் விரும்பாவிட்டால் யாராலும் இறை நிராகரிப்பாளராகவோ கலகக் காரனாகவோ மாற முடியாது. அவன் இறை நிராகரிப்பையும் பாவங்களையும் அவற்றை விரும்பாதபோதும் படைக்கிறான். அவனது செயல்களில் எந்த ஒருவரும் குறுக்கீடு செய்ய முடியாது. அவன் செய்தவற்றை ஏன் என்று காரணம் கேட்கவும் இவ்வாறுதான் செய்ய வேண்டுமென கருத்துக் கூறவும் எந்த ஒருவரும் ஆற்றலோ உரிமையோ பெற மாட்டார்கள். இணைவைப்பு மற்றும் இறை நிராகரிப்பு தவிர்ந்த எந்தப் பெரும் பாவத்தையும் செய்து, தௌபா செய்யாமல் மரணித்த ஒருவரை அவன் நாடினால் மன்னிப்பான். மன்னிக்க முடியுமான சிறு பாவமொன்றை செய்திருப்பினும் அவன் நாடினால் அவரைத் தண்டிப்பான். இறைநிராகரிப்பாளர்களையும் மதத்தைத் துறந்தவர்களையும் ஒருபோதும் மன்னிப்பதில்லை எனவும் அவர்களை நிரந்தரமாகத் தண்டிப்பதாகவும் அவன் பிரகடனப்படுத்தியுள்ளான்.

அவனை வணங்கிய முஸ்லிம்களில் யாருடைய நம்பிக்கை (இஃதிகாத்) அஹ்ல் அஸ்-ஸுன்னாவிற்கு இசைவாக அமையவில்லையோ அவர்களையும் தௌபா செய்யாமல் மரணித்தவர்களையும் அவன் நரகில் வேதனை செய்வான். இருப்பினும் (பித்ஆ)வுடன் இருந்த முஸ்லிம்கள் நரகில் நிரந்தரமாகத் தங்கியிருக்க மாட்டார்கள்.

உலகிலுள்ள கண்களால் அல்லாஹ் தஆலாவைக் காண்பது சாத்தியமானதாகும் (ஜாஇஸ்). ஆனால் யாராலும் அது ஒருபோதும் முடியாது. இறுதித் தீர்ப்பு நாளில் இறைநிராகரிப்பாளர்களுக்கும் பாவம் செய்த முஸ்லிம்களுக்கும் அவன் சினத்துடனும் ஜலாலுடனும் காட்சியளிப்பான். அத்துடன் தூய முஸ்லிம்களுக்கு அவனது கருணையுடனும் ஜமாலுடனும் காட்சியளிப்பான். வானவர்களும் பெண்களும் கூட அவனைக் காண்பார்கள். இறை நம்பிக்கையற்றவர்கள் இந்த வாய்ப்பை இழப்பார்கள். அங்கே ஜின்களும் கூட இதனை இழப்பார்கள் என்ற ஒரு சப்தம் அனுப்பப்படும். பெரும்பாலான 'உலமாக்களின்' கருத்துப்படி, "அல்லாஹ் தஆலா நேசிக்கும் முஸ்லிம்கள் அவனது அழகை காலையிலும் மாலையிலும் காண்பிக்கப்படுவதன் மூலம் கௌரவிக்கப்படுவார்கள். குறைந்த தரத்திலான முஸ்லிம்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இவ்வாறு கௌரவிக்கப்படுவார்கள். இவ்வுலகில் பெருநாட்கள் போன்று, வருடத்தில் சில தடவைகள் பெண்கள் இவ்வாறு கௌரவிக்கப்படுவார்கள்."[1] அல்லாஹ் தஆலாவைக் காண முடியும் என்பதை

[1] ஹஸ்ரத் ஷெய்க் 'அப்த் அல்-ஹக் அத்-தஹ்லவி [ஹி. 1052 (கி. பி 1642) இல் டெல்லியில் வபாத்தானார்] அவரது பாரசீக மொழியிலான தக்மீலுல் ஈமான் நூலில் இவ்வாறு எழுதியுள்ளார்: "ஒரு ஹதீஸ் ஷரீப் கூறுகிறது: 'இறுதித் தீர்ப்பு நாளில் நீங்கள் உங்களது இறைவனை [மாதத்தின்] பதினான்காம் நாள் [பூரண] சந்திரனைக் காண்பதைப் போன்று காண்பீர்கள்' அல்லாஹ் தஆலா இவ்வுலகில் புத்திக்கு எட்டாத ஒருவனாக அறியப்பட்டிருப்பதைப் போன்று மறுமையிலும் அவன் புத்திக்கு எட்டாத ஒருவனாகக் காட்சி தருவான். அபுல் ஹஸன் அல்-அஷ்அரி, அல்-இமாம் அஸ்ஸுயூத்தி மற்றும் அல்-இமாம் அல்-பைஹகி போன்ற பெரும் அறிஞர்களும், வானவர்கள் சுவனத்தில் அல்லாஹ் தஆலாவைக் காண்பார்கள் எனக் கூறியுள்ளனர். ஜின்கள் ஸவாப் - நன்மையை சம்பாதிக்கவில்லை என்பதால் அவர்கள் சுவனத்தில் நுழைய மாட்டார்கள் என்றும் நீதமான ஜின்கள் நரகத்திலிருந்து தப்புவார்கள் என்றும் அல்-இமாம் அல்-அஃலம் அபூ ஹனீபா மற்றும் சில அறிஞர்கள் கூறியுள்ளனர். இவ்வுலகில் பெருநாட்கள் போன்று, வருடத்தில் சில தடவைகள் பெண்கள் அல்லாஹ் தஆலாவைக் காண்பார்கள். பூரணமான (காமில்) நம்பிக்கையாளர்கள் ஒவ்வொரு காலையிலும் மாலையிலும் அவனைக் காண்பார்கள்; அதேநேரம்

நம்பிக்கை கொள்ள வேண்டும். இருப்பினும் நாம் அது எவ்வாறு நிகழும் என்பதைக் மனக்காட்சிப் படுத்த முனையக் கூடாது. அவனது செயல்கள் புத்திக்கு (அக்ல்) எட்ட மாட்டாது. அவை உலக விடயங்களை ஒத்தவை அல்ல. [அவற்றை பௌதீக அல்லது இரசாயன அளவுகோல்களால் அளக்க முடியாது.] திசை, எதிர்ப்புறம், ஒன்றுக்கு முன்னிலை போன்றவற்றுடன் அல்லாஹ் தஆலாவுக்கு எந்த சம்பந்தமுமில்லை. அவன் சடப்பொருளல்ல. அவன் ஒரு பொருளல்ல. [அவன் ஒரு மூலகமோ உலோகமோ சேர்க்கையோ அல்ல.] அவன் எண்ண முடியுமான ஒன்றல்ல. அவன் அளக்கவோ கணிக்கவோ முடியுமான ஒன்றுமல்ல. அவனில் எந்த ஒரு மாற்றமும் ஏற்படாது. அவன் இடமொன்றில் இல்லை. நேரத்துடன் அவன் இல்லை. அவனுக்கு இறந்த காலமோ எதிர்காலமோ இல்லை, முன்னோ பின்னோ இல்லை, மேலோ கீழோ இல்லை, வலதோ இடதோ இல்லை. எனவே எந்த பகுத்தறிவாலும் அவனைப் புரிந்து கொள்ள முடியாது, எந்த மனிதப் புத்தியும் அறிவும் அதனைச் செய்யப் போதுமானதல்ல. ஆகவே, அவன் எவ்வாறு காட்சி தருவான் என்பதனை மனிதனால் புரிந்து கொள்ள முடியாது. ஆயினும், கை, பாதம், திசை, இடம் மற்றும் அது போன்ற அல்லாஹ் தஆலாவுக்குப் பொருந்தாத சில சொற்கள் ஆயாத்களிலும் ஹதீஸ்களிலும் இடம்பெற்றுள்ளன. அவை நாம் இன்று அறிந்துள்ள மற்றும் பயன்படுத்தும் கருத்தில் பயன்படுத்தப்படுவதில்லை. அத்தகைய ஆயாத்களும் ஹதீஸ்களும் முதஷாபிஹாத் என்று அழைக்கப்படுகின்றன. நாம் அவற்றை நம்பிக்கை கொள்ள வேண்டும். ஆனால் நாம் அவற்றை எப்படி அல்லது எவ்வாறு உள்ளன என்று விளங்கிக்கொள்ள முயற்சிக்கக் கூடாது. அல்லது அல்லாஹ் தஆலாவுக்குத் தகுந்த வகையிலான கருத்துப்படி அவை சுருக்கமாகவோ விரிவாகவோ (தஃவீல்) வளக்கமளிக்கப்படலாம். உதாரணமாக, கை என்பது வல்லமை என விளக்கமளிக்கப்படலாம்.

முஹம்மத் 'அலைஹிஸ் ஸலாம்' அல்லாஹ் தஆலாவை மிஃராஜின் போது கண்டார்கள்.[1] ஆனால் இந்தக் காட்சி, உலகில் காண்பதைப் போன்று கண்களால் நிகழ்ந்ததல்ல. ஒருவர் அல்லாஹ் தஆலாவை இந்த உலகில் கண்டதாகக் கூறினால் அவர் ஒரு ஸின்திக் ஆவார். அவ்லியாக்கள் அனுபவிக்கும் பார்த்தல் என்பது உலகிலோ அல்லது மறுமையிலோ பார்ப்பதை விட வித்தியாசமானது. வேறு வார்த்தைகளில் கூறினால், அது ஒரு ருஃயத் (பார்த்தல்) அல்ல, ஆயினும் அது அவர்கள் அனுபவிக்கும் ஷுஹூத் ஆகும், [அதாவது அவர்கள் தமது மனக் கண்களால் உதாரணங்களை (மிசால்களைக்) காண்பார்கள்]. சில அவ்லியாக்கள் அவனைக் கண்டதாகக் கூறியுள்ளனர். எனினும், அவர்கள் ஸக்ரில் இருந்த போது அனுபவித்த ஷுஹூத் பற்றிய தெளிவற்ற நிலையில் உள்ளனர். அதாவது அவர்கள் அப்போது ருஃயத் உடன் உணர்வற்றிருந்தனர். அல்லது அவர்களது இவ்வார்த்தைகள் விரிவாக விளக்கப்பட வேண்டும்.

கேள்வி: "அல்லாஹ் தஆலாவை உலகக் கண்களால் காண்பது சாத்தியமானது (ஜாஇஸ்) என்று மேலே கூறப்பட்டது. அவ்வாறெனில், சாத்தியமான ஒரு விடயம் நிகழ்ந்ததென்று ஒருவர் கூறினால் ஏன் அவர் ஸின்திக் ஆக மாறுவார்? ஒருவர் அது சாத்தியமென்று சொன்னால் இறை நிராகரிப்பாளர் ஆகின்றாரெனில், அதனை சாத்தியமானது என்று கூற முடியுமா?

பதில்: ஜாஇஸ் என்பதன் மொழிக் கருத்தின்படி, 'நிகழ்வதற்கு வாய்ப்பு இருக்கின்ற அல்லது இல்லாத ஒன்று எனப் பொருள்படும்.' எனினும், அல்-அஷ்அரி [அபுல் ஹஸன் ஆலி இப்ன்

ஏனைய நம்பிக்கையாளர்கள் வெள்ளிக் கிழமைகளில் அவனைக் காண்பார்கள். தாழ்மையான நபரான எனது அபிப்பிராயம் யாதெனில், நம்பிக்கை வாய்ந்த பெண்களும் வானவர்களும் ஜின்களும் கூட இந்த நற்செய்திக்கு உட்பட்டவர்கள் என்பதாகும்; நிறைவான ஆரிப்-நல்லடியார்களான பெண்களான பாதிமத் அஸ்-ஸஹ்ரா, கதீஜத் அல்-குப்ரா, ஆயிஷத் அஸ்-ஸித்தீகா மற்றும் [இறைத்தூதரின்] ஏனைய தூய மனைவிகளும் ஹஸ்ரத் மர்யம் மற்றும் ஹஸ்ரத் ஆஸியா போன்றவர்களும் விஷேடமான கவனிப்புக்கு உட்படுவார்கள். அல்-இமாம் அஸ்-ஸுயூத்தியும் இதே அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளார்."

[1] தயவு செய்து, 'புனித இரவுகள்' என்பதைப் பார்க்க, *Endless Bliss* இன் மூன்றாம் பாகத்தின் ஆறாம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

இஸ்மாஈல், ஹி. 330 (கி. பி 941இல்) பக்தாதில் வபாத்தானார்] மத்ஹபின் படி, ருஃயத்துக்கான சாத்தியப்பாடு என்பது, அல்லாஹ் தஆலா, தன்னை உலகில் காண்பதற்காக, மனிதனில் வித்தியாசமான புலனொன்றைப் படைக்க ஆற்றல் பெற்றவன். அந்தப் புலன் நெருக்கமாகவோ அல்லது அவனை முகத்துக்கு முகமோ காண்பதை விட்டும் வித்தியாசமானதாக இருக்கும். அத்துடன், உலகில் அவன் படைத்த பௌதீக விதிகளின் ஊடாகப் பார்ப்பதை விட்டும் வித்தியாசமானதாக இருக்கும். உதாரணமாக, அவனுக்கு ஆற்றலுள்ளது, எனவே அது சாத்தியமானது. அந்தலூஸியாவில் உள்ள நுளம்பை சீனாவிலுள்ள பார்வையற்ற ஒரு மனிதனுக்கு அவனால் காட்ட முடியும். மேலும் சந்திரனிலோ நட்சத்திரமொன்றிலோ உள்ள ஒன்றை பூமியிலுள்ள ஒரு மனிதனுக்குக் காட்ட முடியும். அத்தகைய வல்லமை அல்லாஹ் தஆலாவுக்கு மாத்திரம் தனித்துவமானது. அது மாத்திரமன்றி, "நான் அவனை இவ்வுலகில் கண்டேன்" என்று கூறுவது ஆயாத் அல்-கரீமாவுடனும் உலமாக்களின் ஒருமித்த நிலைப்பாட்டுனும் ஒத்திசைவதில்லை. ஆகவே, அவ்வாறு கூறுகின்றவர் ஒரு முல்ஹிதாக அல்லது ஸின்திக்காக இருப்பார். மூன்றாவதாக, "அல்லாஹ் தஆலாவை இவ்வுலகில் காண முடியும்" என்ற சொற்றொடர், அவனை பூமியின் மீது, பௌதீக விதிகளுக்குள் காண்பது சாத்தியமாகும்" என்ற கருத்தைக் கொடுக்காது.

எவ்வாறாயினும், ஒருவர், தான் அல்லாஹ் தஆலாவைக் கண்டதாகக் கூறுவது, அவர் ஏனைய பொருட்களைக் காண்பதைப் போன்று அவனைக் கண்டதாகக் கூறுவதாகும். இவ்வாறு காண்பது சாத்தியமானது (ஜாஇஸ்) அல்ல. இறைநிராகரிப்பை ஏற்படுத்தும் கூற்றுக்களை வெளிப்படுத்துபவன் முல்ஹித் அல்லது ஸின்திக் எனப்படுகின்றான்.[1]

[இந்தப் பதில்களின் பிறகு, ஹஸ்ரத் மௌலானா க்ஹாலித், "எச்சரிக்கையாக இருங்கள்" என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது, அவர் இரண்டாம் பதிலில் தெளிவாகக் கவனம் செலுத்துமாறு வேண்டுகிறார்.]

காலம், இரவு பகல் கடப்பது அல்லாஹ் தஆலாவைடன் சம்பந்தப்பட்ட ஒன்றல்ல. அது அவனில் எந்த வகையான மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது. மேலும் அவன் இறந்த காலத்தில் இந்த விதமாக இருந்தான் என்றும் எதிர்காலத்தில் இவ்வாறு இருப்பான் என்றும் ஒரு போதும் கூற முடியாது. அவன் எந்தப் பொருளினுள்ளும் ஊடுறுவது (ஹுலூல்) கிடையாது. [தம்மை நுஸரியா என்றழைக்கும் ஷீயாக்களில் ஒரு பிரிவினர், அல்லாஹ் தஆலா ஹஸ்ரத் அலியினுள் ஊடுறுவினான் என்று நம்பிக்கை கொண்டு, அதனைக் கூறுகின்றனர். இந்தப் பிழையான நம்பிக்கை அவர்கள் காபிர்களாக (இறை நிராகரிப்பாளர்களாக) மாறக் காரணமாக அமைகிறது.] அவன் எந்த ஒன்றுடனும் சங்கமமாவதில்லை. அவனுக்கு ஒருபோதும் எதிர்நிலை, பின்னோக்கல், ஒப்புவமை, துணை, உதவியாளர் அல்லது வழிகாட்டி இருந்ததில்லை. அவனுக்கு தாய், தந்தை, மகன், மகள், அல்லது மனைவி எவரும் இல்லை. அவன் எப்போதும் அனைவருடனும் இருக்கின்றான். அனைத்தையும் சூழ்ந்து, அவதானிக்கின்றான். அவன் ஒவ்வொருவருக்கும் அவரது கழுத்திலுள்ள பெரிய நரம்பை விட சமீபமாக உள்ளான். எனினும், அவன் எம்மைச் சூழ்ந்திருத்தல், அவனது இருப்பு அல்லது பக்கத் துணை அல்லது நெருக்கம் என்பன இந்த வார்த்தைகளால் நாம் புரிந்து கொள்வதைப் போன்றதல்ல. அவனது நெருக்கம் என்பது அறிஞர்களின் அறிவாலோ, விஞ்ஞானிகளின் புத்தியினாலோ அவ்லியாக்களின் ஷுஹூத் அல்லது கஷ்ப் இனாலோ புரிந்து கொள்ள முடியுமான ஒன்றல்ல. மனித அறிவு அவற்றின் உள்ளார்ந்த அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியாது. அல்லாஹ் தஆலா அவனது ஆளுமையினாலும் பண்பியல்புகளினாலும் தனித்துவமானவன் ஆவான். அவனது பண்புகளில் எதற்கும் எந்த மாற்றமும் அல்லது வேறுபடுத்தலும் நிகழ மாட்டாது.

---

[1] *முல்ஹித் அல்லது ஸின்திக், அவன் ஒரு முஸ்லிம் என்பதாகக் கூறுகிறான். முல்ஹித் அவனது வார்த்தையில் நேர்மையாக இருப்பான்; தான் ஒரு முஸ்லிம் எனவும் தான் சரியான பாதையில் இருப்பதாகவும் அவன் நம்புகிறான். எனினும், ஸின்திக் என்பவன் இஸ்லாத்தின் எதிரியாவான். அவன் இஸ்லாத்திற்கு உள்ளேயிருந்து அதற்குத் தீங்கிழைப்பதற்காகவும் முஸ்லிம்களை வழிகெடுப்பதற்காகவும் முஸ்லிமைப் போன்று போலியாக நடிக்கிறான்.*

அல்லாஹ் தஆலாவின் பெயர்கள் தவ்கீபீ ஆகும். அதாவது, இஸ்லாம் காட்டித் தந்துள்ள பெயர்களைப் பயன்படுத்துவது அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் வேறு சொற்களைப் பயன்படுத்த அனுமதியில்லை.[1] அல்லாஹ் தஆலாவின் பெயர்கள் முடிவற்றன. அவனுக்கு ஆயிரத்து ஒரு பெயர்கள் உள்ளன என்பது பிரபலமான விடயமாகும். அதாவது, அவன் அவனது ஆயிரத்து ஒரு பெயர்களை மனிதர்களுக்கு வெளிப்படுத்தியுள்ளான். முஹம்மத் 'அலைஹிஸ் ஸலாம்' அவர்களின் மார்க்கத்தில், அவற்றில், 'அஸ்மா அல்-ஹுஸ்னா' எனப்படும் தொன்னூற்றி ஒன்பது நாமங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

மாதுரீதிய்யா மத்ஹப் மற்றும் அஷ்அரிய்யா மத்ஹபின் ஏழின் படி, ஸிபாத் ஸுபூதிய்யா எனப்படும் அல்லாஹ் தஆலாவின் எட்டு பண்புகள் உள்ளன. அவனது இந்தப் பண்புகள் அவனது அளுமையைப் போன்று நிரந்தரமான, முடிவற்றவையாகும். அதாவது, அவை நிரந்தரமாக இருக்கும். அவை புனிதம் வாய்ந்தவை. அவை படைப்பினங்களின் பண்புகளை ஒத்தவை அல்ல. அவை பகுத்தறிவின் மூலமோ அல்லது ஊகத்தின் மூலமோ அல்லது உலகில் உள்ள பொருட்களுடன் ஒப்பிடுவதன் மூலமோ அறிந்து கொள்ளப்பட முடியாதவை. அல்லாஹ் தஆலா மனிதர்களுக்கு தனது பண்புகளில் ஒவ்வொன்றிலிருந்தும் ஓர் அத்தாட்சியை அருளியுள்ளான். இந் அத்தாட்சிகளைக் காண்பதன் மூலம் அல்லாஹ் தஆலாவின் பண்புகளை சிறிய அளவில் புரிந்து கொள்ள முடியும். மனிதனுக்கு அல்லாஹ் தஆலாவைக் கிரகித்துக் கொள்ள முடியாமையின் காரணத்தால், அல்லாஹ் தஆலாவைப் பற்றி சிந்திப்பதற்கோ அல்லது அவனைப் புரிந்து கொள்ள முயற்சிப்பதற்கோ அனுமதி இல்லை. அல்லாஹ் தஆலாவின் எட்டு பண்புகளும் அவனது ஆளுமைக்கு நிகரானவையோ அல்லது வேறுபட்டவையோ அல்ல. அதாவது, அவனது பண்புகள் அவனது அளுமையை வடிவமைப்பதில்லை; அவை அவனன்றி வேறொன்றல்ல. பின்வருவன இந்த எட்டுப் பண்புகளும் அகும்:

ஹயாத் (வாழ்க்கை), இல்ம் (சர்வ அறிவாற்றல்), ஸெம் (கேட்டல்), பஸர் (பார்த்தல்), குத்ரா (சர்வ வல்லமை), கலாம் (பேச்சு, வார்த்தை), இராதா (நாட்டம்), மற்றும் தக்வீன் (படைப்பாற்றல்). அஷ்அரிய்யா மத்ஹபில், தக்வீன் மற்றும் குத்ரா என்பன ஒரே பண்புகளாக உள்ளன. மஷிய்யா மற்றும் இராதா என்பன ஒத்த கருத்துச் சொற்களாகும்.

அல்லாஹ் தஆலாவின் எட்டுப் பண்புகளில் ஒவ்வொன்றும் தனித்துவமான, ஒரு சீரான நிலையைக் கொண்டன. அவற்றில் எந்த ஒன்றிலும் எநதவொரு மாற்றமும் நிகழ மாட்டாது. ஆனால் அவை ஒவ்வொன்றும் படைப்பினங்களில் தொடர்புபட்ட தரத்தில் வேறுபடுகின்றன. அவனது ஒரு பண்பு படைப்பினங்களுடன் தொடர்புபடுவதில் பல்வேறுபட்டவையாக இருப்பதுடன் அவற்றில் தாக்கமுறுவதால் அதன் தனித்துவம் பாதிப்படைவதில்லை. அதேபோன்று, அல்லாஹ் தஆலா பல்வேறு வகையான படைப்பினங்களைப் படைத்து, அவற்றையெல்லாம் அழிவிலிருந்து பாதுகாத்துக் கொண்டுள்ளபோதும், அவன் இன்னும் ஒருவன்தான். அவனில் எந்த மாற்றமும் எப்போதும் இடம்பெறாது. ஒவ்வொரு படைப்பும் அவனின் பக்கம் எல்லா வகையிலும் தேவையுடையனவாக உள்ளன. அவன் எந்த ஒன்றின்பாலும் எந்த வகையிலும் தேவையற்றவன்.

2. ஈமானின் ஆறு அடிப்படைகளில் இரண்டாவது, "அவனது வானவர்களை நம்பிக்கை கொள்ளல்" ஆகும். வானவர்கள் பருப்பொருளாக இருப்பினும் ஆவி (லதீப்) நிலையை கொண்டவை. பொருளின்

[1] உதாரணமாக, அல்லாஹ் தஆலா "ஆலிம்" (அனைத்துமறிந்தவன்) என்று அழைக்கப்படலாம். ஆனால் நாம் 'ஆலிம்' (அறிஞர், இஸ்லாமியக் கலையில் தேர்ந்தவர்) என்ற கருத்தைக் குறிக்கும் 'பகீஹ்' என்பதைப் பயன்படுத்த முடியாது. இஸ்லாத்தில் அல்லாஹ் தஆலாவுக்கு 'பகீஹ்' என்பதைப் பயன்படுத்துவதில்லை. அதேபோன்று, அல்லாஹ் என்பதற்குப் பகரமாக 'தெய்வம்' என்று கூற அனுமதியில்லை. ஏனெனில் 'தெய்வம்' என்பது சிலையைக் குறிக்கிறது; உதாரணமாக, "எருது என்பது ஹிந்துக்களின் தெய்வமாகும்" என்று கூறப்படுகிறது. "அல்லாஹ் ஒருவன்; அவனைத் தவிர வேறு கடவுள் கிடையாது" என்று கூறுவது அனுமதிக்கப்பட்டுள்ளது. டியூ (பிரஞ்சு) மற்றும் கொட் (ஜேர்மன்) என்பன தெய்வம் அல்லது சிலையைக் குறிக்கப் பயன்படுத்தப்படலாம். ஆனால் அல்லாஹ்வைக் குறிக்கப் பயன்படுத்த முடியாது.

ஆவி நிலையை விடவும் நுட்பமான ஆவி நிலையைக் கொண்டவை. அவர்கள் நூரானி (பிரகாசிக்கும், ஆன்மீக நிலை) உள்ளவர்கள். அவர்கள் உயிருள்ளவர்கள். அவர்கள் பகுத்தறிவு (அக்ல்) உள்ளவர்கள். மனிதர்களிடமுள்ள தீய குணங்கள் வானவர்களிடம் இல்லை. அவர்கள் எந்த வடிவத்தையும் பெற முடியும். எவ்வாறு வாயுக்கள் திரவ நிலைக்கும் திண்ம நிலைக்கும் மாறுகின்றனவோ, அத்தோடு திண்மமாக எந்தவொரு வடிவத்தையும் பெறுகின்றனவோ அது போன்று வானவர்கள் அழகான வடிவங்களைப் பெற முடியும். வானவர்கள் என்பவர்கள் சிறந்த மனிதர்களின் உடல்களிலிருந்து பிரிந்த ஆன்மாக்கள் அல்ல. வானவர்கள் அத்தகைய ஆன்மாக்கள் என்பதாக கிறிஸ்தவர்கள் கருதுகின்றனர். சக்தி மற்றும் ஆற்றல் போன்று அவர்கள் சடப்பொருளல்லாத ஒன்றல்ல. சில பண்டைய தத்துவ ஞானிகள் அவ்வாறு கருதினர். அவர்கள் அனைவரும் மலாஇகா என்று அழைக்கப்படுகின்றனர். 'மலக்' (வானவர்) என்றால் 'ஏவலர், தூதுவர்' அல்லது 'சக்தி' என்று பொருள்படும். வானவர்கள் ஏனைய அனைத்து உயிர்வாழ் படைப்பினங்களுக்கும் முன்பு படைக்கப்பட்டார்கள். எனவேதான், வேதங்களை நாம் நம்பிக்கை கொள்ளுமாறு ஏவப்பட முன்னர் அவர்களை நாம் நம்பிக்கை கொள்ளுமாறு ஏவப்பட்டுள்ளோம். வேதங்களை நம்பிக்கை கொள்வது நபிமார்களை நம்பிக்கை கொள்வதற்கு முன்னர் இடம்பெற்றுள்ளது. குர்ஆன் அல்-கரீமில் இந்த நம்பிக்கைக் கோட்பாடுகள் இவ்வாறான தொடரொழுங்கில்தான் இடம்பெற்றுள்ளன.

வானவர்களை நம்புதல் என்பது பின்வருமாறு அமைய வேண்டும்: வானவர்கள் அல்லாஹ் தஆலாவின் படைப்பினங்கள். அவர்கள் அவனது துணையாளர்களோ அல்லது இறை நிராகரிப்பாளர்களும் இணை வைப்பாளர்களும் கருதுவது போன்று அவர்கள் அவனது பெண் மக்களோ அல்ல. அல்லாஹ் தஆலா அனைத்து வானவர்களையும் நேசிக்கிறான். அவர்கள் அவனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகின்றனர். அவர்கள் ஒருபோதும் பாவங்கள் புரியவோ அவனது கட்டளைகளுக்கு மாறு செய்யவோ மாட்டார்கள். அவர்கள் ஆண்களோ பெண்களோ அல்ல. அவர்கள் திருமணம் செய்ய மாட்டார்கள். அவர்கள் குழந்தைகள் பெற மாட்டார்கள். அவர்களுக்கு உயிருள்ளது. அதனால்தான் அவர்கள் வாழ்கின்றனர். ஆயினும், ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்ன் மஸ்ஊத் ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் அறிவித்ததாக வரும் கூற்றொன்றின் படி, சில வானவர்களுக்கு ஷைத்தானுக்கும் ஜின்களுக்கும் மத்தியில் கணிக்கப்பட்ட குழந்தைகள் இருந்ததாக உள்ளது. இதன் விளக்கம் புத்தகங்களில் விரிவாக எழுதப்பட்டுள்ளது. அல்லாஹ் தஆலா மனிதர்களைப் படைக்க இருப்பதாக அறிவித்த போது, வானவர்கள், "யா ரப்பீ! பூமியை சீர்கெடுத்து, இரத்தத்தை ஓட்டும் படைப்பையா நீ படைக்கப் போகின்றாய்?" எனக் கேட்டார்கள். இத்தகைய கேள்விகள் 'தெல்லா' எனப்படுகின்றன. வானவர்கள் குற்றமற்றவர்கள் என்ற யதார்த்தத்தை இது மாற்றுவதில்லை.

படைப்பானங்கள் அனைத்திலும் வானவர்கள்தான் மிகவும் ஏராளமாக உள்ளனர். அல்லாஹ் தஆலா மாத்திரமேயன்றி வேறு எவரும் அவர்களின் எண்ணிக்கையை அறியமாட்டார்கள். வானவர்கள் வணக்கத்தில் ஈடுபடாத எந்தவொரு வெறுமையான இடமும் வானங்களில் இல்லை. வானங்களிலுள்ள ஒவ்வொரு இடமும் ருகூவிலும் (தொழுகையில் தலைசாய்த்தல்), ஸுஜூதிலும் (சிரம் பணிதல்) உள்ள வானவர்களால் நிரப்பப்பட்டிருக்கும். வானங்களிலும், பூமியின் மீதும், புற்களின் மீதும், நட்சத்திரங்களின் மீதும், ஒவ்வொரு உயிருள்ள உயிரற்ற படைப்பினத்திலும், ஒவ்வொரு மழைத்துளியிலும், தாவர இலையிலும், அணுவிலும், மூலக்கூறிலும், ஒவ்வொரு அசைவிலும், நகர்விலும், ஒவ்வொரு விடயத்திலும் வானவர்களுக்குப் பணியுள்ளது. அவர்கள் எல்லா இடங்களிலும் அல்லாஹ் தஆலாவின் கட்டளையை நிறைவேற்றுகின்றனர். அவர்கள் அல்லாஹ் தஆலாவுக்கும் படைப்பினங்களுக்கும் மத்தியிலான இணைப்பாளர்களாக உள்ளனர். அவர்களில் சிலர் அடுத்த வானவர்களுக்கான ஏவலர்களாக உள்ளனர். அவர்களில் சிலர் மனிதர்களிலுள்ள இறைத்தூதர்களுக்கு தூதுகளை எடுத்துச் சென்றனர். சில வானவர்கள், மனித உள்ளங்களுக்கு "இல்ஹாம்" (உள்ளுணர்ச்சி) எனப்படும் நல்ல சிந்தனையைக் கொண்டு வருகின்றனர். மற்றும் சிலர் மனிதர்களைப் பற்றியும் படைப்பினங்களைப் பற்றியும் உணர்வற்று, உணர்வை இழந்து, அல்லாஹ் தஆலாவின் அழகில் முழுமையாக லயித்துள்ளனர். இந்த வானவர்களில் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட இடத்தில் அதிலிருந்து விலகாமல் நிலையாகத்

தங்கியுள்ளனர். சில வானவர்களுக்கு இரு இறக்கைகளும் சிலருக்கு நான்கு அல்லது அதற்கு அதிகமான இறக்கைகளும் உள்ளன.[1]

சுவர்க்கத்திற்குரிய வானவர்கள் சுவர்க்கத்தில் இருப்பார்கள். அவர்களது தலைவர் ரிழ்வான் ஆவார். நரகத்தின் வானவர்களான ஸபானீக்கள் நரகத்தில் அவர்களுக்கு ஏவப்பட்டதை நிறைவேற்றுவார்கள். கடல் எவ்வாறு மீன்களுக்குத் தீங்காக அமையாதோ அவ்வாறு நரகத்தின் நெருப்பு அவர்களைத் தீண்ட மாட்டாது. அங்கே முன்னணி ஸபானீக்கள் பத்தொன்பது பேர் உள்ளனர். அவர்களது பிரதானி மாலிக் ஆவார்.

ஒவ்வொரு மனிதனுக்கும், அவர்களது சகல நன்மையான, தீய செயற்பாடுகளையும் பதிவு செய்ய நான்கு வானவர்கள் உள்ளனர். அவர்களில் இருவர் இரவிலும் மற்ற இருவர் பகல் வேளையிலும் அவர்களிடம் வருவார்கள். அவர்கள் கிராமன் காதிபீன் அல்லது ஹபழா வானவர்கள் எனப்படுகின்றனர். ஹபழா வானவர்கள் கிராமன் காதிபீன் என்பவர்களை விட்டும் வேறுபட்டவர்கள் என்பதாக இன்னொரு புலமைசார் பதிவொன்றுமுள்ளது.ஒருவரது வலது புறத்தில் உள்ள வானவர் இடது புறத்திலுள்ளவரை விட மேலானவராக இருப்பதுடன் அவர் நன்மையான காரியங்களைப் பதிவு செய்வார். இடது புறத்தில் இருப்பவர் தீய காரியங்களைப் பதிவு செய்வார். இறைநிராகரிப்பாளர்களையும் கீழ்ப்படியாத முஸ்லிம்களையும் அவர்களது மண்ணறைகளில் வேதனை செய்யக்கூடிய வானவர்களும், மண்ணறைகளில் விசாரணை செய்யக்கூடிய வானவர்களும் உள்ளனர். விசாரணை செய்யும் வானவர்கள் முன்கர் மற்றும் நகீர் எனப்படுகின்றனர். முஸ்லிம்களை விசாரிக்கும் வானவர்கள் முபஷ்ஷிர் மற்றும் பஷீர் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

வானவர்கள் ஒருவரை விட மற்றவர் உயர்வுகளைக் கொண்டுள்ளனர். மிகவும் உயர்ந்த வானவர்கள் நான்கு பிரதான வானவர்கள் ஆவர். அவர்களில் முதலாமவர் ஜிப்ராஈல் 'அலைஹிஸ் ஸலாம்' ஆவார். இறைத்தூதர்களுக்கு வஹியைக் கொண்டு செல்வதும் அவர்களுக்கு ஏவல் விலக்கல்களை அறிவிப்பதும் அவரின் பணியாக இருந்தது. இரண்டாமவர் இஸ்ராபீல் 'அலைஹிஸ் ஸலாம்' ஆவார். அவர்தான் 'ஸூர்' எனப்படும் இறுதி ஊது குழலை ஊதுவார். அவர் ஸூரை இரு முறை ஊதுவார். முதலாம் தடவை ஊதும்போது அல்லாஹ் தஆலா தவிர்ந்த அவனது உயிர்வாழ் சகல படைப்பினங்களும் மரணிக்கும்.[2] இரண்டாவது தடவை ஊதும் போது அனைத்தும் மீள் உயிர்ப்பிக்கப்படும். மூன்றாவது வானவர் மீகாஈல் 'அலைஹிஸ் ஸலாம்' ஆவார். மலிவு நிலை, விலையுயர்ந்த தன்மை, பற்றாக்குறை, மிகுதி [பொருளாதார ஒழுங்கு, ஆறுதலையும் இலகுவையும் வழங்குதல்] மற்றும் ஒவ்வொரு பொருளையும் நகர்த்துதல் ஆகியன அவரது கடமைகளாகும். நான்காவது வானவர், இஸ்ராஈல் 'அலைஹிஸ் ஸலாம்' ஆவார். அவர்தான் மனிதர்களின் ஆன்மாக்களை [பாரசீகத்தில் ஜான், அரபு மொழியில் ரூஹ்] எடுத்துச் செல்கின்றவர். இந்த நான்கு பேருக்கும் பிறகு, நான்கு உயர்வான வகுப்புகளைச் சேர்ந்த வானவர்கள் உள்ளனர்: ஹமலத் அல்-

---

[1] எவ்வாறு ஒவ்வொரு வகையான கோழியின் இறக்கைகளும், ஒரு விமானத்தினது இறக்கைகளும், பிற இறக்கைகளிலிருந்து வேறுபட்ட அதற்கேயுரிய கட்டமைப்பில் உள்ளனவோ அதே போன்று, வானவர்களின் இறக்கைகளும் அதற்கேயுரிய வடிவத்தில் உள்ளன. நாம் அறியாத, கண்டிராத ஏதேனுமொன்றின் பெயரைக் கேட்கும் போது, நாம் அறிந்த விடயங்களுடன் ஒப்பிட்டு ஊகிக்கின்றோம். இது, இயல்பாகவே தவறானதாகும். வானவர்களுக்கு இறக்கைகள் உண்டு என நாம் நம்புகின்றோம். ஆனால், அவை எவ்வாறு உள்ளன என்பதை நாம் அறியமாட்டோம். கிறிஸ்தவ தேவாலயங்களிலும் வெளியீடுகளிலும் அல்லது திரைப்படங்களிலும் உள்ள வானவர்கள் என்று கருதப்படும் இறக்கைகளுடன் கூடிய பெண்களின் உருவங்கள் அனைத்துமே பொய்யாகும். முஸ்லிம்கள் அவ்வாறான படங்களைத் தயாரிப்பதில்லை. நாம் முஸ்லிமல்லாதவர்களால் வரையப்பட்ட கற்பனையான படங்களை உண்மை எனக் கருதக்கூடாது. அத்துடன் நாம் நமது எதிரிகளை நம்பக் கூடாது.

[2] தயவு செய்து, துருக்கி, இஸ்தான்புலிலுள்ள ஹகீகத் கிதாபவியில் கிடைக்கின்ற *The Rising and the Hereafter* என்ற சிறு நூலைப் பார்க்கவும்.

அர்ஷ் எனப்படும் வானவர்கள். அவர்கள் மீலெழும்பும் நாளில் எட்டுப் பேராக இருப்பர். இறை சன்னிதானத்தில் இருப்பவர்கள் முகர்ரபூன் எனப்படுகின்றனர். வேதனை செய்யும் வானவர்களின் தலைவர்கள் கரூபியூன் எனவும் அருளின் வானவர்கள், ரூஹானியூன் எனவும் அழைக்கப்படுகின்றனர். இந்த உயர்ந்த நிலைகளில் உள்ள வானவர்கள், மனிதர்களில் இறைத்தூதர்கள் தவிர்ந்த 'அலைஹிமுஸ் ஸலவாது வ தஸ்லீமாத்' எல்லோரையும் விட மேன்மை மிக்கவர்கள் ஆவர்.

முஸ்லிமகளின் மத்தியிலுள்ள ஸுலஹா மற்றும் அவ்லியா என்போர் சாதாரண மற்றும் கீழ்நிலை வானவர்களை விட உயர்ந்தவர்கள். அத்துடன் பொதுவான வானவர்கள், மாறு செய்யும், பாவம் புரியும் பொதுவான முஸ்லிம்களை விட உயர்வானவர்கள். எவ்வாறாயினும், இறை நிராகரிப்பாளர்கள் அனைத்துப் படைப்பினங்களையும் விடத் தாழ்ந்தவர்கள் ஆவர்.

முதலாவது ஸூர் ஊதப்படும்போது, ஹமலத் அல்-அர்ஷ் மற்றும் நான்கு பிரதான வானவர்கள் தவிர்ந்த சகல வானவர்களும் மரணிப்பார்கள். பிறகு ஹமலத் அல்-அர்ஷ் வானவர்களும் அதன் பிறகு நான்கு பிரதான வானவர்களும் உயிர் நீக்கப்படுவார்கள். இரண்டாம் ஸூர் ஊதப்படும்போது அனைத்து வானவர்களும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். ஹமலத் அல்-அர்ஷ் மற்றும் நான்கு பிரதான வானவர்கள் இரண்டாம் ஸூர் ஊதப்பட முன்னர் எழுவார்கள். அதாவது, இந்த வானவர்கள் எவ்வாறு சகல உயிர்வாழ் படைப்பினங்களுக்கும் முன்னர் படைக்கப்பட்டார்களோ அதே போன்று சகல உயிர்களும் மரணித்ததன் பிறகு உயிர் நீக்கப்படுவார்கள்.

3. ஈமானின் ஆறு அடிப்படைகளில் மூன்றாவது, "அல்லாஹ் தஆலாவால் இறக்கியருளப்பட்ட வேதங்களை நம்புதல்" ஆகும். அவன் இந்த வேதங்களை சில இறைத்தூதர்களுக்கு வானவரை அவர்களுக்கு வாசித்துக் காட்டச் செய்து அனுப்பி வைத்தான். சிலருக்கு ஏடுகளில் பதிவு செய்யப்பட்ட வேதங்களை அனுப்பினான். சிலருக்கு வானவர் இடையே இல்லாமல் செவிமடுக்கச் செய்தவன் மூலம் அனுப்பினான். இந்த அனைத்து வேதங்களும் அல்லாஹ் தஆலாவின் வார்த்தை (கலாம்-அல்லாஹ்) ஆகும். அவை இறந்த காலத்தில் நித்தியமான, முடிவற்றவையாகும். அவை படைப்புகள் அல்ல. அவை வானவர்களால் உருவாக்கப்பட்ட வார்த்தைகளோ, அல்லது இறைத்தூதர்களது வார்த்தைகளோ அல்ல. அல்லாஹ் தஆலாவின் வார்த்தை நாம் எழுதும், மனதில் பதியும், பேசும் மொழியை ஒத்ததல்ல. அது எழுத்திலும், பேச்சிலும் அல்லது மனதிலும் நிலை பெற்றுள்ளது. அதற்கு எழுத்துக்களோ ஓசையோ கிடையாது. அல்லாஹ் தஆலாவின் பண்புகள் எவ்வாறானவை என்பதை மனிதனால் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் மனிதனால் அந்த வார்த்தையை வாசிக்கவும் மனதில் பதியவும் எழுதவும் முடியும். அது எம்மோடு இருக்கும் போது ஹாதிஸாக, ஒரு படைப்பாக மாறுகிறது. அதாவது, அல்லாஹ் தஆலாவின் வார்த்தைக்கு இரண்டு அம்சங்கள் உள்ளன. அது எப்போது மனிதர்களுடன் இருக்குமோ அப்போது அது ஹாதிஸாகவும்[1] ஒரு படைப்பாகவும் இருக்கும். அது அல்லாஹ் தஆலாவின் வார்த்தை என்ற வகையில் சிந்தனையாக இருக்கும் போது அது நிரந்தரமானதாக (காதிமாக) இருக்கும்.

அல்லாஹ் தஆலாவால் இறக்கியருளப்பட்ட சகல வேதங்களும் உண்மையானவை, சரியானவை. அவற்றில் எந்தப் பொய்யும் அல்லது பிழையும் இல்லை. அவன் (அவனது சில அடியார்களை) தண்டிப்பதாகப் பிரகடனப்படுத்திய போதும், அவனுக்கு (அவர்களை) மன்னிப்பது ஜாஇஸாகும் (சாத்தியமானது, நிகழத்தக்கது, அனுமதிக்கப்பட்டது) என புலமைசார் பதிவு குறிப்பிடுகின்றது. மன்னிப்பு என்பது எமது அறிவுக்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளின் நிபந்தனைக்குட்பட்டது அல்லது அது அவனது சுய விருப்பு மற்றும் நாட்டம் என்ற யதார்த்தத்தின் விரிந்த சூழமைவு இங்கே கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். அல்லது அவன் அவனது அடியார் பெற வேண்டிய தண்டனையை மன்னிப்பான் என்ற எதிர்பார்ப்பை வெளிப்படுத்தும் நோக்கில் அத்தகைய பதிவு

[1] ஹாதிஸ் என்பது அல்லாஹ் தஆலாவால் படைக்கப்பட முன்னர் இருப்பு நிலையொன்று இல்லாததும், அல்லாஹ் தஆலாவால் அழிக்கப்படும் போது தனது இருப்பு முடிவுக்கு வருவதும் ஆகும்.

அமைந்திருக்கலாம். ஒரு உண்மையை அறிவிக்க நாடவில்லை என்ற போது, ஏன் தண்டனை மற்றும் வேதனையைக் கொண்ட அச்சுறுத்தலைப் பிரகடனப்படுத்துவது ஒரு பொய்யாக இருக்க வேண்டும்?

அல்லாஹ் தஆலாவுக்கு அவன் வாக்களித்த பரிசுகளை வழங்காமலிருப்பது ஜாஇஸ் அல்ல என்ற போதும், தண்டனையை மன்னிப்பது அவனுக்கு ஜாஇஸ் ஆகும். இந்த விளக்கம் நம்பத்தக்கது மாத்திரமல்ல, அது ஏற்கனவே ஆயத் கரீமாக்களில் இடம்பெற்றுள்ள நிரூபிக்கப்பட்ட யதார்த்தமாகும்.

இடர்பாடோ அல்லது அசௌகரியமோ இல்லாதபோது ஆயாத் கரீமாக்களையும் ஹதீஸ் ஷரீப்களையும் அவற்றின் மொழிக்கருத்தில் விளக்குவது அவசியமாகும். அவற்றின் மொழிக் கருத்துக்களை ஒத்த வேறு கருத்துக்களை வழங்குவது அனுமதிக்கத்தக்கதல்ல.[1] முதஷாபிஹாத் எனப்படும் ஆயாத் கரீமாக்கள் புரியாத, மறைபொருளைக் கொண்டவை. அல்லாஹ் தஆலா மாத்திரமே அவற்றை அறிந்தவன். அத்துடன் அல்-இல்ம் அல்-லதுன்னீ வழங்கப்பட்ட மிகவும் சில குறிப்பிடத்தக்க மேன்மைக்குரியவர்கள் தமக்கு அனுமதிக்கப்பட்ட வகையில் அவற்றின் பொருளைப் புரிந்து கொள்வார்கள். ஏனைய யாரும் அதனைப் புரிந்து கொள்ள மாட்டார்கள். இதன் காரணமாக, முதஷாபிஹாத்தான ஆயத்கள் அல்லாஹ் தஆலாவின் வார்த்தை என்பதை நாம் நம்ப வேண்டும். அத்துடன் அவற்றின் கருத்துக்களை நாம் ஆராயக் கூடாது. அத்தகைய ஆயத்களை சுருக்கமாகவோ அல்லது விரிவாகவோ விளக்குவது (தஃவீல்) ஆகுமானது என அஷ்அரி மத்ஹபின் அறிஞர்கள் கூறினார்கள். 'தஃவீல்' என்பது 'ஒரு சொல்லின் பல கருத்துக்களிலிருந்து பொதுவானதல்லாத கருத்தொன்றை தெரிவு செய்தலாகும்'. உதாரணமாக, "அவர்களின் கைகளுக்கு மேலே அல்லாஹ்வின் கை உள்ளது" என்ற ஆயத் அல்லாஹ் தஆலாவின் வார்த்தையாகும். "அல்லாஹ் தஆலா இதில் நாடுகின்ற எதனையும் நான் நம்புகின்றேன்" என்று நாம் கூற வேண்டும். "இதன் கருத்தை என்னால் புரிந்து கொள்ள முடியாது. அல்லாஹ் தஆலா மாத்திரமே அதனை அறிந்தவன்" என்று கூறுவது மிகவும் சிறந்தது. அல்லது "அல்லாஹ் தஆலாவின் அறிவு எமது அறிவு போன்றதல்ல. அவனது நாட்டம் எமது நாட்டத்தைப் போன்றதல்ல. அதே போன்று அல்லாஹ் தஆலாவின் கை என்பது அவனது மனித படைப்புகளின் கைகளைப் போன்றதல்ல" என்று நாம் கட்டாயம் கூற வேண்டும்.

அல்லாஹ் தஆலா இறக்கியருளிய வேதங்களில், உச்சரிப்புகள் அல்லது சில ஆயத் கரீமாக்களின் கருத்துக்கள் அல்லது இரண்டுமே அவனால் மாற்றம் (நஸ்க்ஹ்) செய்யப்பட்டுள்ளன. குர்ஆன் அல்-கரீம் அனைத்து வேதங்களுக்கும் பதிலீடாக வந்ததுடன் அவற்றின் சட்டங்களின் செல்லுபடியையும் நீக்கி விட்டது. குர்ஆன் அல்-கரீமில் உலக முடிவு வரை ஒருபோதும் எந்தத் தவறுகளோ, சேர்க்கைகளோ, மறக்கப்பட்டவையோ அல்லது தவறவிடப்பட்ட குறிப்புகளோ இல்லை. அது ஒருபோதும் மறந்து போகவும் மாட்டாது. இறந்த கால எதிர்கால சகல அறிவுகளும் குர்ஆன் அல்-கரீமில் உட்பொதிந்துள்ளது. இதன் காரணமாக, அது அனைத்து வேதங்களையும் விட மிகவும் உயர்ந்ததும் பெறுமதி வாய்ந்ததுமாகும். ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்களது மிகப்பெரும் முஃஜிஸா குர்ஆன் அல்-கரீமாகும். அனைத்து மனிதர்களும் ஜின்களும் ஒன்று திரண்டு, குர்ஆன் அல்-கரீமின் மிகச் சிறிய ஸூராவுக்கு நிகரான ஒன்றை வடிவமைத்துக் கூற முயற்சி செய்தாலும் அவர்கள் அதில் தோற்றுப் போவார்கள்.

உண்மையில், அரேபியாவின் பேச்சாற்றல் மிக்க, இலக்கியக் கவிஞர்கள் ஒன்று திரண்டு, கடும் முயற்சி செய்தனர். ஆனால் அவர்களால் சிறிய மூன்று ஆயத்களைப் போன்றதையும் கூற முடியாமல் தோற்றுப் போயினர். அவர்களால் குர்ஆன் அல்-கரீமை எதிர்த்து நிற்க முடியாது போனது. அவர்கள் மடையர்களாயினர். அல்லாஹ் தஆலா இஸ்லாத்தின் எதிரிகளை குர்ஆன் அல்-கரீமிற்கு முன்னால்

[1] குர்ஆன் அல்-கரீமும் ஹதீஸ் ஷரீபும் குறைஷி மொழியிலும் வட்டார மொழி வழக்கிலும் உள்ளன. ஆனால் ஆயிரத்து முன்னூறு வருடங்களுக்கு முன்னர் ஹிஜாஸில் பயன்பாட்டிலிருந்த சொற்களுக்கான கருத்துக்கள்தான் வழங்கப்பட வேண்டும். நூற்றாண்டுகளாக ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாக அமைந்துள்ள தற்கால கருத்துக்களை வழங்கி அவற்றை மொழிபெயர்ப்பது சரியல்ல.

இயலாதவர்களாகவும் தோல்வியடைந்தவர்களாகவும் ஆக்குகின்றான். குர்ஆன் அல்-கரீமின் மொழி வான்மை மனித சக்திக்கு அப்பாற்பட்டதாகும். அது கூறுவதைப் போன்று மனிதர்களால் கூற்றொன்றை ஏற்படுத்த இயலாது. குர்ஆன் அல்-கரீமின் ஆயாத் கரீமாக்கள் மனிதர்களின் கவிதையையோ, வசனநடையையோ அல்லது நயமான வசனங்களையோ ஒத்தவையல்ல. இருப்பினும், அது அரேபியாவின் பேச்சாற்றல் மிக்க, இலக்கிய ஈடுபாடுள்ள மக்கள் பேசிய மொழியின் எழுத்துக்களில் கூறப்பட்டுள்ளது.

நூற்றி நான்கு வேத நூல்கள் எமக்கு இறக்கியருளப்பட்டுள்ளன. பத்து ஸுஹுப் (ஸஹீபாவின் பன்மை, சிறு நூல்கள்) ஆதம் 'அலைஹிஸ் ஸலாம்' இற்கும், ஐம்பது ஸுஹுப் ஷிஸ் (ஷீத்) 'அலைஹிஸ் ஸலாம்' இற்கும், முப்பது ஸுஹுப் இத்ரீஸ் 'அலைஹிஸ் ஸலாம்' இற்கும், பத்து ஸுஹுப் இப்ராஹீம் 'அலைஹிஸ் ஸலாம்' இற்கும் இறக்கியருளப்பட்டமை நன்கறிந்த விடயமாகும். அத்தோடு தவ்ராத் (தோராஹ்) மூஸா (மோஸஸ்) 'அலைஹிஸ் ஸலாம்' இற்கும் ஸபூர் தாவூத் 'அலைஹிஸ் ஸலாம்' இற்கும் இன்ஜீல் (லத்தீனில் 'எவன்கலியம்') ஈஸா (ஜீஸஸ்) 'அலைஹிஸ் ஸலாம்' இற்கும் குர்ஆன் அல்-கரீம் முஹம்மத் 'அலைஹிஸ் ஸலாம்' இற்கும் இறக்கியருளப்பட்டமை நன்றிந்ததே.

ஒருவர் ஒரு விடயத்தை ஏவவோ தடுக்கவோ விரும்பினால், ஒன்றைப் பற்றி வினவவோ அல்லது செய்தி அறிவிக்கவோ விரும்பினால், அவர் அதனைத் தனது மனதில் சிந்தித்துத் தயாராக வேண்டும். மனதிலுள்ள இந்தக் கருத்துக்கள் "கலாம் நப்ஸீ" எனப்படுகின்றன. அவை அரபியிலோ பாரசீகத்திலோ அல்லது ஆங்கிலத்திலோ மொழிய முடியாதவை. பல்வேறு மொழிகளில் அவை வெளிப்படுத்தப்படுவது இந்தக் கருத்துக்களில் மாற்றத்தை ஏற்படுத்தாது. இந்தக் கருத்துக்களை வெளிப்படுத்தும் வார்த்தைகள் "கலாம் ழப்லீ" எனப்படுகின்றன. கலாம் ழப்லீ வித்தியாசமான மொழிகளில் வெளிப்படுத்தப்பட முடியும். எனவே ஒருவரின் கலாம் நப்ஸீ என்பதுதான் அதன் உரிமையாளரிடம் உள்ள தூய்மையான, மாற்றமுறாத, தெளிவான பண்பாகும். அது அவரிடமுள்ள அறிவு, நாட்ட சக்தி, விவேகம் மற்றும் அதுபோன்றவற்றை ஒத்ததாகும். கலாம் ழப்லீ என்பது கலாம் நப்ஸீயை வெளிப்படுத்துகின்ற, ஒருவரது வாயினால் உச்சரிக்கும் போது வெளிப்படுகின்ற, காதை வந்தடைகின்ற எழுத்துக்களின் தொகுதியாகும். இதுபோன்று, அல்லாஹு தஆலாவின் வார்த்தை நிரந்தரமானதும் முடிவற்றதும் அமைதியாக இல்லாததும், படைக்கப்படாததும், அவனது ஆளுமையில் உள்ளதுமான வார்த்தையாகும். அது அறிவு, நாட்ட சக்தி போன்று அல்லாஹு தஆலாவின் ஸிபாத் அத்-தாதிய்யா மற்றும் ஸிபாத் அஸ்-ஸுபூதிய்யா ஆகியவற்றிலிருந்து தெளிவாக வேறுபட்ட ஒரு பண்பாகும்.

கலாம் (பேச்சு, வார்த்தை) என்ற பண்பு ஒருபோதும் மாறாததும் தூய்மையானதுமாகும். அது எழுத்துக்களிலோ அல்லது ஓசைகளிலோ இல்லை. அது ஒரு ஏவல், ஒரு விலக்கல், ஒரு உரை என்றோ அல்லது அரபு, பாரசீகம், ஹிப்று, துருக்கி அல்லது சிரியக் போன்ற மொழிகளுக்கோ வகைப்படுத்த அல்லது வகை பிரிக்க முடியாததாகும். அது அத்தகைய வடிவங்களைப் பெறவில்லை. அது எழுதப்பட முடியாதது. அதற்கு புத்தி, காது, நாவு போன்ற அத்தகைய சாதனங்களோ ஊடகங்களோ அவசியமில்லை. ஆயினும், அவற்றினூடாக அதனை, நாம் அறிந்த ஏனைய படைப்புகளிலிருந்து தெளிவாக வேறுபிரித்து ஒரு படைப்பாகப் புரிந்து கொள்ள முடியும். அது விரும்பிய எந்த மொழியிலும் மொழியப்படலாம். ஆகவே, அது அரபு மொழியில் வெளிப்படுத்தப்பட்டால், அது குர்ஆன் அல்-கரீம் என அழைக்கப்படும். அது ஹிப்று மொழியில் வெளிப்படுத்தப்பட்டால் அது தவ்ராத் ஆகும். அது சிரியக் மொழியில் வெளிப்படுத்தப்பட்டால் அது இன்ஜீல் ஆகும். [அது கிரேக்க மொழியில் வெளிப்படுத்தப்பட்டால் இன்ஜீல் ஆகுமென்றும் சிரியக் மொழியில் வெளிப்படுத்தப்பட்டால் ஸபூர் ஆகுமென்றும் ஷரஹ் அல்-மகாஸித்[1] என்ற நூலில் எழுதப்பட்டுள்ளது.]

[1] ஸஅத் அத்-தீன் அத்-தப்தாஸானீ எழுதியது. அவர் ஹி.792 இல் (கி.பி 1389 இல்) ஸமர்கந்தில் வபாத்தானார்.

கலாம் அல்-இலாஹிய்யா (அல்லாஹ் தஆலாவின் வார்த்தை) என்பது பல்வேறு விடயங்களைக் கூறுகிறது. அது ஒரு இடம்பெற்ற அல்லது நடக்க உள்ள நிகழ்வைப் பற்றிப் பேசினால் அது க்ஹபர் (விவரணம்) எனப்படுகிறது. அவ்வாறு இல்லாவிட்டால் அது இன்ஷாஃ எனப்படும். கட்டாயம் செய்யப்பட வேண்டிய விடயங்களைப் பற்றி அது குறிப்பிட்டால், அது அம்ர் (ஏவல்) எனப்படும். தடுக்கப்பட்டவற்றைக் குறிப்பிட்டால் அது நஹி (விலக்கல்) எனப்படும். ஆனால் கலாம் அல்-இலாஹிய்யாவில் எந்த மாற்றமும் அல்லது அதிகரிப்பும் ஏற்பட மாட்டாது. இறக்கியருளப்பட்ட ஒவ்வொரு வேதமும் அல்லது ஒவ்வொரு பக்கமும் அல்லாஹ் தஆலாவின் வார்த்தையின் தாளாகும். அதாவது, அவை அவனது கலாம் அந்-நப்ஸீ ஆகும். அது அரபு மொழியில் இருக்கும் போது அது குர்ஆன் அல்-கரீம் எனப்படும். கவி நடையில் இறக்கியருளப்பட்ட வஹி எழுதப்படவோ, மொழியப்படவோ, செவிமடுக்கப்படவோ, மனதில் பாதுகாக்கப்படவோ முடியும். அது கலாம் அல்-ழப்லீ அல்லது குர்ஆன் அல்-கரீம் எனப்படுகிறது. கலாம் அல்-ழப்லீ கலாம் அந்-நப்ஸீயைக் குறித்துக் காட்டுவதால் அது கலாம் அல்-இலாஹிய்யா என அல்லது இறை பண்பு என அழைக்கப்படுவது ஆகுமானது. இந்த வார்த்தை ஒரு முறைமையில் இருப்பினும் அது மக்களுக்கு ஏற்ப பகுதிகளாகப் பிரிக்கப்படவும் உடைக்கப்படவும் முடியும். அதன் முழுமையான வடிவம் குர்ஆன் அல்-கரீம் எனப்படுவது போலவே அதன் பகுதிகளும் குர்ஆன் அல்-கரீம் என்றே அழைக்கப்படுகின்றது.

நேர்வழி நடந்த அறிஞர்கள் கலாம் அந்-நப்ஸீ என்பது ஒரு படைப்பல்ல என்றும் அது காதிம் (நிரந்தரமானது) என்றும் ஏகமனதாகக் கூறுகின்றனர். கலாம் அல்-ழப்லீ ஹாதிஸா அல்லது காதிமா என்பதில் ஒருமித்த கருத்து இல்லை. கலாம் அல்-ழப்லீயை ஹாதிஸ் என்று குறிப்பிடும் சிலர், அவ்வாறு ஹாதிஸ் என்று கூறாமல் இருப்பது சிறந்தது என எச்சரிக்கப்படுகின்றனர். இல்லையெனில் அது பிழையாகப் புரியப்பட்டு, கலாம் அந்-நப்ஸீயும் ஹாதிஸ் என்று கருத்துக் கொடுக்கப்படலாம். இதுதான் இந்த விடயம் பற்றிய மிகச் சிறந்த கருத்தாகும். வேறொன்றைக் குறிக்கும் ஏதேனுமொன்றை மனித மனம் செவிமடுக்கும் போது, அது உடனே குறிக்கப்படும் விடயத்தை நினைவு படுத்துகிறது. நேர்வழி நடந்த அறிஞர்களில் ஒருவர், குர்ஆன் அல்-கரீம் ஹாதிஸ் என்று கூறியதாகக் கேட்டால், எமது வாயினால் உச்சரிக்கும் வார்த்தைகளையும் சப்தங்களையுமே அவர் குறிப்பிட்டுள்ளார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். கலாம் அந்-நப்ஸீ மற்றும் கலாம் அல்-ழப்லீ இரண்டுமே அல்லாஹ் தஆலாவின் வார்த்தை என்பதாக நேர்வழி நடந்த அறிஞர்கள் ஏகமனதாகக் குறிப்பிட்டுள்ளனர். இந்தக் கூற்று ஒரு உருவகம் என சில அறிஞர்கள் கருதினாலும், அது இறை வார்த்தை என்பதை அவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். கலாம் அந்-நப்ஸீ என்பது அல்லாஹ் தஆலாவின் வார்த்தை என்பதன் பொருள், அது அல்லாஹ் தஆலாவின் பேசும் பண்பு என்பதாகும். அத்துடன் கலாம் அல்-ழப்லீ அல்லாஹ் தஆலாவின் வார்த்தை என்பதன் பொருள், அது அல்லாஹ் தஆலாவின் மூலம் படைக்கப்பட்டது என்பதாகும்.

கேள்வி: அல்லாஹ் தஆலாவின் நித்தியமான வார்த்தையை செவிமடுக்க முடியாது என மேலே எழுதப்பட்டதிலிருந்து புரியப்பட்டது. ஒருவர், "நான் அல்லாஹ்வின் வார்த்தையை செவிமடுத்தேன்" எனக் கூறினால் அதன் கருத்து, 'நான் உச்சரிக்கப்பட்ட ஓசைகளையும் சொற்களையும் செவிமடுத்தேன்' அல்லது 'இந்த சொற்களின் ஊடாக நான் நிரந்தரமான கலாம் அந்-நப்ஸீயைப் புரிந்து கொண்டேன்' என்பதாகும். அனைத்து இறைத்தூதர்களும், ஒவ்வருவருமே, அதனை இந்த இரு அமைப்பிலுமே செவிமடுக்க முடியும். மூஸா 'அலைஹிஸ் ஸலாம்' அவர்கள் கலீம்-அல்லாஹ் (அல்லாஹ் தஆலாவுடன் பேசிய ஒருவர்) என்று வேறுபிரித்து அறியப்படக் காரணம் என்ன?

பதில்: மூஸா 'அலைஹிஸ் ஸலாம்' நித்திய வார்த்தையை, ஆதத் அல்-இலாஹிய்யா (காரண காரியத் தொடர்பு விதியை) விட்டும் வித்தியாசமான ஒரு வழியில் எந்த எழுத்துக்களோ அல்லது ஓசைகளோ இன்றி செவிமடுத்தார்கள். எவ்வாறு அல்லாஹ் தஆலாவை சுவர்க்கத்தில் புத்திக்கு எட்டாத, வர்ணிக்க முடியாத அமைப்பில் காண முடியுமோ அதே போன்று அவர் விளக்கமளிக்க முடியாத ஒரு அமைப்பில் அதனை செவிமடுத்தார். இந்த அமைப்பில் வேறு யாரும் அதனை செவிமடுக்கவில்லை. அல்லது, அவர் அல்லாஹ் தஆலாவின் வார்த்தையை ஓசைகளிலும் தனது காதின் ஊடாக மாத்திரமன்றி தனது உடலின் ஒவ்வொரு அங்கத்தினாலும் எல்லாத் திசைகளிலிருந்தும் செவிமடுத்தார். அல்லது, ஓசையிலோ அல்லது காற்றின் அதிர்வின் மூலமோ அல்லது வேறு

வழிகளின் மூலமாகவோ இல்லாதிருப்பினும் அந்த மரத்தின் திசையிலிருந்து மாத்திரம் அவர் அதனை செவிமடுத்தார். அவர் அதனை இந்த மூன்றில் ஒரு அமைப்பில் செவிமடுத்ததன் காரணமாகவே, அவர் 'கலீம்-அல்லாஹ்' என்ற பெயரால் கௌரவிக்கப்பட்டார். முஹம்மத் 'அலைஹிஸ் ஸலாம்' அவர்களும் மிஃராஜ் இரவில் இந்த அமைப்பில் இறை வார்த்தையை செவிமடுத்தார்கள். எனவே, அவர் பெற்றுக் கொண்டதைப் போன்று, ஜிப்ராஈல் 'அலைஹிஸ் ஸலாம்' அவர்களிடமிருந்து செவிமடுத்தமை வஹியாகும்.

4. ஈமானின் ஆறு அடிப்படை அம்சங்களில் நான்காவது, "அல்லாஹ் தஆலாவின் தூதர்களை நம்பிக்கை கொள்வதாகும்." இறைவன் விரும்பும் வழியை மக்கள் அடைந்து கொள்ளவதற்காகவும் அவர்களுக்கு நேரான வழியைக் காட்டுவதற்காகவும் அவர்கள் அனுப்பப்பட்டார்கள். மொழி ரீதியாக, 'ருஸூல்' (ரஸூல் என்பதன் பன்மை) என்றால், 'அனுப்பப்பட்ட மக்கள், தூதர்கள்' என்று பொருள்படும். இஸ்லாத்தில், 'ரஸூல்' என்பது 'இயல்பினால், ஆளுமையால், அறிவால் மற்றும் புத்தியால் அவரது காலத்து மக்களை விடவும் உயர்ந்த, மேன்மைக் குரிய, மதிப்பு வாய்ந்த ஒருவர் என்பதுடன், தனது நடத்தையில் ஒரு தீய குணாம்சமோ, விரும்பத்தகாத தன்மையோ இல்லாத ஒருவர்' என்பதாகும். இறைத்தூதர்கள் இஸ்மா என்ற பண்பைப் பெற்றிருந்தனர். அதாவது, அவர்கள் தமது நுபுவ்வா (தூதுத்துவம், தூதுப் பணி)[1] அறிவிக்கப்பட முன்னரோ அதற்குப் பின்னரோ எந்தவொரு பெரும் அல்லது சிறு பாவத்தையும் செய்யாதவர் என்று பொருள்படும். அவர்களுக்கு தமது நுபுவ்வத் அறிவிக்கப்பட்ட பிறகு மற்றும் அவர்களது நுபுவ்வா நன்கு அறியப்பட்டு பரவலாகும் வரை, பார்வையின்மை, செவிடு, அது போன்ற குறைபாடுகள் அவர்களுக்கு ஏற்படவில்லை. ஒவ்வொரு இறைத்தூதரும் ஏழு தனித்துவமான குணாம்சங்களைப் பெற்றிருந்தனர் என நம்பிக்கை கொள்ளப்பட வேண்டும்: அமானா (நம்பகத்தன்மை), ஸித்க் (பரிவு), தப்லீஃக் (தொடர்பாடல்), அதாலா (நீதி), இஸ்மா (பாவம் செய்வதை விட்டும் பாதுகாப்பு), பதானா (புத்தி சாதுர்யம்) மற்றும் அம்ன் அல்-அஸ்ல் (நுபுவ்வத் நீங்காமல் பாதுகாப்பு) ஆகியன அப்பண்புகளாகும்.

ஒரு புதிய மார்க்கத்தை (அதாவது, ஒரு புதிய சட்ட ஒழுங்கை) எடுத்து வரும் ஒரு இறைத்தூதர், "ரஸூல்" (இறைத்தூதர்) எனப்படுவார். ஒரு புதிய மார்க்கத்தைக் கொண்டுவராத, ஆனால் முன்னைய மார்க்கத்தின் பால் மக்களை அழைத்த இறைத்தூதர், ''நபி'' (தூதுவர்) எனப்படுவார்.[2] கட்டளைகளை எத்திவைக்கும் (தப்லீஃக்) தொடர்பாடலிலும் அல்லாஹ் தஆலாவின் மார்க்கத்தின் பால் மக்களை அழைப்பதிலும் ஒரு ரஸூலுக்கும் நபிக்கும் மத்தியில் எந்த வித்தியாசமும் இருப்பதில்லை. அனைத்து இறைத்தூதர்களும், எந்த விதிவிலக்குமின்றி, அர்ப்பணிப்பும் வாய்மையும் உள்ளவர்களாக இருந்தனர் என நாம் நம்ப வேண்டும். யார் அவர்களில் ஒருவரை நிராகரிக்கின்றாரோ அவர் அவர்கள் அனைவரையும் நிராகரித்தவராகக் கருதப்படுவார்.

கடுமையாக உழைத்து, பட்டினி கிடந்து அல்லது அசௌகரியங்களை அனுபவித்து அல்லது பயபக்தியுடன் அதிகமாகத் தொழுது நுபுவ்வாவை அடைய முடியாது. அல்லாஹ் தஆலாவின் விருப்பம் மற்றும் தெரிவின் மூலம் மட்டுமே அதனை அடைய முடியும். இந்த உலகிலும் மறுமையிலும் மக்களுக்கு ஒரு பயனுள்ள வாழ்வை ஏற்படுத்திக் கொடுக்கும் விதமாக இறைத்தூதர்களின் இடையீட்டுடன் மார்க்கங்கள் அனுப்பப்பட்டன. அத்துடன் அவர்களை தீய செயற்பாடுகளிலிருந்து தடுத்து, அவர்களுக்கு ஈடேற்றம், வழிகாட்டல், அமைதி மற்றும் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதற்காக அவை அனுப்பப்பட்டன. அவர்களுக்குப் பல எதிரிகள் இருந்தனர்;

---

[1] நயவஞ்சகமாக இஸ்லாத்தை அழிக்க முயற்சிக்கின்ற சில இறை நிராகரிப்பாளர்கள், "முஹம்மத் 'அலைஹிஸ் ஸலாம்' இறைத்தூதராக மாற முன்னர் விக்கிரகங்களுக்கு மிருக பலிகளை வழங்கினார்" எனக் கூறுகின்றனர். அத்துடன், லா மத்ஹபி நூல்களை அதற்கான ஆதாரங்களுக்கான ஆவணங்களாக வழங்குகின்றனர். இந்தக் கூற்று பொய்யானது என்பதனை மேலுள்ள வரிகள் நிரூபிக்கின்றன.

[2] 'ரஸூல்' என்பதே "இறைத்தூதர்' என்பதாக எழுத்தில் வந்துள்ளது.

அவர்கள் பரிகாசிக்கப்பட்டனர்; கடுமையாக நடாத்தப்பட்டனர். இருப்பினும், இறைத்தூதர்கள் எதிரிகளுக்கு அஞ்சவில்லை. நம்பிக்கைக் கோட்பாடுகள், மார்க்க நடைமுறைகளுக்கான அல்லாஹ் தஆலாவின் கட்டளைகளை மக்களுக்கு எத்திவைப்பதில் அவர்கள் தயக்கம் காட்டவில்லை. அல்லாஹ் தஆலா தனது இறைத்தூதர்களுக்கு, அவர்கள் அர்ப்பணிப்பும் உண்மையும் வாய்ந்தவர்கள் என்பதைக் காட்ட முஃஜிஸாக்களை வழங்கி உதவினான். அவர்களது முஃஜிஸாக்களை சவாலுக்குட்படுத்த எவராலும் முடியவில்லை. ஒரு குறிப்பிட்ட இறைத்தூதரைப் பின்பற்றும் மக்கள் அவரது உம்மா என அழைக்கப்படுகின்றனர். இறுதித் தீர்ப்பு நாளில் இறைத்தூதர்கள் தமது உம்மத்துக்காகப் பரிந்துரை செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.குறிப்பாக மிகப் பெரும் பாவிகளுக்காக அப்பரிந்துரை அமையும். அவர்களது பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்படும். அல்லாஹ் தஆலா அவர்களது சமூகத்திலுள்ள 'உலமா' 'ஸுலஹா' மற்றும் அவ்லியாக்களுக்கும் பரிந்துரைக்க அனுமதிப்பதுடன், அவர்களது பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்படும். இறைத்தூதர்கள் 'அலைஹிமுஸ் ஸலாத்து வ தஸ்லீமாத்' தமது மண்ணறைகளில் நாம் அறியாத அவர்களது வாழ்வை வாழ்கின்றனர். பூமி அவர்களது பாக்கியம் வாய்ந்த உடலை அழுகச் செய்வதில்லை. இதன் காரணமாகத்தான், ஹதீஸ் ஷரீபொன்றில், "இறைத்தூதர்கள் தமது மண்ணறைகளில் தொழுகையையும் ஹஜ்ஜையும் நிறைவேற்றுகின்றனர்"[1] என்பதாக இடம்பெற்றுள்ளது.

ஒரு இறைத்தூதரின் பாக்கியமிக்க கண்கள் தூங்கினாலும் இந்த உள்ளத்தின் கண்கள் தூங்கியதில்லை. சகல இறைத்தூதர்களும் 'அலைஹிமுஸ் ஸலாம்' தூதுவர்களாக தமது பணியைச் செய்வதிலும் நுபுவ்வாவுக்கான (தூதுத்துவத்துக்கான) பரிபூணத் தன்மையைப் பெற்றிருப்பதிலும் சமமானவர்களாக இருந்தனர். மேற்குறிப்பிடப்பட்ட ஏழு தனித்துவமான குணாம்சங்கள் அவர்கள் அனைவரிடமும் காணப்பட்டன. நபிமார்கள் நுபுவ்வத்திலிருந்து ஒருபோதும் நீக்கப்பட மாட்டார்கள். எனினும், அவ்லியா தனது விலாயாவிலிருந்து நீங்கலாம். இறைத்தூதர்கள் மனிதர்களாவர். அவர்கள் மனிதர்களுக்குத் தூதுவர்களாக ஆக முடியாத, இறைத்தூதர் என்ற தரத்தை அடைய முடியாத ஜின்களோ அல்லது வானவர்களோ அல்ல. இறைத்தூதர்கள் ஒருவர் மற்றவரை விட உயர்வும் கௌரவமும் பெற்றிருந்தனர். உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட இறைத்தூதரின் உம்மா எண்ணிக்கையில் மிகவும் அதிகமாகவும் அல்லது அவர் அனுப்பப்பட்ட நாடு இன்னொரு இறைத்தூதரின் அல்லது ஏனைய இறைத்தூதர்களின் நாடுகளை விடப் பெரியதாகவும் இருந்தன. அல்லது அவர் மிக உயர்வான அருட்கொடைகளையும் அருள்களையும் கிடைக்கப்பெற்றவராக இருந்தார். அல்லது அவரது முஃஜிஸாக்கள் மிகவும் ஏராளமாகவும் நிலையானதாகவும் இருந்தன. இறுதி யுகத்திற்கான இறைத்தூதர் முஹம்மத் 'அலைஹிஸ் ஸலாம்' ஏனைய அனைத்து

---

[1] இன்றைய அரேபியாவில், வஹ்ஹாபீக்கள் என்ற ஒரு பிரிவினர் உள்ளனர். அவர்கள் அத்தகைய ஹதீஸ் ஷரீப்களை நம்புவதில்லை. இந்த ஹதீஸ்களை நம்பும் உண்மையான முஸ்லிம்களை அவர்கள் "இறை நிராகரிப்பாளர்கள்" என்கின்றனர். தெளிவற்ற, இடம்பாடுகள் கூடிய ஆயத் அல்-கரீமாக்கள் மற்றும் ஹதீஸ் ஷரீப்களுக்கான அவர்களது பிழையான விளக்கத்தின் காரணமாக, அவர்கள் இறைநிராகரிப்பாளர்களாக மாறுவதில்லை. அவர்கள் பித்ஆவின் கூட்டத்தார் ஆகின்றனர். முஸ்லிம்களுக்கு அவர்கள் பெரும் தீங்கை ஏற்படுத்துகின்றனர். வஹாபிஸ்ம் என்பது நஜ்த் நகரைச் சேர்ந்த முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் என்ற ஒரு மூடரால் தோற்றுவிக்கப்பட்டது. பிரித்தானிய உளவாளியான ஹெம்பர் அவரை, அஹ்மத் இப்னு தைமியாவின் (மரணம்: ஹி.728 [கி.பி 1328], டமஸ்கஸ்) மதபேத கருத்துக்களின் மூலம் பிழையாக வழிநடாத்தினார். அது ஒரு எகிப்தியரான முஹம்மத் அப்துஹுவின் (மரணம்: ஹி.1323 [கி.பி 1905], எகிப்து) புத்தகங்களால் துருக்கியர்கள் மத்தியிலும் எல்லா இடங்களிலும் பரவலானது. வஹ்ஹாபிகள் ஐந்தாவது ஒரு மத்ஹபைப் பின்பற்றுவோர் அல்ல என்றும் அவர்கள் முழுமையாக பிழையான வழியைப் பின்பற்றும் மதபேதம் கொண்ட மக்கள் என்றும் அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்கள் தமது நூற்றுக்கணக்கான நூல்களில் நிரூபித்துள்ளனர். விரிவான தகவல்கள் *Endless Bliss, Confessions of a British Spy* மற்றும் *Advice for the Muslim* ஆகிய நூல்களில் உள்ளன. அல்லாஹ் தஆலா எமது மார்க்கப்பற்றுள்ள வாலிபர்களை வஹாபிஸ மதபேதத்தில் வீழ்வதிலிருந்து பாதுகாப்பானாக. பல ஹதீஸ் ஷரீப்களில் புகழப்பட்டுள்ள அஹ்ல் அஸ்ஸுன்னா அறிஞர்களின் நேரான வழியை விட்டு எம்மை விலகாதிருக்கச் செய்வானாக! ஆமின்.

இறைத்தூதர்களை விடவும் உயர்வானவராக இருந்தார். உலுல் அஸ்ம் எனப்படும் இறைத்தூதர்கள் ஏனையவர்களை விடவும் உயர்வானவர்களாக இருந்தனர். ரஸூல்மார்கள் அல்லாத நபிமார்களை விடவும் ரஸூல்மார்கள் உயர்வானவர்களாக இருந்தனர்.

இறைத்தூதர்களின் 'அலைஹிமிஸ் ஸலாம்' எண்ணிக்கை அறியப்படாத ஒன்றாகும். அவர்கள் 124,000 இற்கும் அதிகமாக இருந்தார்கள் என்பது மிகவும் பரவலாக அறியப்பட்ட ஒன்றாகும். அவர்களில் 313 அல்லது 315 பேர் ரஸூல்மார்கள் ஆவர். அவர்களில் உயர்வான ஆறு ரஸூல்மார்கள் உலுல் அஸ்ம் எனப்பட்டனர். அவர்கள்: ஆதம், நூஹ் (நோஹ்), இப்ராஹீம் (அப்ரஹாம்), மூஸா (மோஸஸ்), ஈஸா (ஜீஸஸ்) மற்றும் முஹம்மத் முஸ்தபா 'அலைஹிமுஸ் ஸலாது வஸ்ஸலாம்' ஆகியோராவர்.

கீழ்வரும் முப்பத்தி மூன்று இறைத்தூதர்களும் நன்கு அறியப்பட்டவர்கள் ஆவர்: ஆதம், இத்ரீஸ், ஷீத் (அல்லது ஷிஸ்), நூஹ், ஹூத், ஸாலிஹ், இப்ராஹீம், லூத், இஸ்மாஈல், இஸ்ஹாக், யஃகூப், யூஸுப், அய்யூப், ஷுஐப், மூஸா, ஹாரூன், ஹிழ்ர், யூஷஃ பின் நூன், இல்யாஸ், அல்யஸஃ, துல் கிப்ல், ஷம்உன், இஷ்மொய்ல், யூனுஸ் பின் மதா, தாவுத், ஸுலைமான், லுக்மான், ஸகரிய்யா, யஹ்யா, உஸைர், ஈஸா இப்ன் மர்யம், துல் கர்னைன் மற்றும் முஹம்மத் 'அலைஹிமுஸ் ஸலாது வஸ்ஸலாம்'.

அவர்களில் இருபத்தி ஐந்து பேரின் பெயர்கள் மாத்திரமே குர்ஆன் அல்-கரீமில் எழுதப்பட்டுள்ளன. ஷீத், ஹிழ்ர், யூஷா, ஷம்உன் மற்றும் இஷ்மொய்ல் ஆகிய பெயர்கள் எழுதப்படவில்லை. இருபத்தி எட்டுப் பேருக்கு மத்தியில், துல் கர்னைன், லுக்மான் மற்றும் உஸைர் ஆகியோர் இறைத்தூதர்களா இல்லையா என்பது உறுதியானதல்ல. 'ஹிழ்ர் அலைஹிஸ் ஸலாம்' ஒரு நபி என்பதற்கான ஆதாரபூர்வமான அறிவிப்புகள் உள்ளதாக மக்துரபாத் மஃஸூமிய்யா என்ற நூலின் இரண்டாம் பதிப்பின் முப்பத்தி ஆறாம் கடிதத்தில் எழுதப்பட்டுள்ளது. அத்தோடு, அது என்பத்தி இரண்டாம் கடிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது: ஹிழ்ர் 'அலைஹிஸ் ஸலாம்' மனித தோற்றத்தில் (காலத்துக்குக் காலம்) தோன்றுவார். மேலும் அவர் சில விடயங்களையும் செய்வார் என்பது அவர் உயிருடன் இருப்பதைக் காட்டுவதில்லை. அல்லாஹ் தஆலா ஏனைய பல இறைத்தூதர்கள் மற்றும் வலிமார்களது ஆன்மாவைப் போன்றே அவரது ஆன்மாவுக்கும் மனித தோற்றத்தில் தோன்றுவதற்கான அனுமதியை வழங்கினான். அவர்களைக் காண்பது, அவர்கள் உயிருடன் இருப்பதை நிரூபிப்பதில்லை." துல் கிப்ல் 'அலைஹிஸ் ஸலாம்' ஹர்கில் என்றும் அழைக்கப்படுகின்றார். இல்யாஸ், இத்ரீஸ் மற்றும் ஸகரிய்யா எனவும் அவர் கூறப்பட்டார்.

இப்ராஹீம் 'அலைஹிஸ் ஸலாம்' க்ஹலீல்-அல்லாஹ் ஆவார். ஏனெனில், அவரது உள்ளத்தில் அல்லாஹ் தஆலா மீதான அன்பு மாத்திரமே இருந்தது; எந்தப் படைப்பினங்கள் மீதான நேசமும் இருக்கவில்லை. மூஸா 'அலைஹிஸ் ஸலாம்' கலீம்- அல்லாஹ் ஆவார். ஏனெனில் அவர் அல்லாஹ் தஆலாவுடன் கதைத்தார். ஈஸா 'அலைஹிஸ் ஸலாம்' கலிமத்-அல்லாஹ் ஆவார். ஏனெனில் அவருக்கு தந்தை இருக்கவில்லை. அவர் 'ஆகுக' என்ற கலிமத் அல்- இலாஹிய்யா (இறை வார்த்தை) மூலம் மாத்திரமே பிறந்தார். இன்னும் அவர் இறை ஞானத்தால் நிரம்பிய அல்லாஹ் தஆலாவின் வார்த்தைகளைப் பிரச்சாரம் செய்தார். அவற்றை மக்களின் காதுகளுக்கு எத்தி வைத்தார்.

அனைத்துப் படைப்பினங்களும் படைக்கப்படக் காரணமான முஹம்மத் 'அலைஹிஸ் ஸலாம்' மிகவும் உயர்ந்த, மிகவும் முக்கியமான, மனித குலத்தில் மிகவும் கண்ணியம் வாய்ந்தவராகக் காணப்பட்டார். அவர் ஹபீப்-அல்லாஹ் (அல்லாஹ் தஆலாவின் நேசர்) ஆவார். அவரது மகிமைக்கும் உயர்வுக்கும் சான்று பகரும் பல ஆதாரங்கள் இருந்தன. இதன் காரணமாக, 'வெற்றி கொள்ளப்பட்டார்' அல்லது 'தோல்வி அடைந்தார்' என்ற வார்த்தைகளால் அவரைப் பற்றி கூற முடியாது. மீளெழுப்பும் தினத்தில், அனைவருக்கும் முன்பு அவர் அவரது மண்ணறையிலிருந்து எழுவார். அவர்தான் தீர்ப்பளிக்கும் இடத்திற்கு முதலாவது செல்வார். அவர்தான் அனைவருக்கும் முன்பு முதலாவது சுவர்க்கம் செல்வார். அவரது ஆளுமையில் அழகான குணாம்சங்கள் இருந்த போதும் அவற்றை எண்ணிச் சமப்படுத்தவோ மனித சக்தியால் அவற்றைக் கணக்கிடவோ முடியாது. நாம் எமது நூலை அவற்றில் சிலதை எழுதுவதன் மூலம் அலங்கரிப்போம்:

அவரது அற்புதங்களில் ஒன்றுதான், அவரது மிஃராஜ் பயணமாகும்: அவர் மக்கா அல்-முகர்ரமாவில் கட்டிலின் மீது இருந்த வேளை, அவர் எழுப்பப்பட்டு, அவரது பாக்கியமிக்க உடல் ஜெருஸலத்தில் (குத்ஸ்) உள்ள அக்ஸா பள்ளிவாயலுக்கு அழைத்துச் செல்லப்பட்டது, அதன்பிறகு வானலோகத்திற்கும் ஏழாம் வானத்திற்குப் பிறகு அல்லாஹ் தஆலா தீர்மானித்த அந்த இடத்திற்கும் அழைத்துச் செல்லப்பட்டது.

நாம் மிஃராஜை இந்த அமைப்பில் நம்ப வேண்டும்.[1] மிஃராஜ் எவ்வாறு நிகழ்ந்தது என்பது பல நூல்களில் விரிவாக எழுதப்பட்டுள்ளன. குறிப்பாக, ஷிபாஇ ஷரீப் இல் உள்ளது.[2] அவரும் ஜிப்ராஈல் 'அலைஹிஸ் ஸலாம்' உம் மக்காவிலிருந்து ஆறாம் மற்றும் ஏழாம் வானத்திலுள்ள ஒரு மரமான ஸித்ரத் அல்-முன்தஹா இற்குச் சென்றார்கள். எந்த அறிவும் எந்த ஏறுதலும் அதனை விட மேலே செல்ல முடியாது. ஸித்ராவில், ரஸூலுல்லாஹ் 'அலைஹிஸ் ஸலாம்' ஜிப்ராஈல் 'அலைஹிஸ் ஸலாம்' இன் அறுநூறு இறக்கைகளுடன் கூடிய சுய தோற்றத்தைக் கண்டார். ஜிப்ராஈல் 'அலைஹிஸ் ஸலாம்' ஸித்ராவில் தங்கி விட்டார். மக்காவிலிருந்து ஜெருஸலத்திற்கும், அல்லது ஏழு வானங்களுக்கும் ரஸூலுல்லாஹ் 'அலைஹிஸ் ஸலாம்' புராக் இன் மீதே அழைத்துச் செல்லப்பட்டார். அது ஒரு மிக வேகமான, வெள்ளை நிற, பாலற்ற உலகத்தில் இல்லாத சுவர்க்கத்தின் மிருகமாகும். ஒரு கோவேறுக் கழுதையை விட சிறியதாகவும், ஒரு கழுதையை விடப் பெரியதாகவும் அது இருந்தது. கண் எட்டும் தூரத்திற்கு அப்பாற்பட்ட எட்டுக்களை அது வைத்தது. அக்ஸா பள்ளிவாயலில் ரஸூலுல்லாஹ் 'அலைஹிஸ் ஸலாம்' அவர்களும் ஏனைய இறைத்தூதர்களும் ஜமாஅத்தாகத் தொழுதார்கள். ரஸூலுல்லாஹ் இமாமாக இருந்து தொழுகை நடாத்தினார். அது ஒரு இரவுத் தொழுகையாக அல்லது காலை நேரத் தொழுகையாக இருந்தது. இறைத்தூதர்களின் ஆன்மாக்கள் அவர்களது சொந்த உருவத்தில் அங்கே சமூகமளித்தன. ஜெருஸலத்திலிருந்து ஏழாம் வானம் வரை அவர் அறியப்படாத, மிஃராஜ் எனப்படும் ஒரு ஏணியின் மூலம் மேலே உயர்த்தப்பட்டார். வழியில், வானவர்கள் வலது புறமும் இடது புறமும் வரிசையாக நின்று அவரைப் புகழ்ந்து பாராட்டினார்கள். ஒவ்வொரு வானத்திலும் ஜிப்ராஈல் 'அலைஹிஸ் ஸலாம்', ரஸூலுல்லாஹ் 'அலைஹிஸ் ஸலாம்' அவர்களின் வருகையின் சுப செய்தியை அறிவித்தார். ஒவ்வொரு வானத்திலும் அவர் ஒரு இறைத்தூதரைக் கண்டு அவருக்கு வாழ்த்துக் கூறினார். ஸித்ராவில், அவர் பல அதிசயமான விடயங்களைக் கண்டார். சுவர்க்கத்தின் அருள்களையும் நரகத்தின் தண்டனையையும் அவர் கண்டார். அவர் அல்லாஹ் தஆலாவின் ஜமாலைக் காண்பதன் ஆனந்தத்தையும் விருப்பத்தையும் தவிர சுவர்க்கத்தின் ஏனைய அருள்களைக் கவனிக்கவில்லை. ஸித்ராவிற்கு அப்பால், நூர்கள் (ஒளிகள்) இற்கு மத்தியில் அவர் தனியாக முன்னே சென்றார். அவர் வானவர்களின் பேனைகளின் ஓசைகளைச் செவிமடுத்தார். அவர் ஏழுபது ஆயிரம் திரைகளைக் கடந்து சென்றார். இரண்டு திரைகளுக்கும் இடையேயான தூரம் ஐநூறு வருடங்கள் தூரமளவு நீண்டதாக இருந்தது. இதன் பின்னர், சூரியனை விடவும் பிரகாசமான ரப்ரப் என்ற கட்டிலின் மீதிருந்து, குர்ஸீ ஊடாகச் சென்று அர்ஷ் ஐ அடைந்தார். அவர் அர்ஷிற்கு அப்பால் சென்றார். நேரம், இடம் மற்றும் பொருள் ஆகியவற்றின் உலகைக் கடந்து அவர் சென்றார். அல்லாஹ் தஆலாவின் பேச்சைக் கேட்கும் கட்டத்தை அவர் அடைந்தார்.

புரிந்து கொள்ளவோ அல்லது விபரிக்கவோ முடியாத அமைப்பில் அவர் அல்லாஹ் தஆலாவைக் கண்டார். நேரம், இடம் இல்லாத நிலையில் மறுமையில் அல்லாஹ் தஆலா காட்சியளிப்பதை ஒத்ததாக அது இருந்தது. எழுத்துக்களோ சப்தங்களோ இன்றி அவர் அல்லாஹ் தஆலாவுடன் கதைத்தார். அவர் அவனை மகிமைப்படுத்தி, புகழ்ந்து பாராட்டினார்.

---

[1] இஸ்மாஈலி மதபேதகர்களும் இஸ்லாத்தின் எதிரிகளும் இஸ்லாமிய அறிஞர்களைப் போன்று வேடமணிந்து, மிஃராஜ் என்பது வானலோகத்திற்கான பௌதீகப் பயணமல்ல, மாறாக ஆன்மீகப் பயணம் (ஹால்) என்று கூறுவதன் மூலம் இளைஞர்களை வழிகெடுக்க முயற்சிக்கின்றனர். நாம் அத்தகைய மோசமான நூல்களை வாங்கக் கூடாது. அவர்கள் எம்மை வழிகெடுக்க நாம் அனுமதிக்கக் கூடாது.

[2] ஷிபாஇ இன் ஆசிரியர், காழி இயாழ் அல்-மாலிகி, ஹி.544 [கி. பி 1150] இல் மொரோக்கோவில் வபாத்தானார்.

எண்ணற்ற பரிசுகளும் கண்ணியங்களும் அவருக்கு வழங்கப்பட்டன. அவரும் அவரது உம்மாவும் (முஸ்லிம்களும்) தினமும் ஐவேளைத் தொழுகையை நிறைவேற்றுமாறு கட்டளையிடப்பட்டனர். எனினும், அன்றாடம் நிறைவேற்றும் தொழுகைகளின் எண்ணிக்கை கட்டம் கட்டமாகக் குறைக்கப்பட்டு, மூஸா 'அலைஹிஸ் ஸலாம்' அவர்களின் இடையீட்டுடன் ஐந்தாகக் குறைக்கப்பட்டது. இதற்கு முன்னர், தொழுகையானது காலை, பகல் வேளை அல்லது இரவு ஆகிய நேரங்களில் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டு வந்தது. பரிசுகளையும் அருட்கொடைகளையும் பெற்றுக் கொண்ட, திகைக்க வைக்கும் பல்வேறு விடயங்களைக் கண்ட, கேட்ட இத்தகைய ஒரு நீண்ட பயணத்தின் பின்னர், உஷ்ணத்தை இன்னும் இழந்திருக்காத அவரது கட்டிலுக்கு அவர் மீண்டார். நாம் மேலே எழுதியவை ஆயத்களிலிருந்தும் ஹதீஸ்களிலிருந்தும் பகுதியளவில் புரிந்து கொள்ளப்பட்டவை. அனைத்தையும் நம்புவது வாஜிப் அல்ல. இருப்பினும், அஹ்ல் அஸ்-ஸுன்னா அறிஞர்கள் குறிப்பிட்டிருக்கும் இந்த உண்மைகளை மறுக்கும் மக்கள் அஹ்ல் அஸ்-ஸுன்னாவிலிருந்து பிரிந்து விடுவார்கள். அத்துடன் யார் ஒரு ஆயத்தை அல்லது ஒரு ஹதீஸை மறுக்கின்றாரோ அவர் இறை நிராகரிப்பாளராக மாறுகின்றார்.

முஹம்மத் 'அலைஹிஸ் ஸலாம்' அவர்கள்தான் இறைத்தூதர்களுக்கு 'அலைஹிமுஸ் ஸலாது வ தஸ்லீமாத்' தலைவர் (ஸெய்யித் அல்-அன்பியா) என்பதைக் காட்டும் எண்ணிலடங்காத ஆதாரங்களில் சிலவற்றைப் பார்ப்போம்.

இறுதித் தீர்ப்பு நாளில் அனைத்து இறைத்தூதர்களும் அவரது பதாகையின் நிழலில்தான் தஞ்சமடைந்திருப்பார்கள். படைப்பினங்களுக்கு மத்தியில் அவன் தேர்ந்தெடுத்த நேசர் முஹம்மத் 'அலைஹிஸ் ஸலாம்'அவர்களது காலம் வரை இறைத்தூதர்கள் 'அலைஹிமுஸ் ஸலாம்', தொடர்ந்து வாழ்ந்திருந்தால், கட்டாயம் அவரை நம்பி, அவருக்கு உதவியாளராக இருக்க வேண்டுமென அவர்கள் அனைவருக்கும் அல்லாஹ் தஆலா கட்டளையிட்டிருப்பான். அத்தோடு, அனைத்து இறைத்தூதர்களும் தமது உம்மத்களுக்கு இதே விடயத்தையே தமது இறுதி வேண்டுகோளில் ஏவினார்கள்.

முஹம்மத் 'அலைஹிஸ் ஸலாம்' க்ஹாதம் அல்-அன்பியா (இறுதி இறைத்தூதர்) ஆவார். அதாவது, அவரைத் தொடர்ந்து எந்த இறைத்தூதரும் வர மாட்டார். அவரது பாக்கியமிக்க ஆன்மா அனைத்து இறைத்தூதர்களுக்கும் முன்பே படைக்கப்பட்டது. நுபுவ்வா அந்தஸ்து முதலில் அவருக்கே வழங்கப்பட்டது. உலகை கண்ணியப்படுத்தும் அவரது வருகையால் நுபுவ்வா நிறைவடைந்தது. உலக முடிவு வரை, ஹஸ்ரத் மஹ்தியின் காலத்தில், ஈஸா 'அலைஹிஸ் ஸலாம்' வானத்திலிருந்து டமஸ்கஸில் இறங்கி, முஹம்மத் 'அலைஹிஸ் ஸலாம்' அவர்களின் உம்மாவில் இணைந்து, பூமியில் இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்வார்கள்.

[ஹிஜ்ரி வருடமான 1296 [கி. பி 1880] இல் பிரித்தானியாவால் இந்தியாவில் ஒழுங்கு செய்யப்பட்ட மதபேத மக்களான காதியானிகள் அல்லது அஹ்மதிகள் ஈஸா 'அலைஹிஸ் ஸலாம்' பற்றியும், அவதூறு கலந்த பொய்களைக் கூறுகின்றனர். அவர்கள் தம்மை முஸ்லிம்கள் என்று வாதாடினாலும், அவர்கள் எம்முள் இருந்து கொண்டே இஸ்லாத்தை அழிக்க முயற்சிக்கின்றனர். அவர்கள் முஸ்லிம்களல்ல என்று பிரகடனப்படுத்தி ஒரு பத்வா வெளியிடப்பட்டுள்ளது.

ஸின்தீக்களின் இன்னொரு மதபேதக் குழுதான் இந்தியாவில் தோன்றிய ஜமாஅதுத் தப்லீஃகிய்யா[1] என்ற குழுவாகும். அவர்களது பிரிவு முதலாவதாக ஹி.1345 [கி.பி 1926] இல் அறிவீனரான இல்யாஸ் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. "முஸ்லிம்கள் நேரான வழியிலிருந்து விலகி விட்டதாக" அவர் வலியுறுத்திக் கூறினார். அத்துடன், அவருக்கு ஒரு கனவு ஏற்பட்டதாகவும் அதில், இந்தப் பிறழ்விலிருந்து பாதுகாப்பதற்கு தனக்கு இறை கட்டளை வழங்கப்பட்டதாகவும் கூறினார். அவர் தனது ஆசான்களான நஸீர் ஹுஸைன், ராஷித் அஹ்மத் கன்குஹி மற்றும் க்ஹலீல் அஹ்மத் ஸெஹாரன்பூரி போன்ற அவர் போன்ற மதபேத போக்குள்ளவர்கள் எழுதிய புத்தகங்களைக் கற்றுத்

[1] தயவு செய்து *Endless Bliss* இன் இரண்டாம் பாகத்தின் முப்பத்தி ஆறாம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

தேர்ந்ததாக அவர் கூறினார். அவர்கள் முஸ்லிம்களை வழிகெடுக்க, பயன்படுத்தும் சூழ்ச்சியாக, "எப்போதும் தொழுகையினதும் ஜமாஅத்தினதும் மாண்பைப் பேசுவது" உள்ளது. எனினும், உண்மை யாதெனில், மதபேதகர்களால் நிறைவேற்றப்படும் எந்தத் தொழுகையும் ஏனையவையும் அவர்கள் அஹ்ல் அஸ்-ஸுன்னத் பிரிவினராக இல்லாதவரை ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. முதலாவது, அந்த மக்கள் செய்ய வேண்டியது யாதெனில், (உண்மையான) இஸ்லாமிய அறிஞர்களால் எழுதப்பட்ட நூல்களை வாசித்து, மதபேத நம்பிக்கைகளிலிருந்து தம்மை நீக்கிக் கொண்டு, உண்மை முஸ்லிம்களாக மாறுவதாகும். குர்ஆன் அல்-கரீமிலுள்ள மறைவான கருத்துக்களுள்ள ஆயத்களுக்குப் பிழையாக விளக்கமளிக்கும் மக்கள், பித்அத்துக்குரிய மக்கள், அல்லது மதபேதவாதிகள் எனப்படுகின்றனர். அத்தகைய ஆயத்களுக்கு தமது மோசடியான, மதபேத சிந்தனைகளுக்குப் பொருத்தமான கருத்துக்களை வழங்குகின்ற இஸ்லாத்தின் எதிரிகள் ஸின்திக்கள் எனப்படுகின்றனர். இவற்றை செய்வதால் இந்த மக்கள் குர்ஆன் அல்-கரீமையும் இஸ்லாத்தையும் மாற்ற முயற்சிக்கின்றனர். இந்த மதபேதங்களை உருவாக்கி அவற்றைப் போசிக்கின்ற உண்மையான மிகப்பெரிய எதிரி பிரித்தானியாவாகும். இந்த இழிவான நோக்கங்களுக்காக அவர்கள் பில்லியன்களை செலவிடுகின்றனர். தப்லீஃக் ஜமாஅத்தின் உறுப்பினர்கள், பிரித்தானிய இறை நம்பிக்கையற்றோரால் அமைக்கப்பட்ட பொறிகளில் வீழ்ந்த வெறும் அறிவற்ற தாழ்ந்த கருவிகள் ஆவர். அவர்கள் தம்மை ஸுன்னிகள் என்று கூறிக் கொண்டும், தமது அன்றாடத் தொழுகைகளை நிறைவேற்றிக் கொண்டும் பொய்யுரைத்துக் கொண்டும், முஸ்லிம்களை வழிகெடுக்க உழைக்கின்றனர். இந்த மக்கள் பள்ளிவாயல் தூபியின் உச்சியில் கட்டப்பட்ட பறவைக் கூட்டைப் போன்றவர்கள். அவர்கள் நரகத்தின் அதள பாதாளங்களில் நிரந்தரமான நெருப்பில் இருப்பார்கள். பெரிய தலைப்பாகைகளை அணிந்து, தமது தாடியை நீளமாக வளர்த்து, ஜுப்பா எனப்படும் தமது நீண்ட மேலங்கியைப் போட்டு, ஆயத் கரீமாக்களை வாசித்து அல்லது ஓதி பின்னர் அவற்றைத் தவறாக விளக்குவது இந்த மக்கள் தமது கொடிய நிகழ்ச்சிகளில் முஸ்லிம்களை வழிகெடுக்கக் கையாளும் தந்திரங்களில் ஒன்றாகும். எனினும் ஒரு ஹதீஸ் ஷரீப் பின்வருமாறு கூறுகிறது: "இன்னல்லாஹ லூ யன்ழுரு இலா ஸுவரிகும் வ ஸியாபிகும் வ லாகின் யன்ழுரு இலா குலூபிகும் வ நிய்யாதிகும்," இதன் பொருள்: "அல்லாஹு தஆலா உங்களது தோற்றத்தையோ உடைகளையோ பார்பதில்லை, மாறாக உங்களது உள்ளங்களையும் எண்ணங்களையுமே அவன் பார்க்கின்றான்." ஓர் ஈரடித்தொகுதி வருமாறு:

கட்-டு புலான்ட் டாரெட், டெஸ்டர் பாரா, பாரா.

ஷுன் ஆஷியானி லக்லக், பெர் கல்லா-மினாரா.

ஏனெனில், இந்த மக்கள், ஹகீகத் கிதாபவியினால் வெளியிடப்பட்ட புத்தகங்களுக்குப் பதிலளிக்க முடியாதுள்ளனர். அது இந்த அறிவற்ற மூடர்கள் பொய்யர்கள் என்பதை நிரூபிக்கின்றது. "ஹகீகத் கிதாபவியினால் வெளியிடப்படும் நூல்கள் பிழையான, மதபேதங்கள். அந்த நூல்களை வாசிக்கக் கூடாது" என அவர்கள் கூறுகின்றனர். மதபேதத்தையும் இஸ்லாத்தின் எதிரிகளான ஸின்திக்களையும் கண்டுபிடிக்க உள்ள மிகத் தெளிவான அறிகுறி அஹ்ல் அஸ்-ஸுன்னத் அறிஞர்களை மதபேதத்தைக் கொண்டு களங்கப்படுத்தி, அவர்களது போதனைகளை மக்கள் மயப்படுத்தும் நூல்களை வாசிப்பதை விட்டும் விலக்கி, மக்களைத் திசைதிருப்புவதாகும். எமது (துருக்கிய) நூலான பாஇதெலி பில்கிலர் (பயனுள்ள தகவல்) இந்த மக்கள் இஸ்லாத்திற்கு ஏற்படுத்தும் தீங்குகளை விரிவாக விபரிப்பதுடன் அஹ்ல் அஸ்-ஸுன்னத் அறிஞர்களால் அவர்களுக்கு வழங்கப்பட்ட பதில்களையும் மேற்கோளிடுகின்றது.[1]]

முஹம்மத் 'அலைஹிஸ் ஸலாம்' அவர்கள்தான் இறைத்தூதர்களில் மிக உயர்ந்தவரும் சகல படைப்பினங்கள் மீதான அல்லாஹு தஆலாவின் கிருபையும் ஆவார். எட்டாயிரம் ஆலம்கள் (படைப்பினங்களின் உலகங்கள்) அவரது அருள்களின் சமுத்திரத்திலிருந்து பயனடைகின்றன. (இஸ்லாமிய அறிஞர்களின்) ஒருமித்த கருத்தின்படி அவர்தான் அனைத்து மனிதர்கள் மற்றும்

[1] தயவு செய்து ஆங்கிலத்திலுள்ள எமது ஏனைய வெளியீடுகளைப் பார்க்கவும். குறிப்பாக, *The Sunni Path, Endless Bliss, Belief in Islam* இன் ஆறாம் பாகம், மற்றும் *Documents of the Right Word*

ஜின்களின் இறைத்தூதர். அவர்தான் வானவர்கள், தாவரங்கள், மிருகங்கள் மற்றும் சகல பொருட்களுக்குமான இறைத்தூதர் என பல (அறிஞர்கள்) கூறியுள்ளனர். அடுத்த இறைத்தூதர்கள் குறிப்பிட்ட நாடுகளின் குறிப்பிட்ட கோத்திரங்களுக்கு அனுப்பப்பட்ட வேளை, ரஸூலுல்லாஹ் 'அலைஹிஸ் ஸலாம்' சகல உலகங்களுக்கும் சகல உயிருள்ள, உயிரற்ற படைப்பினங்களுக்கும் இறைத்தூதராக அனுப்பப்பட்டார்கள். அல்லாஹு தஆலா அடுத்த இறைத்தூதர்களை அவர்களது பெயர்களைக் கொண்டு விழித்தான். முஹம்மத் 'அலைஹிஸ் ஸலாம்' அவர்களை "எனது தூதரே (ரஸூல்)!" என்பதாக விழித்து, நேசத்தை வெளிப்படுத்தினான். ஒவ்வொரு இறைத்தூதருக்கும் வழங்கப்பட்ட அற்புதங்கள் அனைத்தும் போன்று அவருக்கு வழங்கப்பட்டது. அல்லாஹு தஆலா தனது அன்புத் தூதருக்கு ஏனைய இறைத்தூதர்களுக்கு வழங்கியதை விட அதிகமான பரிசுகளையும் அற்புதங்களையும் வழங்கி அருளினான். அவர் எண்ணற்ற கண்ணியங்களுடனும் மேன்மைகளுடனும் கூடிய, அனைத்து இறைத்தூதர்களையும் விட உயர்ந்த நிலை வழங்கப்பட்டார்: அவர் தனது பாக்கியமிக்க விரலைக் கொண்டு சமிக்ஞை காட்டிய போது சந்திரன் இரண்டாகப் பிளந்தது. அவரது உள்ளங்கையில் வைத்து கற்கள் அல்லாஹ்வின் பெயரை உச்சரித்தன. மரங்கள், "ரஸூலுல்லாஹ்வே" என்று கூறி அவரை வாழ்த்தின. ஹன்னானா என்ற காய்ந்த மரக்குற்றி, ரஸூலுல்லாஹ் 'அலைஹிஸ் ஸலாம்' அதனைத் தனியே விட்டு விட்டு விலகிச் சென்றபோது அழுதது. அவரது பாக்கியமிக்க விரல்களின் நடுவே இருந்து தூய நீர் வடிந்தோடியது. உயர் அந்தஸ்துகளான, அல்-மகாம் அல்-மஹ்மூத், அஷ்-ஷிபாஅத் அல்-குப்ரா, அல்-ஹவ்ழ் அல்-கவ்ஸர், அல்-வஸீலா மற்றும் அல்-பழீலா என்பன அவருக்கு மறுமையில் வழங்கப்படுவதாக வாக்களிக்கப்பட்டுள்ளது. சுவர்க்கத்தில் நுழைய முன்னரே அல்லாஹு தஆலாவின் ஜமாலைக் காணும் கண்ணியம் அவருக்குக் கிடைத்தது. உலகிலேயே மிகவும் அழகான நற்குணங்களும் மிகவும் முழு நிறைவான நம்பிக்கையும் அறிவும் மென்மையும் பொறுமையும் நன்றியுணர்வும் ஸுஹ்தும்[1] கற்பொழுக்கமும் நேர்மையும் வீரமும் நாணமும் துணிச்சலும் வெட்கமும் ஞானமும் நற்பண்புகளும் உதவும் தன்மையும் அன்பும் வற்றாத மாண்புகளும் மாண்புமிகு குணாம்சங்களும் அவரிடம் காணப்பட்டன. அவருக்கு வழங்கப்பட்ட அற்புதங்களின் எண்ணிக்கையை அல்லாஹு தஆலா தவிர வேறு எவரும் அறிய மாட்டார்கள்.

அவரது மார்க்கம் அதற்கு முன்னர் இருந்த ஏனைய அனைத்து மார்க்கங்களையும் ரத்து செய்தது.[2] அவரது மார்க்கமே அனைத்து மார்க்கங்களிலும் மிகச் சிறந்தது மற்றும் உயர்வானது. அவரது உம்மாதான் ஏனைய அனைத்து உம்மாக்களையும் விட உயர்வானது. அவரது உம்மாவிலுள்ள அவ்லியாக்கள்தான் ஏனைய உம்மாக்களிலுள்ள அவ்லியாக்களை விட அதிகம் கண்ணியத்துக்குரியவர்கள்.

முஹம்மத் 'அலைஹிஸ் ஸலாம்' அவர்களின் உம்மாவிலுள்ள அவ்லியாக்களுக்கு மத்தியில், அவரது (ஆரம்ப) கலீபாவாகத் தகுதி பெற்ற அபூ பக்ர் அஸ்-ஸித்தீக் 'ரழியல்லாஹு தஆலா அன்ஹ்' உள்ளார். அவர் அவ்லியாக்களாலும் இமாம்களாலும் மிகவும் நேசிக்கப்பட்டவர்; கலீபாவாக ஏனையவர்களை விட மிகவும் பொருத்தமானவர். இதுவரை வந்த மற்றும் வரவிருக்கும் சகல மனிதர்களிலும், இறைத்தூதர்களின் பிறகு, அவர்தான் மிக உயர்ந்தவரும் மகத்துவம் வாய்ந்தவரும் ஆவார். கலீபா என்ற அந்தஸ்தையும் கண்ணியத்தையும் பெற்ற முதலாமவர் அவர்தான். அல்லாஹு தஆலாவின் நேசம் மற்றும் அருளின் காரணமாக, அவர் இஸ்லாம் தோன்றுவதற்கு முன்பு கூட எந்த விக்கிரகங்களையும் வணங்கியதில்லை. அவர் இறை நிராகரிப்பு மற்றும் மதபேதம் ஆகிய குறைபாடுகளை விட்டும் பாதுகாக்கப்பட்டார்.[3]

---

[1] உலக இன்பங்கள் மற்றும் சுவைகளை விட்டும் விலகியிருத்தல்

[2] (அதுதான் இறுதி மார்க்கம் என்பதனை சொல்லத் தேவையில்லை)

[3] அபூ பக்ர் அஸ்-ஸித்தீக் 'ரழியல்லாஹு தஆலா அன்ஹு' பற்றிய இந்தக் கூற்றின் மூலம், ரஸூலுல்லாஹ் 'அலைஹிஸ் ஸலாம்' தனது நுபுவ்வாவிற்கு முன்னர் சிலைகளை வணங்கினார் என்று கருதும் மக்கள் எவ்வளவு அறியாமையிலும் அற்பத்தனத்திலும் உள்ளனர் என்பதனை இப்போது புரிந்து கொள்ள முடியும்.

அவரின் பிறகு, மனிதர்களில் மிகவும் உயர்ந்தவர், இரண்டாவது கலீபாவான உமர் இப்ன் அல்-கத்தாப் 'ரழியல்லாஹு தஆலா அன்ஹ்' ஆவார். அவர் அல்லாஹு தஆலாவால் அவனது அன்புத் தூதரின் நண்பராகத் தெரிவு செய்யப்பட்டவர்.

அவரின் பின்னர், மனிதர்களில் மிகவும் உயர்ந்தவர், ரஸூலுல்லாஹ் 'அலைஹிஸ் ஸலாம்' அவர்களின் மூன்றாவது கலீபாவான, துன் நூரைன் உஸ்மான் இப்ன் அப்பான் 'ரழியல்லாஹு தஆலா அன்ஹ்' ஆவார். அவர் நலவுகளினதும் அருள்களினதும் பொக்கிஷமாவார். அத்துடன் வெட்கம், நம்பிக்கை, ஆன்மீக அறிவு ஆகியவற்றின் மூலாதாரமாவார்.

அவரின் பிறகு, மனிதர்களில் மிகவும் மகத்துவம் வாய்ந்தவர், ரஸூலுல்லாஹ் 'அலைஹிஸ் ஸலாம்' அவர்களின் நான்காவது கலீபாவான, அலி இப்ன் அபீ தாலிப் 'ரழியல்லாஹு தஆலா அன்ஹ்' ஆவார். அவர் வியக்கத்தக்க மகத்துவங்களின் சொந்தக்காரரும் அல்லாஹு தஆலாவின் சிங்கமுமாவார்.

ஹஸ்ரத் ஹஸன் இப்ன் அலி 'ரழியல்லாஹு தஆலா அன்ஹும்'[1] அவரைத் தொடர்ந்து கலீபாவானார். ஹதீஸ் ஷரீபில் குறிப்பிடப்பட்டுள்ள கலீபாக்களின் முப்பது வருடங்கள் அவருடன் பூர்த்தியானது. அவரின் பின்னர், மனிதர்களில் மிக உயர்ந்தவர் ஹஸ்ரத் ஹுஸைன் இப்ன் அலி 'ரழியல்லாஹு தஆலா அன்ஹும்' ஆவார். அவர் ரஸூலுல்லாஹ் 'அலைஹிஸ் ஸலாம்' அவர்களின் கண்களில் ஒளியாவார்.

இந்த உயர்வுகள் அவர்கள் சம்பாதித்த அதிகளவான ஸவாப்களின் அடிப்படையில் கிடைத்தவையாகும்; அவர்கள் இஸ்லாத்திற்காக தமது நாட்டையும் அன்புக்குரியவர்களையும் துறந்தவர்கள். அடுத்தவர்களுக்கு முன்பு முஸ்லிம்களாக மாறியவர்கள். ரஸூலுல்லாஹ் 'அலைஹிஸ் ஸலாம்' அவர்களை ஏற்று, மிக உயர்ந்த அந்தஸ்தை எட்டியவர்கள்; தம்மை அவரது ஸுன்னாவிற்காக வழங்கியவர்கள்; இறை நிராகரிப்பையும் பித்னாவையும் சீர்கேடுகளையும் தடுத்து, அவரது மார்க்கம் பரவலடையப் போராடியவர்கள்.

ஹஸ்ரத் அலி 'ரழியல்லாஹு தஆலா அன்ஹு', அபூபக்ர் 'ரழியல்லாஹு தஆலா அன்ஹு' தவிர்த்து, அடுத்த அனைவருக்கும் முன்பே இஸ்லாத்தைத் தழுவினார். இருப்பினும், ஒரு சிறுவராகவும் எந்த சொத்துக்களும் அற்றவராகவும் இருந்த அவர், ரஸூலுல்லாஹ் 'அலைஹிஸ் ஸலாம்' அவர்களின் வீட்டில் அவருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தார். எனவே, அவர் இஸ்லாத்தைத் தழுவியமை, அவரை முன்மாதிரியாகக் கொண்டு இறை நம்பிக்கையற்றவர்கள் இஸ்லாத்தைத் தழுவவோ அல்லது அவர்கள் தோற்றுப் போகவோ காரணமாக அமையவில்லை. இன்னொரு வகையில் கூறினால், அடுத்த மூன்று கலீபாக்களும் இஸ்லாத்தைத் தழுவியமை இஸ்லாத்தைப் பலப்படுத்தியது. ஏனெனில் ஹஸ்ரத் அலியும் அவரது மகன்களும் 'ரழியல்லாஹு தஆலா அன்ஹும்' ரஸூலுல்லாஹ் 'அலைஹிஸ் ஸலாம்' அவர்களின் நெருங்கிய உறவினர்களாகவும் அவர்களது பாக்கியமிக்க இரத்தமாகவும் இருந்தனர். அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் மற்றும் ஹஸ்ரத் உமர் ஆகியோரை விட உயர்வானவர்கள் என்று கூறப்பட முடியும். ஆனால் அவர்களது உயர்வு எல்லா வகையிலும் உயர்ந்ததல்ல, இந்த மிகப் பெரிய மனிதர்களை எந்த வழியிலும் விஞ்சுவதற்கு அது அவர்களுக்கு உதவவில்லை. அது ஹிழ்ர் 'அலைஹிஸ் ஸலாம்' மூஸா 'அலைஹிஸ் ஸலாம்' அவர்களுக்கு சிலவற்றைக் கற்பித்ததற்கு ஒத்ததாகும்.[2] ஹஸ்ரத் கதீஜா மற்றும் ஹஸ்ரத் ஆயிஷா அவர்களை விட ஹஸ்ரத் பாதிமா 'ரழியல்லாஹு தஆலா அன்ஹுன்ன' உயர்ந்தவராக இருந்தார். ஏனெனில் அவர் இறைத்தூதரின் இரத்த உறவில் மிக நெருக்கமானவராக இருந்தார். ஆனால் ஒரு வகையான உயர்வு எல்லா வகையிலும் உயர்வைக் காட்ட முடியாது. இஸ்லாமிய அறிஞர்கள்,

---

[1] ஹஸன் பின் அலி [கி. பி 669] இல் மதீனா முனவ்வராவில் வைத்து நஞ்சூட்டப்பட்டு கொல்லப்பட்டார்.

[2] இரத்த உறவு என்பதுதான் உயர்வை அளவிடும் ஒரேயொரு அளவு கோளாக இருப்பின், ஹஸ்ரத் அப்பாஸ் ஹஸ்ரத் அலியை விட உயர்வானவராக இருந்திருக்க வேண்டும். மாத்திரமன்றி, இரத்த உறவில் மிக நெருக்கமான அபூ தாலிப் மற்றும் அபூ லஹப் ஆகியவர்கள் ஒரு தாழ்ந்த இறை நம்பிக்கையாளருக்கு உள்ள உயர்வையும் கண்ணியத்தையும் கூட பெறவில்லை.

இவர்களில் யார் மிகவும் உயர்ந்தவர் என்ற விடயத்தில் ஒருவரை மற்றவர் முரண்பட்டு, கூற்றுக்களைக் கூறியுள்ளனர். ஹதீஸ் ஷரீபிலிருந்து புரிந்து கொண்டதைப் போன்று, இந்த மூவரும், ஹஸ்ரத் மர்யம் அவர்களும் பிர்அவ்னின் மனைவியான ஹஸ்ரத் ஆஸியா அவர்களும் உலகப் பெண்களிலேயே மிகவும் உயர்வான ஐவர் ஆவார்கள். "சுவனத்தின் பெண்களில் மிக உயர்ந்தவர் பாதிமா ஆவார். சுவனத்து இளைஞர்களில் மிக உயர்ந்தவர்கள் ஹஸன் மற்றும் ஹுஸைன் ஆவார்கள்" என்ற ஹதீஸ் ஷரீப், ஒரு வகையான உயர்வை மாத்திரமே குறிப்பிடுகின்றது.

ஸஹாபத் அல்-கிராம்களில் (இறைத்தூதரின் தோழர்களில்) அடுத்த மிக உயர்ந்த தரத்திலுள்ளவர்கள், அல்-அஷரத் அல்-முபஷ்ஷரா எனப்படும் சுவர்க்கம் (செல்வது) பற்றிய நன்மாராயம் கிடைக்கும் பாக்கியம் பெற்ற பத்து நபர்கள் ஆவர். அவர்களின் பின்னர், முஸ்லிம்களில் மிக உயர்வானவர்கள், புனித பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்ட 313 முஸ்லிம்களாவர். அடுத்தது, புனித உஹத் யுத்தத்தில் கலந்து கொண்ட 700 துணிச்சல் மிக்க முஸ்லிம்களாவர். அவர்களை அடுத்து, பைஅத் அர்-ரிழ்வான் எனப்படும், ரஸூலுல்லாஹ்வை விசுவாசித்து, மரத்தின் கீழாலிருந்து சத்தியாப்பிரமாணம் செய்த 1400 முஸ்லிம்கள் ஆவர்.

ஸஹாபத் அல்-கிராம் 'ரழியல்லாஹு தஆலா அன்ஹும் அஜ்மஈன்' ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்களுக்காக தமது உயிர்களையும் செல்வங்களையும் அர்ப்பணித்து, துணை நின்றனர். அவர்களில் எந்த ஒருவரது பெயரையும் மரியாதையுடனும் அன்புடனும் குறிப்பிடுவது எம்மீது (வாஜிப்) கடமையாகும். அவர்களது மகத்துவத்துக்குப் பொருந்தாத வார்த்தைகளைக் கூறுவது அனுமதிக்கத்தக்கதல்ல. அவர்களது பெயர்களை அகௌரவப்படுத்தும் விதமாகக் குறிப்பிடுவது மதபேதச் செயலாகும்.

யார் ரஸூலுல்லாஹ் 'அலைஹிஸ் ஸலாம்'அவர்களை நேசிக்கின்றாரோ, அவர் அவர்களது அனைத்து ஸஹாபா (தோழர்களையும்) நேசிப்பது அவசியமாகும். "யார் எனது ஸஹாபாவை நேசிக்கின்றாரோ அவர் என்னை நேசிப்பதால் அவர்களை நேசிக்கிறார். யார் அவர்களை நேசிப்பதில்லையோ அவர் என்னை நேசிப்பதில்லை. யார் அவர்களை துன்பப்படுத்துகின்றாரோ அவர் என்னைத் துன்பப்படுத்துகிறார். யார் என்னைத் துன்பப்படுத்துகின்றாரோ அவர் அல்லாஹு தஆலாவைத் துன்பப்படுத்துகின்றார். அல்லாஹு தஆலாவைத் துன்பப்படுத்துகின்ற நபர் நிச்சயமாகத் தண்டனையை அனுபவிப்பார்." என ஒரு ஹதீஸ் ஷரீப் குறிப்பிடுகின்றது. அவர் குறிப்பிட்ட இன்னொரு ஹதீஸ் ஷரீப் வருமாறு: "அல்லாஹு தஆலா எனது உம்மாவில் ஒருவருக்கு அருள்புரிய நாடினால், அவரது உள்ளத்தில் எனது ஸஹாபா மீதான நேசத்தை ஏற்படுத்துவான். அத்துடன் அவர் அவர்களை மிகவும் நேசிப்பார்."

எனவே, ஸஹாபத் அல்-கிராம் கலீபாவாக மாறுவதற்கு அல்லது தமது தீய எண்ணங்களுக்காக அல்லது தமது சுகபோக ஆசைகளுக்காக தமக்கு மத்தியில் சண்டையிட்டுக் கொண்டனர் என்று நினைக்கக் கூடாது. ஊகத்தின் அடிப்படையில் அவர்களின் குறைகளைப் பற்றிப் பேசுவது அழிவுக்கு இட்டுச் செல்லும் நயவஞ்சகமாகும். ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்களின் சமூகத்தில் அவர்கள் அமர்ந்து, அவர்களது அருள்மிக்க வார்த்தைகளை செவிமடுத்தது முதல் பொறாமை, பதவி ஆசை மற்றும் உலகப் பற்று என்பவற்றிலிருந்து அவர்களது உள்ளங்கள் முற்றாகத் தூய்மையடைந்தன. அவர்கள் சீர்பெற்று, பேராசை, ஆசை, வன்மம், கெட்ட இயல்பு என்பவற்றிலிருந்து விடுபட்டு, முற்றாகத் தூய்மையடைந்தனர். ஒரு நபர் மேன்மைமிக்க இறைத்தூதரின் உம்மாவின் ஒரு வலியின் சமூகத்தில் சில தினங்கள் தங்கி, 'வலியின்' அழகான பண்பாடுகளிலிருந்தும் மாண்புகளிலிருந்தும் பயனடைந்து, உலக ஆசைகளிலிருந்து தூய்மையானவராக மாறுகின்ற யதார்த்தத்தை நோக்குகையில், ரஸூலுல்லாஹ்வை வேறு எவரை விடவும் அதிகமாக நேசித்த, தமது செல்வங்களையும் உயிர்களையும் அவருக்காக அர்ப்பணித்த, மற்றும் தமது நாட்டை அவருக்காகத் துறந்த, ஆன்மாக்களுக்கு ஊட்டச்சத்தாக அமையும் அவரது நட்பில் இருப்பதை நேசித்த எமது தலைவர்களான, இறைத்தூதரின் ஸஹாபா, தமது நப்ஸ்கள் தூய்மையடையாமலும் தீய குணங்களிலிருந்து விடுபடாமலும் பிணத்தை ஒத்த இந்தத் தற்காலிக உலத்திற்காக சண்டைபிடிப்பவர்களாக இருந்திருக்க முடியும் என எப்படி அனுமானிக்க முடியும்? அந்த மேன்மக்கள் நிச்சயமாக அனைவரை விடவும் தூய்மையானவர்களாக இருந்தனர். அவர்களுக்கு மத்தியில் ஏற்பட்ட முரண்பாடுகளையும் போராட்டங்களையும் கெட்ட எண்ணம் கொண்ட

மக்களான எமக்கு இடையிலான விவகாரங்களுடன் ஒப்பிடுவதும், அல்லது அவர்கள் தமது தீய, அற்பமான, உலக ஆசைகளைத் திருப்திப்படுத்தவே போராடினார்கள் என்று கூறுவதும் நியாயமற்றதாகும். ஸஹாபத் அல்-கிராமிற்கு எதிராக அத்தகைய முறையற்ற சிந்தனைகளை வைத்திருப்பது அனுமதிக்கத்தக்கதல்ல. அவர்களுக்கு எதிராக ஒருவர் ஏதேனுமொன்றைக் கூறுவதாக இருந்தால், அவர் ஸஹாபத் அல்-கிராமை எதிர்ப்பது ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்களை எதிர்ப்பதாகும் என்பதனையும், அவர்களின் குறைபாடுகளைப் பேசுவதென்பது அவர்களுக்குக் கற்பித்துப் பயிற்றுவித்த இறைத்தூதரது குறைபாடுகளைப் பேசுவதாகும் என்பதனையும் அறிந்து கொள்ளட்டும். இதன் காரணமாக, ஸஹாபாத் அல்-கிராம்களின் விடயத்தில் கண்ணியக் குறைவாகவும் தாழ்வாகவும் நடந்து கொள்வது, அல்லாஹ்வின் தூதரை மறுப்பதற்கு இட்டுச் செல்லக் கூடியது என இஸ்லாத்தின் மிகப் பெரிய மக்கள் கூறுகின்றனர். "ஜமல்" (ஒட்டக) மற்றும் "ஸிப்பீன்" யுத்தங்கள் அவர்களை தூற்றுவதற்கான களமாக எடுத்துக் கொள்ளப்பட முடியாது. சில மார்க்கக் காரணங்களுக்காக, ஸஹாபிகளில் ஹஸ்ரத் அலிக்கு எதிராக நின்றவர்கள் யாரும் தீயவர்கள் அல்ல. உண்மையில், அவர்கள் அனைவரும் இறுதித் தீர்ப்பு நாளில் கூலி பெறத் தகுதியானவர்கள். ஒரு ஹதீஸ் ஷரீப், " தவறு விட்ட முஜ்தஹிதிற்கு ஒரு கூலி வழங்கப்படும். இரண்டு அல்லது பத்து கூலிகள் சரியானதைக் கண்டுபிடித்தவருக்கு வழங்கப்படும். இஜ்திஹாத் மேற்கொண்டமைக்காக இரண்டு கூலிகளில் ஒன்று உண்டு. அடுத்த கூலி சரியானதைக் கண்டறிந்தமைக்கானது." எனக் கூறுகின்றது. இஸ்லாத்தின் மிகச் சிறந்த மக்களான அவர்களுக்கு மத்தியில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளும் போராட்டங்களும் முர்க்கத் தனத்தாலோ அல்லது பகைமையினாலோ ஏற்பட்டவை அல்ல. மாறாக, அவர்களின் [வித்தியாசமான] இஜ்திஹாத்கள் காரணமாகவும் இஸ்லாம் ஏவியதை எடுத்து நடக்க வேண்டுமென்ற அவர்களது நாட்டத்தின் காரணமாகவுமே அவை ஏற்பட்டன. ஸஹாபாத் அல்-கிராம்களில் ஒவ்வொருவருமே முஜ்தஹிதாக இருந்தனர்.[1]

தனது இஜ்திஹாத் மூலம் கண்டறிந்த முடிவுக்கு ஏற்ப செயற்படுவது ஒவ்வொரு முஜ்தஹித் மீதும் கடமையாகும். அவரது இஜ்திஹாத் அவரை விடவும் உயர்வான முஜ்தஹிதின் இஜ்திஹாதுக்கு ஒத்துச் செல்லாததாக இருப்பினும் கூட அவர் அவ்வாறுதான் செயற்பட வேண்டும். வேறொருவரின் இஜ்திஹாதைப் பின்பற்றுவது அவருக்கு அனுமதிக்கத்தக்கதல்ல. இமாம் அல்-அஃலம் அபூ ஹனீபா நுஃமான் இப்ன் ஸாபித் (இறப்பு: ஹி.150, [கி.பி 767] பக்தாதில்) அவர்களின் சீடர்களான அபூ யூஸுப் மற்றும் முஹம்மத் அஷ்-ஷெய்பானி ஆகியோரும், இமாம் முஹம்மத் இப்ன் இத்ரீஸ் அஷ்-ஷாபிஈ (இறப்பு: ஹி.204, [கி.பி 820] எகிப்தில்) அவர்களின் சீடர்களான அபூ ஸவ்ர் மற்றும் இஸ்மாஈல் முஸனி ஆகியோரும் தமது ஆசான்களுடன் பல அம்சங்களில் முரண்பட்டுள்ளனர். அத்துடன் அவர்களது ஆசான்கள் 'ஹராம்' (தடுக்கப்பட்டது) என்று கூறிய சில விடயங்களை அவர்கள் 'ஹலால்' (அனுமதிக்கப்பட்டது) என்றும் அவர்களது ஆசான்கள் 'ஹலால்' என்று கூறிய சில விடயங்களை அவர்கள் 'ஹராம்' என்றும் கூறியுள்ளனர். அவர்கள் இதன் காரணமாக பாவிகள் அல்லது தீயவர்கள் என்று சொல்லப்பட முடியாது. அவர்கள் தமது ஆசான்களைப் போன்று முஜ்தஹித்களாக இருந்ததனால் அவ்வாறு எவரும் கூறியதில்லை.

ஹஸ்ரத் அலி 'ரழியல்லாஹு தஆலா அன்ஹ்', ஹஸ்ரத் முஆவியா மற்றும் ஹஸ்ரத் அம்ர் இப்ன் அல்-ஆஸ் 'ரழியல்லாஹு தஆலா அன்ஹுமா' ஆகியோரை விட உயர்வானவரும் அதிகம் கற்றறிந்தவரும் ஆவார் என்பது உண்மையாகும். அவர் அவர்களை விடவும் மேலான உயர் குணங்களைப் பெற்றிருந்தார். அவரது இஜ்திஹாத் அவர்களது இஜ்திஹாதை விடவும் மிகவும் பலமானதாகவும் நுணுக்கமானதாகவும் இருந்தது. இருப்பினும், அனைத்து ஸஹாபத் அல்-கிராம்களும் முஜ்தஹித்கள் என்பதனால், அவர்கள் இருவருக்கும் அந்த மிகப் பெரிய மார்க்கத் தலைமையைப் பின்பற்றுவது அனுமதிக்கத்தக்கதாக இருக்கவில்லை. அவர்களது சொந்த இஜ்திஹாதின் படி செயற்படுவது அவர்களுக்கு அவசியமாக இருந்தது.

[1] உதாரணமாக, அல்-ஹதீகா என்ற நூலில் பக்கம் 298 இல் உள்ள ஹதீஸ் ஷரீபில், அம்ர் இப்ன் அல்-ஆஸ் 'ரழியல்லாஹு தஆலா அன்ஹ்' ஒரு முஜ்தஹிதாக இருந்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கேள்வி: " ஜமல் மற்றும் ஸிப்பீன் யுத்தங்களில், ஸஹாபத் அல்-கிராம்களுக்கு மத்தியில் பல மிகப் பெரிய முஹாஜிரீன்களும் அன்ஸாரிகளும் ஹஸ்ரத் அலி அவர்களுக்குக் கட்டுப்பட்டு, அவரைப் பின்பற்றி அங்கம் வகித்தனர். அவர்கள் அனைவருமே முஜ்தஹித்களாக இருந்த போதும், அவரைப் பின்பற்றுவது வாஜிப் என்பதாக அவர்கள் கருதினர். ஹஸ்ரத் அலி அவர்களைப் பின்பற்றுவது முஜ்தஹித்களுக்கும் வாஜிபாகும் என்பதனையே இது காட்டுகின்றது. அவர்களது இஜ்திஹாத் அவரது இஜ்திஹாதுடன் உடன்படாதபோதும் அவர்கள் அவரைப் பின்பற்றி இருக்க வேண்டுமல்லவா?"

பதில்: ஹஸ்ரத் அலியைப் பின்பற்றி, அவரது பக்கத்தில் சண்டையிட்ட முஸ்லிம்கள், அவரது இஜ்திஹாதைப் பின்பற்றும் வகையில் அவ்வாறு செய்யவில்லை. மாறாக அவர்களது இஜ்திஹாத் அவரது இஜ்திஹாதுடன் உடன்பட்டதன் காரணமாகவும், அதன்படி, இமாம் அலியைப் பின்பற்றுவதுதான் வாஜிப் என்ற முடிவை அவர்கள் பெற்றதனாலும்தான் அவர்கள் அவ்வாறு செய்தனர். அதேபோன்று, பல முக்கியமான நபித்தோழர்களது இஜ்திஹாத்களும் ஹஸ்ரத் அலியின் இஜ்திஹாதுடன் உடன்படவில்லை. அத்துடன் அவருக்கு எதிராகப் போராடுவது அவர்கள் மீது வாஜிபாகியது. ஸஹாபத் அல்-கிராம்களின் இஜ்திஹாத்கள் அன்று மூன்று வித்தியாசமான வழிகளில் பெறப்பட்டன: ஹஸ்ரத் அலிதான் சரியானவர் என்று அவர்களில் சிலர் புரிந்து கொண்டனர். எனவே ஹஸ்ரத் அலியைப் பின்பற்றுவது அவர்கள் மீது கடமையானது. ஹஸ்ரத் அலியுடன் சண்டையிடுபவர்களின் இஜ்திஹாத்தான் சரியானது என இன்னொரு சாரார் கண்டனர். எனவே ஹஸ்ரத் அலியுடன் சண்டையிடுபவர்களின் இஜ்திஹாதைப் பின்பற்றி அவருக்கு எதிராக சண்டையிடுவது அவர்கள் மீது வாஜிபாகியது. இரண்டு பக்கங்களையும் பின்பற்றுவது அவசியமில்லை என்றும் சண்டையிடத் தேவையில்லை என்றும் மூன்றாவது சாரார் கூறினர். அவர்களது இஜ்திஹாத் அவர்களை யுத்தத்தில் இணையாமல் செய்தது. இந்த மூன்று சாராருமே நிச்சயமாக சரியானவர்களாக இருந்ததுடன் மறுமையில் கூலி பெறவும் தகுதி பெற்றவர்களாக இருந்தனர்.

கேள்வி: ஹஸ்ரத் அலி 'ரழியல்லாஹு தஆலா அன்ஹ்' அவர்களுக்கு எதிராக சண்டையிட்டவர்களும் சரியானவர்கள் என [மேலுள்ள] பதில் காட்டுகின்றது. இன்னொரு பக்கம், ஹஸ்ரத் அலிதான் சரியானவராக இருந்தார் என்றும் அவரது எதிர்தரப்பினர் பிழையானவர்கள் என்றும் அவர்கள் உத்ர் (நியாயமான காரணம்) உள்ளவர்கள் என்பதால் மன்னிக்கப்பட்டவர்கள் என்றும் அவர்களும் ஸவாபைப் பெற்றுக் கொள்வார்கள் என்றும் அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்கள் கூறியுள்ளனர். இதற்கு என்ன சொல்ல முடியும்?

பதில்: எந்தவொரு ஸஹாபத் அல்-கிராமைப் பற்றியும் குறிப்பிட 'பிழையானவர்' என்ற வார்த்தையைப் பயன்படுத்துவது அனுமதிக்கத்தக்கதல்ல என அல்-இமாம் அஷ்-ஷாபிஈ மற்றும் உமர் இப்ன் அப்த் அல்-அஸீஸ் ஆகிய இரு இஸ்லாத்தின் மிக சிரேஷ்டமானவர்கள் கூறியுள்ளனர். இதனால்தான், "உயர்வானவர்கள் தொடர்பாக, "பிழையானவர்கள்" என்று கூறுவது பிழையாகும்." என்று கூறப்பட்டுள்ளது. கீழ்நிலையில் உள்ளவர்கள், "அவர் செய்தது சரி", "அவர் செய்தது பிழை", "நாம் அங்கீகரிக்கிறோம்", "நாம் அங்கீகரிக்கவில்லை" ஆகிய வார்த்தைகளை தம்மை விட மேலானவர்களுக்குக் கூறுவது அனுமதிக்கத்தக்கதல்ல. அல்லாஹு தஆலா எமது கரங்களில் அந்த மேன்மக்களது இரத்தங்களை தோய்க்காமல் இருந்ததைப் போன்று நாம் எமது நாவுகளை, 'நீதி' மற்றும் 'அநீதி' போன்ற வார்த்தைகளை விட்டும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இமாம் அலி சரியானவராகவும் அவரது எதிர்த்தரப்பு தவறு விட்டவர்களாகவும் இருந்தார்கள் என்றும், உண்மையில் ஹஸ்ரத் அலியிற்கு அடுத்த தரப்பினருடன் கதைப்பதற்கான வாய்ப்பு கிடைத்திருந்தால், அவர் அவர்களை தனது இஜ்திஹாதிற்கு இணங்கி இஜ்திஹாத் செய்ய வழிகாட்டியிருப்பார் என்றும் அவற்றின் ஆதாரங்களையும் நிகழ்வுகளையும் ஆய்வு செய்த ஆழமான அறிவுள்ள அறிஞர்கள் கூறியுள்ளனர். உண்மையில், ஹஸ்ரத் ஸுபைர் இப்ன் அவ்வாம் ஹஸ்ரத் அலியிற்கு எதிராக 'ஜமல்' யுத்தத்தில் இருந்தார். ஆனால், யதார்த்தங்களை ஆழமாக ஆராய்ந்த பின்னர், அவர் தனது இஜ்திஹாதை மாற்றி, சண்டையிடுவதை நிறுத்தினார்.

தவறிழைப்பது அனுமதிக்கத்தக்கது என்று கருதும் அஹ்ல் அஸ்-ஸுன்னா அறிஞர்களின் வார்த்தைகள் அவ்வாறுதான் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். ஹஸ்ரத் அலியும் அவருடன்

இருந்தவர்களும் சரியான பாதையிலும் அடுத்த தரப்பில் எமது தாயார் ஆயிஷா அஸ்-ஸித்தீகாவுடன் இருந்த ஏனைய நபித்தோழர்கள் தவறான வழியிலும் இருந்தார்கள் என்று கூறுவது அனுமதிக்கத்தக்கதல்ல.

ஸஹாபத் அல்-கிராம்களுக்கு மத்தியில் நடந்த இந்த யுத்தங்கள் அஹ்காம் அஷ்-ஷரியய்யா (இஸ்லாத்தின் சட்டங்களின்) கிளைகளில் இஜ்திஹாத் வேறுபட்டதன் விளைவாக நிகழ்ந்தவையாகும். அவர்களிடம் இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்களில் முரண்பாடுகள் காணப்படவில்லை. இன்று, ஹஸ்ரத் முஆவியா மற்றும் ஹஸ்ரத் அம்ர் இப்ன் அல்-ஆஸ் 'ரழியல்லாஹு தஆலா அன்ஹுமா' போன்ற இஸ்லாத்தின் மேன்மக்களைப் பற்றி தரக்குறைவாகவும் குறைகளையும் சில மக்கள் பேசுகின்றனர். அவர்கள் ஸஹாபத் அல்-கிராமை அவமதிப்பதன் விளைவாக, ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்களை இகழ்ந்து, அவமதிக்கின்றனர் என்பதனை அவர்களால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. இமாம் மாலிக் இப்ன் அனஸ் கூறியதாக, ஷிபா அஷ்-ஷரீப் இல் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது: "முஆவியா[1] மற்றும் அம்ர் இப்ன் அல்-ஆஸ்[2] ஆகியோரைத் தூற்றி, சபிக்கின்ற மனிதர், அவர்களுக்கு எதிராக அவர் கூறிய வார்த்தைகளுக்குத் தகுதி பெறுகின்றார். அவர்களுக்கு கண்ணியம் வழங்காமல், அவர்களுக்கு எதிராகப் பேசுகின்ற, எழுதுகின்றவர்களைக் கடுமையாகத் தண்டிப்பது அவசியம்." அல்லாஹு தஆலா எமது உள்ளங்களை அவனது நேசமிகு ஸஹாபாவின் அன்பினால் நிரப்புவானாக! முனாபிக்கள் அல்லது பாவிகள் அன்றி, தூய, இறையச்சமுள்ள முஸ்லிம்கள் அவர்களது தலைவர்களை நேசிக்கின்றனர்.

[ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்களின் ஸஹாபாவின் மதிப்பையும் மேன்மையையும் புரிந்து கொண்டு, அவர்களனைவரையும் நேசித்து, கண்ணியப்படுத்தி அவர்களைப் பின்பற்றும் மக்கள் அஹ்ல் அஸ்-ஸுன்னா எனப்படுவார்கள். யார் அவர்களில் சிலரை நேசிப்பதாகவும் இன்னும் சிலரை விரும்புவதில்லை என்றும் கூறி அதன் காரணமாக அவர்களைப் பழித்துரைத்து, அத்துடன் அவர்களில் எவரையும் பின்பற்றவில்லையெனின் அவர்கள் ஷீயாக்கள் என அழைக்கப்படுகின்றனர். ஈரான், இந்தியா மற்றும் ஈராக்கில் பல ஷீயாக்கள் வாழ்கின்றனர். துருக்கியில் அவர்களில் யாருமில்லை. துருக்கியிலுள்ள தூய முஸ்லிம்களான அலவீக்களை வழிகெடுக்கும் நோக்கில், 'அலவீக்கள்' என்று தம்மை அழைத்துக் கொள்ளும் அவர்களில் சிலர் உள்ளனர். 'ஹஸ்ரத் அலியை நேசிக்கும் முஸ்லிம்கள்' என்பதே அலவீக்கள் என்பதன் கருத்தாகும். ஒருவரை நேசிப்பதென்பது அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதையும் அவர் நேசித்தவர்களை நேசிப்பதையும் அவசியப்படுத்துகிறது. அவர்கள் ஹஸ்ரத் அலி 'ரழியல்லாஹு தஆலா அன்ஹுவை' நேசித்தால் அவர்கள் அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டும். அவர் இறைத்தூதரின் அனைத்து ஸஹாபாவையும் நேசித்தார். அவர் இரண்டாவது கலீபாவான, கலீபா ஹஸ்ரத் உமரின் ஆலோசகராக இருந்தார்; ஹஸ்ரத் உமர் தனது துயரங்களை அவரிடம் சொல்லக்கூடியவராக இருந்தார். அவர் தனதும் ஹஸ்ரத் பாதிமாவினதும் மகளான உம்மு குல்தூமை ஹஸ்ரத் உமருக்கு திருமணம் செய்து வைத்தார்.

அவர் ஹஸ்ரத் முஆவியா பற்றி ஒரு குத்பாவில் பின்வருமாறு கூறினார்: "எமது சகோதரர்கள் எம்முடன் உடன்படாமல் இருக்கிறார்கள். ஆயினும் அவர்கள் இறை நிராகரிப்பாளர்களோ பாவிகளோ அல்லர். அவர்களது இஜ்திஹாத் அவர்களை அவ்வாறு நடந்து கொள்ள வைக்கிறது." அவருக்கு எதிராக சண்டையிட்ட ஹஸ்ரத் தல்ஹா 'ரழியல்லாஹு தஆலா அன்ஹு' வீர மரணமடைந்த போது, அவர் அவராகவே ஹஸ்ரத் தல்ஹாவின் முகத்திலிருந்த தூசை சுத்தம் செய்தார். அத்துடன் அவரது இறப்பின் பின்னர் தொழுகையில் இமாமாக செயற்பட்டார். "இறை நம்பிக்கை கொண்டவர்கள் சகோதரர்களாவர்" என அல்லாஹு தஆலா பிரகடனப்படுத்துகிறான். ஸூரா அல்-பத்ஹின் இறுதி ஆயத் கரீமாவில் அவன், "இறைத்தூதரின் தோழர்கள் ஒருவர் மற்றவரை

[1] ஹஸ்ரத் முஆவியா பின் அபூ ஸுப்யான் ஹி. 60 [கி. பி 680] இல் டமஸ்கஸில் மரணித்தார்.

[2] அம்ர் இப்ன் அல்-ஆஸ் ஹி. 43 [கி. பி 663] இல் எகிப்தில் மரணித்தார்.

நேசிக்கின்றனர்." எனப் பிரகடனப்படுத்துகிறான். இறைத்தூதரின் தோழர்களில் யாராவது ஒருவரையேனும் நேசிக்காமல் இருப்பது அல்லது மிக மோசமான பகுதியான, அவர் மீது பகைமை பாராட்டுவது, குர்ஆன் அல்-கரீமை நிராகரிப்பதாக அமைகிறது. அஹ்ல் அஸ்-ஸுன்னா அறிஞர்கள் ஸஹாபத் அல்-கிராமின் 'ரழியல்லாஹு தஆலா அன்ஹும் அஜ்மஈன்' மகிமையை சரியாகப் புரிந்து கொண்டு, அவர்களனைவரையும் நேசிக்குமாறு முஸ்லிம்களை ஏவினார்கள். அதன் மூலம் முஸ்லிம்களை அபாயத்திலிருந்து பாதுகாத்தனர்.

எமது தலைவர்களான ஹஸ்ரத் அலியையும் 'ரழியல்லாஹு தஆலா அன்ஹு' மற்றும் அவரது மகன்களையும் ஸுன்னி முஸ்லிம்களின் அன்புக்கும் நேசத்துக்கும் உரியவர்களான அவரது வழித் தோன்றல்களையும் வெறுத்து அவர்கள் மீது பகைமை பாராட்டிய மக்கள் க்ஹவாரிஜிகள் (க்ஹவாரிஜ்) என அழைக்கப்பட்டனர். தற்போது அவர்கள் யஸீதீக்கள் எனப்படுகின்றனர். குரோத உணர்வு அவர்களது நம்பிக்கைக் கோட்பாடாக உள்ளதுடன் அவர்களுக்கும் இஸ்லாத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

வஹ்ஹாபிகள், அனைத்து ஸஹாபத் கிராம்களையும் நேசிப்பதாகக் கூறிக் கொண்டாலும், அவர்கள் அந்த பாக்கியமிக்க மக்களைப் பின்பற்றுவதில்லை. மாறாக, அவர்கள் ஸஹாபாக்களின் வழி என்று குறிப்பிடும் அவர்களது சொந்த மதபேத வழிகளையே பின்பற்றுகின்றனர். அவர்கள் அஹ்ல் அஸ்-ஸுன்னா அறிஞர்களையோ ஸூபிக்களையோ அலவீக்களையோ விரும்புவதில்லை. அவர்கள் மாத்திரமே முஸ்லிம்கள் என அவர்கள் கருதுகின்றனர். அவர்களைப் போன்று இல்லாத மக்களை 'இணைவைப்பாளர்கள்' என்று அடையாளப்படுத்தி, அத்தகைய மக்களின் உயிர்களையும் செல்வங்களையும் பறிப்பது தமக்கு ஹலாலாகும் என்று கூறுகின்றனர். எனவே, அவர்கள் இபாஹீக்களாக மாறுகின்றனர். அவர்கள் பிழையான, மதபேத கருத்துக்களை குர்ஆன் அல்-கரீமிலிருந்தும் ஹதீஸ் அஷ்-ஷரீபிலிருந்தும் பெற்று, இஸ்லாம் அந்தக் கருத்துக்களை மாத்திரமே கொண்டுள்ளன என நினைக்கின்றனர். அவர்கள் அதில்லத் அஷ்-ஷரீஆவையும் பெரும்பாலான ஹதீஸ் ஷரீப்களையும் மறுக்கின்றனர். யார் அஹ்ல் அஸ்-ஸுன்னாவுடன் முரண்படுகிறார்களோ அவர்கள் இஸ்லாத்திற்கு பெரும் தீங்கிழைக்கும் மதபேதகர்கள் ஆவார்கள் என்பதனை ஆவணங்களுடன் நிரூபிக்கும் பல நூல்களை நான்கு மத்ஹப்களினதும் மிகப் பெரிய அறிஞர்கள் எழுதியுள்ளனர்.[1]

---

[1] மிக விரிவான தகவல்களுக்காக, தயவு செய்து எமது ஆங்கில நூல்களான, *Advice for the Muslim* மற்றும் *Endless Bliss* இன் ஆறாம் பாகம் போன்றவற்றையும், மேலும் அறபு மொழியில், அல்-மின்ஹத் அல்-வஹ்பிய்யா பி-ர்-ரத்தில் வஹ்ஹாபிய்யா, அத்-தவஸ்ஸுலி பின்-நபி வ ஜஹாலதில் வஹ்ஹாபிய்யீன் மற்றும் ஸபீல்-உன்-நஜாத் போன்ற நூல்களையும், பாரசீக மொழியில், ஸய்ப் அல்-அப்ரார் என்ற நூலையும் வாசிக்கவும். இந்தப் பணிகளும் பெறுமதியான நூல்களும் அஹ்ல் அல்-பித்ஆவுக்கான மறுப்பிற்காக எழுதப்பட்டு, இஸ்தான்புலில் உள்ள ஹகீகாத் கிதாபவியினால் வெளியிடப்பட்டுள்ளன. ரத் அல்-முஹ்தார் (ஹி.1252 [கி.பி 1836] இல் டமஸ்கஸில் மரணித்த முஹம்மத் அமின் இப்னி ஆபிதீனால் எழுதப்பட்டது) நூலின் (பாகம் III, "பாக்ஹீ" பற்றிய அத்தியாயம்) மற்றும் துருக்கிய மொழியில் நிமேதி இஸ்லாம் ("நிகாஹ்" பற்றிய அத்தியாயம்) ஆகிய இரண்டிலும் வஹ்ஹாபிகள் என்போர் இபாஹிகள் ஆவார்கள் என்பது தெளிவாக எழுதப்பட்டுள்ளது. ஜய்யூப் ஸப்ரி பாஷா [இறப்பு: ஹி.1308 (கி.பி 1890)] ஸுல்தான் இரண்டாம் அப்த் அல்-ஹமீத் கானின் காலப்பகுதியில் இணைக் கடற் தளபதியாக இருந்தவர், தனது துருக்கிய ஆக்கமான, மிராஅத் அல்-ஹரமைன் மற்றும் தாரீக்ஹி வஹ்ஹாபிய்யூன் ஆகியவற்றிலும், மேலும் அஹ்மத் கெவ்டத் பாஷா, தனது துருக்கிய நூலான ஒட்டொமன் ஹிஸ்டோரியின் ஏழாம் பாகத்திலும் வஹ்ஹாபிகள் பற்றி விரிவான விளக்கங்களுடன் தகவல்களை வழங்கியுள்ளனர். அத்தோடு, யூஸுப் அன்-நப்ஹானி, தனது ஷவாஹித் அல்-ஹக் என்ற அறபு நூலில் (3ஆம் பதிப்பு, கைரோ, 1385/1965), வஹ்ஹாபிகளையும் இப்னு தைமியாவையும் விரிவாக மறுக்கின்றார். அவரது நூலின் ஐம்பது பக்கங்கள், உலமா அல்-முஸ்லிமீன் வ வஹ்ஹாபிய்யூன் (இஸ்தான்புல், 1972) என்ற அறபு நூலுடன் மீள் பிரசுரிக்கப்பட்டது.

"வஹ்ஹாபிஸம் ஹி. 1205 [கி. பி 1791] இல் அரேபிய தீபகற்பத்தில் இரத்தம் சிந்திய, சித்திரவதை மிக்க, கொடூரமான கிளர்ச்சியுடன் தோன்றியது" என ஐய்யூப் ஸப்ரி பாஷா 'ரஹ்மதுல்லாஹி தஆலா அலைஹி' கூறியுள்ளார். எகிப்தின் முஹம்மத் அப்துஹ் வஹ்ஹாபிஸத்தையும் மத்ஹப்-எதிர்ப்பு வாதத்தையும் தனது நூல்களின் ஊடாக உலகம் பூராகவும் பரப்ப முயற்சித்தவர்களில் ஒருவராவார். ஐக்கிய மற்றும் முன்னேற்றக் கட்சியின் காலத்தில், அப்துஹ்வின் நூல்கள் துருக்கிய மொழியில் பெயர்க்கப்பட்டு, "மிகப் பெரிய அறிஞரின் ஆக்கங்கள், அறிவொளி பெற்ற மனிதனின் கருத்துக்கள், புகழ்பெற்ற சீர்திருத்தவாதி அப்துஹ்" போன்று இளைஞர்களுக்கு வழங்கப்பட்டது. இருப்பினும், அப்துஹ், ஜமால் அத்-தீன் அல்-அப்க்ஹானி *(இறப்பு: ஹி.1314 [கி.பி1897])* இனால் ஆகர்ஷிக்கப்பட்டேன் என வெளிப்படையாக எழுதியுள்ளார். அவர் ஒரு பிரீமேஸனாகவும் கைரோ மாஸொனிக் லொஞ்சின் பிரதானியாகவும் இருந்தவர். *(சத்திய வழியான)* அஹ்ல் அஸ்-ஸுன்னாவை அழிப்பதற்காக இஸ்லாத்தின் எதிரிகள் பதுங்கியிருந்தனர். மேலும் அதன் மூலம் இஸ்லாத்தின் வாகையை இல்லாது செய்து இஸ்லாத்தை அழிப்பதற்கும் மார்க்க மேதைகளாக வேஷமிட்டு, வஞ்சகமான முறையில் பித்னாவைத் தூண்டவும் செய்தனர். அப்துஹ் வானளவு புகழப்பட்டார். மிகப்பெரிய அஹ்ல் அஸ்-ஸுன்னா அறிஞர்கள், அஇம்மத் அல்-மத்ஹப் அறிவற்ற மக்களாக அறிவிக்கப்பட்டனர். அவர்களின் பெயர்கள் இனிமேல் குறிப்பிடப்படவில்லை. ஆயினும், ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' மற்றும் இஸ்லாத்துக்காக தமது உயிர்களை அர்ப்பணித்த எமது முன்னோர்களின் தூய, கண்ணியமிக்க வழித் தோன்றல்களும், மேன்மைமிகு வீரத் தியாகிகளின் பிள்ளைகளும் மில்லியன் கணக்கான பவுன்கள் செலவழிக்கப்பட்ட இத்தகைய பிரச்சாரங்களுக்கும் விளம்பரங்களுக்கும் சரணடையவில்லை. அவர்கள் இந்தப் போலி இஸ்லாமிய வீரர்களைப் பற்றி அறிந்ததோ அல்லது செவிமடுத்ததோ கூட இல்லை. அல்லாஹு தஆலா வீரத் தியாகிகளின் பிள்ளைகளை இத்தகைய கொடிய தாக்குதல்களை விட்டும் பாதுகாத்தான். இன்று, மவ்தூதீ[1], ஸெய்யித் குத்ப்[2], தப்லீக்ஹ் ஜமாஅத்' கூட்டத்தினர் மற்றும் ஹமீதுல்லாஹ் போன்ற லா மத்ஹபி மக்களின் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள் இளைஞர்களுக்கு வழங்கப்படுகின்றன.

அவை அஹ்ல் அஸ்-ஸுன்னா அறிஞர்களின் கூற்றுக்களுக்கு உடன்படாத மதபேத கருத்துக்களை உள்ளடக்கியுள்ளன. அத்துடன் அவை பிரமாண்டமான விளம்பரங்களுடன் ஆடம்பரமான முறையில் கொண்டாடப்படுகின்றன. நாம் எப்போதும் விழிப்புணர்வோடும் எச்சரிக்கையோடும் இருக்க வேண்டும். அல்லாஹு தஆலா அவனது அன்புத் தூதர் முஹம்மத் 'அலைஹிஸ் ஸலாம்' அவர்களின் கிருபை பற்றிய அறியாமையை விட்டும் முஸ்லிம்களை விழிக்கச் செய்வானாக! அவன் எம்மை எதிரிகளின் பொய்களாலும் அவதூறுகளாலும் ஏமாற்றப்படுவதை விட்டும் பாதுகாப்பானாக! ஆமின். அல்லாஹு தஆலாவின் (இறை விதி)யை ஆதத் அல்-இலாஹிய்யாவை கடைபிடிக்காமலும், உழைக்காமலும், வழிமுறைகளைக் கையாளாமலும் அல்லாஹு தஆலாவிடமிருந்து அற்புதங்கள் நிகழ வேண்டுமென்று வேண்டியும், நாம் பிரார்த்திப்பதால் மாத்திரம் ஏமாற்றப்படாதிருக்க வேண்டும்!

ஒரு முஸ்லிம் உழைக்கவும் வேண்டும்; பிரார்த்திக்கவும் வேண்டும். நாம் முதலில் வழிமுறைகளைக் கையாள வேண்டும், அதன் பிறகே பிரார்த்தனை செய்ய வேண்டும். இறை நம்பிக்கையின்மையிலிருந்து தப்புவதற்கான முதல் வழிமுறை இஸ்லாத்தை கற்பதும் கற்பிப்பதுமாகும். உண்மையில், அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் நம்பிக்கைக் கோட்பாடுகளையும் இஸ்லாத்தின் ஏவல்களையும் விலக்கல்களையும் கற்பது ஆண் அல்லது பெண் ஒவ்வொருவரதும் அடிப்படைப் பொறுப்பும் *(பர்ள்)* கடமையுமாகும். இன்று இந்த விடயங்களைக் கற்பது மிகவும் எளிதானது. ஏனெனில், சரியான இஸ்லாமிய நூல்களை எழுதவும் வெளியிடவும் இங்கு சுதந்திரமுள்ளது. இந்த சுதந்திரத்தை முஸ்லிம்களுக்கு வழங்கிய தேசத்திற்கு ஒவ்வொரு முஸ்லிமும்

---

[1] மவ்தூதீ ஜமாஅதுல் இஸ்லாமிய்யா என்ற இந்தியாவிலுள்ள அமைப்பின் ஸ்தாபகர் ஆவார். அவர் *1399* இல் மரணித்தார்.

[2] ஸெய்யித் குத்ப் *1386 [கி.பி 1966]* இல் எகிப்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டார்.

கட்டாயம் ஆதரவு கொடுக்க வேண்டும். அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் நம்பிக்கைக் கோட்பாடுகளையும் (இல்ம் அல்-ஹால்) போதனைகளையும் கற்காதவர்களும் அவற்றைத் தமது பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்காதவர்களும் இஸ்லாத்திலிருந்து விலகும் அபாய நிலைக்கும் இறைநம்பிக்கையின்மையின் பாதாளத்தில் விழும் நிலைக்கும் ஆளாகியுள்ளனர். அத்தகைய மக்களின் பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படுவதில்லை. பிறகு, எவ்வாறு அவர்கள் தம்மை இறைநம்பிக்கையின்மையை விட்டுப் பாதுகாத்துக் கொள்ள முடியும்? "அறிவு உள்ள இடத்தில்தான் இஸ்லாம் இருக்கும். அறிவு இல்லாத இடத்தில் இஸ்லாமும் இருக்காது" என ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வ ஸல்லம்' அவர்கள் கூறியுள்ளார்கள். எவ்வாறு பசியினால் இறக்காமல் இருக்க உண்பதும் குடிப்பதும் அவசியமோ, அதேபோன்று, இறைநிராகரிப்பாளர்களால் ஏமாற்றப்படாமலும் முஸ்லிமல்லாதவர்களாக மாறாமலும் இருக்க எமது மார்க்கத்தைக் கற்பது அவசியமாகும். எமது முன்னோர்கள் அடிக்கடி இல்ம் அல்-ஹால் நூல்களைத் தொகுத்தும் வாசித்தும் வந்ததுடன், அதன்காரணமாக, முஸ்லிம்களாகத் தொடர்ந்திருந்து, இஸ்லாத்தை இன்பமாக அனுபவித்தனர். அவர்கள் இந்த ஆனந்த ஒளியை சரியாக எம்மிடம் ஒப்படைத்துள்ளனர். ஆகவே, முஸ்லிம்களாகத் தொடர்ந்திருக்கவும் எமது பிள்ளைகள் இஸ்லாத்தின் எதிரிகளால் உள்ளிருந்தும் வெளியிருந்தும் அகப்படாமல் இருக்கவும், முதலாவதும் மிகவும் அவசியமுமான தடுப்பு நடவடிக்கைதான் அஹ்ல் அஸ்-ஸுன்னா அறிஞர்களால் தயாரிக்கப்பட்ட இல்ம் அல்-ஹால் நூல்களை வாசித்து மனதிற் கொள்வதாகும். தமது பிள்ளை முஸ்லிமாக இருக்க வேண்டுமென விரும்பும் பெற்றோர்கள், பிள்ளையை ஒரு ஆசிரியரிடம் அனுப்பி, அது குர்ஆன் அல்-கரீமை எவ்வாறு ஓதுவது என்பதைக் கற்றுக் கொள்வதை உறுதிப்படுத்த வேண்டும். நாம் வாசிப்போம், படிப்போம் அத்துடன் எமது பிள்ளைகளுக்கும் நாம் யார் மீது பொறுப்பாக உள்ளோமோ அவர்களுக்கும் வாய்ப்புக் கிடைப்பதற்கு ஏற்ப கற்றுக் கொடுப்போம். அவர்கள் பாடசாலை செல்லும் போது அது கடினமானதாகவும், சாத்தியமற்றதாகவும் கூட இருக்கலாம். சீர்கேடு ஏற்பட்டதன் பிறகு புலம்புவது பயனற்ற ஒன்றாகும். நாம் இஸ்லாத்தின் எதிரிகளையும், அவர்களது ஏமாற்று மற்றும் போலி நூல்களையும், பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும், தொலைக்காட்சிகளையும் வானொலி நிகழ்ச்சிகளையும், திரைப்படங்களையும் மற்றும் இணையத் தளங்களையும் நம்பக் கூடாது. இப்ன் ஆபிதீன் 'ரஹிமஹு- அல்லாஹு தஆலா' [ரத் அல்-முஹ்தார்] இன் மூன்றாம் பாகத்தில் பின்வருமாறு எழுதியுள்ளார்: வஞ்சகமிக்க இறைநிராகரிப்பாளர்கள், அவர்கள் எந்த மதத்தையும் நம்பாதபோதும், முஸ்லிம்களைப் போன்று நடித்து, இறை நிராகரிப்பை ஏற்படுத்தும் விடயங்களை அவை இஸ்லாமிய விடயங்கள் போன்று கற்பிக்கின்றனர். அத்துடன் அவர்கள் முஸ்லிம்களைப் பிழையாக வழிகாட்டி, இஸ்லாத்தை விட்டும் வெளியேறும் வகையில் வழிநடாத்த கடுமையாக உழைக்கின்றனர். அத்தகையவர்கள் ஸின்திக்கள் எனப்படுகின்றனர்.]

கேள்வி: "அவர்களது குழப்பம்மிக்க நூல்களை வாசித்த ஒருவர் கூறுகிறார்:

> "நாம் குர்ஆன் அல்-கரீமின் விளக்கங்களை (தப்ஸீர்) வாசிக்க வேண்டும். எமது மார்க்கத்தையும் குர்ஆன் அல்-கரீமையும் கற்பதை மார்க்க அறிஞர்களிடம் ஒப்படைப்பது ஆபத்தான பயமுறுத்தும் சிந்தனையாகும். குர்ஆன் அல்-கரீம், "மார்க்க அறிஞர்களே" என்று கூறவில்லை; அது, "முஸ்லிம்களே" மற்றும் "மனிதர்களே" என்றுதான் கூறுகிறது. இதன் காரணமாக, ஒவ்வொரு முஸ்லிமும் தானாக குர்ஆன் அல்-கரீமைப் புரிந்து கொள்ள வேண்டும். அந்தப் பணியை வேறு யாரிடமிருந்தும் எதிர்பார்க்கக் கூடாது."

"ஒவ்வொருவரும் தப்ஸீர் மற்றும் ஹதீஸ் நூல்களை வாசிக்க வேண்டுமென அந்த நபர் நாடுகின்றார். இஸ்லாமிய அறிஞர்களும் மிகப்பெரிய அஹ்ல் அஸ்-ஸுன்னா அறிஞர்களும் எழுதிய கலாம், பிக்ஹ் மற்றும் இல்ம் அல்-ஹால் பற்றிய நூல்களை வாசிப்பதை அவர் பரிந்துரைப்பதில்லை. ரஷித் ரிதாவின்[1] நூலான இஸ்லாம்டா பிர்லிக் வெ பிக்ஹ் மெஸ்ஹெப்லெரி என்பது மத விவகாரங்களுக்கான பிரதான காரியாலயத்தினால் (வெளியீட்டு இலக்கம்: 157; 1394/1974) வெளியிடப்பட்டமை வாசகர்களை மிகவும் குழப்பத்துக்கு உட்படுத்தலாம். அதன் பல பக்கங்கள், குறிப்பாக "ஆறாம் உரையாடல்" இல் நூல் பின்வருமாறு குறிப்பிடுகிறது:

[1] ரஷித் ரிதா முஹம்மத் அப்துஹ்வின் சீடராவார். அவர் 1354 [கி.பி 1935] இல் இறந்தார்.

'அவர்கள் [முகல்லித்கள், நான்கு மத்ஹப்களில் ஒன்றைப் பின்பற்றுவோர்] முஜ்தஹித் இமாம்களை நபித்துவத்தின் அந்தஸ்துக்குப் புகழ்ந்துள்ளனர். அவர்கள், இறைத்தூதரின் ஹதீஸ்களுக்கு உடன்படாத முஜ்தஹித்களின் வார்த்தைகளை ஹதீஸ்களை விடப் பெரிதும் விரும்பினர். ஹதீஸ் (நஸ்க்) ரத்து செய்யப்பட்டிருக்க முடியுமெனவும் அல்லது தமது இமாமின் கருத்துக்கான இன்னொரு ஹதீஸ் இருந்திருக்க முடியுமெனவும் அவர்கள் கூறினார்கள். தமது தீர்ப்பில் பிழையாக இருக்க முடியுமான, விடயத்தைப் பற்றிய அறிவில்லாத, தவறுகளிலிருந்து நீங்கிய இறைத்தூதரின் ஹதீஸை புறமொதுக்குகின்ற அந்த மக்களின் வார்த்தைகளின்படி செயற்படுவதன் மூலம் அந்த மக்களும் முஜ்தஹித்களுக்கு முரண்படுகின்றனர். அவ்வாறு செய்வதன் மூலம் அவர்கள் குர்ஆனுக்கும் முரண்படுகின்றனர். முஜ்தஹித் இமாம் மாத்திரமே அன்றி வேறு யாரும் குர்ஆனைப் புரிந்து கொள்ள முடியாது என அவர்கள் கூறுகின்றனர். பகீஹ்களினதும் ஏனைய முகல்லித்களினதும் அத்தகைய வார்த்தைகள், அவர்கள் அவற்றை யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களிடமிருந்து பெற்றுள்ளனர் என்பதைக் காட்டுகின்றன. மாறாக, குர்ஆனையும் ஹதீஸ்களையும் புரிந்து கொள்வது பிக்ஹ் துறை அறிஞர்கள் எழுதிய நூல்களைப் புரிந்து கொள்வதை விடவும் எளிதானது. அறபு சொற்களையும் இலக்கணத்தையும் உள்வாங்கிக் கொண்ட மக்கள் குர்ஆனையும் ஹதீஸ்களையும் புரிந்து கொள்வதில் சிரமத்தை எதிர்கொள்ள மாட்டார்கள். அல்லாஹ் தனது சொந்த மார்க்கத்தைத் தெளிவாக விளங்கப்படுத்த ஆற்றலுள்ளவன் என்பதனை பூமியில் யார்தான் மறுக்க முடியும்? அல்லாஹ் உத்தேசித்ததைப் புரிந்து கொள்வதிலும் அதனை மற்றவர்களை விட சிறப்பாக விளங்கப்படுத்துவதிலும் ரஸூலுல்லாஹ் வேறு யாரை விடவும் தகுதி வாய்ந்தவராக இருந்தார் என்ற யதார்த்தத்தை யார்தான் மறுக்க முடியும்? இறைத்தூதரின் விளக்கங்கள் முஸ்லிம்களுக்குப் போதாது என்று கூறுவது, அவரால் தனது தொடர்பாடல் (தப்லீக்) பணியைத் துல்லியமாக நிறைவேற்ற முடியாது போனது என்று வாதாடுவதாகும். குர்ஆனையும் ஸுன்னாவையும் பெரும்பாலான மக்களால் புரிந்து கொள்ள முடியாது இருந்திருப்பின், அல்லாஹ் வேதத்திலும் ஸுன்னாவிலும் உள்ள சட்டங்களை அனைத்து மக்களுக்கும் கடமையானதாக ஆக்கியிருக்க மாட்டான். ஒருவர் நம்பிக்கை கொள்ளும் விடயத்தை அவர் ஆவணச் சான்றுகளுடன் அறிந்திருக்க வேண்டும். அல்லாஹ் தக்லீதை (ஒருவர் ஒரு மத்ஹபை ஏற்று நடத்தல்) ஏற்றுக் கொள்வதில்லை. மேலும் அவன், அவர்கள் [முகல்லித்கள்] தமது தந்தைகளையும் முப்பாட்டன்களையும் பின்பற்றுவது மன்னிக்கத்தக்கதாக கருதப்படாது எனக் கூறுகிறான். தக்லீத் ஒருபோதும் அல்லாஹ்வால் ஏற்றுக் கொள்ளப்படாது என ஆயத்கள் காட்டுகின்றன. மார்க்கத்தில் ஒரு பகுதியான புரூஉ குறித்த பகுதியை அதன் தலீல் (ஆவணம், ஆதாரம்) மூலம் புரிந்து கொள்வது நம்பிக்கை தொடர்பான (உஸூல், ஈமான்) பகுதியைப் புரிந்து கொள்வதை விடவும் மிகவும் எளிதானதாகும். சிரமமானதை பொறுப்புச் சாட்டும் போது, அவன் இலகுவனதைப் பொறுப்புச் சாட்டாமல் விடுவானா? சில அரிதான விடயங்களிலிருந்து சட்டங்களைப் பெறுவது சிரமமானதாக அமையும். இன்னும் அது அறியப்படாமலும் நடைமுறைப்படுத்தப்படாமலும் இருப்பது மன்னிக்க முடியுமான ஒன்றாகக் கருதப்படும். பிக்ஹ் துறை சார்ந்தோர் பல மஸ்அலாக்களை (பிரச்சினைகளை, விவகாரங்களை) தாமாகக் கண்டுபிடித்தனர். அவர்கள் அவற்றுக்கு சட்டங்களையும் ஏற்படுத்தினர். அவர்கள் ரஃயீ, கியாஸ் ஜலீ மற்றும் கியாஸ் கஃபீ போன்ற விடயங்களை தமக்கான ஆவணங்களாக அறிமுகப்படுத்த முயற்சித்தனர். இந்த விடயங்கள் பகுத்தறிவின் மூலம் அறிவு பெறுவது சாத்தியமற்ற இபாதாத் பகுதியில் நிரம்பி வழிகின்றன. இவ்வாறு அவர்கள் மார்க்கத்தைப் பன்மடங்கு பெரிது படுத்தினர். அவர்கள் முஸ்லிம்களை சிக்கலுக்குள் தள்ளினர். நான் கியாஸை மறுக்கவில்லை. இபாதாத் பகுதியில் கியாஸ் இல்லை என்றே நான் கூறுகிறேன். ஈமானும் இபாதாத்தும் இறைத்தூதரின் காலத்திலேயே நிறைவடைந்து விட்டன. யாராலும் எந்த ஒன்றையும் அவற்றுடன் இணைக்க முடியாது. முஜ்தஹித் இமாம்கள் மக்களை பின்பற்றுவதை (தக்லீதை) விட்டும் தடுத்தார்கள். அத்துடன் தக்லீதை தடைசெய்யப்பட்ட ஒன்றாக ஆக்கினார்கள்.'

"மத விவகாரங்களுக்கான பிரதான காரியாலயத்தால் வெளியிடப்பட்ட நூலிலிருந்து பெறப்பட்ட இந்தப் பத்தி எல்லா லா-மத்ஹபீ நூல்களையும் போல, நான்கு மத்ஹப்களினதும் இமாம்களைப்

பின்பற்றுவதைத் தடுக்கின்றது. அனைவரும் தப்ஸீரையும் ஹதீஸையும் கற்க வேண்டுமென அது ஏவுகின்றது. இது பற்றி நீங்கள் என்ன கூறுகின்றீர்?"

பதில்: லா-மத்ஹபி மக்களால் எழுதப்படும் பத்திகள் கவனமாக வாசிக்கப்பட்டால், அவர்கள் தமது மதபேத சிந்தனைகளையும் பிரிவினைவாதக் கருத்துக்களையும் ஆதாரமற்ற தொடர் நியாயப்படுத்தல்களாலும் போலியான கூற்றுக்களாலும் ஒப்பனை செய்து, அழகுபடுத்தி முஸ்லிம்களை ஏமாற்ற முயற்சிக்கின்றனர் என்பதனை ஒருவர் இலகுவாகக் கண்டு கொள்வார். தர்க்க மற்றும் பகுத்தறிவின் சட்டகத்தினுள் அறிவை அடிப்படையாகக் கொண்டு எழுத்துக்கள் அமைந்துள்ளதாக அறிவற்றவர் எண்ணி, அதில் விழுந்து விடலாம். எனினும் கற்ற, கூரிய பார்வையுள்ள மக்கள் ஒருபோதும் அவர்களது பொறியில் அகப்பட மாட்டார்கள்.

முஸ்லிம்களை நிரந்தர அழிவுக்கு இட்டுச் சென்று கொண்டிருக்கும் மத்ஹபின்மை வாதத்தினதும் ஸுன்னி-எதிர்ப்புவாதத்தினதும் அபாயத்தை விட்டும் இளைஞர்களை எச்சரிப்பதற்காக, இஸ்லாமிய அறிஞர்கள் 'ரஹிமஹுமும்-அல்லாஹு தஆலா' பதினான்கு நூற்றாண்டுகளாக, பல்லாயிரக்கணக்கான பெறுமதியான நூல்களை எழுதியுள்ளனர். பின்வருவது, யூஸுப் அந்-நப்ஹானீ [இறப்பு: ஹி.1340 (1932) பைரூத்தில்] அவர்களால் மேற்குறிப்பிட்ட கேள்விக்கான ஒரு பதிலாக எழுதப்பட்ட ஹுஜ்ஜத்-அல்லாஹி அலல்-ஆலமீன் என்ற நூலிலிருந்து பெறப்பட்ட சில பந்திகளின் மொழிபெயர்ப்பாகும்:

"குர்ஆன் அல்-கரீமிலிருந்து அனைவருக்கும் அஹ்காம்களை (சட்டங்களை, முடிவுகளைப்) பெற முடியாது. ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்கள் குர்ஆன் அல்-கரீமிலுள்ள சட்டங்களை தனது ஹதீஸ் ஷரீபில் விளக்கியுள்ள போது, முஜ்தஹித் இமாம்களாலும் கூட குர்ஆன் அல்-கரீமிலிருந்து சட்டங்களைப் பெற முடியாது. அவரால் மாத்திரமே குர்ஆன் அல்-கரீம் விளக்கமளிக்கப்பட்டது, அதேபோன்று, ஹதீஸ் ஷரீப்கள் ஸஹாபத் அல்-கிராம்களாலும் முஜ்தஹித் இமாம்களாலும் மாத்திரமே புரிந்து கொள்ளப்பட்டு, விளக்கமளிக்கப்பட முடியும். அவர்களால் அவற்றைப் புரிந்து கொள்ள முடியும் என்ற வகையில், அல்லாஹு தஆலா தனது முஜ்தஹித் இமாம்களுக்கு அறிவியல் மற்றும் மார்க்க அறிவையும், அபாரமான கிரகித்தல் சக்தியையும், கூர்மையான பார்வையையும், மிகவும் கூரிய மனத்தையும் இன்னும் பல உயர்வான திறமைகளையும் அருளியுள்ளான். இந்த அனைத்துத் தகுதிகளுக்கும் அப்பால் தக்வா காணப்பட்டது. அடுத்து, இறை ஒளி அவர்களது உள்ளத்தில் வந்தது. இந்தத் தகுதிகளின் உதவியுடன், எமது முஜ்தஹித் இமாம்கள் அல்லாஹு தஆலாவும் ரஸூலுல்லாஹ்வும் தமது வார்த்தைகளில் உத்தேசித்தவற்றைப் புரிந்து கொண்டனர். அத்துடன், அவர்களுக்கு அவற்றைப் புரிந்து கொள்ள முடியாவிடின், அவர்கள் கியாஸ் மூலம் அவற்றுக்கான [தீர்வைக்] காட்டினார்கள். அஇம்மத் அல்-மதாஹிப் நால்வரில் ஒவ்வொருவரும், அவர் தனது சொந்த கருத்துக்களைப் பேசவில்லை என்பதை அறிவித்துள்ளதுடன், தனது சீடர்களிடம், "நீங்கள் ஒரு ஸஹீஹான ஹதீஸைக் கண்டால், எனது வார்த்தையை ஒருபுறம் வைத்து விட்டு, ரஸூலுல்லாஹ்வின் ஹதீஸைப் பின்பற்றுங்கள்!" என்று கூறியுள்ளார். எமது அஇம்மத் அல்-மதாஹிப் இந்தக் கட்டடளையை வழங்கியவர்களும் அவர்களைப் போன்றே ஆழ்ந்த அறிவு கொண்ட அறிஞர்களாக இருந்தனர். இந்த அறிஞர்கள் தர்ஜீஹுக்கான முஜ்தஹித்களாக இருந்தனர். அவர்கள் நான்கு மத்ஹப்களதும் (தலைவர்கள்) தமது இஜ்திஹாதுக்கு அடிப்படையாகக் கொண்ட ஆதாரப் பனுவல்கள் எங்குள்ளன என்பதனை அறிந்திருந்தனர். அவர்கள் ஆதாரப் பனுவல்களையும் மத்ஹப் தலைமை தனது இஜ்திஹாதுக்கான அடிப்படையாகக் கொண்டுள்ள ஹதீஸ் அறிவிப்பாளர் வரிசையையும் கற்றதுடன், புதிதாக எதிர்கொண்ட ஸஹீஹான ஹதீஸ்களையும் கற்று, பின்னர் கூறப்பட்டதன் பல்வேறு வேறுபாடுகளையும் பரீட்சித்து, அதன்படி எது மிகவும் விரும்பத்தக்கது (தர்ஜீஹ்) என்பதைப் புரிந்து கொண்டனர்.

அல்லது எமது முஜ்தஹித் இமாம் [இமாம் அல்-மத்ஹப்] ஒரு பிரச்சினை (மஸ்அலா) பற்றி, அதனை ஆவணப்படுத்துவதற்கு (தீர்ப்பதற்கு) ஹதீஸை அவர் அறியாததன் காரணமாக கியாஸ் ஊடாகத் தீர்வு கண்டார். அவரது சீடர்கள் ஹதீஸ் ஷரீபைக் கண்டறிந்து, வித்தியாசமாகத் தீர்வு கண்டார்கள். இருப்பினும், இத்தகைய இஜ்திஹாத்களைக் கையாளும் போது சீடர்கள் இமாம் எடுத்து நடந்த சட்டங்களுக்கு அப்பால் செல்வதில்லை. அவர்களுக்குப் பின்னர் வந்த முஜ்தஹித் முப்திகளும், இதன் அடிப்படையில் பத்வா வழங்கினர். இங்கே எழுதப்பட்ட அனைத்தின் படியும், நான்கு

அஇம்மத் அல்-மதாஹிப்களையும், தமது மத்ஹப்களில் கல்வியூட்டப்பட்ட முஜ்தஹித்களையும் பின்பற்றி வரும் முஸ்லிம்கள் அல்லாஹ் தஆலாவினதும் அவனது தூதரினதும் சட்டங்களைப் பின்பற்றி வருகிறார்கள் என்பதனைப் புரிந்து கொள்ளலாம். இந்த முஜ்தஹித்கள் குர்ஆன் அல்-கரீமினதும் ஹதீஸ் ஷரீபினதும் சட்டங்களைப் புரிந்து கொண்டனர், அவை வேறு யாராலும் புரிந்து கொள்ளப்பட முடியாதவை. அத்துடன் அவர்கள் தாம் விளங்கியதை எத்திவைத்தார்கள். முஜ்தஹித்கள் நஸ்ஸிலிருந்து; அதாவது குர்ஆன் ஸுன்னாவிலிருந்து, எதனை தொடர்புபடுத்தி விளங்கிக் கொண்டார்களோ அதற்கேற்ப முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். ஆகவே, அல்லாஹ் தஆலா ஸூரா அந்-நக்ஹ்ல் இல், 43ஆம் ஆயத் கரீமாவில், "நீங்கள் அறியாவிடின், அறிந்தவர்களிடம் கேளுங்கள்."[1] என்று கூறுகிறான்.

" அஇம்மத் அல்-மதாஹிப் இஜ்திஹாத் மேற்கொண்டு, தமது மத்ஹப்களை ஸ்தாபிக்கவும், அனைத்து முஸ்லிம்களும் அந்த மத்ஹப்களைப் பின்பற்றி ஒன்று சேர்வதற்குமான பாக்கியத்தை, அல்லாஹ் அவனது அன்புத் தூதர் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்களின் உம்மா மீது மாத்திரமே அருளியுள்ளான். இன்னொரு பக்கம், மதபேதகர்கள், ஸின்திக்கள், முல்ஹித்கள், ஷைத்தானிய மக்கள் ஆகியோர் இஃதிகாத் பற்றிய அறிவை மாசுபடுத்துவதை விட்டும் தடுப்பதற்காக அவன் இஃதிகாத் இமாம்களை[2] உருவாக்கினான். இன்னொரு பக்கம் தனது மார்க்கம் மாசுபடுவதை விட்டும் தடுப்பதற்காக மத்ஹப்களது இமாம்களை உருவாக்கினான். இந்த அருள் கிறிஸ்தவத்திலோ யூத மதத்திலோ இல்லாதிருந்ததன் விளைவாகவே அவை மாசுபட்டு, விளையாட்டுப் பொருட்களாக மாறின.

"இஸ்லாமிய அறிஞர்களின் ஒருமித்த கருத்துப்படி, ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்களின் மரணத்தைத் தொடர்ந்து, நானூறு வருடங்களின் பின்னர் இஜ்திஹாத் செய்யத் தகுதியுள்ள ஆழ்ந்த அறிஞர் யாரும் வரவில்லை. இப்போது இஜ்திஹாத் செய்வது அவசியம் என்று ஒருவர் கூறினால் அவர் நிச்சயமாக ஒரு பைத்தியமாக அல்லது இஸ்லாம் பற்றிய அறிவு அறவே இல்லாத ஒருவராகத்தான் இருக்க வேண்டும். மிகப்பெரிய அறிஞரான ஜலால் அத்தீன் அஸ்-ஸூயூத்தி அப்த் அர்-ரஹ்மான் 'ரஹிமஹுல்லாஹு தஆலா' (இறப்பு: ஹி. 911 [கி. பி 1505] எகிப்து), அவர் இஜ்திஹாத் செய்வதற்குரிய தரத்தை அடைந்தார். ஏனைய சமகால அறிஞர்கள் அவரிடம் இரு வித்தியாசமான பதில்கள் வழங்கப்பட்ட ஒரு கேள்வியைக் கேட்டனர். அத்துடன் அவற்றில் மிகவும் நம்பத்தக்க பதில் எது என்று அவரிடம் அவர்கள் வினவினர். அவரால்

---

[1] அனைவருமே குர்ஆனையும் ஸுன்னாவையும் சரியாகப் புரிந்து கொள்ள முடியாது என இந்த ஆயத் காட்டுகின்றது. அது புரிந்து கொள்ள முடியாத மக்களுக்கு தனியாக முயற்சி செய்து குர்ஆன் அல்-கரீமையோ அல்லது ஹதீஸ் அஷ்-ஷரீபையோ புரிந்து கொள்ள ஏவவில்லை; மாறாக, அவற்றைப் புரிந்து கொண்ட மக்களிடம் கேட்பதன் மூலம் கற்றுக்கொள்ளவே ஏவுகின்றது. குர்ஆன் அல்-கரீமில் அல்லது ஹதீஸ் அஷ்-ஷரீபில் உள்ள கருத்துக்களை அனைவருமே புரிந்து கொண்டிருப்பின், எழுபத்தி இரண்டு மதபேதக் குழுக்கள் தோன்றியிருக்க மாட்டார்கள். இந்தக் குழுக்கள் தோன்றக் காரணமானவர்கள் அனைவரும் ஆழமாகக் கற்றறிந்தவர்களாக இருந்தனர். ஆனால் அவர்களில் எவராலும் குர்ஆன் அல்-கரீமினதும் ஹதீஸ் அஷ்-ஷரீபினதும் கருத்துக்களை சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவற்றைப் பிழையாகப் புரிந்து கொண்டமையால், அவர்கள் நேர்வழியை விட்டும் திசை திரும்பியதுடன், மில்லியன் கணக்கான முஸ்லிம்களும் அழிவில் முடிவடையக் காரணமாயினர். அவர்களில் சிலர் ஆயத்களுக்கும் ஹதீஸ்களுக்கும் மிக அதிகமாக பிழையான கருத்துக்களை வழங்கினர். அவர்கள் எந்தளவு மதபேதகர்களாக மாறினார்களோ அந்தளவுக்கு நேர்வழியில் உள்ள முஸ்லிம்களை 'இறைநம்பிக்கையற்றோர்' 'இணைவைப்பாளர்கள்' என அழைத்தனர். கஷ்ப் அஷ்-ஷுபுஹாத் என்ற துருக்கிய மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டு, திருட்டுத்தனமாக துருக்கிக்குள் ஊடுருவிய நூலில், அஹ்ல் அஸ்-ஸுன்னா நம்பிக்கையைக் கொண்டுள்ள முஸ்லிம்களைக் கொல்வதும் அவர்களது செல்வங்களைப் பறிமுதல் செய்வதும் முபாஹ் (அனுமதிக்கப்பட்டது) என்று கூறப்பட்டுள்ளது.

[2] நம்பிக்கைக் கோட்பாடுகள்: நம்பிக்கை சார் கொள்கைகள்

அவர்களுக்குப் பதிலளிக்க முடியவில்லை. அவர் அதற்குப் பதிலளிக்க நேரமில்லாதளவு சோழியில் இருந்ததாகக் கூறினார். இருப்பினும், அவரிடம் வினவப்பட்ட விடயம் பத்வாவுக்காக இஜ்திஹாத் செய்யப்பட வேண்டிய ஒன்றாக இருந்தது. அந்த இஜ்திஹாத்தான் மிகவும் குறைந்த தரத்திலுள்ள இஜ்திஹாத் ஆகும். அஸ்-ஸுயூத்தி போன்ற ஆழ்ந்த அறிஞரே ஒரு பத்வாவுக்காக இஜ்திஹாத் செய்வதைத் தவிர்த்தார் எனின், மக்களை முழுமையான (முத்லக்) இஜ்திஹாத் செய்ய நிர்ப்பந்திப்பவர்களை நாம் பைத்தியங்கள் என்றோ ஆன்மீக ரீதியான மடையர்கள் என்றோ அழைக்கக்கூடாது எனின், என்ன சொல்லி அழைக்க வேண்டும்? அல்-இமாம் அல்-கஸ்ஸாலி[1] ரஹிமஹ்-அல்லாஹு தஆலா தனது இஹ்யா உலூம் அத்-தீனில், அவரது காலத்தில் முஜ்தஹித்கள் எவரும் இருக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

முஜ்தஹித் அல்லாத ஒரு முஸ்லிம் ஸஹீஹான ஹதீஸொன்றைப் படித்து, அதன் விளைவாக அவரது மத்ஹபின் இமாம் கற்பித்த ஏதேனும் ஒரு விடயத்தை செய்யும் ஒழுங்கு அந்த ஹதீஸுக்கு முறணாக இருப்பதன் காரணமாக, அந்த விடயத்தை அவரது மத்ஹபின் இமாம் கற்பித்த ஒழுங்கில் செய்வதை அசௌகரியமாகக் கருதத் தொடங்கினால், அவர் நான்கு மத்ஹப்களுக்குள்ளும் அந்த ஹதீஸுடன் இணங்கிச் செல்லும் இன்னொரு முஜ்தஹிதின் இஜ்திஹாதை தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். அத்துடன் அந்த முஜ்தஹித் சார்ந்துள்ள மத்ஹபுக்கு ஏற்ப அந்த விடயத்தைச் செய்ய வேண்டும். பெரும் அறிஞரான அல்-இமாம் யஹ்யா அந்-நவவி 'ரஹிமஹுல்லாஹு தஆலா' (இறப்பு: ஹி.676 [கி.பி 1277], டமஸ்கஸ்) இந்த விடயத்தை தனது ரவ்தத் அத்-தாலிபீன் நூலில் விரிவாக விளக்கியுள்ளார். 'நஸ்' இலிருந்து, அதாவது அல்குர்ஆன் மற்றும் ஸுன்னாவில் இருந்து சட்டங்களைப் பெறுவது இஜ்திஹாத் தரத்தை அடையாத மக்களுக்கு அனுமதிக்கத்தக்கதல்ல. தாம் முழுமையான இஜ்திஹாத் தரத்தை அடைந்து விட்டதாக தற்போது சில அறிவீனர்கள் வாதிடுகின்றனர். அவர்களால் நஸ்ஸிலிருந்து சட்டங்களைப் பெற முடியும் எனவும் இதன்பிறகு நான்கு மத்ஹப்களில் ஒன்றைப் பின்பற்ற வேண்டிய தேவையில்லை எனவும் குறிப்பிட்டு, அவர்கள் பல வருடங்களாகப் பின்பற்றிய மத்ஹபைக் கைவிட்டுள்ளனர்.

அவர்கள் மத்ஹபுகளை தமது நியாயமற்ற காரணங்களால் மறுக்க முயல்கின்றனர். 'நம்மைப் போல் அறியாத மதவாதியின் கருத்தை நாங்கள் பின்பற்ற மாட்டோம்' என்பது போன்ற அறிவீனமான, முட்டாள்தனமான அறிக்கைகளை வெளியிடுகின்றனர். ஷைத்தானால் ஏமாற்றப்பட்டு, அவர்களின் நஃப்ஸால் தூண்டப்பட்டு, அவர்கள் மேன்மையானவர்கள் என வாதாடுகின்றனர். அப்படிச் சொல்வதன் மூலம் அவர்கள் தங்கள் மேன்மையை அல்ல, அவர்களின் முட்டாள்தனத்தையும் இழிவையும் வெளிப்படுத்துகிறார்கள் என்பதை அவர்களால் உணர முடியாது. தஃப்ஸீர் புத்தகங்களிலிருந்தும், அல்-புகாரியின் [ஸஹீஹ் ஹதீஸ்] நூலிலிருந்தும் ஒவ்வொருவரும் படிக்க வேண்டும் எனவும் சட்ட விதிகளைப் பெற வேண்டும் எனவும் சொல்கின்ற, எழுதுகின்ற சில அறிவீனமான வழிகேடர்கள் அவர்களுக்கு மத்தியில் இருப்பதை நாம் காண்கிறோம். என் இஸ்லாமிய சகோதரரே! அத்தகைய முட்டாள்களுடன் நட்பு கொள்வதையோ அல்லது அவர்கள் மார்க்க மேதைகள் என்று எண்ணுவதையோ கண்டிப்பாகத் தவிர்க்கவும்! உங்கள் இமாமின் மத்ஹபை உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்! நான்கு மத்ஹபுகளில் உங்களுக்கு விருப்பமானதை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம். ஆனால் மத்ஹபுகளின் வசதிகளை (ருக்ஸாக்கள்) சேகரிப்பது, அதாவது 'தல்ஃபிக்'[2] (1) எனப்படும் மத்ஹபுகளை ஒன்றிணைப்பது அனுமதிக்கப்பட்டதல்ல.

---

[1] இமாம் முஹம்மத் கஸ்ஸாலி ஹி.505 [கி.பி 1111] இல் துஸ் நகரில் மரணமடைந்தார்.

[2] 'தல்ஃபீக்' என்றால், '(நான்கு) மத்ஹப்களில் உள்ள எளிதான வழிமுறைகளை ஒருங்கிணைத்து அல்லது கலந்து, அந்த மத்ஹப்களில் எதற்கும் பொருந்தாத வகையில் ஒரு செயலைச் செய்தல்' எனப் பொருள்படும். ஒரு நபர் நான்கு மத்ஹபுகளில் ஒன்றின் படி இஸ்லாமிய நடைமுறையைச் செய்ததன் பிறகு, அதாவது அந்த மத்ஹபில் அவரது செயல்பாடு ஸஹீஹ் (செல்லுபடியாகும், பொருத்தமானது) என்ற பிறகு, மற்ற மூன்று மத்ஹபுகளிலும் அந்தச் செயல் ஸஹீஹ்; ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்க வேண்டும் என்ற பார்வையில் அவற்றில் இடப்பட்டுள்ள நிபந்தனைகளை அவர் மேலதிகமாக

"ஹதீஸ்-ஷரீஃப்களை நன்கு படித்து புரிந்து கொள்ளக்கூடிய ஒரு முஸ்லிம் தனது மத்ஹபின் ஆதாரமான ஹதீஸ்-ஷரிஃப்களைக் கற்றுக் கொள்ள வேண்டும், பின்னர் ஹதீஸ்-ஷரீஃப்களால் பாராட்டப்பட்ட செயல்களைச் செய்து, தடைசெய்யப்பட்ட செயல்களைத் தவிர்த்து வாழ வேண்டும். அத்துடன் அவர் இஸ்லாமிய மார்க்கத்தின் மகத்துவம், ரஸூலுல்லாஹ்வின் 'ஸல்லல்லாஹு தஆலா 'அலைஹி வஸல்லம்' மற்றும் அல்லாஹு தஆலாவின் பெயர்கள் மற்றும் பண்புகளின் பரிபூரணம், ரஸூலுல்லாஹ்வின் வாழ்க்கை, அவரது நற்பண்புகள் மற்றும் அற்புதங்கள், இந்த உலக ஒழுங்கு மற்றும் மறுமை வாழ்வு, எழுப்பப்படல், தீர்ப்பு, சுவர்க்கம் மற்றும் நரகம், வானவர்கள், ஜின்கள், பண்டைய உம்மாக்கள் - சமூகங்கள், நபிமார்கள் மற்றும் அவர்களின் வேத நூல்கள், ரஸூலுல்லாஹ் மற்றும் குர்ஆன் அல்-கரீம் ஆகியவற்றின் தனித்துவமான மேன்மைகள், அவரது ஆல் (நேரடி உறவினர்கள்) மற்றும் அவரது ஸஹாபாவின் வாழ்க்கை வரலாறு, இறுதி நாளின் முன்னறிவிப்புகள், இம்மை மற்றும் மறுமை தொடர்பான பல தகவல்களையும் கற்றுக்கொள்ள வேண்டும். ரஸூலுல்லாஹ்வின் ஹதீஸ்-ஷரீஃப்களில் இம்மை மற்றும் மறுமை தொடர்பான அனைத்துத் தகவல்களும் திரட்டப்பட்டுள்ளன.

"ஹதீஸ்களில் இருந்து பெறப்படாத இஸ்லாத்தின் சட்ட விதிகள் பயனற்றவை எனச் சொல்பவர்கள் எவ்வளவு அறிவீனர்கள் என்பது இங்கே நாம் எழுதியிருப்பது புரியும் போது தெளிவாக விளங்கும். எண்ணற்ற அம்சங்கள் இடம்பெற்றுள்ள ஹதீஸ்களுக்கு மத்தியில், 'இபாதாத் மற்றும் முஆமலாத்' என்பவற்றைப் போதிக்கும் ஹதீஸ்கள் மிகக் குறைவு. சில அறிஞர்களின் கூற்றுப்படி, சுமார் ஐந்நூறு உள்ளன; [மீட்டப்படும் ஹதீஸ்கள் உட்பட, மூவாயிரத்திற்கு மேல் இல்லை.] அஇம்மத் அல்-மதாஹிப் எனப்படும் நான்கு இமாம்களில் எவரும் அந்த சிறு தொகை ஹதீஸ்களில் ஒரு ஸஹீஹான ஹதீஸைக் கூட கேட்டிருக்க மாட்டார்கள் என்று ஊகிக்க முடியாது. அஇம்மத் அல்-மதாஹிப் எனப்படும் நான்கு இமாம்களில் ஒருவராலாவது ஒவ்வொரு ஸஹீஹ் ஹதீஸும் ஆதாரமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு முஸ்லிம் அவருடைய மத்ஹபில் உள்ள ஒரு குறிப்பிட்ட விடயம் ஒரு ஸஹீஹான ஹதீஸுக்குப் பொருத்தமற்றது என்று காண நேர்ந்தால் அவர் அந்த ஹதீஸின் அடிப்படையில் அமைந்த மற்றொரு மத்ஹபைப் பின்பற்ற வேண்டும். ஒருவேளை அவருடைய சொந்த மத்ஹபின் இமாமும் இந்த ஹதீஸைப் பற்றி கேள்விப்பட்டிருக்கலாம், ஆனால் அவர் புரிந்துகொண்ட மற்றொரு ஹதீஸைப் பின்பற்றுவது ஸஹீஹ் என்பதற்கு நெருக்கமானதாகத் தோன்றியிருக்கலாம் அல்லது பிற்காலத்தில் [நபியவர்களால் கூறப்பட்டதாக], முந்தையதை ரத்துசெய்வதாக அல்லது முஜ்தஹித்கள் அறிந்த வேறு சில காரணங்களுக்காக, அவர் முந்தைய ஹதீஸை ஆதாரமாக எடுத்துக் கொள்ளவில்லை. முந்தைய ஹதீஸ் ஸஹீஹ் என்பதை புரிந்து கொண்ட ஒரு முஸ்லிம் ஹதீஸுக்குப் பொருந்தாத தனது சொந்த மத்ஹபின் இஜ்திஹாதை விட்டுவிட்டு ஹதீஸைப் பின்பற்றுவது நல்லது, இருப்பினும், இந்த விடயத்தில் அவர் அந்த ஹதீஸை இஜ்திஹாதில் பயன்படுத்திய மற்றொரு மத்ஹபைப் பின்பற்ற வேண்டும். ஏனெனில், அந்த இரண்டாவது மத்ஹபின் இமாம், அந்த நபருக்குத் தெரியாத சட்ட விதிகளின் (அஹ்காம்) ஆவணங்களை அறிந்ததால், அந்த ஹதீஸின் மீது செயல்படுவதைத் தடுக்க எதுவும் இல்லை என்பதைக் கண்டறிந்தார். ஆயினும்கூட, அவர் தனது சொந்த மத்ஹபின்படி அந்த விடயத்தை மேற்கொள்வது அனுமதிக்கப்படுகிறது, ஏனெனில் அவரது சொந்த மத்ஹபின் இமாம் தனது இஜ்திஹாதில் உள்ள ஒரு சிறந்த ஆவணத்தை நம்பியிருந்தார் என்பதில் சந்தேகமில்லை. ஒரு முகல்லித் அந்த ஆவணத்தை அறியாமல் இருப்பதை இஸ்லாம் மன்னிக்கக் கூடியதாகக் கருதுகிறது. ஏனெனில், நான்கு மத்ஹபுகளின் இமாம்களில் எவரும் இஜ்திஹாதின் போது அல்குர்ஆனையும் சுன்னாவையும் பரிபூரணமாக அறிந்து வைத்திருத்தல் சாத்தியமில்லை. அவர்களின் மத்ஹபுகள் அல்குர்ஆன் மற்றும் சுன்னாவின் விளக்கங்களாகும். அவர்கள் அல்குர்ஆனில் உள்ள அர்த்தங்களையும் சட்ட விதிகளையும் முஸ்லிம்களுக்கான சுன்னாவையும் விளக்கினர். அவற்றை முஸ்லிம்கள் புரிந்துகொள்ளும் வகையில் விளக்கி, புத்தகங்களில் எழுதினர். அஇம்மத் அல்-மதாஹிப் 'ரஹிமஹுமுல்லாஹு தஆலா' அவர்களின் இந்தப் பணி இஸ்லாத்திற்கு மிகவும் மகத்தான சேவையாக அமைந்தது. அல்லாஹு தஆலா அவர்களுக்கு உதவாவிட்டால் அதைச்

அவதானிப்பது 'தக்வா' என்று அழைக்கப்படுகிறது, இது அதிக ஸவாப், (அதாவது மறுமையில் வெகுமதிகளை) பெற்றுத் தரும்.

செய்வதற்கு மனித சக்தி போதுமானதாக இருந்திருக்காது. ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்கள் உண்மையான நபி மற்றும் இஸ்லாம் உண்மையான மார்க்கம் என்பதற்கு இந்த மத்ஹபுகள் மிகச் சரியான சான்றுகளில் ஒன்றாகும்.

"எங்கள் அஇம்மத் அல்-மதாஹிபின் இஜ்திஹாத்களில் உள்ள வேறுபாடு புரூஃ அத்-தீன் தொடர்பான விடயங்களில், அதாவது ஃபிக்ஹ் விஷயங்களில் மட்டுமே இருந்தன. உஸூல் அத்-தீனைப் பொறுத்தவரை, அதாவது இஃதிகாத் அல்லது ஈமான் பற்றிய அறிவில் அவர்களுக்குள் எந்த கருத்து வேறுபாடும் இருக்கவில்லை. மார்க்கத்தில் இன்றியமையாததாக அறியப்பட்ட ஃபுரூவின் போதனைகளில் அவர்கள் ஒருவருக்கொருவர் வேறுபடவில்லை, மேலும் அவை தவத்தூர் வழியில் வந்த ஆவணங்கள் மூலம் தெரிவிக்கப்பட்ட ஹதீஸ்களிலிருந்து எடுக்கப்பட்டவை. புரூஃ 'அத்-தின் பற்றிய அறிவின் சில அம்சங்களில் மட்டுமே அவர்கள் வேறுபடுகிறார்கள். இந்த விஷயங்களின் ஆவணங்களின் சரியான தன்மையைப் புரிந்துகொள்வதில் உள்ள வேறுபாட்டிலிருந்து இது எழுந்தது. அவர்களுக்கிடையேயான இந்த சிறிய வித்தியாசம், உம்மாவின் மீதுள்ள [அல்லாஹு தஆலாவின்] கருணையாகும்; முஸ்லிம்கள் தாங்கள் விரும்பும் எந்த மத்ஹபைப் பின்பற்றுவதும் எளிதாகக் கருதுவதும் (ஜாஇஸ்) அனுமதிக்கப்படுகிறது. ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு தஆலா 'அலைஹி வஸல்லம்' இந்த வித்தியாசத்தை சுபசோபனமாக முன்னறிவித்தார், அவர் முன்னறிவித்தபடியே அது நடந்துள்ளது.

"இஃதிகாத் பற்றிய அறிவில், அதாவது நம்பிக்கை சார்ந்த உண்மைகளில் இஜ்திஹாதைப் பயன்படுத்துவது அனுமதிக்கப்படாது. அது வழிகேட்டுக்கும் பித்அத்களுக்கும் வழி வகுக்கும். அது ஒரு பெரும் பாவம். இஃதிகாத் தொடர்பான விடயங்களில் ஒரே ஒரு சரியான வழிதான் உள்ளது: அதுதான் அஹ்ல் அஸ்-ஸுன்னத் வல்-ஜமாஆ. ஹதீஸ் அஷ்-ஷரீபில் [அல்லாஹு தஆலாவின்] கருணை என்று அறிவிக்கப்பட்ட வேறுபாடு புரூஃ அல்லது அஹ்காமில் உள்ள வித்தியாசமாகும்.

"ஒன்றுக்கொன்று முறண்படும் ஒரு விடயத்தில் நான்கு மத்ஹபுகளின் தீர்ப்புகளில் ஒன்று மட்டுமே சரியானது. அந்த விடயத்தை சரியான வழியில் செய்பவர்களுக்கு இரண்டு ஸவாப்கள் வழங்கப்படும்; தவறான தீர்ப்புகளில் ஒன்றைப் பின்பற்றுபவர்களுக்கு ஒரு ஸவாப் வழங்கப்படும். மத்ஹப்களில் கருணை என்பது ஒரு மத்ஹபை விட்டுவிட்டு இன்னொன்றைப் பின்பற்றுவது அனுமதிக்கப்படுகிறது என்ற உண்மையைக் காட்டுகிறது. ஆனால் அஹ்லுஸ்ஸுன்னாவுக்குச் சொந்தமான நான்கைத் தவிர வேறு எந்த மத்ஹபையும் பின்பற்றுவது அனுமதிக்கப்பட்டதல்ல. ஸஹாபத் அல்-கிராம் அவர்களைப் பின்பற்றுவதும் அனுமதிக்கப்பட்டதல்ல. ஏனெனில் அவர்களின் மத்ஹபுகள் எழுத்து வடிவில் பதிவு செய்யப்படவில்லை; அத்துடன் அவை மறக்கப்பட்டுவிட்டன. அறியப்பட்ட நான்கு மத்ஹப்களைத் தவிர வேறு எந்த மத்ஹபைப் பின்பற்றுவதற்கும் இப்போது வாய்ப்பில்லை. இமாம் அபூபக்ர் அஹ்மத் அர்-ராஸி [ரஹிமஹுல்லாஹு தஆலா இறப்பு: ஹி. 370 (கி.பி. 980)], அவர்களும் கூட அஸ்-ஸஹாபத் அல்-கிராமைப் பின்பற்றுவது [நேரடியாக] அனுமதிக்கப்படாது என்று இஸ்லாமிய அறிஞர்களால் ஏகமனதாக அறிவிக்கப்பட்டது என்பதனை பதிவு செய்துள்ளார். மத்ஹப்கள், முஜ்தஹித்கள், குறிப்பாக நான்கு அஇம்மத் அல்-மதாஹிப்களின் மேன்மையையும், அவர்களின் மத்ஹபுகள் அல்குர்ஆன் மற்றும் சுன்னாவைத் தாண்டிச் செல்லவில்லை என்பதையும், அவர்கள் இஜ்மா மற்றும் கியாஸ்கள் மூலம் வெளிப்படுத்திய சட்ட விதிகள் அவர்களின் சொந்தக் கருத்துக்கள் அல்ல என்பதையும், மாறாக அவை அல்-குர்ஆன் மற்றும் சுன்னாவிலிருந்து எடுக்கப்பட்டவை என்பதையும் விளங்கிக் கொள்ள விரும்புவோர் இமாம் அப்துல் வஹ்ஹாப் அஷ்-ஷாரானியின் (ரஹிமஹுல்லாஹு தஆலா)."[1] அல்-மீஸான் அல்-குப்ரா

[1] யூஸுஃப் அன்-நப்ஹானி, ஹுஜ்ஜத்-அல்லாஹி 'அலா 'அல்-'ஆலமீன், ப. 771. மேற்கூறிய மேற்கோள், அரேபிய மூலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, மொழிபெயர்ப்பாளர் சேர்த்த வார்த்தைகள் எதுவும் இல்லை, அவர், எமது எல்லா நூல்களிலும் செய்தது போன்று, பிற நூல்களில் உள்ளவற்றையும் இங்கே அடைப்புக்குறிக்குள் இட்டு மொழிபெயர்க்கப்பட்ட உரையுடன் குழப்பிவிடாமல் தவிர்க்கிறார். ஹுஜ்ஜத்-அல்லாஹி 'அலா-அல்-ஆலமீனின் மேற்கூறிய பத்தியின் அரபு மூலமானது 1394 [1974] இல் இஸ்தான்புல்லில் அச்சுப்பதிவு மூலம் மீள்உருவாக்கம் செய்யப்பட்டது.

மற்றும் அல்-மீஸான் அல்-கித்ரிய்யா ஆகிய புத்தகங்களைப் படிக்க வேண்டும் என நான் பரிந்துரைக்கிறேன்.

"குர்ஆன் அல்-கரீம் 'மார்க்க அறிஞர்கள்' என்று கூறவில்லை எனச் சொல்வது சரியல்ல. அறிஞர்கள் ('உலமா') மற்றும் அறிவை (இல்ம்) புகழ்ந்து பல்வேறு ஆயத்கள் உள்ளன. ஹஸ்ரத் 'அப்துல்-கானி அன்-நப்லுஸீ [இறப்பு. ஹி.1143 (1731)] தனது அல்-ஹதீகாவில் பின்வருமாறு எழுதியுள்ளார்: "ஸுரா அல்-அன்பியாவின் 7ஆவது ஆயத்: ' திக்ர் (அறிவு) பெற்ற மனிதர்களிடம் உங்களுக்குத் தெரியாததைக் கேளுங்கள்.' 'திக்ர்' என்றால் 'அறிவு'. இந்த ஆயத் அல்-கரீமா அறியாதவர்களை அறிஞர்களைக் கண்டுபிடித்து அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளும்படி கட்டளையிடுகிறது." இது ஸுரத் அல்-ஆல இம்ரானின் ஏழாவது ஆயத் அல்-கரீமாவில் கூறப்பட்டுள்ளது: "அறிவை உடையவர்கள் மட்டுமே தெளிவற்ற ஆயத்களின் அர்த்தங்களைப் புரிந்துகொள்வார்கள்"; அதே ஸூராவின் 18 ஆவது ஆயத் அல்-கரீமாவில்: "அல்லாஹ் தஆலாவின் இருப்பும் தனித்துவமானவன் என்பதும் அறிவுடையவர்களால் புரிந்து கொள்ளப்பட்டு அறிவிக்கப்படுகிறது"; ஸுரத் அல்-கஸஸின் 81ஆவது ஆயத் அல்கரீமாவில்: "அறிவை உடையவர்கள் அவர்களிடம், 'உனக்கு வெட்கமே! நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்பவர்களுக்கு அல்லாஹ் தஆலா வழங்கும் வெகுமதிகள் உலக நன்மைகளைவிடச் சிறந்தவை'"; ஸூரத் ரூமின் 56 ஆவது ஆயத் அல் - கரீமாவில்: "அறிவும் நம்பிக்கையும் உடையவர்கள், 'ஆம், இதுதான் உலகில் நீங்கள் மறுத்த மீளெழுப்பப்படும் நாள்' என்று கூறுவார்கள்"; ஸுரத் இஸ்ராவின் 108வது ஆயத் அல் - கரீமாவில்: "அறிவு பெற்றவர்கள், அல்-குர்ஆன் அல்-கரிமை செவிமடுத்தவுடன், சிரம் பணிந்து, 'தனது வார்த்தையை மீறாத எம் அதிபதி குறைகள் அற்றவன்" என்று கூறுவார்கள்; "அல்குர்ஆன் அல்-கரீம் என்பது அல்லாஹ்வின் வார்த்தை"; ஸுரத் அங்கபூத்தின் 50 ஆவது ஆயத் அல் - கரீமாவில்: "அல்-குர்ஆன் அல்-கரீம் அறிவை உடையவர்களின் இதயங்களில் நிலைபெற்றுள்ளது"; ஸுரத் ஸபாவின் ஆறாவது ஆயத் அல் - கரீமாவில்: "அல்குர்ஆன் அல்கரீம் என்பது அல்லாஹ்வின் வார்த்தைகள் என்பதையும் அது (ஒருவரை) அல்லாஹ் தஆலாவின் அன்பை அடையச் செய்கிறது என்பதையும் அறிவு படைத்தவர்கள் அறிவார்கள்" ; ஸுரத் அல்-முஜாதலாவின் பதினொன்றாவது ஆயத் கரீமாவில்: "சொர்க்கத்தில் அறிவை உடையவர்களுக்கு உயர் பதவிகள் வழங்கப்படும்"; ஸூரத் அல் ஃபாதிரின் 27 ஆவது ஆயத் அல் - கரீமாவில், "அறிவு பெற்றவர்கள்தான் அல்லாஹ்வை அஞ்சக் கூடியவர்கள்", ஸுரத் அல்-ஹுஜுராத்தின் 14 ஆவது ஆயத் அல்-கரீமாவில்: "உங்களில் மிகவும் மதிப்புமிக்கவர் அல்லாஹ் தஆலாவை அதிகம் அஞ்சுபவரே." அதே நூலின் 365 ஆவது பக்கத்தில் மேற்கோள் காட்டப்பட்ட ஹதீஸ்களில் இது அறிவிக்கப்பட்டுள்ளது: "அல்லாஹ் தஆலா, மலக்குகள் மற்றும் அனைத்து உயிரினங்களும் மக்களுக்கு நல்லதைக் கற்பிப்பவருக்காக பிரார்த்தனை செய்கின்றனர்"; 'கியாமத் நாளில் முதலில் நபிமார்களும், பின்னர் அறிஞர்களும், பின்னர் தியாகிகளும் பரிந்து பேசுவார்கள்'; 'ஓ மனிதர்களே! அறிஞரின் பேச்சைக் கேட்டு அறிவு பெறலாம்' என்று அறிவாயாக; 'அறிவைக் கற்றறிக! அறிவைக் கற்றல் ஒரு 'இபாதா. ஆசிரியருக்கும் அறிவைக் கற்பவருக்கும் ஜிஹாதுக்குரிய வெகுமதி வழங்கப்படும். அறிவைப் போதிப்பது தர்மம் செய்வது போன்றது. அறிஞரிடமிருந்து அறிவைக் கற்றுக்கொள்வது நள்ளிரவில் நின்று வணங்குவதைப் போன்றது.'" குலாஸா என்ற ஃபத்வா நூலின் ஆசிரியர் தாஹிர் புஹாரி[1] கூறுகிறார்: "ஃபிக்ஹ் புத்தகங்களைப் படிப்பது இரவுகளில் நின்று வணங்குவதை விட அதிக ஸவாப் பலன்களைத் தருகிறது. ஏனெனில், பர்ள் மற்றும் ஹராம்களை ['ஆலிம்கள் அல்லது அவர்களின்] புத்தகங்களிலிருந்து கற்றுக்கொள்வது பர்ள் ஆகும். கற்றதை நிறைவேற்றுவதற்காக அல்லது மற்றவர்களுக்குக் கற்பிப்பதற்காக ஃபிக்ஹ் நூல்களைப் படிப்பது ஸலாத் அத்தஸ்பீஹ் செய்வதை விடச் சிறந்தது. இது ஒரு ஹதீஸ் அஷ்-ஷரீஃபில் அறிவிக்கப்பட்டுள்ளது: 'எல்லா மேலான வழிபாட்டுச் செயல்களை விடவும் அறிவைக் கற்பது அதிக ஸவாபை அளிக்கிறது, ஏனெனில் அது தனக்கும், ஒருவர் கற்பிப்பவர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும்'; 'மற்றவர்களுக்குக் கற்பிப்பதற்காகக் கற்றுக்கொள்பவர் -சத்தியவான்கள்- சித்தீக்களைப் போன்ற வெகுமதியைப் பெறுவார்.' இஸ்லாமிய அறிவை ஒரு ஆசிரியரிடமிருந்தும் நூல்களிலிருந்தும் மட்டுமே கற்றுக்கொள்ள முடியும். இஸ்லாமிய நூல்கள் மற்றும் வழிகாட்டிகள் தேவையற்றவை என்று

[1] தாஹிர் புஹாரி ஹி. 542 [கி.பி. 1147] இல் வபாத்தானார்.

கூறுபவர்கள் பொய்யர்கள் அல்லது ஸின்தீக்கள். அவர்கள் முஸ்லிம்களை ஏமாற்றி அழிவுக்கு இட்டுச் செல்கிறார்கள். மார்க்க நூல்களில் உள்ள அறிவு குர்ஆன் அல்-கரீம் மற்றும் ஹதீஸ் ஷரிஃப்களில் இருந்து பெறப்பட்டது." ஹதீகாவின்[1] மொழிபெயர்ப்பு இத்துடன் முடிகிறது.

அல்லாஹுத்தஆலா தனது இறைத்தூதர் "அலைஹிஸ்ஸலாம்" ஐ அனுப்பி வைத்தான். அதனால் இறைவனுடனான தொடர்பை மேற்கொண்டு குர்ஆன் அல்-கரீமைத் கற்பிக்கலானார். அஸ்-ஸஹாபத் அல்-கிராம் குர்ஆன் அல்-கரீமில் உள்ள அறிவை ரஸூலுல்லாஹ்விடம் இருந்து கற்றுக்கொண்டார்கள். அஸ்-ஸஹாபத் அல்கிராமிடமிருந்து இஸ்லாமிய அறிஞர்கள் அதைக் கற்றுக்கொண்டார்கள், அத்துடன் அவர்களின் புத்தகங்களிலிருந்து ன அனைத்து முஸ்லிம்களும் கற்றுக்கொண்டனர். இது ஹதீஸ் அஷ்-ஷரீப்களில் கீழ்வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது: "அறிவு ஒரு பொக்கிஷம். அதன் திறவுகோல் கேட்பதும் கற்றுக்கொள்வதுமாகும்"; "அறிவைக் கற்றுக்கொள்; அதனைக் கற்றுக்கொடு!" "எல்லாவற்றுக்கும் மூலாதாரம் உண்டு. தக்வாவின் மூலாதாரம் ஆரிஃப்களின் (ஞானிகளின்) இதயங்களாகும்." " அறிவைக் கற்பித்தல் பாவங்களுக்கான பரிகாரமாகும்."

அல்-இமாம் அர்-ரப்பானி 'ரஹ்மதுல்லாஹி தஆலா அலைஹி' தனது படைப்பான மக்தூபாத்தின் முதல் தொகுதியின் 193 ஆவது கடிதத்தில் பின்வருமாறு எழுதியுள்ளார்:

"ஒரு முகல்லஃப் நபர் (பருவமடையும் மற்றும் விவேகமான வயதில்) முதலில் தனது ஈமானை, தனது நம்பிக்கையை சரிசெய்ய வேண்டும். அதாவது, அஹ்ல் அஸ்-ஸுன்னத் வல்-ஜமாஆவின் அறிஞர்களால் எழுதப்பட்ட இஃதிகாத் (நம்பிக்கைக் கோட்பாடுகள்) பற்றிய அறிவைக் கற்றுக்கொண்டு, அவர்களின் போதனைகளின் படி அவர்களது நம்பிக்கையை சீர்செய்து கொள்ள வேண்டும். அல்லாஹு தஆலா அந்த மேன்மக்களுக்கு அவர்கள் செய்த பெரும் பணிகளுக்காக ஏராளமான வெகுமதிகளை வழங்குவானாக. ஆமீன். மறுமையில் வேதனையிலிருந்து இரட்சிப்பு என்பது இந்தப் பெரியவர்கள் சரியாகக் கண்டறிந்த அறிவைக் கற்றுக்கொள்வதையும் நம்புவதையும் மட்டுமே சார்ந்துள்ளது. [அவர்களின் வழியைப் பின்பற்றுபவர்கள் ஸுன்னி என்று அழைக்கப்படுகிறார்கள்.] ஒரு ஹதீஸ் ஷரீப்பில் ஒரு குழு நரகத்திலிருந்து காப்பாற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது, அவர்கள்தான் இந்த அறிஞர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் முஸ்லிம்கள். இந்த முஸ்லிம்கள் மட்டுமே ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு தஆலா' அலைஹி வஸல்லம்' அவர்களின் வழியையும் அவரது தோழர்களான 'ரழி- அல்லாஹு தஆலா அன்ஹும்' ஸஹாபாக்களையும் பின்பற்றும் உண்மையான முஸ்லிம்கள். குர்ஆன் அல்-கரீம் மற்றும் ஹதீஸ் அஷ்-ஷரீப்களிலிருந்து பெறப்பட்ட சரியான மற்றும் மதிப்புமிக்க அறிவு என்பது அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் அறிஞர்கள் குர்ஆன் அல்-கரீம் மற்றும் ஹதீஸ்-ஷரீப்களிலிருந்து பெற்றுக் கொண்ட அறிவாகும். ஏனெனில், முஸ்லிம் பெயர் தாங்கிய ஒவ்வொரு மதவெறி கொண்ட நபரும் தனது சொந்த மதவெறி நம்பிக்கைகள் குர்ஆன் அல்கரீம் மற்றும் ஹதீஸ் ஷரீப்களிலிருந்து எடுக்கப்பட்டதாகக் கூறுகின்றனர். தவறான கருத்துக்கள் மற்றும் பித்அத்துக்களைக் கொண்ட ஒவ்வொரு நபரும் தன்னை அல்குர்ஆனிற்கும் ஸுன்னாவிற்கும் ஒத்துதிசைவானவர்கள் எனக் கூறுகிறார்கள். குர்ஆன் அல்-கரீம் மற்றும் ஹதீஸ் அஷ்-ஷரீப்களில் இருந்து அனைவரும் புரிந்துகொள்வதும் முடிவு செய்வதும் சரியானதாக அமையாது என்பது இதிலிருந்து தெரிகிறது.

அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் துல்லியமான நம்பிக்கைக் கோட்பாட்டைக் கற்றுக்கொள்வதற்காக, ஒரு சிறந்த இஸ்லாமிய அறிஞரான ஹஸ்ரத் துர் புஷ்தி[2] என்பவரால் எழுதப்பட்ட அல்-முஃதமத் என்ற பாரசீக நூலை வாசிக்கவும். அது அஹ்ல் அஸ்-ஸுன்னா அறிஞர்களால் தெரிவிக்கப்பட்ட உண்மையான நம்பிக்கையை விளக்குகிறது. அந்நூல் மிகவும் மதிப்புமிக்கது. நூலில் கூறப்பட்டுள்ள கருத்து மிகத் தெளிவாக உள்ளது. அதனைப் புரிந்துகொள்வது எளிதானது. அந்த நூல் ஹி. 1410 [கி.பி 1989] இல் ஹகீகத் கிதாபவி (புத்தக நிலையம்) ஆல் அச்சிடப்பட்டது.

---

[1] ஹதீகா என்ற நூலின் ஆசிரியர் ஹி. 1143 [கி.பி 1731] இல் வபாத்தானார்.

[2] பத்ஹுல்லாஹ் பின் ஹஸன் துர் புஷ்டி, ஒரு ஹனபி பிக்ஹின் அறிஞராவார், ஹிஜ்ரி 661 இல் (கி.பி 1263) வபாத்தானார்.

மார்க்கத்தின் போதனைகளுக்கு ஏற்ப எமது நம்பிக்கையை சீர்செய்த பின், அஹ்ல் அஸ் ஸுன்னாவின் அறிஞர்களால் எழுதப்பட்ட ஃபிக்ஹ் புத்தகங்களிலிருந்து ஹலால்கள், ஹராம்கள், பர்ள்கள், வாஜிப்கள், ஸுன்னாக்கள், மந்தூப்கள் மற்றும் மக்ரூஹ்களை நாம் கற்றுக்கொண்டு கீழ்ப்படிய வேண்டும். இந்த மாபெரும் அறிஞர்களைப் புரிந்து கொள்ள முடியாத அறிவிலிகள் வெளியிடும் துர்ப்பாக்கிய நூல்களை நாம் படிக்கக் கூடாது. அஹ்ல் ஸுன்னாவின் நம்பிக்கைக்கு உடன்படாத நம்பிக்கை கொண்ட முஸ்லிம்கள் மறுமையில் நரகம் செல்வதில் இருந்து தப்ப முடியாது - அல்லாஹ் தஆலா நம்மைக் காப்பானாக! ஒரு முஸ்லிமின் நம்பிக்கை சரியானதாக இருந்தால், அவர் தவ்பா செய்யாவிட்டாலும் அவர் மன்னிக்கப்படலாம். அவர் மன்னிக்கப்படாவிட்டாலும், அவர் வேதனைக்குப் பிறகு நரகத்திலிருந்து காப்பாற்றப்படுவார். ஒருவரின் நம்பிக்கையை சரிசெய்வதுதான் முக்கிய விடயம். க்வாஜா 'உபைத்-அல்லாஹ் அல்-அஹ்ரார் [கத்தஸ்-அல்லாஹு தஆலா சிர்ராஹு-அல்-'அஸீஸ்', இறப்பு. சமர்கந்த், ஹி. 895. (கி.பி 1490)] கூறினார்: 'எனக்கு அனைத்து கஷ்ஃபுகளும், அனைத்து கராமாத்களும் வழங்கப்பட்டாலும், அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் நம்பிக்கையை நான் இழக்க நேர்ந்தால், நான் என்னை நாசமானதாகக் கருதுவேன். என்னிடம் கஷ்ஃப் அல்லது கராமா எதுவுமின்றி, ஏராளமான குறைபாடுகள் இருந்தாலும், எனக்கு அஹ்ல் அஸ்ஸுன்னாவின் நம்பிக்கை (மாத்திரம்) வழங்கப்பட்டிருந்தால், அப்போது நான் வருத்தப்பட மாட்டேன்.

"இன்று, இந்தியாவில் முஸ்லிம்கள் மிகவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இஸ்லாத்தின் எதிரிகள் ஒவ்வொரு திசையிலிருந்தும் தாக்குகிறார்கள். இன்று இஸ்லாத்திற்கு சேவை செய்வதற்காக ஒதுக்கப்படும் ஒரு நாணயத்திற்கான ஸவாப் வேறு சில நேரங்களில் வழங்கப்பட்ட ஆயிரக்கணக்கான நாணயங்களுக்கான ஸவாபை விட அதிகமானது. இஸ்லாத்திற்குச் செய்ய வேண்டிய மிகப்பெரிய சேவை, ஈமானையும் இஸ்லாத்தையும் போதிக்கும் அஹ்ல் அஸ்ஸுன்னாவின் நூல்களைப் பெற்று, அவற்றை கிராம மக்களுக்கும், இளைஞர்களுக்கும் பகிர்ந்தளிப்பதாகும். இந்த அதிர்ஷ்டத்தை வாய்க்கப் பெறும் ஒரு நபர் அது குறித்து மகிழ்ந்து, அல்லாஹ் தஆலாவுக்கு மனமார்ந்து நன்றி சொல்ல வேண்டும்; அவர் மிகப் பெரும் பாக்கியசாலியும் அதிர்ஷ்டசாலியுமாவார். இஸ்லாத்திற்கு சேவை செய்வது எப்பொழுதும் ஒரு நல்ல செயலாகும். ஆனால் இஸ்லாம் பலவீனமடைந்து வரும் இந்த நேரத்தில், பொய்கள் மற்றும் அவதூறுகள் மூலம் இஸ்லாத்தை அழிக்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போது, அஹ்ல் அஸ்ஸுன்னாவின் நம்பிக்கையைப் பரப்ப முயற்சிப்பது மிகவும் சிறந்த செயலாகும். ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபாக்களிடம் கூறினார்கள்: "நீங்கள் வாழும் இக்காலம், நீங்கள் அல்லாஹ் தஆலாவின் கட்டளைகள் மற்றும் தடைகளில் பத்தில் ஒன்பதிற்குக் கீழ்ப்படிந்தாலும் ஒன்றை மீறினால் நீங்கள் அழிந்து போவீர்கள்; வேதனைப்படுவீர்கள். உங்களுக்குப் பிறகு ஒரு காலம் வரும். அப்போது மக்கள் கட்டளைகள் மற்றும் தடைகளில் பத்தில் ஒன்றைக் கடைப்பிடிப்பவர்களாக இருப்பாராகள்; அவர்களும் இரட்சிக்கப்படுவார்கள்." [இந்த உண்மைகள் மிஷ்காத்துல் மஸாபீஹ், பாகம்: 1, 179ஆம் பகுதியிலும் திர்மிதி, கிதாப் அல்-பிதன், 79ஆம் பகுதியிலும் எழுதப்பட்டுள்ளன.] ஹதீஸ் அஷ்-ஷரீப் சுட்டிக்காட்டும் காலம் இதுதான். இஸ்லாத்தைத் தாக்குபவர்களை அறிந்து அவர்களை வெறுப்பதற்காக இறை நிராகரிப்பாளர்களுக்கு எதிராகப் போராடுவது அவசியமாகும்.[1] அஹ்லுஸ்ஸுன்னாவின் அறிஞர்களின் நூல்களையும் வார்த்தைகளையும் பரப்புவதற்கு, ஒருவர் கராமா வாய்க்கப் பெற்றவராகவோ அறிஞராகவோ இருக்க வேண்டியதில்லை. ஒவ்வொரு முஸ்லிமும் அதனைச் செய்யப் போராட வேண்டும். வாய்ப்பை நழுவ விடக்கூடாது. கியாமத் நாளில், ஒவ்வொரு முஸ்லிமும் இது குறித்து விசாரிக்கப்பட்டு, அவர்கள் ஏன் இஸ்லாத்திற்குச் சேவை செய்யவில்லை என்று கேட்கப்படும். இஸ்லாத்தைப் போதிக்கும் நூல்களை விநியோகிக்க முயலாதவர்களும், இஸ்லாமிய அறிவைப் பரப்பும் மக்களுக்கும் நிறுவனங்களுக்கும்

[1] படை மூலம் ஜிஹாத் (ஜிஹாத் கத்லீ) என்பது அரசால், அதன் இராணுவத்தால் உருவாக்கப்படுவதாகும். முஸ்லிம்கள் ஜிஹாத் செய்வது என்பது ராணுவ வீரர்களாக அவர்களுக்கு அரசு வழங்கிய கடமையாகும். ஜிஹாத் கத்லீயை விட பேச்சு மற்றும் எழுத்து மூலம் உருவாக்கப்படும் ஜிஹாத் கவ்லீ சிறந்தது என 65ஆவது கடிதத்திலும் எழுதப்பட்டுள்ளது.

உதவாதவர்களும் மிகவும் கசப்பான வேதனைக்கு உள்ளாவார்கள். மன்னிப்பு அல்லது சாக்குப்போக்கு ஏற்றுக்கொள்ளப்படாது. நபிமார்கள் அலைஹிமுஸ்ஸலாம் - மிக உயர்ந்தவர்களாகவும், மனிதர்களில் மேன்மை மிக்கவர்களாகவும் இருந்தாலும், அவர்கள் தங்கள் சொந்த சுகத்தை ஒருபோதும் கவனிக்கவில்லை, அல்லாஹ் தஆலாவின் மார்க்கத்தைப் பரப்புவதில், முடிவில்லாத பேரின்பத்திற்கான வழியில், அவர்கள் இரவும் பகலும் பாடுபட்டார்கள். மக்கள் அற்புதங்களை நிகழ்த்துமாறு கேட்டதற்கு, அல்லாஹ் தஆலாதான் அற்புதங்களை நிகழ்த்துபவன் என்றும், அல்லாஹ் தஆலாவின் மார்க்கத்தைப் போதிப்பதே அவர்களின் கடமை என்றும் பதிலளித்தார்கள். அவர்கள் இந்த நோக்கத்திற்காக வேலை செய்ததற்கு ஏற்ப, அல்லாஹ் தஆலா அவர்களுக்கு உதவி, அற்புதங்களை நிகழ்த்தினான். நாமும், அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்களின் ரஹிமஹுமுல்லாஹ் தஆலா நூல்களையும் பதிவுகளையும் பரப்பி, இளைஞர்களுக்கும் நமது நண்பர்களுக்கும் காஃபிர்களின் கீழ்த்தரத்தை எடுத்துரைத்து, எதிரிகள் மற்றும் முஸ்லிம்களை துன்புறுத்தி, அவர்கள் மீது அவதூறு சொல்பவர்களின் பொய்களை அம்பலப்படுத்த வேண்டும்.[1] செல்வம், அதிகாரம் அல்லது தொழில் மூலம் இந்த நோக்கத்திற்காக உழைக்காதவர்கள் வேதனையிலிருந்து தப்ப மாட்டார்கள். இந்த நோக்கத்திற்காக உழைக்கும் போது ஏற்படும் துன்பம் மற்றும் துன்புறுத்தல்கள் என்பவை மிகுந்த மகிழ்ச்சியாகவும் பெரிய இலாபமாகவும் கருதப்பட வேண்டும். நபிமார்கள் "அலைஹிமுஸ்ஸலாம்" அல்லாஹ் தஆலாவின் கட்டளைகளை மக்களுக்கு எத்திவைக்கும் போது, அறியாமை கொண்ட மற்றும் கீழ்த்தரமான மக்களின் தாக்குதலுக்கு உள்ளானார்கள். மிகவும் துன்பப்பட்டார்கள். அம் மா மனிதர்களில் மிகப் பெரியவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லாஹ் தஆலாவின் அன்புக்குரியவரான முஹம்மத் "அலைஹிஸ்ஸலாம்", "எனக்கு ஏற்பட்ட கொடுமைகளை எந்த நபியும் அனுபவித்ததில்லை." என்று கூறினார்.

பூமியில் வாழும் அனைத்து முஸ்லிம்களுக்கும் சரியான வழியைக் காட்டிய அஹ்ல் அஸ்ஸுன்னா அறிஞர்களும் முஹம்மத் நபியின் மார்க்கத்தை எந்த மாற்றமும் இன்றி இடைச் செருகலும் இன்றி கற்க வழிகாட்டியவர்களும் யாரெனில் இஜ்திஹாத் தரத்தை எட்டிய நான்கு மத்ஹபுகளின் அறிஞர்கள் ஆவர். அவர்களில் முதன்மையானவர் அல்-இமாம் அல்-அஃலம் அபூ ஹனீபா நுஃமான் இப்னு தாபித் 'ரஹிம-அல்லாஹ் தஆலா' ஆவார், அவர் மிகப்பெரிய இஸ்லாமிய அறிஞர்களில் ஒருவர். அவர் அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் தலைவராக ஆனார். அவரது வாழ்க்கை வரலாறு துருக்கிய நூல்களான 'ஸீஎதத் ஐ இபாதிய்யா' மற்றும் பைதலி பில்கிலர் ஆகியவற்றில் எழுதப்பட்டுள்ளது.[2] அவர் ஹி.80 [கி.பி 699] இல் கூபாவில் பிறந்தார். ஹி.150 [கி.பி 767] இல் பக்தாதில் ஷஹீதானார்.

இரண்டாவது, பெரும் அறிஞரான இமாம் மாலிக் இப்னு அனஸ் 'ரஹிம-அல்லாஹ் தஆலா'. அவர் எண்பத்தொன்பது ஆண்டுகள் வாழ்ந்ததாக இப்னு ஆபிதீன் கூறுகிறார். இவரது பாட்டன் மாலிக் பின் அபீ ஆமிர் ஆவார்.

மூன்றாவது, அனைத்து இஸ்லாமிய அறிஞர்களாலும் போற்றப்பட்ட இமாம் முஹம்மத் இப்னு இத்ரீஸ் அஷ்-ஷாபிஈ 'ரஹிம-அல்லாஹ் தஆலா' ஆவார். அவர் பாலஸ்தீனத்தின் காஸாவில் ஹி.150 [கி.பி 767] இல் பிறந்த அவர் ஹி.204 [கி.பி 820] இல் எகிப்தில் காலமானார் .

---

[1] அவர்களிடம் சொல்வது வதந்தியாக இருக்காது, மாறாக அல்-அம்ரு பில்-மஃரூப் ஆகும். ஒவ்வொரு முஸ்லிமும் அஹ்ல் அஸ்ஸுன்னாவின் நம்பிக்கைக் கோட்பாட்டைக் கற்றுக் கொள்ள வேண்டும். அத்துடன் அவர் செல்வாக்கு செலுத்தக்கூடிய மக்களுக்கு அதைக் கற்பிக்க வேண்டும். அஹ்லுஸ்ஸுன்னாவின் அறிஞர்களின் வார்த்தைகளை விளக்கும் நூல்கள், பத்திரிகைகள் மற்றும் ஆக்கங்கள் இளம் சகோதரர்களுக்கும் தெரிந்தவர்களுக்கும் வாங்கி அனுப்பப்பட வேண்டும். அவர்கள் அவற்றைப் படிக்க நாம் கடுமையாகப் பாடுபட வேண்டும். அவ்வாறே, இஸ்லாத்தின் எதிரிகளின் உண்மையான நோக்கங்களை வெளிப்படுத்தும் நூல்களும் விநியோகிக்கப்பட வேண்டும்.

[2] அத்துடன் *'The Sunni Path - ஸுன்னி வழி'* என்ற நூலின் முதல் அத்தியாயத்திலும், *Endless Bliss - முடிவில்லா ஆனந்தம்* என்ற நூலின் முதல் பாகத்தின் ஐந்தாவது மற்றும் ஆறாவது அத்தியாயங்களிலும் உள்ளது.

நான்காவது, இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் 'ரஹிம-அல்லாஹு தஆலா' ஆவார், இவர் ஹி.164 [கி.பி 780] இல் பாக்தாத்தில் பிறந்து, ஹி. 241 [கி.பி 855] இல் காலமானார். அவர் இஸ்லாமியக் கட்டிடத்தின் முக்கியத் தூணாக மதிக்கப்படுகிறார்.

இன்று, இந்த நான்கு பெரிய இமாம்களில் ஒருவரைப் பின்பற்றாதவர் பெரும் ஆபத்தில் இருக்கிறார். அவர் மதவெறியில் இருக்கிறார். அவர்களைத் தவிர இன்னும் பல அஹ்ல் அஸ்ஸுன்னா அறிஞர்களும் நல்ல மத்ஹபுகளைக் கொண்டிருந்தனர். ஆனால் நாளடைவில் அவர்களின் மத்ஹபுகள் மறக்கப்பட்டு நூல்களுக்கு உத்தரவாதமளிக்க முடியாமல் போனது. உதாரணமாக, அல்-புகஹா' அஸ்-ஸபா', 'உமர் இப்னு அப்துல்-'அஸீஸ், ஸுஃப்யான் இப்னு உயய்னா,[1] இஸ்ஹாக் இப்னு ராஹவைஹ், தாவூத் அத்-தா' என அழைக்கப்பட்ட ஏழு பெரிய மதீனா அறிஞர்கள், ' அமீர் இப்னு ஷராஹில் அஷ்-ஷாபி, லைத் இப்னு சாத், 'அமாஷ், முஹம்மது இப்னு ஜெரிர் அத்-தபரி, சுஃப்யான் அத்-தவ்ரி (இறப்பு. பஸரா, ஹிஜ்ரி 161 [கி.பி. 778]) மற்றும் 'அப்து அர்-ரஹ்மான் அவ்ஸாஈ' ரஹிமஹுமும் அல்லாஹு தஆலா' ஆகியோரும் அவர்களில் அடங்குவர்.

அனைத்து ஸஹாபத் அல்-கிராம் 'ரழி-அல்லாஹு தஆலா 'அன்ஹும் அஜ்மஈன்'களும் வழிகாட்டுதலுக்கான "நட்சத்திரங்கள்" ஆவார்கள். அவர்களில் யாரேனும் ஒருவர் முழு உலகத்தையும் சரியான வழியில் வழிநடாத்தப் போதுமானவராக இருப்பார். அவர்கள் முஜ்தஹித்கள் ஆவார்கள், ஒவ்வொருவரும் அவரவர் மத்ஹபைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். அவர்களின் பெரும்பாலான மத்ஹபுகள் ஒரே மாதிரியாக இருந்தன. இன்னும், அவர்களின் மத்ஹபுகள் நூல்களாக எழுதப்படாததால், அவற்றை நாம் பின்பற்றுவது சாத்தியமில்லை. நான்கு இமாம்களின் மத்ஹபுகள், அதாவது, நம்பிக்கை சார்ந்தவை மற்றும் செயல் சார்ந்தவை பற்றி அவர்கள் போதித்தவை, அவர்களின் மாணவர்களால் ஒன்று திரட்டப்பட்டு விளக்கப்பட்டன. அவர்கள் நூல்களை வாசிப்பதில் உறுதியான ஈடுபாடு கொண்டோராக இருந்தனர். இன்று ஒவ்வொரு முஸ்லிமும் மேற்கூறிய நான்கு இமாம்களில் ஒருவரின் மத்ஹபைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். அத்துடன் அந்த மத்ஹபின்படி இபாதாத்தை நிறைவேற்றி வாழ வேண்டும்.[2]

இந்த நான்கு இமாம்களின் மாணவர்களில், இரண்டு அறிஞர்கள் ஈமானின் போதனைகளைப் பரப்புவதில் மிக உயர்ந்த தரங்களை எட்டினர். இவ்வாறு, இஃதிகாத் அல்லது ஈமானில் இரண்டு மத்ஹபுகள் தோன்றின. குர்ஆன்-அல்-கரீம் மற்றும் ஹதீஸ் அஷ்-ஷரீப்களின்படி சரியான நம்பிக்கை யாதெனில், ஈடேற்றம் பெறும் கூட்டமான அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் நம்பிக்கையை பூமியில் பரப்பிய இந்த இரண்டு இமாம்கள் காட்டிய நம்பிக்கை மாத்திரமேயாகும். அவர்களில் ஒருவர் அபுல் ஹஸன் அல்-அஷ்அரி 'ரஹிம-அல்லாஹு தஆலா' ஆவார். அவர் ஹி. 226 [கி.பி 879] இல் பஸராவில் பிறந்தார். ஹி. 330 [கி.பி 941] இல் பக்தாதில் வபாத்தானார்.

மற்றவர் அபூ மன்சூர் அல்-மாதுரீதி ரஹிம-அல்லாஹு தஆலா' ஆவார். இவர் ஹி. 333 [கி.பி 944] இல் சமர்க்கந்தில் வபாத்ததானார். ஈமானில், ஒவ்வொரு முஸ்லிமும் இந்த இரண்டு பெரிய இமாம்களில் ஒருவரைப் பின்பற்ற வேண்டும்.

அவ்லியாக்களின் பாதைகள் (துருக்) சரியானவை. அவர்கள் இஸ்லாத்தில் இருந்து சிறிதும் விலகவில்லை."[3] அவ்லியாக்கள் கராமத்தை வைத்திருக்கிறார்கள். அவர்களின் அனைத்து

---

[1] ஸுஃப்யான் பின் உயய்னா ஹி.198 [கி.பி 813] இல் மக்கா நகரில் வபாத்தானார்.

[2] இந்த நான்கு மத்ஹபுகளில் ஒன்றைப் பின்பற்ற விரும்பாதவர் அஹ்ல் அஸ்-ஸுன்னாவில் உள்ளவர் அல்ல.

[3] ஒவ்வொரு நூற்றாண்டிலும் தமது உலக நன்மைகளுக்காக மதத்தை சுரண்டிய பொய்யர்களும் மதவெறியர்களும் வாலிகள், முர்ஷித்கள் அல்லது மார்க்க ரீதியாக அதிகாரமுள்ள மனிதர்களின் வேடமணிந்து தோன்றினார்கள். இன்றும் ஒவ்வொரு தொழிலிலும், ஒவ்வொரு கைத்தொழில் துறையிலும், ஒவ்வொரு உத்தியோகப் பதவியிலும் தீயவர்கள் இருக்கிறார்கள். பிறருக்குத் தீங்கு விளைவிப்பதில் தமது நலவுகளையும் இன்பங்களையும் தேடும் நபர்களைப் பார்க்கும்போது, எல்லாத் தொழில்களையும், அவர்களுடன் கலந்திருப்பவர்களையும் களங்கப்படுத்துவது அநீதி அல்லது அறியாமையாகும். அது பிரிவினைவாதிகளுக்கு உதவும். இதன் காரணமாக, மதத்

கராமத்துகளும் சரியானவை மற்றும் உண்மையானவை. அல்-இமாம் 'அப்துல்லாஹ் அல்-யாஃபி' (இறப்பு. மக்கா, ஹி.768 [கி.பி1367]) கூறினார்: "கவ்த் அத்-தகலைன் மௌலானா அப்துல்-காதிர் அல்-ஜீலானி 'கத்தஸ்-அல்லாஹு தஆலா சிர்ராஹுல்-அஸீஸ்[1] அவர்களின் கராமத் மிகவும் பிரபலமானது; அது தவாதுர் (பரவலாக அறியப்பட்டதாகவும்) நம்பகத்தன்மைக்காக ஸனத் (ஆவண ஆதாரம்) கொண்டதாகவும் உள்ளது."

தொழுகையை நிறைவேற்றும் ஒருவர் வெளிப்படையாகவும் தரூரா (வலுவான தேவை அல்லது நிர்ப்பந்தம்) இல்லாமலும், இறை நிராகரிப்பை ஏற்படுத்தும் ஒரு வார்த்தை அல்லது எதையாவது பயன்படுத்தினால், அவர் சொல்வதிலிருந்து இறைநிராகரிப்பைப் புரிந்து கொள்ளாதவரை, மற்றவர்களைப் பின்பற்றி, அவரை "இறைநம்பிக்கை அற்றவர்" என்று அழைப்பது அனுமதிக்கப்படாது. அவர் காபிராகத்தான் இறந்தார் என்பது உறுதியாகத் தெரிந்தாலொழிய நாம் அவர் மீது சபிக்க முடியாது. காபிரைக் கூட சபிப்பது அனுமதிக்கப்படாது. அந்த வகையில், நாம் யஸீதை சபிக்காமல் இருப்பது நல்லது.

5. ஈமானின் ஆறு அடிப்படைகளில் ஐந்தாவது "இறுதி நாளை (அல்-யவ்ம் அல்-ஆகிர்) நம்புவதாகும்." இது ஒரு நபர் மரணித்த நாளில் தொடங்கி இறுதி நாள் வரை தொடர்கிறது. "இறுதி நாள்" என்று அழைக்கப்படுவதற்குக் காரணம், அதற்குப் பிறகு வருவதற்கு இரவு இல்லை என்பதால் அல்லது அது உலக வாழ்வின் பிறகு வருகிறது என்பதனால் ஆகும். இந்த ஹதீஸ் ஷரீப்பில் குறிப்பிடப்பட்டுள்ள "நாள்" என்பது நாமறிந்த பகல் அல்லது இரவு போன்றது அல்ல. இது ஒரு காலத்தைக் குறிக்கிறது. இறுதி நாள் எப்போது நிகழும் என்று தெரிவிக்கப்படவில்லை. அதன் நேரத்தை யாராலும் கணிக்க முடியவில்லை. ஆயினும்கூட, நமது நபி 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' கீழ்வரும் அதன் பல முன் அறிகுறிகளையும் முன் நிகழ்வுகளையும் சுட்டிக்காட்டினார்:

ஹஸ்ரத் அல்-மஹ்தி[2] வருவார்; ஈஸா அலைஹிஸ்-ஸலாம் வானத்திலிருந்து டமஸ்கஸுக்கு இறங்குவார்; அத்-தஜ்ஜால் வெளிப்படுவான்;[3] யஃஜூஜ், மஃஜூஜ்[1] என்று அழைக்கப்படுபவர்கள்

துரோகிகள் மற்றும் அறியாமையிலுள்ள, தவறான துருக் (வழிகள், பாதைகள்) மீதுள்ள மனிதர்களின் விளைவாக, காலாகாலம் தமது கண்ணியமிக்க சேவைகளால் வரலாற்றை நிரப்பியுள்ள இஸ்லாமிய அறிஞர்கள் அல்லது தஸவ்வுப் சார்ந்த பெரியார்களைப் பற்றி நாம் தவறாகப் பேசக்கூடாது. அவதூறு பேசுபவர்கள் அநியாயக்காரர்கள் என்பதை உணர வேண்டும்.

[1] *அப்துல் காதிர் ஜீலானி ஹி. 561 [கி.பி 1161] இல் பாக்தாதில் வபாத்தானார்.*

[2] *ஹஸ்ரத் அல்-மஹ்தி நமது அருள்பொழியப்பட்ட முஹம்மத் நபி 'அலைஹிஸ்-ஸலாம்' அவர்களின் வழித்தோன்றலாக இருப்பார், அவர் பெயர் முஹம்மத். அவரது தந்தையின் பெயர் அப்துல்லாஹ். அவர் முஸ்லிம்களை தலைமை தாங்கி, இஸ்லாத்தை வலுப்படுத்தி, அதனை எல்லா இடங்களிலும் பரப்புவார். அவர் 'ஈஸா அலைஹிஸ்ஸலாமை' சந்திப்பார், அவர்கள் இருவரும் ஒன்றாகப் போராடி அத்-தஜ்ஜாலைக் கொல்வார்கள். அவரது காலத்தில், முஸ்லிம்கள் எல்லா இடங்களிலும் குடியேறி, வசதியாகவும், நிம்மதியாகவும் வாழ்வார்கள்.*

[3] *அத்-தஜ்ஜால் (கிறிஸ்தவர்களால் என்டிகிறிஸ்ட் என்று அழைக்கப்படுகிறான், அவன் உலகம் முழுவதும் பிரபலமடைவான் என்பதால் அவர் மஸீஹ் என்றும் அழைக்கப்படுவான்) வடக்கு ஈரானின் குராசானின் யூதரின் மகனாகவும், எண்ணிலடங்காத படை வீரர்களுக்குக் கட்டளையிடும் இஸ்லாத்தின் எதிரியாகவும் இருப்பான். அவன் முஸ்லிம்களைக் கொன்று, மத்திய கிழக்கில் குழப்பத்தையும் சீர்கேட்டையும் ஏற்படுத்துவான். அதிகமாக இரத்தமோட்டிய பிறகு, அவன் ஹஸ்ரத் அல்-மஹ்தியால் கொல்லப்படுவான். அத்-தஜ்ஜாலின் பெயர் இப்னு அஸ்-ஸையாத் என 'அப்துல்-வஹ்ஹாப் அஷ்-ஷாரானியினால் 'முக்தஸரு தஸ்கிரத் அல்-குர்துபியில்' குறிப்புகளுடன் எழுதப்பட்டுள்ளது (2வது பதிப்பு, இஸ்தான்புல், ஹி.1302).*

உலகம் முழுவதையும் குழப்பத்தில் ஆழ்த்துவார்கள்; சூரியன் மேற்கில் உதிக்கும்; பயங்கர பூகம்பங்கள் ஏற்படும்; மத அறிவு மறந்துவிடும்; தீமையும் கெடுதியும் பெருகும்; மதச்சார்பற்ற, ஒழுக்கக்கேடான, நேர்மையற்ற மக்கள் தலைவர்களாகுவார்கள்; அல்லாஹ் தஆலாவின் கட்டளைகள் தடைசெய்யப்படும்; எங்கும் ஹராம்கள் செய்யப்படும்; யமனில் இருந்து நெருப்பு வெளிப்படும்; கடலும் மலைகளும் துண்டு துண்டாகப் பிளவுபடும்; சூரியனும் சந்திரனும் இருண்டுவிடும்; கடல்கள் ஒன்றோடொன்று கலந்து, கொதித்து, வற்றிப் போய்விடும்.

பாவச் செயல்களைச் செய்யும் ஒரு முஸ்லிம் பாஸிக் என்று அழைக்கப்படுகிறார். பாஸிக்கான மக்களும் அனைத்துக் காஃபிர்களும் அவர்களின் மண்ணறைகளில் வேதனை (அதாப்) செய்யப்படுவார்கள். இந்த உண்மைகளை கண்டிப்பாக நம்ப வேண்டும். மரணத்தின் பிறகு, இறந்தவர் அறியப்படாத வாழ்க்கைக்குத் திரும்புவார், அத்துடன் அவர் அருள்களை அனுபவிப்பார் அல்லது வேதனைக்கு ஆளாவார். ஹதீஸ் அஷ்-ஷரீப்களில் அறிவிக்கப்பட்டுள்ளதன் படி, முன்கர் மற்றும் நகீர் என்ற இரண்டு மலக்குகளும் பயங்கரமான இருவரின் தோற்றத்தில் அவரது மண்ணறைக்கு வந்து அவரிடம் கேள்வி கேட்பார்கள்.

மண்ணறையில் உள்ள கேள்விகள் சில அறிஞர்களின் கூற்றுப்படி ஈமானின் சில அடிப்படையான பகுதிகள் பற்றியனவாகவும், சில அறிஞர்களின் கூற்றுப்படி ஈமான் முழுவதும் சம்பந்தமானவையாகவும் உள்ளன. இதன் காரணமாக, பின்வரும் கேள்விகளுக்கான பதில்களை நம் பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டும்: உங்கள் ரப் (அல்லாஹ்) யார்? உங்கள் மார்க்கம் என்ன? நீங்கள் யாருடைய உம்மத்தை (எந்த நபியின் சமுதாயத்தை) சேர்ந்தவர்? உங்கள் புனித நூலின் பெயர் என்ன? உங்கள் கிப்லா என்ன? ஈமானிலும் இபாதத்திலும் (அல்லது அமல்) உங்கள் மத்ஹபுகள் என்ன? என்பவையாகும். இவற்றுக்கு ஸுன்னி அல்லாதவர்கள் சரியாகப் பதிலளிக்க மாட்டார்கள் என்று தஸ்கிரத் அல்-குர்துபியில்[2] எழுதப்பட்டுள்ளது. துல்லியமான பதில்களைக் கொடுப்பவர்களின் மண்ணறைகள் பெரிதாகி சுவர்க்கத்தை நோக்கி ஒரு ஜன்னல் திறக்கப்படும். தினமும் காலையிலும் மாலையிலும் அவர்கள் சுவர்க்கத்தில் தமது இருப்பிடங்களைப் பார்ப்பார்கள், வானவர்கள் அவர்களுக்கு உபகாரம் செய்து, அவர்களுக்கு நற்செய்தி கூறுவார்கள். துல்லியமாகப் பதிலளிக்க முடியாதவன் இரும்புக் கோல்களால் கடுமையாக தாக்கப்படுவான், மனித இனம் மற்றும் ஜின்கள் தவிர அனைத்து உயிரினங்களும் அவனது கூக்குரலைக் கேட்கும், அவனுடைய மண்ணறை மிகவும் இறுக்கமாகிவிடும். அவனுடைய எலும்புகள் பின்னிப் பிணைந்து போவது போல் அவன் உணர்வான். நரகை நோக்கி ஒரு ஓட்டை திறக்கப்படும், காலையிலும் மாலையிலும் அவன் நரகத்தில் அவனுடைய இடத்தைப் பார்ப்பான், அவன் மீளெழுப்பப்படும் நாள் வரை மண்ணறையில் கசப்பான வேதனையை அனுபவிப்பான். மரணத்திற்குப் பின்னரான வாழ்வில் நம்பிக்கை வைப்பது அவசியம். சதை மற்றும் எலும்புகள் அழுகி மண்ணாகவும் வாயுவாகவும் மாறிய பிறகு, அவை மீண்டும் ஒன்று சேரும்; ஆத்மாக்கள் தாங்கள் சேர்ந்த உடல்களுக்குள் நுழையும், அனைவரும் தமது

---

[1] குர்ஆன் அல்-கரீமில் யஃஜூஜ் மற்றும் மஃஜூஜ் (கோக் மற்றும் மாகோக்) இரண்டு தீய மக்கள் கூட்டம் என்று எழுதப்பட்டுள்ளது. அவர்கள் மிகவும் பழங்கால காலத்தில் பெரும் சுவரொன்றுக்குப் பின்னால் விடப்பட்டனர், மேலும் அவர்கள் உலகின் இறுதிக் காலத்தில் பூமியில் பரவுவார்கள். தொல்பொருள் ஆராய்ச்சிகள் நிலத்தடியில் புதைந்த நகரங்களையும் மலைகளின் சிகரங்களில் கடல் படிமங்களையும் கண்டறிவதைக் கருத்தில் கொண்டால், அந்தச் சுவர் இன்னும் கண்டுபிடிக்கப்பட்டிருக்க வாய்ப்பில்லை, அல்லது அந்த மக்கள் இன்று நாம் பார்க்கும் அல்லது அறியும் அளவுக்கு ஏராளமானவர்களாக இருக்கவும் வாய்ப்பில்லை; இன்றைய ஆயிரக்கணக்கான மில்லியன் கணக்கான மக்கள் ஒரு சில மக்களிடமிருந்து பெருகியுள்ளதைப் போன்று அந்த இரண்டு மக்கள் கூட்டத்தினரும் பூமியில் பரவிப் பெருகுவார்கள் என்றும் எண்ண முடியும். இன்று அவர்கள் வாழும் இடம் தெரியவில்லை.

[2] முஹம்மத் குர்துபி மாலிகி, தஸ்கிரத் அல்- குர்துபி என்ற நூலின் ஆசிரியர் ஹி. 671 [கி.பி 1272] இல் காலமானார். முந்தைய பக்கத்தைப் பார்க்கவும்.

மண்ணறைகளிலிருந்து எழுந்திருப்பார்கள். எனவே, இந்த நேரம் கியாமா[1] (மீளெழுப்பப்படும்) நாள் என்று அழைக்கப்படுகிறது.

அனைத்து உயிரினங்களும் மஹ்ஷரின் இடத்தில் ஒன்று சேரும். பட்டோளைகள் அவற்றின் உரிமையாளர்களிடம் பறக்கும். எல்லாம் வல்ல அல்லாஹ்; பூமி, வானங்கள், நட்சத்திரங்கள் மற்றும் அனைத்து அணுக்களையும் படைத்தவன், இவை அனைத்தையும் நிகழ்த்துவான். அல்லாஹ் தஆலாவின் தூதர் ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம் இவை நடக்கும் என்று அறிவித்துள்ளார். அவர் கூறியது உண்மை என்பது உறுதி. அனைத்தும் நிச்சயமாக நடக்கும்.

இறையச்சமுடையோர் (ஸாலிஹ்) மற்றும் நல்லவர்களது செயல்களின் பதிவுகள் அவர்களின் வலப் பகுதியிலிருந்தும், பாவம் செய்தவர்கள் (ஃபாஸிக்) மற்றும் கெட்டவர்களுடையவை முதுகுப் புறத்திலிருந்தும் அல்லது இடது புறத்திலிருந்தும் கொடுக்கப்படும். நல்லதோ தீயதோ, பெரியதோ சிறியதோ, இரகசியமாகவோ, வெளிப்படையாகவோ செய்யும் ஒவ்வொரு செயலும் அந்தப் பதிவேட்டில் இருக்கும். கிராம் காதிபீன் வானவர்களுக்குத் தெரியாத செயல்கள் கூட மனித உறுப்புகளின் சாட்சியத்தாலும், அனைத்தையும் அறிந்த அல்லாஹ் தஆலாவாலும் வெளிப்படுத்தப்படும். அத்துடன் ஒவ்வொரு செயலுக்கும் கேள்விகள் மற்றும் கணக்குகளைத் தீர்ப்பது இருக்கும். மறுமை நாளில், அல்லாஹ் தஆலா நாடினால் ஒவ்வொரு இரகசிய செயலும் வெளிப்படும். மலக்குகளிடம், அவர்கள் பூமியிலும் வானத்திலும் என்ன செய்தார்கள் என்றும் நபிமார்களிடம் "அலைஹிமுஸ்ஸலாம்" எவ்வாறு அல்லாஹ்வின் கட்டளைகளையும், அவனுடைய மார்க்கத்தையும் மனிதர்களுக்கு அறிவித்தார்கள் என்றும், மக்களிடம் அவர்கள் எவ்வாறு நபிமார்களுக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொண்டார்கள், அவர்கள் எப்படி வாழ்ந்தார்கள், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடமைகளை எவ்வாறு நிறைவேற்றினார்கள், அவர்கள் ஒருவருக்கொருவர் உரிமைகளில் எவ்வாறு கரிசணை காட்டினார்கள் போன்ற கேள்விகள் அப்போது கேட்கப்படும். நியாயத்தீர்ப்பு நாளில், ஈமான் கொண்டவர்களாகவும் தமது செயல்களும் ஒழுக்கங்களும் அழகாகவும் உள்ள மக்களுக்கு வெகுமதியும் அருட்கொடையும் கிடைக்கும். மோசமான நடத்தையும் கெட்ட செயல்களையும் கொண்டவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்.

அல்லாஹ் தஆலா, தனது நீதியின் மூலம், சில முஸ்லிம்களை அவர்களின் பாவங்களுக்காகத் துன்புறுத்துவான், மேலும் அவன் தனது கருணையால், அவன் தேர்ந்தெடுக்கும் சில முஸ்லிம்களின் கடுமையான மற்றும் மோசமான பாவங்களையும் மன்னிப்பான். இறைநிராகரிப்பு (குப்ர்) மற்றும் பலதெய்வ வழிபாடு (ஷிர்க்) தவிர, அவன் விரும்பினால் ஒவ்வொரு பாவத்தையும் மன்னிப்பான், மேலும் அவன் விரும்பினால் பாவத்திற்காக வேதனை செய்வான். இறைநிராகரிப்பையும் பலதெய்வ வணக்கத்தையும் மன்னிக்க மாட்டேன் என அவன் பிரகடனம் செய்துள்ளான். வேத நூலுள்ள அல்லது இல்லாத காபிர்கள், அதாவது, முஹம்மத் "அலைஹிஸ்ஸலாம்" அனைத்து மனிதர்களுக்குமான இறை தூதர் என்று நம்பாதவர்கள் மற்றும் அவர் தெரிவித்த கட்டளைகளில் [ஏவல்கள் மற்றும் விலக்கல்கள்] ஒன்றைக் கூட ஏற்காதவர்கள் நிச்சயமாக நரகத்திற்கு அனுப்பப்பட்டு நிரந்தரமாக துன்புறுத்தப்படுவார்கள்.

---

[1] தாவரங்கள் காற்று, நீர் மற்றும் உப்புக்கள் (கனிப் பொருட்கள்) அடங்கிய மண்ணிலிருந்து கார்பன் டை ஒக்சைட்டை உறிஞ்சி, அவற்றை ஒன்றோடொன்று ஒன்றிணைத்து, நமது உறுப்புகளின் உயிருள்ள பொருளான கரிமப் பொருட்களை உருவாக்குகின்றன. ஒரு வினையூக்கியைப் பயன்படுத்தும்போது ஒரு வினாடிக்கும் குறைவான நேரத்தில் பல ஆண்டுகள் எடுக்கும் இரசாயன எதிர்வினை நிகழ்கிறது என்பது இன்று கண்டறியப்பட்டுள்ளது. அதேபோன்று, அல்லாஹ் தஆலா மண்ணறைகளில் உள்ள நீர், கார்பன் டை ஒக்சைட் மற்றும் கனிப் பொருட்களை ஒன்றிணைத்து, ஒரு கணத்தில் கரிமப் பொருட்களையும் உயிரினங்களையும் உருவாக்குவான். முக்பிர்-இ-ஸாதிக் (உண்மை அறிவிப்பாளர், நபி) அவர்கள் இவ்வாறே நாம் மறுமை வாழ்வை சந்திப்போம் என்று அறிவித்தார். இது உலகில் நடப்பதாக அறிவியல் நிரூபிக்கிறது. *The Rising and the Hereafter* (மீளெழுப்பப்படலும் மறுமையும்) என்ற எமது நூலைப் பார்க்கவும்.

நியாயத்தீர்ப்பு நாளில், செயல்களையும் நடத்தையையும் எடைபோடுவதற்கு, நாமறிந்ததிலிருந்து வேறுபட்ட மீஸான் ('தராசு') இருக்கும். அது மிகப் பெரியதாக இருக்கும், அதன் ஒரு தட்டு பூமியையும் வானத்தையும் நிரப்புமளவு விசாலமானது. நற்செயல்களுக்கான தராசின் தட்டு பிரகாசமாகவும், சுவர்க்கம் இருக்கும் அர்ஷின் வலப்பக்கமாகவும், பாவங்களுக்கான தராசின் தட்டு இருட்டாகவும், நரகம் இருக்கும் அர்ஷின் இடப்பக்கமாகவும் இருக்கும். உலகில் செய்யப்படும் செயல்கள், வார்த்தைகள், எண்ணங்கள் மற்றும் தோற்றங்கள் அங்கு வடிவங்களைப் பெறும், மேலும் பிரகாசமான உருவங்களில் உள்ள நல்ல செயல்களும், இருண்ட மற்றும் அசிங்கமான உருவங்களில் உள்ள தீமைகளும் இத் தராசில் எடைபோடப்படும். இது உலகில் உள்ள தராசை ஒத்திருக்காது; அதிக சுமையை ஏற்றிச் செல்லும் தராசின் தட்டு மேலே செல்லும் என்றும், இலகுவான சுமை உள்ள தட்டு கீழே இறங்குமென்றும் கூறப்படுகிறது. சில அறிஞர்களின் கூற்றுப்படி பல்வேறு தராசுகள் இருக்கும். இன்னும் பலர் கீழ்வருமாறு கூறுகின்றனர்: " அவை எப்படி, எவ்வளவு இருப்பு இருக்கும் என்பது இஸ்லாத்தில் தெளிவாக கூறப்படவில்லை, எனவே அதைப் பற்றி சிந்திக்காமல் இருப்பது நல்லது.[1]

ஸிராத் என்ற பெயரில் ஒரு பாலம் இருக்கும், அது அல்லாஹ் தஆலாவின் கட்டளைப்படி நரகத்தின் மீது கட்டப்படும். அனைவரும் அந்தப் பாலத்தை கடக்க உத்தரவிடப்படுவார்கள். அன்றைய தினம், அனைத்து நபிமார்களும் "யா அல்லாஹ்! பாதுகாப்பு வழங்குவாயாக!" எனப் பிரார்த்திப்பார்கள். சுவர்க்கத்திற்குச் செல்ல வேண்டியவர்கள் பாலத்தை எளிதாகக் கடந்து சுவர்க்கத்தை அடைவார்கள். அவர்களில் சிலர் மின்னல் வேகத்துடனும், சிலர் காற்றின் வேகத்துடனும், சிலர் பாய்ந்து செல்லும் குதிரையைப் போலவும் கடந்து செல்வார்கள். ஸிராத் பாலம் முடியை விட மெல்லியதாகவும் வாளை விடக் கூர்மையாகவும் இருக்கும். இவ்வுலகில் உங்களை இஸ்லாத்திற்கு ஏற்ப சீர்செய்து கொள்வதும் இதே அம்சத்தை ஒத்தது; உங்களை இஸ்லாத்திற்கு ஏற்ப துல்லியமாக சீர்செய்து கொள்வது ஸிராத்தைக் கடப்பது போன்றது. இங்கு தமது சிற்றின்ப ஆசைகளுடன் (நப்ஸ்) போராடும் சிரமத்தைத் தாங்கிக் கொள்வோர் ஸிராத்தை எளிதாகக் கடப்பார்கள். நப்ஸ் காரணமாக இஸ்லாத்தைப் பின்பற்றாதவர்கள் ஸிராத்தை சிரமத்துடன் கடப்பார்கள். இதனால்தான், அல்லாஹ் தஆலா இஸ்லாம் சுட்டிக்காட்டிய நேர்வழியை "ஸிராத் அல்-முஸ்தகீம்" என்று அழைத்தான். பெயர்களில் உள்ள இந்த ஒற்றுமை இஸ்லாத்தின் பாதையில் இருப்பது ஸிராத்தைக் கடப்பது போன்றது என்பதைக் காட்டுகிறது. நரகத்திற்குத் தகுதியானவர்கள் ஸிராத்தில் இருந்து நரகத்தில் விழுவார்கள்.

ஹவ்ழ் அல்-கவ்ஸர் என்று அழைக்கப்படும் ஓர் ஊற்று எம் தலைவர் முஹம்மத் முஸ்தபா 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும். அது ஒரு மாதப் பயணத் தூரமளவு மிகவும் விசாலமானதாக இருக்கும். அதன் நீர் பாலை விட வெண்மையாகவும், அதன் வாசனை கஸ்தூரியை விட இனிமையாகவும் இருக்கும். அதைச் சுற்றியுள்ள குடிநீர்க் குவளைகள் நட்சத்திரங்களை விட ஏராளமாக இருக்கும். அதன் நீரைக் குடிப்பவருக்கு நரகத்தில் இருந்தாலும் கூட மீண்டும் தாகம் எடுக்காது.

ஷபாஆ (பரிந்துரை) செய்வது இருக்கும் என்று நாம் நம்ப வேண்டும். இறைத்தூதர்கள், வாலிகள், இறையச்சமுள்ள முஸ்லிம்கள், மலக்குகள் மற்றும் அல்லாஹ்வால் அனுமதிக்கப்பட்டவர்கள் தவ்பா செய்யாமல் மரணிக்கும் முஸ்லிம்களின் பெரும் பாவங்களுக்கான மன்னிப்புக்காகப் பரிந்து பேசுவார்கள், அவர்களின் பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்படும். [எமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: "என் உம்மாவில் பெரும் பாவங்களைச் செய்பவர்களுக்காக நான் ஷபாஆ (பரிந்துரை) செய்வேன்."] மறுமையில், ஷபாஆ பின்வரும் ஐந்து வகைகளாக அமையும்:

முதலாவதாக, பாவம் செய்தவர்கள், மக்கள் திரளால் சோர்வடைந்து, நியாயத்தீர்ப்புக்கான வெளியில் நீண்ட நேரம் காத்திருந்து, புலம்புவார்கள், நியாயத்தீர்ப்பை விரைவில் தொடங்க வேண்டும் என்று கேட்பார்கள். இதற்கு ஷபாஆ இருக்கும்.

[1] வேறு வார்த்தைகளில் கூறுவதானால், உங்கள் மனதில் தராசின் அல்லது தராசுகளின் படத்தை உருவாக்க முயற்சிப்பது பயனற்றது.

இரண்டாவதாக, விசாரணை எளிதாகவும் வேகமாகவும் நடப்பதற்காக ஷபாஆ இருக்கும்.

மூன்றாவதாக, பாவம் செய்யும் முஸ்லிம்களுக்கு ஷபாஆ இருக்கும், அதனால் அவர்கள் ஸிராத்தில் இருந்து நரகத்தில் விழுந்துவிடாது தப்பித்து, நரகத்தின் வேதனையிலிருந்து காப்பாற்றப்படுவார்கள்.

நான்காவதாக, கடுமையான பாவம் செய்யும் முஸ்லிம்களை நரகத்திலிருந்து வெளியேற்றுவதற்காக ஷபாஆ இருக்கும்.

ஐந்தாவதாக, சுவர்க்கச் சோலையில் முஸ்லிம்களை உயர் அந்தஸ்துக்கு உயர்த்துவதற்காக ஷபாஆ இருக்கும், அங்கு எண்ணிலடங்கா நலவுகளும் நிரந்தரத் தங்குமிடமும் இருந்தாலும், அங்கு எட்டு படித்தரங்கள் காணப்படும். ஒவ்வொரு நபரின் தரமும் அவரது ஈமான் மற்றும் செயல்களின் விகிதாசாரத்திற்கு ஏற்ப வேறுபட்டுக் காணப்படும்.

சுவர்க்கமும் நரகமும் இப்போது உள்ளன. சுவர்க்கம் ஏழு வானங்களுக்கு மேலே உள்ளது. நரகம் அவை எல்லாவற்றிற்கும் கீழே உள்ளது. சுவனத்தில் எட்டு சோலைகள் உள்ளன. நரகங்கள் ஏழு உள்ளன. பூமி, சூரியன் மற்றும் வானங்களை விட சுவர்க்கம் விசாலமானது, நரகம் சூரியனை விடவும் பெரியது.

6. ஈமானின் ஆறு அத்தியாவசிய அம்சங்களில் கடைசி ஒன்று: "கத்ர் மீது நம்பிக்கை வைப்பது, நன்மை (க்ஹைர்) மற்றும் தீமை (ஷர்) அல்லாஹ் தஆலாவிடமிருந்து வரக்கூடியவை" என்பதாகும். நன்மையும் தீமையும், நலவும் கெடுதியும், மனிதர்களுக்கு வரும் லாபமும், நஷ்டமும் அல்லாஹ் தஆலாவின் நாட்டப்படியே ஏற்படுகின்றன. 'கதர்' என்றால் 'அளத்தல்; முடிவு, ஒழுங்கு; மிகுதி பெரியது' என்ற கருத்துக்களை வழங்கும். ஒன்று இருப்பதற்கான அல்லாஹ் தஆலாவின் நிலையான விருப்பம் கதர் (முன்தீர்மானம்) என்று அழைக்கப்படுகிறது. கதர் - நாடியது நிகழ்வது கழா எனப்படும். கழா மற்றும் கதர் ஆகியவை ஒன்றுக்கொன்று மாற்றீடாகப் பயன்படுத்தப்படுகின்றன. அதன்படி, கழா என்பது நிலையான கடந்த காலத்திலிருந்து நித்திய எதிர்காலம் வரை உள்ள மற்றும் உருவாக்கப்படும் பொருட்களின் நித்தியத்தில் அல்லாஹ் தஆலாவின் முன் தீர்மானத்தைக் குறிக்கிறது. மேலும் கதர் என்பது (உதாரணமாக) கழாவுடன் இணக்கமாக, கூடுதல் குறைவின்றி எதையும் உருவாக்குவதாகும். நிலையான கடந்த காலத்தில் நடந்த அனைத்தையும் அல்லாஹ் தஆலா அறிந்துள்ளான். அவனுடைய இந்த அறிவு கழா என்றும் கதர் என்றும் அழைக்கப்படுகிறது. பண்டைய கிரேக்க தத்துவவாதிகள் இதனை அல்-இனாயத் அல்-அஸலிய்யா (நித்திய நன்மை) என்று அழைத்தனர். அனைத்து உயிரினங்களும் கழாவிலிருந்து வந்தவை. நிலையான கடந்த காலத்தில் அவனது அறிவின்படி பொருட்களை உருவாக்குவது கழா என்றும் கதர் என்றும் அழைக்கப்படுகிறது. கதரை நம்புவதில் நாம் உறுதியாகத் தெரிந்துகொள்ள வேண்டியது, அல்லாஹ் தஆலா நித்தியமாக ஒன்றைப் படைக்க விரும்பினால், அது நிச்சயமாக அவன் விரும்பியபடியே இருக்கும்; குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருக்க மாட்டாது. அவன் உருவாக்கத் தீர்மானித்த பொருட்களின் இல்லாமை அல்லது உருவாக்கக் கூடாது என்று அவன் தீர்மானித்த பொருட்களின் இருப்பு ஆகிய இரண்டுமே சாத்தியமற்றது.

அனைத்து விலங்குகள், தாவரங்கள், உயிரற்ற படைப்பினங்கள் [திண்மங்கள், திரவங்கள், வாயுக்கள், நட்சத்திரங்கள், மூலக்கூறுகள், அணுக்கள், இலத்திரன்கள், மின்காந்த அலைகள், ஒவ்வொரு உயிரினத்தினதும் ஒவ்வொரு இயக்கம், இயற்பியல் நிகழ்வுகள், இரசாயன மற்றும் அணுக்கரு எதிர்வினைகள், சக்தித் தொடர்புகள், உயிரினங்களில் உள்ள பௌதீக நிகழ்வுகள்] எல்லாவற்றின் இருப்பு அல்லது இல்லாமை, மனிதர்களின் நல்ல மற்றும் தீய செயல்கள், இம்மையிலும் மறுமையிலும் அவற்றுக்குக் கிடைக்கும் வெகுமதி மற்றும் தண்டனை என சகலதும் அல்லாஹ் தஆலாவின் நிலையான அறிவில் இருந்துள்ளது.

அவன் நிலையாக சகலதையும் அறிந்துள்ளான். நிரந்தர கடந்தகாலம் முதல் நித்திய எதிர்காலம் வரை நிகழும் விடயங்கள், அவற்றின் தனித்தன்மைகள், இயக்கங்கள் மற்றும் ஒவ்வொரு நிகழ்வும், நிலையாக அவன் அறிந்தவற்றின்படி அவனால் உருவாக்கப்பட்டவை. மனிதர்களின் அனைத்து நல்ல மற்றும் தீய செயல்கள், இஸ்லாத்தின் மீதான அவர்களின் நம்பிக்கை அல்லது அவநம்பிக்கை,

விருப்பத்துடன் அல்லது விருப்பமின்றி செய்யும் அவர்களின் அனைத்து செயல்களும் அல்லாஹ் தஆலாவால் உருவாக்கப்பட்டவை. அவன் ஒருவனே சபப் (காரணம், பொருள், வழி) மூலம் நடக்கும் அனைத்தையும் உருவாக்குகிறான். அவன் எல்லாவற்றையும் சில வழிகளில் உருவாக்குகிறான்.

உதாரணமாக, நெருப்பு எரிகிறது. உண்மையில், அல்லாஹ் தஆலா எரிப்பதை உருவாக்குபவன். நெருப்புக்கும் எரிப்பதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஆனால் அவனது வழக்கப்படி (ஆதத்) நெருப்பு எதையாவது தொடாத வரை அவன் எரிப்பதை உருவாக்க மாட்டான்."[1] அல்லாஹ் தஆலா ஒருவனே எரிக்கிறான். அவனால் நெருப்பு இல்லாமலும் எரிக்க முடியும், ஆனால் நெருப்பால் அவனது எரிப்பது வழக்கமாகும்.

அவன் எரிக்க விரும்பவில்லை என்றால், நெருப்பிலும் கூட எரிவதனைத் தடுப்பான். அவன் இப்ராஹிம் "அலைஹிஸ்ஸலாமை" தீயில் எரிக்கவில்லை; அவன் அவரை மிகவும் நேசித்ததால், அவன் தனது வழக்கத்தை நிறுத்திவிட்டான்.[2] [உண்மையில், நெருப்பு எரிவதைத் தடுக்கும் சடப் பொருட்களையும் அவன் உருவாக்குகிறான். இரசாயனவியலாளர்கள் அந்த சடப் பொருட்களைக் கண்டுபிடித்துள்ளனர்.]

அல்லாஹ் தஆலா நாடியிருந்தால் வஸ்து ஏதுமின்றி அனைத்தையும் படைத்து, நெருப்பின்றி எரித்து, நாம் உண்ணாமல் போஷித்து, விமானம் இல்லாமல் பறக்கவும், வானொலி இல்லாமல் நீண்ட தூரம் கேட்கவும் செய்திருக்க முடியும். ஆனால் சில வழிமுறைகள் மூலம் எல்லாவற்றையும் உருவாக்கும் உதவியை அவன் மனிதர்களுக்கு செய்தான். சில வழிமுறைகள் மூலம் சில விஷயங்களைப் படைக்க அவன் விரும்பினான். வழிமுறைகளின் படி தனது பணிகளைச் செய்தான்.

---

[1] தீப்பற்று வெப்பநிலை வரை அது வெப்பமடைவதைத் தவிர வேறு எதையும் செய்யாது. கரிமப் பொருட்களில் உள்ள ஒக்ஸிஜனுடன் கார்பன் மற்றும் ஹைட்ரஜனை ஒன்றிணைப்பது அல்லது இலத்திரன் இயக்கங்களை வழங்குவது நெருப்பு அல்ல. உண்மையை உணர முடியாதவர்கள் நெருப்பு இவற்றைச் செய்கிறது என்று கருதுகின்றனர். இது நெருப்பு, ஆக்ஸிஜன், வெப்பம் அல்லது இலத்திரன் இயக்கம் ஆகியவை எரியும் இந்த எதிர்வினையை உருவாக்குகின்றன. அதை எரிப்பவன் அல்லாஹ் தஆலா மட்டுமே. இவை ஒவ்வொன்றையும் அவன்தான் எரிப்பதற்கான வழிமுறையாகப் படைத்தான். அறிவு இல்லாதவன் நெருப்பு எரிகிறது என்று நினைக்கிறான். ஆரம்பக் கல்வியை முடித்த ஒரு சிறுவன் "நெருப்பு எரிகிறது" என்பதை ஏற்பதில்லை. மாறாக, அவன் "காற்று எரிகிறது" என்று கூறுவான். கனிஷ்ட உயர்நிலைப் பள்ளியை முடித்த ஒருவர் இதனை ஏற்பதில்லை. "காற்றில் உள்ள ஒக்ஸிஜன் எரிகிறது" என்று அவர் கூறுவார். உயர்நிலைப் பள்ளியை முடித்த ஒருவர், எரியும் ஒக்சிஜனுக்குப் பிரத்தியேகமான ஒன்றல்ல, மாறாக இலத்திரனை ஈர்க்கும் எந்தப் பொருளும் எரியும் என்று கூறுவார். ஒரு பல்கலைக்கழக மாணவர் சக்தியையும் சடப்பொருளையும் கருத்தில் கொள்கிறார். ஒரு நபர் எவ்வளவு அதிகமாக அறிந்திருக்கிறாரோ, அவ்வளவு நெருக்கமாக அவர் ஒரு விஷயத்தின் உள்ளகத்தைக் கண்டறிகிறார், காரணங்களாகக் கருதப்படும் விஷயங்களுக்குப் பின்னால் பல காரணங்கள் இருப்பதை உணர்ந்து கொள்கிறார். அறிவிலும், அறிவியலிலும் மிக உயர்ந்த நிலையைப் பெற்ற, எல்லாவற்றின் யதார்த்தத்தையும் விளங்கக்கூடிய நபிமார்களும் "அலைஹிமுஸ்ஸலாம்", அவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, அவர்களின் அறிவுப் பெருங்கடலில் இருந்து துளிகளை அடைந்த இஸ்லாமிய அறிஞர்கள் ஒவ்வொருவரும், இன்று எரியக்கூடிய அல்லது ஆக்கபூர்வமானதாகக் கருதப்படும் விஷயங்கள், உண்மையான படைப்பாளனால் ஓர் ஊடகமாக வைக்கப்படும் சக்தியற்ற எளிய காரண காரியமாகும் என்பதைச் சுட்டிக்காட்டினர்.

[2] உண்மையில், அல்லாஹ் தஆலா நெருப்பு எரிப்பதைத் தடுக்க சடப்பொருட்களை உருவாக்கினான். இரசாயனவியலாளர்கள் இந்த சடப் பொருட்களைக் கண்டுபிடித்தனர்.

வழிமுறைகளின் பின்னால் அவன் தனது சக்தியை மறைத்துக் கொண்டான். எதையாவது படைக்க வேண்டும் என்று விரும்பினால் அதன் வழிமுறைகளின் படியே அதனைப் பெற்றுக் கொள்வான்.[1]

அல்லாஹ் தஆலா வழிமுறைகளைக் கொண்டு தனது படைப்புகளை உருவாக்கவில்லை என்றால், யாருக்கும் வேறு யாரும் தேவையில்லாத நிலை ஏற்பட்டிருக்கும். ஒவ்வொரு தனியாளும் நேரடியாக அல்லாஹ் தஆலாவிடம் எல்லாவற்றையும் கேட்பார்கள், எதற்கும் உதவ மாட்டார்கள். உயர்ந்தவர் மற்றும் கீழ்நிலையில் இருப்பவர், பணியாள் மற்றும் வேலை செய்பவர், மாணவர் மற்றும் ஆசிரியர் போன்றவர்களிடையே சமூக உறவுகள் இருக்காது. இதனால் இந்த உலகமும் மறுமையும் சீர்குலைந்து போகும். அழகான மற்றும் அசிங்கமான, நல்ல மற்றும் தீய, கீழ்ப்படியும் மற்றும் கீழ்ப்படியாத அம்சங்களுக்கு இடையே எந்த வித்தியாசமும் இருக்காது.

அல்லாஹ் தஆலா விரும்பியிருந்தால், அவன் தன் வழக்கத்தை வேறு வழியில் உருவாக்கி, அதற்கேற்ப அனைத்தையும் படைத்திருப்பான். உதாரணமாக, அவன் விரும்பியிருந்தால், காபிர்களையும், சிற்றின்பத்திற்கு அடிமையானவர்களையும், பிறரைத் துன்புறுத்துபவர்களையும், வஞ்சகர்களையும் சுவர்க்கத்தில் நுழைவிப்பான், விசுவாசிகளையும், வணக்க வழிபாட்டில் ஈடுபடுவோரையும், நன்மை செய்பவர்களையும் நரகத்தில் தள்ளுவான். ஆனால் அவன் அவ்வாறு செய்யவில்லை என்பதனை ஆயாத்கள் மற்றும் ஹதீஸ்கள் காட்டுகின்றன.

மனிதர்களின் அனைத்து விருப்பமான அல்லது தன்னார்வ மற்றும் விருப்பமில்லாத செயல்கள், இயக்கங்களை உருவாக்குபவன் அவன்தான். அவன் தனது விருப்பமான, தன்னார்வ செயல்களை உருவாக்குவதற்காக பிறந்த அடிமைகளில் இக்தியார் (விருப்பம்) மற்றும் இராதா (நாட்டம்) ஆகியவற்றை அவன் உருவாக்கினான், மேலும் இந்த விருப்பத்தையும் நாட்டத்தையும் அவர்களின் செயல்களை உருவாக்குவதற்கான ஒரு வழிமுறையாக உருவாக்கினான். மனிதன் எதையாவது செய்ய விரும்பினால், அல்லாஹ் தஆலாவும் அவன் விரும்பினால் இந்த செயலை உருவாக்குகிறான். மனிதன் விரும்பவோ நாடவோ இல்லையென்றால் அல்லாஹ் தஆலாவும் விரும்பவில்லை என்றால், அவன் அதனைப் படைப்பதில்லை. அல்லாஹ் தஆலா மனிதனின் விருப்பப்படி மட்டும் படைப்பதில்லை; அவன் விரும்பினால்தான் படைக்கிறான். அல்லாஹ் தஆலா மனிதனின் விருப்பமான செயல்களை உருவாக்குவது, நெருப்பு எதையாவது தொடும்போது, அந்தப் பொருளை எரிப்பதைப் போன்றது, நெருப்பு அதைத் தொடவில்லை என்றால், எரிப்பதை உருவாக்குவதில்லை. ஒரு கத்தி எதையாவது தொடும் போது, அவன் வெட்டுவதை உருவாக்குகிறான். வெட்டுபவன் அவன்தான்; கத்தி அல்ல. கத்தியை வெட்டுவதற்கான ஒரு கருவியாக அவன் ஆக்கியுள்ளான். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவன் மனிதனின் விருப்பமான செயல்களுக்கான காரணத்தை (ஸபப்) உருவாக்குகிறான். அவன் இந்த செயல்களைத் தேர்வுசெய்கிறான். இருப்பினும், இயற்கையில் உள்ள இயக்கங்கள் மனிதனின் விருப்பத்தை சார்ந்ததாக இல்லை, ஆனால் அல்லாஹ் தஆலா விரும்பும் போது மட்டுமே வேறு சில காரணங்களால் அவை உருவாக்கப்படுகின்றன. சூரியன்கள், துகள்கள், துளிகள், களங்கள், நுண்ணுயிர்கள் மற்றும் அணுக்கள், அவற்றின் மூலப்பொருட்கள் மற்றும் இயல்புகள் என எல்லாவற்றின் ஒவ்வொரு இயக்கத்தையும்

[1] விளக்கு ஏற்ற விரும்புபவர் தீக்குச்சிகளைப் பயன்படுத்துகிறார்; ஒலிவ் எண்ணெய்யில் இருந்து எண்ணெய் எடுக்க விரும்புபவர் நசுக்கும் மற்றும் அரைக்கும் கருவிகளைப் பயன்படுத்துகிறார்; தலைவலி உள்ளவர் எஸ்பிரின் எடுத்துக்கொள்கிறார்; சுவர்க்கத்திற்குச் சென்று அளவற்ற அருளைப் பெற விரும்புபவன் தன்னை இஸ்லாத்திற்கு ஏற்ப சீர்திருத்திக் கொள்கிறான்; துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுக்கொள்பவன் அல்லது விஷம் குடிப்பவன் இறப்பான்; வியர்வையில் தண்ணீர் குடிப்பவன் உடல் நலத்தை இழக்கிறான்; பாவங்களைச் செய்து தன் ஈமானை இழந்தவன் நரகத்திற்குச் செல்வான். ஒரு நபர் எந்த வழியைப் பயன்படுத்துகிறாரோ, அந்த வழி எதற்காகப் பயன்படுத்தப்படுகிறதோ அதைப் பெறுவார். இஸ்லாமிய நூல்களை வாசிப்பவன் இஸ்லாத்தைக் கற்று, அதை விரும்பி, முஸ்லிமாகிறான். மதமற்றோர்களிடையே வாழ்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்பவன் இஸ்லாத்தை அறியாதவனாகிறான். இஸ்லாத்தை அறியாதவர்களில் பெரும்பாலோர் இறைநிராகரிப்பாளர்களாக மாறுகிறார்கள். ஒரு நபர் ஒரு வாகனத்தில் ஏறினால், அவர் செல்ல ஒதுக்கப்பட்ட இடத்திற்குச் செல்கிறார்.

உருவாக்குபவன் அவனைத் தவிர வேறு யாரும் இல்லை. இருப்பினும், உயிரற்ற பொருட்களின் இயக்கங்களுக்கும், மனிதன் மற்றும் விலங்குகளின் விருப்பமான, தன்னார்வ செயல்களுக்கும் இடையே வேறுபாடு உள்ளது: ஒரு மனிதன் அல்லது விலங்கு ஒரு செயலைத் தேர்ந்தெடுக்கும்போது, அதனை அது விரும்புகிறது அல்லது அவன் விரும்புகிறான், அத்துடன் இறைவனாகிய அவன் விரும்பினால்தான், அவரை அல்லது அதைச் செயல்பட வைக்கிறான். அவர் தனது செயலை உருவாக்குகிறார். மனிதனின் செயல் மனிதனின் சக்தியில் இல்லை. உண்மையில், அவர் எவ்வாறு செயல்படுகிறார் என்பது கூட அவருக்குத் தெரியாது.[1] உயிரற்றவற்றின் இயக்கங்களில் விருப்பம் என்பது இல்லை. நெருப்பு எதையாவது தொடும் போது அல்லாஹ் தஆலா எரிவதை உருவாக்குகிறான், அது நெருப்பின் விருப்பத்தினாலோ அல்லது அது எரிக்க விரும்புவதாலோ அல்ல.[2]

மனிதனின் விருப்பமான செயல்கள் இரண்டு சூழ்நிலைகளுக்குப் பிறகு நிகழ்கின்றன. முதலாவதாக, அவரது இதயத்தின் விருப்பம், நாட்டம் மற்றும் சக்தி ஆகியவை இதில் அடங்கும். அந்த விடயத்தில், மனிதனின் செயல்கள் கஸ்ப் (பெறுதல்) என அழைக்கப்படுகின்றன. இது மனிதனின் பண்பாகும். இரண்டாவது, அல்லாஹ் தஆலாவின் படைப்பு இடம்பெறுகிறது. அல்லாஹ் தஆலாவின் கட்டளைகள், தடைகள், வெகுமதிகள் மற்றும் வேதனைகள் அனைத்தும் மனிதனுக்கு கஸ்ப் கொடுக்கப்பட்டதால் கிடைக்கின்றன. ஸூரா அஸ்ஸாப்பாத்தின் தொண்ணூற்று ஆறாவது ஆயத்தில், அவன் கூறுகிறான்: "அல்லாஹ் உன்னைப் படைத்தான், அவனே உங்கள் செயல்களையும் படைத்தான்." இந்த ஆயத் மனிதனின் செயல்களில் கஸ்ப், அல்லது இதயத்தின் விருப்பம் மற்றும் இராதத் ஜுஸ்இய்யா (பகுதியளவு சுதந்திரம்) மற்றும் எந்த நிர்ப்பந்தமும் இல்லாததை மட்டும் காட்டவில்லை - இதனால்தான், [செயல்களுக்கு மனிதன் காரணமாக இருக்கலாம்] "அலி அடித்து உடைத்தான்" என்று நாம் சொல்வது போல் "மனிதனின் செயல்கள்" என்று கூறலாம்- ஆனால் எல்லாமே கழா மற்றும் கதர் மூலம் உருவாக்கப்பட்டவை என்பதையும் அது சுட்டிக் காட்டுகின்றது.

மனிதனின் செயல்களை உருவாக்க, முதலில் அவனது இதயம் அதைத் தேர்வு செய்ய வேண்டும். மனிதன் தன் சக்திக்கு உட்பட்ட செயல்களை விரும்புகிறான். இந்த விருப்பம் அல்லது நாட்டம் கஸ்ப் (பெறுதல்) என்று அழைக்கப்படுகிறது. மறைந்த அறிஞரான ஆமிதி, கஸ்ப் செயல்களின் உருவாக்கத்திலும் விளைவிலும் தாக்கம் செலுத்துகிறது என்று கூறினார். இருப்பினும், மனிதனால் விரும்பும் செயலும் உருவாக்கப்பட்ட செயலும் ஒன்றுக்கொன்று வேறுபட்டதல்ல என்பதால் விருப்பச் செயலை உருவாக்குவதில் கஸ்ப் எந்த விளைவையும் ஏற்படுத்தாது என்று கூறுவது தவறாகாது. அந்தவகையில், மனிதன் தான் விரும்பியதைச் செய்ய முடியாது; அவன் விரும்பாத விடயங்கள் கூட நடக்கலாம். மனிதன் தான் விரும்பிய அனைத்தையும் செய்கிறான், அவன் விரும்பாதது எதுவும் நடக்காது என்றால், அவன் ஒரு மனிதனாக அல்ல, தெய்வீகத்தை உரிமை கொண்டாடுபவனாக இருப்பான். அல்லாஹ் தஆலா தனது மனித உயிரினங்களுக்கு இரக்கமும்

---

[1] மனிதனது ஒவ்வொரு செயலும் பல உடல் மற்றும் இரசாயனவியல் நிகழ்வுகளின் விளைவாகும்.

[2] அல்லாஹ் தஆலாவும், தான் நேசிக்கும், கருணை காட்டும் அடிமைகளின் நல்ல, பயனுள்ள விருப்பங்களை விரும்பி உருவாக்குகிறான். அவன் அவர்களின் தீய மற்றும் தீங்கு விளைவிக்கும் விருப்பங்களை உணரவோ உருவாக்கவோ விரும்புவதில்லை. எப்போதும் நல்ல, பயனுள்ள செயல்கள் அந்த அன்பிற்குரிய அடிமைகளால் செய்யப்படுகின்றன. செய்யத் தவறியதற்காக அவர்கள் வருந்துகின்ற காரியங்கள் ஏராளம். ஆனால் அந்தச் செயல்கள் சிருஷ்டிக்கப்பட்டவை அல்ல என்று அவர்கள் சிந்தித்தறிந்து, அவை உருவாகியிருந்தால் தீங்காக அமைந்திருக்கும் என அவர்கள் அறிந்திருந்தால் வருத்தப்பட மாட்டார்கள். மாறாக, அவர்கள் அதைக் கண்டு மகிழ்ச்சியடைவார்கள்; அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவார்கள். அவன் மனிதர்களின் விருப்பமான, தன்னார்வ செயல்களை அவர்களின் இதயங்களில் விரும்பியதன் பிறகு உருவாக்க விரும்பினால் அவன் அவ்வாறு விரும்புவான். நிலையாக அவன் அவ்வாறு செய்ய விரும்பவில்லை என்றால், அவன் எப்போதும் நம் விருப்பமான செயல்களைக் கூட பலத்தால், விருப்பமின்றி, நாம் விரும்பாமல் உருவாக்குவான். நாம் விரும்பிய பிறகு நமது விருப்பமான செயல்களை அவன் உருவாக்குவது, நித்தியத்திலும் அவன் அதை விரும்பியதால்தான். ஆகையால், அவனது விருப்பம் மட்டுமே ஆதிக்கம் செலுத்தும் காரணியாக உள்ளது.

கருணையும் காட்டி, தனது கட்டளைகளையும் தடைகளையும் கடைப்பிடிக்கத் தேவையான அளவு மட்டுமே அவர்களுக்கு ஆற்றலையும் சக்தியையும் வழங்கினான். உதாரணமாக, ஆரோக்கியமான மற்றும் வசதிபடைத்த ஒருவர் தனது வாழ்நாளில் ஒருமுறை ஹஜ் செய்யலாம்; அவர் வருடத்தில் ஒரு மாதம் ரமழானின் பிறையை வானில் கண்டால் (பகல் பொழுதில்) நோன்பு நோற்கலாம்; அவர் தினமும் ஐவேளை, பர்ளான தொழுகையைத் தொழலாம். நிஸாபின் அளவுக்கு பணம் அல்லது சொத்து வைத்திருப்பவர் ஹிஜ்ரி வருடத்தில் ஒரு வருடத்திற்குப் பிறகு அவருடைய பணம் அல்லது சொத்து நிஸாபை மிகைத்தால் அதில் நாற்பதில் ஒரு பங்கை தங்கம் அல்லது வெள்ளியாக முஸ்லிம்களுக்கு ஸகாத் தொகையாக செலுத்தலாம்.[1] எனவே, மனிதன் தன் விருப்பமான செயல்களை அவன் விரும்பினால் செய்கிறான், அவன் விரும்பவில்லை என்றால் செய்யமாட்டான். அல்லாஹ் தஆலாவின் மகத்துவம் இங்கும் உணர்த்தப்படுகிறது. அறிவிலிகளும், மூடர்களும் கழா, கதர் அறிவைப் புரிந்து கொள்ள முடியாததால், அஹ்லுஸ் ஸுன்னாவின் அறிஞர்கள் கூறியதை அவர்கள் நம்புவதில்லை, அத்துடன் மனிதனின் சக்தி மற்றும் விருப்பத்தை சந்தேகிக்கிறார்கள். மனிதன் தனது விருப்பமான செயல்களைச் செய்யும் ஆற்றலற்றவன் மற்றும் அவன் நிர்பந்திக்கப்படுகிறான் என்று அவர்கள் நினைக்கிறார்கள். சில சமயங்களில் மனிதனால் விருப்பமாகச் செயல்பட முடியாது என்பதைக் கண்டு அவர்கள், அஹ்ல் அஸ்ஸுன்னா (என்று அழைக்கப்படும் முஸ்லிம்களைப்) பற்றி தவறாகப் பேசுகிறார்கள். அவர்களின் இந்தத் தவறான நிலைப்பாடு அவர்களுக்கு சொந்த விருப்பமும் நாட்டமும் இருப்பதைக் காட்டுகிறது.

ஒரு செயலைச் செய்வதும் செய்யாததும் குத்ரா (சக்தி) சம்பந்தப்பட்ட விஷயம். ஒரு செயலைச் செய்ய விரும்புவது, செய்ய வேண்டாமா என்பதைத் தேர்ந்தெடுப்பது இக்தியார் (விருப்பம்) எனப்படும். விருப்பப்பட்டதைச் செய்ய விரும்புவது இராதா (நாட்டம்) எனப்படும். எதையாவது ஏற்றுக்கொள்வது அல்லது அதை ஏற்காதது ரிழா (ஒப்புதல்) எனப்படும். சக்தியும், நாட்டமும் ஒன்று சேரும் போது, 'நாட்டம்' செயல்வடிவம் பெறும் போது, க்ஹல்க் (படைப்பு) நடைபெறுகிறது. அவை செயல்வடிவம் பெறாமல் ஒன்று சேர்ந்தால், அது கஸ்ப் (பெறுதல்) எனப்படும். தேர்ந்தெடுக்கும் ஆற்றலுள்ள எவரும் படைப்பாளியாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அதேபோல, விரும்பப்படும் அனைத்தும் சம்மதம் கொடுக்கப்பட்டதாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அல்லாஹ் தஆலா க்ஹாலிக் (படைப்பாளன்) என்றும் முக்தார் (தேர்வுள்ளவன்) என்றும் அழைக்கப்படுகிறான், மேலும் மனிதன் காஸிப் (கஸ்ப் உடையவன்) மற்றும் முக்தார் (தேர்வு நாட்டம் உள்ளவன்) என்று அழைக்கப்படுகிறான்.

அல்லாஹ் தஆலா தனது அடிமைகளின் இபாதாவையும் (வணக்க வழிபாடுகள்) பாவங்களையும் நாடி உருவாக்குகிறான். அவன் இபாதத்தை விரும்புபவனாகவும் பாவங்களை வெறுப்பவனாகவும் உள்ளான். அனைத்தும் அவனுடைய நாட்டத்தாலும் படைப்பாலும் உண்டாகின்றன. ஸூரா அல்-அன்ஆமின் 102 ஆவது ஆயத்தில், அவன் அறிவிக்கிறான்: "அவனைத் தவிர வேறு கடவுள் இல்லை, அவன் மட்டுமே சகலவற்றையும் படைத்தவன்."

முஃதஸிலா (என அழைக்கப்பட்ட குழு), விருப்பத்திற்கும் சம்மதத்திற்கும் உள்ள வித்தியாசத்தைப் கண்டறிய முடியாமல் குழப்பமடைந்து, "மனிதன் தான் விரும்பும் செயலை உருவாக்குகிறான்" என்று கூறினார்கள். கழாவையும் கத்ரையும் மறுத்தார்கள். ஜபரிய்யாவும் முற்றிலும் குழப்பமடைந்தனர்; உருவாக்கம் இல்லாமல் நாட்டம் இருக்கலாம் என்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. மனிதனில் நாட்டம் இல்லை என்று எண்ணி அவனைக் கல்லுக்கும் மரத்துக்கும் ஒப்பிட்டார்கள். "மனிதர்கள் பாவிகள் அல்ல. அல்லாஹ்தான் அனைத்துப் பாவங்களையும் செய்ய வைக்கிறான்" என அவர்கள் கூறினர்; அந்த மார்க்க வழிகேட்டை விட்டும் அல்லாஹ் தஆலா நம்மைக் காப்பாற்றுவானாக!

மனிதர்களிடம் விருப்பமும் நாட்டமும் இல்லாவிட்டால், ஜபரிய்யாவின் கூட்டத்தவர்கள் கூறியது போல் அல்லாஹ் தஆலா தீமைகளையும் பாவங்களையும் பலவந்தமாகச் செய்திருந்தால்,

[1] தயவு செய்து *Endless Bliss* இன் நான்காவது மற்றும் ஐந்தாவது பாகங்களையும் இந்த வழிபாட்டுச் செயல்கள் பற்றிய விவரங்களுக்கு மிஃப்தா-உல்-ஜன்னா (சுவர்க்கத்திற்கான வழி) என்ற நூலையும் பார்க்கவும்.

கைகள் மற்றும் கால்கள் கட்டப்பட்டு, மலையில் இருந்து கீழே தூக்கி எறியப்பட்ட ஒரு மனிதனின் அசைவுகளுக்கும், சுற்றிப் பார்த்த வண்ணம் கீழே இறங்கும் ஒரு மனிதனின் அசைவுகளுக்கும் இடையில் எந்த வித்தியாசமும் இருக்காது.

உண்மையில், முந்தையவர் வலுக்கட்டாயமாக கீழே தள்ளப்பட்ட நிலையில் இருக்கிறார், பிந்தையவர் அவரது விருப்பத்துடனும் நாட்டத்துடனும் இறங்குகிறார். அவர்களுக்கிடையிலான வித்தியாசத்தைப் பார்க்க முடியாதவர்கள் குறுகிய பார்வை கொண்டவர்கள், அவர்கள் ஆயாத்களை மறுக்கிறார்கள். அவர்கள் அல்லாஹ் தஆலாவின் கட்டளைகளையும் தடைகளையும் தேவையற்றதாகவும், பயனற்றதாகவும் கருதுகின்றனர். முஃதஸிலா அல்லது கதரிய்யா (ஆபத்தானது) என்று அழைக்கப்படும் இந்தக் குழு நம்புவது போல், மனிதன் தான் விரும்புவதை உருவாக்குகிறான் என்று ஊகிப்பது, "அல்லாஹ் தஆலா ஒருவனே அனைத்தையும் படைத்தவன்" என்ற ஆயத் கரீமாவை மறுப்பதாகும். மனிதனை அல்லாஹ் தஆலாவுக்கு இணையாக வைப்பதாகும்.

ஷியாக்கள், முஃதஸிலாக்கள் போன்றவர்கள், மனிதன் தான் விரும்புவதை உருவாக்குகிறான் என்று கூறுகிறார்கள். அடித்தாலும் கோவேறுக் கழுதை ஓடையைத் தாண்டுவதில்லை என்பதை தமக்கு ஆதரவாகச் சொல்கிறார்கள். ஒரு மனிதன் ஒரு காரியத்தைச் செய்ய விரும்பினால், அல்லாஹ் தஆலா அதைச் செய்ய மாட்டான் என்றால், இந்த இரண்டு விருப்பங்களும் ஒரே நேரத்தில் நடக்காது: அல்லாஹ் தஆலா விரும்பியது நடந்தால், முஃதஸிலாவின் வாதம் தவறு; அதாவது, ஒரு மனிதன் தான் விரும்பும் அனைத்தையும் உருவாக்கவோ செய்யவோ முடியாது; அவர்கள் சொல்வது போல் மனிதன் விரும்பியது நடந்திருந்தால், அல்லாஹ் தஆலா திறமையற்றவனாகவும், தோல்வியுற்றவனாகவும் இருந்திருப்பான். அல்லாஹ் தஆலா இயலாமையிலிருந்து வெகு தொலைவில் உள்ளான். அவன் விரும்பியது மட்டுமே நடக்கும். அவன் ஒருவனே அனைத்தையும் படைக்கிறான். "மனிதன் இதைப் படைத்தான்", "நாம் படைத்தோம்" அல்லது "அவர்கள் இதைப் படைத்தார்கள்" போன்ற வார்த்தைகளை சொல்வதும் எழுதுவதும் மிகவும் அருவருப்பானது.[1] இது அல்லாஹ் தஆலா நோக்கிய முரட்டுத்தனமாக அமைகிறது. இது இறைநிராகரிப்புக்குக் காரணமாகிறது.[2]

---

[1] மேலே விளக்கப்பட்டுள்ளபடி, மனிதனின் விருப்பமான செயல்கள் பல உடலியல், இரசாயன மற்றும் பௌதீக நிகழ்வுகள் மூலம் நிகழ்கின்றன, அவை அவனது விருப்பத்தைச் சார்ந்தோ அவனது உணர்வு சார்ந்தோ இல்லை. இந்த நுணுக்கத்தை உணர்ந்த ஒரு நீதியான விஞ்ஞானி தனது விருப்பமான செயல்களைப் பற்றி "நான் படைத்தேன்" என்று சொல்ல வெட்கப்பட்டு, "நான் செய்தேன்" என்றே சொல்வார். அவர் அல்லாஹ் தஆலாவிடம் அடக்கமாக இருப்பார். அறிவும், புரிதலும், அடக்கமும் இல்லாதவர், எந்த இடத்திலும் எதையும் சொல்ல வெட்கப்படுவதில்லை. அல்லாஹ் தஆலா பூமியில் உள்ள அனைத்து மக்கள் மீதும் கருணை காட்டுகிறான். அவர்களுக்குத் தேவையானதை உருவாக்கி அனைவருக்கும் அனுப்புகிறான். அவர்கள் இவ்வுலகில் அமைதியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழவும், மறுவுலகின் முடிவில்லாத பேரின்பத்தை அடையவும் அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அவன் தெளிவாக அறிவிக்கிறான். தங்கள் சொந்த நப்ஸ் (மனித ஆசைகள்), கெட்ட நண்பர்கள், தீங்கு விளைவிக்கும் நூல்கள் மற்றும் ஊடகங்களால் ஏமாற்றப்பட்டதன் விளைவாக உண்மையான வழியை விட்டுவிட்டு குப்ர் (துரோகம்) மற்றும் பித்அத்களின் வழியைப் பின்பற்றியவர்களில் அவன் விரும்பியவர்களை சரியான பாதையில் வழிநடாத்துகிறான். அவன் அவர்களை சரியான வழியை நோக்கி ஈர்க்கின்றான். இந்த அருள்களை கொடூரமானவர்கள் மற்றும் வரம்புகளை மீறுபவர்கள் மீது அவன் வழங்குவதில்லை. அவர்கள் விழுந்துள்ள அவநம்பிக்கையின் சேற்று நிலத்தில், அவர்கள் விரும்பிய மற்றும் நாடிய இடத்தில் அவன் அவர்களை விட்டு விடுகிறான்.

[2] இஃதிகாத் நாமா நூலின் மொழிபெயர்ப்பு இங்கே நிறைவடைகிறது. இந்த மொழிபெயர்ப்பைச் செய்த ஹாஜி பைஸுல்லா எபந்தி, எர்சின்கானின் கமாஹ் என்ற நகரத்தைச் சேர்ந்தவர். அவர் பல வருடங்கள் சோக் நகரில் (துருக்கியில்) பேராசிரியராக விரிவுரையாற்றினார். ஹி.1323 [கி.பி 1905] இல் வபாத்தானார். இந்நூலின் ஆசிரியரான மௌலானா க்ஹாலித் பக்தாதி

ஷரப் அத்-தீன் முனீரீ 'ரஹிம-அல்லாஹு தஆலா' எழுதிய இரண்டு கடிதங்கள்

இந்தியாவில் கல்வி கற்ற சிறந்த இஸ்லாமிய அறிஞர்களில் ஒருவரான ஷரப் அத்-தீன் அஹ்மத் இப்னு யஹ்யா முனீரீ (இறப்பு. ஹிஜ்ரி 782/கி.பி 1380) தனது பாரசீக நூலான மக்துபாத்தின் 18ஆவது கடிதத்தில் இவற்றை எழுதியுள்ளார்.[1]

"பெரும்பாலான மக்கள் சந்தேகங்கள் மற்றும் மாயைகளின் மீது செயல்படுவதன் காரணமாகத் தவறு செய்கிறார்கள். இதுபோன்ற தவறான எண்ணம் கொண்டவர்களில் சிலர் கூறுகிறார்கள்: அல்லாஹு தஆலாவிற்கு எமது இபாதத் (வணக்க வழிபாடுகள்) தேவையில்லை. எமது இபாதத் அவனுக்கு எந்த நன்மையும் செய்யாது. மக்கள் அவனை வணங்கினாலும் அல்லது கீழ்ப்படியாமல் போனாலும் அவனுடைய மகத்துவத்தை அது பாதிக்காது. 'இபாதத்' செய்யும் மக்கள் சிரமப்பட்டு வீணாகத் தங்களைத் தொந்தரவு செய்கிறார்கள்." இந்தத் தர்க்கம் தவறானது; இஸ்லாத்தை அறியாதவர்கள் அவ்வாறு கூறுகிறார்கள், ஏனெனில் அல்லாஹு தஆலாவுக்குப் பயனுள்ளதாக இருப்பதால் 'இபாதத் கடமையாக்கப்பட்டது' என்று அவர்கள் நினைக்கிறார்கள். இது மிகவும் தவறான அனுமானமாகும். இது ஒருவருக்கு சாத்தியமானதையும் சாத்தியமற்றதையும் குழப்புகிறது. எவர் எந்த இபாதத்தை செய்தாலும் அது அவருக்கு மட்டுமே பயனுள்ளதாகும். அல்லாஹு தஆலா ஸூரத் பாதிரின் பதினெட்டாவது ஆயத்தில் இவ்வாறு தெளிவாக அறிவிக்கிறான். இந்தத் தவறான எண்ணத்தைச் சுமப்பவன், மருத்துவர் பத்தியம் பேணுமாறு பரிந்துரைத்தாலும், பத்தியம் பேணாது, 'நான் பத்தியம் பேணாவிட்டால் மருத்துவருக்குப் பாதிப்பில்லை.' என்று சொல்லும் நோயாளியைப் போன்றவன்,

அது மருத்துவருக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது. ஆனால் அது அவனுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்று அவன் சொல்வது சரிதான். மருத்துவர் அவனை பத்தியம் பேணுமாறு பரிந்துரைப்பது மருத்துவருக்குப் பயன்படும் என்பதால் அல்ல, நோயாளியின் நோயைக் குணப்படுத்துவதற்காக. அவன் குணமடையவில்லை என்றால் இறந்துவிடுவான். மருத்துவருக்கு அது எந்தத் தீங்கையும் ஏற்படுத்தாது.

உஸ்மானி 'குத்திஸ ஸிர்ருஹ்' ஹிஜ்ரி 1192 ஆம் ஆண்டு பாக்தாத்தின் வடக்கே ஷராசூர் நகரில் பிறந்தார். ஹி.1242 [கி.பி 1826] இல் டமஸ்கஸில் வபாத்தானார். அவர் ஹஸ்ரத் உஸ்மான் தின்னூரைன் 'ரழி-அல்லாஹு அன்ஹ்' குடும்ப மரத்திலிருந்து வந்தவர் என்பதால் அவர் 'உஸ்மானி' என்று அழைக்கப்படுகிறார். அவர் தனது சகோதரர் மௌலானா மஹ்மூத் ஸாஹிபுக்கு இமாம் நவவியின் ஹதீஸ் அர்பஈன் நூலில் உள்ள இரண்டாவது ஹதீஸான நன்கு அறியப்பட்ட ஹதீஸ் ஜிப்ரீலைக் கற்றுக்கொடுக்கும் போது, , மௌலானா மஹ்மூத் ஸாஹிப் தனது மூத்த சகோதரரிடம் அந்த ஹதீஸ் ஷரீபிற்கு ஒரு விளக்கத்தை எழுதும்படி கேட்டார். மௌலானா க்ஹாலித் 'ரஹ்மதுல்லாஹி அலைஹ்' தனது சகோதரரின் ஒளிமயமான உள்ளத்தை மகிழ்விப்பதற்காக இக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, பாரசீக மொழியில் இந்த ஹதீஸ் ஷரீபை விளக்கினார்.

[1] (மக்துபாத்) என்ற இந்தக் கடிதத் தொகுப்பில் 100 கடிதங்கள் உள்ளன. இது ஹி. 741 [கி.பி 1339] இல் தொகுக்கப்பட்டு ஹி. 1329 [கி.பி 1911] இல் இந்தியாவில் அச்சிடப்பட்டது. இஸ்தான்பூலில் உள்ள ஸுலைமானியா நூலகத்தில் இதன் கையெழுத்துப் பிரதி உள்ளது. இர்ஷாத் அஸ்ஸாலிகீன் மற்றும் மஆதின் அல்-மஆனி ஆகியவை அவருடைய மற்ற இரண்டு மதிப்புமிக்க படைப்புகளாகும். ஹி. 1240 [கி.பி 1824] இல் மரணித்த அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் சிறந்த அறிஞரான குலாம் அலி அப்துல்லாஹ் அத்-தஹ்லவி 'ரஹிம-அல்லாஹு தஆலா', அஹ்மத் இப்னு யஹ்யா முனீரியின் மக்தூபாத்தை தனது (99வது) கடிதத்தில் பதிந்துரைத்துள்ளார். அது நப்ஸை சுத்தப்படுத்த மிகவும் உதவியாக இருந்தது என அவர் எழுதியுள்ளார். ஷரீஃப் அத்-தின் அஹ்மத் இப்னு யஹ்யா முனீரி ரஹிம-அல்லாஹு தஆலா இந்தியாவின் பீகாரில் வசித்து வந்தார். அங்கு அவரது அடக்கஸ்தலம் உள்ளது. முனீர் பீகாரில் உள்ள ஒரு கிராமமாகும். அவரது விரிவான சுயசரிதை ஷா அப்துல்-ஹக் அத்-தஹ்லவியின் 'ரஹிம-அல்லாஹு தஆலா' பாரசீகப் படைப்பான அக்பர் அல்-அக்யாரில் எழுதப்பட்டுள்ளது, அது இந்தியாவின் தேவ்பந்தில் ஹி. 1332 [கி.பி 1914] இல் வெளியிடப்பட்டது. பின்னர் பாகிஸ்தானின் லாகூரில் மீளுருவாக்கம் செய்யப்பட்டது.

"வேறு சில வழிகேடான எண்ணம் கொண்டவர்கள் எந்த ஒரு 'இபாதா'வையும் செய்ய மாட்டார்கள்; அவர்கள் தடைகளை (ஹராம்கள்) செய்வதை நிறுத்துவதில்லை. அதாவது, அவர்கள் இஸ்லாத்திற்குக் கீழ்ப்படிவதில்லை. "அல்லாஹ் கரீம்;' அவன் இரக்கமுள்ளவன். அவன் தனது மனித அடியார்களுக்கு மிகவும் பரிவு காட்டுபவன். அவனது மன்னிப்பு முடிவில்லாதது, அவன் யாரையும் துன்புறுத்த மாட்டான்." என அவர்கள் கூறுகிறார்கள். ஆம், அவர்களின் முதல் கூற்று சரியானது, ஆனால் அவர்களின் கடைசிக் கூற்று தவறானது. ஷைத்தான் அவர்களை ஏமாற்றி கீழ்ப்படிவதை விட்டும் வழிகெடுக்கிறான், ஒரு நியாயமான நபர் ஷைத்தானால் ஏமாற்றப்பட மாட்டார், அல்லாஹ் தஆலா கரீம் மற்றும் இரக்கமுள்ளவன் மட்டுமல்ல, இன்னும் அவன் மிகவும் கடுமையாகவும், மிகக் கசப்பாகவும் துன்புறுத்தக் கூடியவன்.அவன் பலரை வறுமையிலும், துன்பத்திலும் வாழச் செய்கிறான் என்பதை நாம் சாட்சியாகக் காண்கிறோம்.அவன் தயக்கமின்றி தனது அடிமைகள் பலரை வேதனையில் வாழச் செய்கிறான். அவன் இரக்கமுள்ளவனாகவும், ரஸ்ஸாக் (உணவளிப்பவனாகவும்) இருந்த போதும், விவசாயம், பயிர்ச்செய்கை போன்ற பிரச்சினைகள் தீராமல் ஒரு துண்டு ரொட்டி கூட கொடுக்க மாட்டான். எல்லோரையும் வாழ வைப்பவன் அவன் என்றாலும், உண்ணாமல், குடிக்காமல் ஒருவரை வாழ விடமாட்டான். மருந்து உட்கொள்ளாத நோயுற்றவரை குணப்படுத்தமாட்டான். வாழ்தல், நோய் வராமல் இருத்தல், சொத்துடைமை போன்ற அனைத்து உலகப் பாக்கியங்களுக்கும் வழிவகைகளை உருவாக்கி, உலகப் பாக்கியத்தைப் பற்றிக் கொள்ளாதவர்கள் மீது கருணை காட்டமாட்டான். மருத்துவத்தில் இரண்டு வகை உண்டு: சடப்பொருள்சார் மருத்துவம் மற்றும் ஆன்மீக மருத்துவம். எந்த விதமான நோயையும் குணப்படுத்தும் ஆன்மிக மருத்துவம் தர்மம் கொடுப்பதும் பிரார்த்தனை செய்வதுமாகும். பரவலாக அறியப்பட்ட பின்வரும் இரண்டு ஹதீஸ் ஷரீப்கள் அடிக்கடி வாசிக்கப்படக்கூடியன: "தர்மம் செய்வதன் மூலம் உங்கள் நோயாளிகளை குணப்படுத்துங்கள்!" மற்றும் "இஸ்திக்ஃபார் (என்று அழைக்கப்படும்) பிரார்த்தனை எந்த நோயையும் குணப்படுத்தும் மருந்தாகும்."[1] சடப்பொருள்சார் மருந்துகள் ஏராளம் உள்ளன. அவற்றை அறிய அனுபவம் தேவை. ஆன்மீக மருந்துகளை அடிக்கடி பயன்படுத்துவது சடப்பொருள்சார் மருந்துகளையும் கண்டுபிடிக்க உதவும். மறுமையின் பாக்கியத்தை அடைவதும் அப்படித்தான். இறைநிராகரிப்பு மற்றும் அறியாமை என்பவற்றை ஆன்மாவை மரணமடையச் செய்யும் விஷங்களாக இறைவன் ஆக்கியுள்ளான். மேலும் சோம்பல் ஆன்மாவை நோயுறச் செய்கிறது. மருந்தைப் பயன்படுத்தாவிட்டால், ஆன்மா நோய்வாய்ப்பட்டு இறந்துவிடும். இறைநிராகரிப்புக்கும் அறியாமைக்கும் ஒரே மருந்து அறிவும் மஃரிபாவும்தான். தொழுகை மற்றும் அனைத்து விதமான 'இபாதத்'களையும் செய்வதே சோம்பலுக்கான மருந்தாகும். இவ்வுலகில், ஒருவன் விஷம் அருந்திவிட்டு, 'அல்லாஹ் கருணையுள்ளவன், விஷத்தின் தீங்கு விளைவிக்காமல் என்னைக் காப்பான்' என்று சொன்னால், அவன் நோய்வாய்ப்பட்டு இறந்துவிடுவான். வயிற்றுப்போக்கு உள்ள ஒருவன் ஆமணக்கு எண்ணெய்யைக் குடித்தால் [அல்லது நீரிழிவு நோயாளி சர்க்கரை அல்லது மாப்பொருள் உணவு சாப்பிட்டால்] அவரது நிலை மோசமாகிவிடும். மனித உடல் மென்மையானது என்பதால், அதற்குத் தேவையான பல்வேறு வகையான அம்சங்கள் உள்ளன, [உணவு, உடை மற்றும் உறையுள் போன்றவை.] அவற்றைப் பெற்றுக் கொண்டு பயன்படுத்துவதற்கு அவற்றைத் தயாரிப்பது மிகவும் கடினம். மனித இயல்பில் நப்ஸ் என்று அழைக்கப்படும் ஒரு தனி சக்தி உருவாக்கப்பட்டுள்ளது, இதனால் உழைப்பு (இந்த முக்கியத் தேவைகளைக் கண்டுபிடித்துத் தயாரிப்பது) எளிதாகவும் வசதியாகவும் நிர்வகிக்கப்பட வேண்டும். விலங்குகளுக்குள் இந்த சக்தியை உருவாக்க வேண்டிய அவசியமில்லை. நப்ஸ் உடல் தேவைகளை நிறைவேற்ற ஏங்குகிறது. இது போன்ற செயல்களை அளவு கடந்து செய்வதால் அது மகிழ்கிறது. நப்ஸின் இத்தகைய ஆசைகள் ஷஹ்வா (காமம்) என்று அழைக்கப்படுகின்றது. தேவைக்கு அதிகமாகவும், மனதின் கண்காணிப்பை மீறியும் ஷாஹ்வாவைத் திருப்திப்படுத்துவது ஒருவரின் இதயத்திற்கும் உடலுக்கும் மற்றவர்களுக்கும் தீங்கு விளைவிக்கும். இது பாவமாகும்.

---

[1] *இஸ்திஃக்பார் என (அழைக்கப்படும் பிரார்த்தனை) பின்வருமாறு:*

"அஸ்தக்ஃபிருல்லாஹ் அல் 'அழீம் அல்-லதி லா இலாஹ இல்லா ஹுவ அல் ஹய்-அல்-கய்யூம் வ அதூபு இலைஹ்". இதனை அடிக்கடி சொல்ல வேண்டும். அதன் குறுகிய வடிவம், அதாவது, "அஸ்தக்ஃபிருல்லாஹ்" என்று கூறுவதாகும். அவசரமான நேரங்களில் அவ்வாறு செய்யலாம்.

Endless Bliss இன் முதல் பாகத்தின் பதின்மூன்றாவது அத்தியாயத்தின் இறுதிப் பகுதியைப் பார்க்கவும்!

"காமம் (ஷஹ்வா), கோபம் (கழப்) மற்றும் சிற்றின்ப ஆசைகளை ஒழிப்பதற்காக இன்னொரு வழிகெட்ட சிந்தனையாளர் குழு பசியின் மூலம் ரியாழாவை அனுபவிக்கிறார்கள். இஸ்லாம் இதனை ஏற்றுக்கொள்வதில்லை. நீண்ட நாட்களாக பசித்திருந்தும் இந்தத் தீய ஆசைகள் அழியாமல் இருப்பதைக் கண்டு, சாத்தியமற்ற ஒன்றை இஸ்லாம் கட்டளையிடுகிறது என்று முடிவு செய்கிறார்கள். அவர்கள், "இஸ்லாத்தின் இந்தக் கட்டளைகளை நிறைவேற்றுவது சாத்தியமற்றது. மனிதன் அவனிடம் இயல்பாக உள்ள குணங்களை இல்லாமல் செய்ய முடியாது. அவற்றிலிருந்து விடுபட முயல்வது நிறமுள்ள மனிதனை வெண்மையாக்கப் பாடுபடுவதைப் போன்றது. அசாத்தியமான ஒன்றைச் செய்ய முயல்வது ஒருவனுடைய வாழ்க்கையை வீணாக்குவதாகும்." எனக் கூறுகிறார்கள். அவர்கள் தவறான திசையில் சிந்தித்து செயல்படுகிறார்கள். ஆனால், இஸ்லாம் அவ்வாறு கட்டளையிடுகிறது என்று கூறுவது சுத்த அறியாமை மற்றும் முட்டாள்தனமாகும். ஏனெனில் இஸ்லாம் மனிதப் பண்புகளான கோபம், காமம் போன்றவற்றை ஒழிக்கக் கட்டளையிடவில்லை. அத்தகைய கூற்று இஸ்லாத்திற்கு எதிரான அவதூறாகும். இஸ்லாம் இவ்வாறு கட்டளையிட்டிருந்தால், இஸ்லாத்தின் தலைவரான முஹம்மத் "அலைஹிஸ்ஸலாம்" இந்தப் பண்புகளை கொண்டிருக்கமாட்டார். உண்மையில், அவர் கூறியது யாதெனில், 'நானும் ஒரு மனிதன். யாரையும் போல நானும் கோபப்படுவேன்." அவர் அவ்வப்போது கோபத்துடன் காணப்படுவார். அவருடைய கோபம் எப்போதும் அல்லாஹ் தஆலாவுக்காகவே இருந்தது. குர்ஆன் அல்-கரீமில் 'தமது கோபத்தை வெல்லக்கூடிய' மக்களை அல்லாஹ் தஆலா பாராட்டுகிறான். கோபம் கொள்ளாதவர்களை அவன் புகழ்வதில்லை. காமத்தை ஒழிக்க வேண்டும் என்ற தவறான சிந்தனையாளர்களின் கூற்று முற்றிலும் ஆதாரமற்றது. ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒன்பது பெண்களை "ரழிய-அல்லாஹு தஆலா அன்ஹுன்ன' மணந்தார் என்பது அவர்களின் கூற்றுத் தவறானது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. ஒருவன் தன் இச்சையை இழந்தால், மருந்து உட்கொண்டு அதை மீண்டும் பெற வேண்டும். கோபமும் அவ்வாறுதான்; ஒரு மனிதன் தனது மனைவி மற்றும் குழந்தைகளை கோபத்தின் பண்பையும் துணையாகக் கொண்டுதான் பாதுகாக்க முடியும். இந்தப் பண்பின் உதவியால்தான் இஸ்லாத்தின் எதிரிகளுக்கு எதிராக அவன் (ஜிஹாத்) போராடுகிறான். ஒருவன் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதும் மரணத்திற்குப் பிறகு மரியாதை மற்றும் புகழுடன் பேசப்படுவதும் அவனது இச்சையின் காரணமாகத்தான் நிகழ்கிறது. இவை இஸ்லாத்தால் விரும்பப்பட்ட மற்றும் போற்றப்பட்ட விடயங்களாகும்.

"காமத்தையும் கோபத்தையும் ஒழிக்கக் கூடாது, இரண்டையும் கட்டுப்படுத்தி, இஸ்லாம் விதித்தபடி அவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்று இஸ்லாம் கட்டளையிடுகிறது. குதிரை வீரனோ, வேட்டைக்காரனோ தன் குதிரையையோ நாயையோ கொன்றுவிடாமல் அடக்கி வைப்பது அவசியம். அதை உபயோகிக்கும் விதத்தில், காமமும் கோபமும் வேட்டைக்காரனின் நாய் மற்றும் குதிரைவீரனின் குதிரை போன்றது, இவை இரண்டும் இல்லாமல், அடுத்த உலகத்தின் அருள்பாக்கியங்களை வேட்டையாட முடியாது, ஆனால் அவற்றைப் பயன்படுத்துவதற்குப் பயிற்சி தேவை. அவற்றை இஸ்லாத்திற்கு ஏற்றவாறு பயன்படுத்த வேண்டும். அவை பயிற்றுவிக்கப்படாவிட்டால், இஸ்லாத்தின் வரம்புகளை மீறி, ஒருவரை அழிவுக்கு இட்டுச் சென்றுவிடக்கூடியன. ரியாழா என்பது இந்த இரண்டு பண்புகளையும் அழிப்பதற்காக அல்ல, மாறாக அவற்றைப் பயிற்றுவித்து, இஸ்லாத்திற்குக் கீழ்ப்படிவதற்காகத்தான். இது அனைவருக்கும் சாத்தியமானது.[1] அணுசக்தியைப் பயன்படுத்துவதோ அல்லது ஜெட் விமானங்கள் போன்றவற்றை உருவாக்குவதோ நாகரீகம் அல்ல. மனித குலத்திற்கு சேவை செய்ய அவற்றைப் பயன்படுத்துவதுதான் நாகரீகம். இஸ்லாத்தைப் பின்பற்றுவதன் மூலம் அதனை அடைய முடியும்.

"தவறான சிந்தனையாளர்களின் நான்காவது குழுவைப் பொறுத்தவரை, அவர்கள் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்கிறார்கள், 'எல்லாம் நிலையான கடந்த காலத்தில் முன்னரே

[1] *Endless Bliss* இன் ஆறாவது பாகத்தின் இருபத்தி ஆறாவது அத்தியாயத்தைப் பார்க்கவும்.

தீர்மானிக்கப்பட்டு விட்டது. ஒரு குழந்தை பிறப்பதற்கு முன்பே, அது ஸஈத் (சுவர்க்கத்திற்குத் தகுதியானவன்) அல்லது ஷகீ (நரகத்திற்குது தகுதியானவர்) என்று தீர்மானிக்கப்படுகிறது. இது பின்னர் மாறாது. எனவே, வணங்குவது நல்லதல்ல' என்பதாக அவர்கள் நம்புகின்றனர். கழாவும் கதர்களும் மாறாது என்றும், எல்லாமே நித்தியத்திலும் முன்னறிவிக்கப்பட்டவை என்றும் ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்' அவர்கள் கூறியபோது அஸ்-ஸஹாபத் அல்-கிராம், "நித்தியமான மற்றும் முன்தீர்மானத்தில் நம்பிக்கை வைப்போம். 'இபாதத்' செய்யத் தேவையில்லை" என்று கூறினார்கள். ஆனால் ரஸூலுல்லாஹ் பதிலளித்தார்: 'வணக்க வழிபாடுகளைச் செய்யுங்கள்! எவருக்கும் நித்தியமாக முன்குறிக்கப்பட்டதைச் செய்வது எளிது!' அதாவது, நித்தியத்தில் ஸஈத் என்று தீர்மானிக்கப்பட்டவர், அந்த ஸஈத் செய்வதையே செய்ய வைக்கப்படுவார். எனவே, நித்தியத்தில் ஸஈத் என்று தீர்மானிக்கப்பட்டவர்கள் இபாதத் செய்கிறார்கள் என்பது புரிகிறது. நித்தியத்தில் ஆரோக்கியமாக வாழ முன் விதிக்கப்பட்டவர்கள் உணவும் மருந்தும் உட்கொள்வதையும், நோய்வாய்ப்பட்டு இறப்பது முன்னரே தீர்மானிக்கப்பட்டவர்கள் உணவையும் மருந்தையும் சாப்பிடாமல் இருப்பதைப் போன்றே ஷகீ என்று விதிக்கப்பட்டவர்கள் இறைவனுக்குக் கீழ்ப்படிய மாட்டார்கள். பசியால் அல்லது நோயால் இறப்பதாக தீர்மானிக்கப்பட்டவர்கள் உணவு அல்லது மருந்தால் பயனடைய முடியாது. பணக்காரர் ஆக வேண்டும் என்று முன்விதிக்கப்பட்ட ஒருவருக்கு சம்பாதிப்பதற்கான வழிகள் திறந்திருக்கும். கிழக்கில் இறக்க வேண்டிய ஒரு நபருக்கு மேற்கு நோக்கிச் செல்லும் வழிகள் மூடிவிடப்படுகின்றன.'

ஒரு அறிவிப்பின்படி, இஸ்ராஈல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் [நபி] ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சந்தித்தபோது, அங்கு அமர்ந்திருந்த ஒருவரைக் கூர்ந்து பார்த்தார். வானவரின் கடுமையான பார்வையால் அந்த மனிதன் பயந்தான். 'இஸ்ராஈல் அலைஹிஸ்ஸலாம்' மறைந்தபோது, 'இஸ்ராஈல்' அலைஹிஸ்ஸலாமிடம் இருந்து தப்பிக்க, மேற்கு நாட்டிற்கு அழைத்துச் செல்லும்படி காற்றுக்கு கட்டளையிடும்படி சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் அம்மனிதர் கெஞ்சினார். இஸ்ராஈல் அலைஹிஸ்ஸலாம் திரும்பி வந்த போது, சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், "அந்த நபரின் முகத்தை ஏன் உன்னிப்பாகப் பார்த்தீர்கள்" என்று கேட்டார். இஸ்ராஈல் அலைஹிஸ்ஸலாம்' கூறினார், "ஒரு மணி நேரத்தில் ஒரு மேற்கு நகரத்தில் வைத்து அவருடைய உயிரை எடுத்துச் செல்லும்படி நான் கட்டளையிடப்பட்டேன். ஆனால், அவர் உங்களோடு இருப்பதைப் பார்த்தபோது, என்னால் ஆச்சரியத்துடன் அவரைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. பின்னர் எனக்கான கட்டளையை நிறைவேற்ற மேற்கு நோக்கிச் சென்ற போது அவர் அங்கிருப்பதைக் கண்டு உயிரைப் பறித்துக் கொண்டேன்."[1] இங்கு கண்டதைப் போன்று, அந்த மனிதன் இஸ்ராஈல் "அலைஹிஸ்ஸலாமுக்கு' அஞ்சினார். அதனால் நித்திய முன்தீர்ப்பு அவ்வாறு நிகழ்ந்தது, அத்தோடு அதற்காக சுலைமான் "அலைஹிஸ்ஸலாம்" இணங்கினார்; நித்திய முன்தீர்ப்பு என்பது காரண காரியங்களின் சங்கிலி மூலம் செயற்படுத்தப்பட்டது. அதுபோலவே, நித்தியத்தில் ஸஈத் என்று தீர்மானிக்கப்பட்ட ஒருவர், ஈமானைப் பெற்று, தன் கெட்ட பழக்கங்களை ரியாழா செய்வதன் மூலம் திருத்திக் கொள்வார். ஸூரத் அல்-அன்ஆமின் 125 ஆவது வசனம் கூறுகிறது: "அல்லாஹு தஆலா இஸ்லாத்தைச் சரியான வழியில் வழிநடத்த விரும்பும் அவனுடைய அடிமையின் இதயத்தில் பதிக்கிறான்.' நித்தியத்தில் ஷகீயாக இருந்த ஒருவருக்கு, அதாவது நரகத்திற்குச் செல்வதற்கு முன்குறிக்கப்பட்ட ஒருவருக்கு, 'இபாதத் செய்ய வேண்டிய அவசியமில்லை' என்ற எண்ணம் கொடுக்கப்படுகிறது. ஒரு நபர் ஸஈத் அல்லது ஷகீயாக இருப்பாரா என்பது நித்தியத்தில் முன்னரே தீர்மானிக்கப்பட்டு விட்டது. இந்த எண்ணத்தின் காரணமாக அவர் 'இபாதத்' செய்வதில்லை. இந்த எண்ணத்தின் காரணமாக அவர் 'இபாதத்' செய்யாதது, அவர் நித்தியத்திலும் ஷகீயாக இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. அதுபோலவே, நித்தியத்தில் அறியாமை முன்குறிக்கப்பட்ட ஒரு நபருக்கு, 'எல்லாம் நித்தியத்தில் முன்னரே தீர்மானிக்கப்பட்டது. ஒருவன் அறியாமையினால் முன்குறிக்கப்பட்டிருந்தால், வாசிப்போ அல்லது கற்றலோ அவனுக்கு எந்தப் பயனும் தராது' என்ற எண்ணம் ஏற்படுகிறது. இதனால் அவர் எதையும் கற்பதில்லை. அவன்

[1] ஹி. 672 [கி.பி 1273] இல் கொன்யாவில் வபாத்தான ஜலால் அத்-தீன் ரூமி என்பவரால் இந்த சம்பவம் மஸ்னவியில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

தொடர்ந்து அறியாதவனாகவே இருக்கிறான். ஒருவன் விவசாயம் செய்து அதிகப் பயிர்களைப் பெறுவதற்கு முன்குறிக்கப்பட்டிருந்தால், அவனுடைய வயலை உழுவதற்கும் விதைகளை விதைப்பதற்கும் அவனுக்கு சந்தர்ப்பம் வாய்க்கும். நித்தியத்தில் ஸஈத்களாக ஈமானைப் பெறுவதற்கும் வழிபடுவதற்கும் முன்தீர்மானிக்கப்பட்டவர்களுக்கும் ஷகீ என்று முன்தீர்மானிக்கப்பட்டவர்களான இறைமறுப்பாளர்களுக்கும் கீழ்ப்படியாதவர்களுக்கும் இதே நிலைதான். இதைப் புரிந்து கொள்ள முடியாத முட்டாள்கள், "ஈமானுக்கும் இபாதத்துக்கும் நித்தியத்தில் ஸஈத்தாக இருப்பதற்கும், அல்லது இறை மறுப்பு மற்றும் கீழ்ப்படியாமைக்கும் ஷகீயாக இருப்பதற்கும் என்ன சம்பந்தம்?" என்று கூறுகிறார்கள். அவர்களின் குறுகிய பகுத்தறிவுடன், அவர்கள் இந்த உறவைப் புரிந்துகொள்ளவும், தமது சொந்த அறிவாற்றலால் எல்லாவற்றையும் தீர்க்கவும் முயற்சி செய்கிறார்கள். ஆனால் மனித பகுத்தறிவு வரம்புக்குட்பட்டது, பகுத்தறிவின் புரிதலுக்கு அப்பாற்பட்ட விஷயங்களை பகுத்தறிவுடன் புரிந்துகொள்ள முயற்சிப்பது முட்டாள்தனமாகும். அப்படி நினைப்பவர்களை முட்டாள்கள் என்றுதான் மதிப்பிட வேண்டும். ஈஸா, 'அலைஹிஸ் ஸலாம்', "பிறவியிலேயே பார்வையற்றவர்களைக் கண்பார்வை கொடுப்பதோ, இறந்தவர்களை உயிர்ப்பிப்பதோ கூட எனக்குச் சிரமமாக இருக்கவில்லை. ஆனால் எந்த முட்டாளுக்கும் என்னால் உண்மையை விளக்க முடியவில்லை" என்று கூறியுள்ளார். அல்லாஹ் தஆலா, தனது எல்லையற்ற அறிவு மற்றும் ஞானத்தால் (ஹிக்மா) தனது அடியார்களில் சிலரை வானவர்களுக்கு இணையான தரத்திற்கு உயர்த்துகிறான், மாறாக, அதை விட உயர்ந்த தரத்திற்கும் உயர்த்துகிறான், மேலும் சிலரை அவர் நாய்கள் அல்லது பன்றிகளின் தரத்திற்குத் தாழ்த்தி விடுகிறான்."

ஹஸ்ரத் ஷரீப் அத்-தீன் அஹ்மத் இப்னு யஹ்யா முனீரீ தனது 76ஆவது கடிதத்தில் பின்வருமாறு கூறுகிறார்:

'ஸஆதா' என்றால் 'சுவர்க்கம் தகுதியாதல்'. 'ஷகாவா' என்றால் 'நரகத்திற்குத் தகுதியாதல்.' ஸஆதாவும் ஷகாவாவும் அல்லாஹ் தஆலாவின் இரண்டு கிடங்குகள் போன்றது. முதல் கிடங்கின் திறவுகோல் கீழ்ப்படிதலும் இபாதாவும் ஆகும். இரண்டாவது கிடங்கின் திறவுகோல் பாவமாகும். அல்லாஹ் தஆலா ஒரு நபர் ஸஈத் அல்லது ஷகீயாக இருப்பாரா என்பதை நித்தியத்தில் விதித்துள்ளான். [அதை விதி என்கிறோம்.] நித்தியத்தில் ஸஈத் என்று அழைக்கப்பட்ட ஒருவருக்கு இவ்வுலகில் ஸஆதாவின் திறவுகோல் கொடுக்கப்பட்டு, அவர் அல்லாஹ் தஆலாவுக்குக் கீழ்ப்படிகிறார். நித்தியத்தில் ஷகீயாக உள்ள ஒருவருக்கு இவ்வுலகில் ஷக்வாவின் திறவுகோல் கொடுக்கப்படுகிறது, அவர் எப்போதும் பாவங்களைச் செய்கிறார். இவ்வுலகில் ஒவ்வொருவரும் அவர் ஸஈதா அல்லது ஷகீயா என்பதை அவர் கையில் இருக்கும் சாவியைப் பார்த்தாலே புரியும். மறுமையைப் பற்றி சிந்திக்கும் மார்க்க அறிஞர்கள் இதிலிருந்து ஒருவர் ஸஈதா அல்லது ஷகீயா என்பதைப் புரிந்துகொள்கிறார்கள். ஆனால் இந்த உலகத்திற்கு அடிமையான ஒரு மார்க்கப் பதவியுடைய மனிதனுக்கு அது தெரியாது. எல்லாவிதமான கண்ணியமும் பாக்கியங்களும் அல்லாஹ் தஆலாவுக்குக் கீழ்ப்படிந்து வழிபடுவதில் உள்ளது. ஒவ்வொரு தீமையும் பிரச்சினையும் பாவத்தில் இருந்து உருவாகின்றன. பாவம் செய்வதன் மூலம் அனைவருக்கும் துன்பமும் இன்னலும் ஏற்படுகிறது. கீழ்ப்படிதலின் மூலம் ஆறுதலும் நிம்மதியும் கிடைக்கின்றது.[1] ஜெரூசலமில் உள்ள அக்ஸா பள்ளிவாயலில் பல ஆண்டுகளாக தொழுகையிலும் இபாதாத் செய்வதிலும் தன் வாழ்நாளைக் கழித்த ஒருவர் இருந்தார்; அவர் வணக்கத்திற்கான நிபந்தனைகளையும் இஃக்லாஸையும் கற்றுக் கொள்ளாததன் காரணமாக ஒரு ஸஜ்தாவை (சிரம்பணிவதைப்) புறக்கணித்தபோது, அவர் அனைத்தையும் இழந்தார், அவர் முற்றிலும் அழிந்து போனார். இருப்பினும், அஸ்ஹாப் அல்-கஹ்பின் நாய் ஸித்தீக்களுக்குப் பின்னால் சில அடிகள் நடந்ததால், அது மிகவும் உயர் அந்தஸ்தைப் பெற்றது, அது அழுக்காக இருந்தாலும் பின்வாங்கப்படவில்லை. இது

[1] இது அல்லாஹ் தஆலாவின் தெய்வீக சட்டமாகும். இதை யாராலும் மாற்ற முடியாது. நம் நப்ஸுக்கு எளிதாகவும் இனிமையாகவும் தோன்றும் ஒன்றை ஸஆதா என்று நாம் கருதக்கூடாது. நப்ஸுக்குக் கடினமாகவும் கசப்பாகவும் தோன்றும் விடயங்களை ஷகாவா அல்லது அழிவு என்று நாம் நினைக்கக்கூடாது.

மிகவும் ஆச்சரியமாக உள்ளது; அறிவுள்ள மனிதர்களால்கூட இந்தப் புதிரை நூற்றாண்டுகளாக தீர்க்க முடியவில்லை.

மனித பகுத்தறிவால் அதில் மறைந்திருக்கும் தெய்வீக ஞானத்தைப் புரிந்து கொள்ள முடியாது. அல்லாஹு தஆலா ஆதமிடம் "அலைஹிஸ்ஸலாம்" கோதுமையை சாப்பிட வேண்டாம் என்று கூறினான். ஆனால் அவன் அதை சாப்பிட அனுமதித்தான். ஏனென்றால் அவர் அதை சாப்பிடுவார் என்று நித்தியத்தில் அல்லாஹ் அறிந்திருந்தான்; அவன் ஆதம் "அலைஹிஸ்ஸலாம்" இற்கு சிரம்பணியுமாறு ஷைத்தானுக்குக் கட்டளையிட்டான், ஆனால் ஷைத்தான் சிரம்பணியக் கூடாது என்று இறைவன் நாடினான்; நாம் அவனைப் பார்க்க வேண்டும் என்று அவன் கூறியுள்ளான், ஆனால் இஃக்லாஸ் இல்லாதவர்களுக்கு அவன் அதை நாடவில்லை. [இந்த விடயங்களில்] தெய்வீக வழியில் பயணிப்போர் இந்த நுணுக்கத்தைப் புரிந்துகொள்வதற்குத் தமது போதாமையை ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது. அவர்கள் இதுபற்றி எதுவும் சொல்லவில்லை. ஆகவே, நாம் எப்படி எதையும் சொல்ல முடியும்? மனிதர்களின் நம்பிக்கையோ வழிபாடுகளோ அவனுக்குத் தேவையில்லை, இறைநிராகரிப்போ பாவமோ அவனுக்குத் தீங்கு விளைவிக்காது. அவனுடைய படைப்பினம் அவனுக்கு ஒருபோதும் தேவையில்லை. அவன் அறிவை அவநம்பிக்கையைப் போக்குவதற்கான ஒரு வழிமுறையாக ஆக்கியுள்ளான், மேலும் அறியாமையை பாவத்திற்கான வழிமுறையாக உருவாக்கியுள்ளான். நம்பிக்கையும் கீழ்ப்படிதலும் அறிவிலிருந்து உருவாகின்றன, அதே சமயம் அவநம்பிக்கை மற்றும் பாவம் அறியாமையிலிருந்து உருவாகின்றன. கீழ்ப்படிதல் என்பது தாழ்வாகத் தோன்றினாலும் தவற விடக்கூடாது! மேலும் பாவம் செய்வது வெறுக்கத்தக்கதாக தோன்றினாலும் தவிர்க்கப்பட வேண்டும்! இஸ்லாமிய அறிஞர்கள் மூன்று விடயங்கள் மற்ற மூன்று விடயங்களை ஏற்படுத்தும் என்று கூறினார்கள்: கீழ்ப்படிதல் அல்லாஹு தஆலாவின் ரிழா (திருப்தியை) ஏற்படுத்துகிறது; பாவம் அவனது கோபத்தை (கழப்) ஏற்படுத்துகிறது; ஈமான் ஒருவருக்கு மரியாதையையும் கண்ணியத்தையும் ஈட்டித் தருகிறது. இதன் காரணமாக, நாம் கண்டிப்பாக ஒரு சிறு பாவம் கூட செய்யக் கூடாது; அந்தப் பாவத்தில் அல்லாஹு தஆலாவின் கோபம் இருக்கலாம். ஒவ்வொரு விசுவாசியையும் நம்மை விட சிறந்தவர்களாக நாம் கருத வேண்டும். அவர் அல்லாஹு தஆலா மிகவும் நேசிக்கும் அடியாராக இருக்கலாம். நித்தியத்தில் தீர்மானிக்கப்பட்ட ஒவ்வொரு நபரின் விதியையும் ஒருபோதும் மாற்ற முடியாது. அல்லாஹு தஆலா நாடினால், எப்பொழுதும் பாவம் செய்து, அவனது கட்டளைகளைக் கடைப்பிடிக்காத ஒருவரை அவன் மன்னிப்பான். வானவர்கள் கேட்ட போது, 'யாரப்பே! உலகம் முழுவதும் தீமைகள் செய்து இரத்தம் சிந்தும் படைப்பையா நீ உருவாக்கப் போகிறாய்?' அவர்கள் தீமை செய்ய மாட்டார்கள் என்று அவன் கூறவில்லை, மாறாக அவன், "உங்களுக்குத் தெரியாததை நான் அறிவேன்." என்றுதான் கூறினான். அவன் நாடியது யாதெனில்: "நான் பெறுமதியற்ற (ஏதாவது ஒன்றை) பெறுமதிவாய்ந்ததாக ஆக்குகிறேன். தொலைவில் இருப்பவர்களை அருகில் வரச் செய்கிறேன். நான் தாழ்வான (ஏதாவது ஒன்றை) உயர்வானதாக ஆக்குகிறேன். அவர்களின் நடத்தையால் நீங்கள் அவர்களை மதிப்பிடுகிறீர்கள், ஆனால் நான் அவர்களின் இதயங்களைப் பார்க்கிறேன். உங்கள் பாவமின்மையை நீங்கள் கணக்கில் எடுத்துக்கொள்கிறீர்கள்; அவர்கள் என் கருணையில் தங்களை நம்புகிறார்கள். உங்கள் அப்பாவித்தனத்தை நான் விரும்புவது போல, முஸ்லிம்களின் பாவங்களை மன்னிக்க நான் விரும்புகிறேன். நான் அறிந்ததை உங்களால் அறிய முடியாது. நான் அவர்களை என் நித்திய அருள்களை அடையச் செய்கிறேன், அவர்கள் அனைவரையும் நான் என்றென்றும் தயவுடன் நேசிக்கிறேன்." "எழுபத்தி ஆறாவது கடிதத்தில் இருந்து எமது மொழிபெயர்ப்பை இதோ முடிக்கிறோம்.

ஷரீபுத்தீன் அஹ்மத் பின் யஹ்யா முனீரீ 'ரஹ்மதுல்லாஹி தஆலா அலைஹ் ஹி. 732 [கி.பி 1380] இல் காலமானார். அவர் இந்தியாவின் பீகார் நகரில் வாழ்ந்தார். அவருடைய அடக்கஸ்தலம் அங்கே உள்ளது. முனீர் என்பதும் பீகார் நகர்ப் பகுதியில் உள்ள கிராமங்களின் பெயர்களில் ஒன்றாகும். ஷா அப்துல்ஹக் தஹ்லவி 'ரஹ்மதுல்லாஹி தஆலா அலைஹ்' எழுதிய அக்பர்-உல் அக்ஹ்யார் என்ற நூலில் அவரது வாழ்க்கை வரலாறு விரிவாக எழுதப்பட்டுள்ளது. இந்த நூல் பாரசீக மொழியில் உள்ளது. இது ஹி.1332 [கி.பி 1914] இல் இந்தியாவின் தேவ்பந்த் நகரத்திலும், பின்னர் பாகிஸ்தானின் லாகூரிலும் அச்சிடப்பட்டது. அந்த நூல்களும், இர்ஷாத்-உஸ்-ஸாலிகீன், மஆதீன்-உல்-மஆனி மற்றும் மக்தூபத் ஆகியவையும் மிகவும் மதிப்புமிக்கவை. அஹ்மத் பின் யஹ்யா முனீரியின்

மக்தூபாத் என்ற நூலைப் படிக்குமாறு சிறந்த அஹ்ல் அஸ்ஸுன்னா அறிஞர்களில் ஒருவரான குலாம் அலி அப்துல்லாஹ் தஹ்லவி 'ரஹ்மதுல்லாஹி தஆலா அலைஹ்'[1] பரிந்துரைக்கிறார். அது உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதாக தனது 99ஆவது கடிதத்தில் குறிப்பிடுகிறார். .

[இமாம்-ரப்பானி 'ரஹ்மதுல்லாஹி 'அலைஹ்' தனது பல்வேறு கடிதங்களில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "அல்லாஹு தஆலாவின் கட்டளைகள் பர்ள்(கள்) என்று அழைக்கப்படுகின்றன. அவனது தடைகள் ஹராம்(கள்) என அழைக்கப்படுகின்றன. பர்ளோ அல்லது ஹராமோ அல்லாத (செயல்கள், சொற்கள், நடத்தைகள்) (இஸ்லாத்தில்) சுதந்திரமானவை முபாஹ்(கள்) என்று அழைக்கப்படுகின்றன. பர்ள்களை நிறைவேற்றுவது, ஹராம்களைத் தவிர்ப்பது மற்றும் அல்லாஹு தஆலாவுக்காக (அதாவது அவனது அருளுக்காக) மகிழ்ச்சிக்காக முபாஹ்களைச் செய்வது வணக்க வழிபாடு என்று அழைக்கப்படுகிறது. ஒரு வழிபாட்டுச் செயல் ஸஹிஹ் மற்றும் மக்பூலாக, அதாவது அது சரியானது மற்றும் அல்லாஹு தஆலாவால் விரும்பப்படுவதற்கு, இல்ம் (அறிவு), அதாவது நிபந்தனைகளைக் கற்றுக்கொள்வது என்பது நிபந்தனையாகும். அது சரியாகச் செய்யப்படுவது என்பது, விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க, இஃக்லாஸுடன் செய்வதாகும். இஃக்லாஸுடன செய்வது என்றால் அல்லாஹு தஆலாவின் அருளையும் அன்பையும் பெறுவதற்காக, அவன் கட்டளையிட்டதால் மட்டுமே, பணம், பதவி, புகழ் போன்ற உலக நன்மைகளைக் கருத்தில் கொள்ளாமல் அதைச் செய்வதாகும். ஒரு திறமையான மார்க்க ஆசிரியரின் மேற்பார்வையின் கீழ் ஃபிக்ஹ் நூல்களைப் படிப்பதன் மூலம் இல்ம் (அறிவு) பெறப்படுகிறது. மேலும் வாலியின் வார்த்தைகள் மற்றும் பழக்கவழக்கங்களைக் கவனிப்பதன் மூலமும், தஸவ்வுஃப் அறிவியல் பற்றிய அவரது நூல்களைப் படிப்பதன் மூலமும் இஃக்லாஸ் அடையப்பெறுகிறது. இஸ்லாமிய அறிவு இரண்டு கூறுகளைக் கொண்டுள்ளது: மார்க்க அறிவு மற்றும் விஞ்ஞான அறிவு. தேவையான அளவு அவற்றைக் கற்றுக்கொள்வது பர்ள்(அதாவது கட்டாயமாகும்). உதாரணமாக, ஒரு மருந்தைப் பயன்படுத்துவதற்கான நடைமுறைகள் மற்றும் வழிகளைக் கற்றுக்கொள்வது, எடுத்துக்கொள்ள வேண்டிய அளவுகளை கற்றுக் கொள்வது அவசியம். அல்லது மின்சாரம் பற்றிய தேவையான தகவல்களைப் பெறுவதற்காக ஒரு மின் சாதனத்தைப் பயன்படுத்தும் ஒரு நபர் கற்றுக்கொள்ள வேண்டும். இல்லையெனில், அதனால் அபாயகரமான மரணம் கூட சந்திக்க நேரிடலாம்.

''சோம்பேறி அல்லது தீய சகவாசத்தின் விளைவாக வணக்க வழிபாடுகளைப் புறக்கணிக்கும் ஒரு முஸ்லிம் தவ்பா செய்யாமலேயே மரணித்தால், அவர் பர்ள்கள் மற்றும் ஹராம்களில் நம்பிக்கை கொண்டிருந்தாலும், அவர் செய்த பாவத்தின் காரணமாக நரக நெருப்பில் வேதனைப்படுவார்.

பர்ள்களைக் கற்காதவர் அல்லது அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்காதவர், தனக்குத் தெரிந்திருந்தாலும், அவற்றைப் புறக்கணிப்பவர், அல்லாஹு தஆலாவின் பயம் அல்லது அச்சம் இல்லாமல், இஸ்லாத்தை விட்டு வெளியேறி காபிராகிவிடுவார். அவர் என்றென்றும் நரக நெருப்புக்கு ஆளாக நேரிடும். இந்த விதி ஹராமைச் செய்வதற்கும் பொருந்தும்.

"ஒரு நபர் ஒரு குறிப்பிட்ட வணக்க வழிபாட்டைப் பற்றிய தகவல்களைப் பெறவில்லை என்றால், அது சரியானதாக இருப்பதற்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகளை அறியாமல் இருந்தால், அவர் இஃக்லாஸுடன் அதனைச் செய்திருந்தாலும், அவர் செய்த வழிபாடு ஸஹீஹ் (செல்லுபடியாக) ஆகாது. அந்த வணக்கத்தை அறவே செய்யாதவன் போல் நரக நெருப்புக்கு ஆளாக நேரிடும். நிபந்தனைகளை அறிந்து அவற்றைப் பூர்த்தி செய்பவன் செய்யும் வணக்க வழிபாடு ஸஹீஹ் ஆகிவிடும். அது அவனை நரகத்திலிருந்து காப்பாற்றும். ஆனால் அவர் இஃக்லாஸுடன் செய்யாவிடின் அவரது வணக்க வழிபாடோ வேறு எந்த நற்செயல்களோ ஏற்றுக்கொள்ளப்படாது. அவர் அவற்றுக்காக எந்த ஸவாபையும் (மறுமையில் வெகுமதிகளை) பெற மாட்டார், அல்லாஹு தஆலா அந்த வணக்கத்தால் மகிழ்ச்சியடைய மாட்டான் என்று அறிவிக்கிறான். 'இல்ம் மற்றும் இஃக்லாஸ் இல்லாமல் செய்யப்படும் வணக்க வழிபாடுகளும் அவருடைய மற்ற நல்ல, அறச் செயல்கள் எதுவும் பலனளிக்காது. அது வழிபாட்டாளரை நம்பிக்கையின்மை, பாவம் மற்றும் வேதனையிலிருந்து காக்காது. வாழ்நாள் முழுவதும் நயவஞ்சக வழிபாட்டாளர்கள்

[1] அப்துல்லாஹ் தஹ்லவி ஹி.1240 (கி.பி 1824) இல் டெல்லியில் வபாத்தானார்.

இறைநிராகரிப்பாளர்களாக மரணித்த சாட்சிகள் உள்ளன. 'இல்ம் மற்றும் இஃக்லாஸுடன் செய்யப்படும் வணக்க வழிபாடு, அதனைச் செய்பவரை நம்பிக்கையின்மை மற்றும் பாவத்திலிருந்து பாதுகாத்து, உலகில் 'அஸீஸ்' (மிக உயர்ந்த மதிப்பிற்குரியவராக) ஆக்கும். அவரது மறுமை வாழ்க்கையைப் பொறுத்தவரை, அல்லாஹ் தஆலா ஸூரா மாஇதாவின் ஒன்பதாவது ஆயத்-கரீமாவிலும், வல்-அஸ்ர் ஸூராவிலும், நரகத்தில் உள்ள வேதனையிலிருந்து அவரைக் காப்பாற்றுவதாக உறுதியளிக்கிறான். அல்லாஹ் தஆலா தனது வாக்குறுதிகளுக்கு உண்மையாக இருக்கிறான். அவன் எப்போதும் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறான்."]

அல்லாஹ் தஆலா தனது அடிமை மூலமாகவும் பழிவாங்குகிறான். 'இல்ம்-லதுன்னி' இல்லாதவர்களுக்கு அது அடிமையால் செய்யப்பட்டதாக இருக்கும். எல்லாம் அடிமை மூலம் உருவாக்கப்பட்ட படைப்பாளனுக்குச் சொந்தமானது. தெய்வீக உந்துதல் இல்லாமல் ஒரு வைக்கோல் கூட நகராது.

அல்லாஹ் ஒருவனே; அவன் இருக்கிறான். அனைத்து உயிரினங்களும் இல்லாதவையாக இருந்தன. அவை இல்லாது போய்விடும்

எமது புலன் உறுப்புகள் மூலம் எம்மைச் சுற்றியுள்ள விடயங்களை நாம் அறிந்து கொள்கிறோம். எமது புலன் உறுப்புகள் மீது தாக்கம் செலுத்தும் விடயங்கள் உயிரினங்கள் அல்லது படைப்பினங்கள் என்று அழைக்கப்படுகின்றன. எமது ஐந்து புலன்களில் ஏற்படும் உயிரினங்களின் தாக்கங்கள், பண்புகள் அல்லது பண்புக்கூறுகள் என்று அழைக்கப்படுகின்றன. அவை ஒருவருக்கொருவர் வேறுபடுகின்றன. ஒளி, ஒலி, நீர், காற்று மற்றும் கண்ணாடிப் பொருட்கள் அனைத்தும் படைப்பினங்களாகும்; அவை அனைத்தும் உள்ளன. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அண்டவெளியில் ஒரு இடத்தைப் பிடிக்கும் அளவு, எடை மற்றும் கனதி ஆகியவற்றைக் கொண்ட படைப்புகள், சடப்பொருட்கள் என்று அழைக்கப்படுகின்றது. சடப்பொருட்கள் அவற்றின் பண்புகள் அல்லது குணங்களால் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. காற்று, நீர், கல், கண்ணாடி என ஒவ்வொன்றும் தனித்தனி சடப்பொருள். ஒளியும் ஒலியும் சடப்பொருட்கள் அல்ல, ஏனெனில் அவை இடத்தை ஆக்கிரமிக்கவில்லை அல்லது எடை இல்லை. ஒவ்வொரு படைப்பும் ஆற்றல் அல்லது சக்தியைக் கொண்டுள்ளது; அதாவது, அது வேலை செய்ய முடியும். ஒவ்வொரு சடப்பொருளும் மூன்று நிலைகளில் இருக்கலாம்: திண்ம, திரவ மற்றும் வாயு நிலை. திண்மப் பொருட்களுக்கு வடிவங்கள் உள்ளன. திரவ மற்றும் வாயுப் பொருட்கள் அவை இருக்கும் கொள்கலனின் வடிவத்தை எடுக்கும், மேலும் அவை குறிப்பிட்ட வடிவங்களைப் பெற்றதாக இல்லை. வடிவமொன்றைக் கொண்ட சடப்பொருள் பொருள் என்று அழைக்கப்படுகிறது. சடப்பொருட்கள் பெரும்பாலும் பொருள்களாகும். உதாரணமாக, திறப்பு, முள், இடுக்கி, மண்வெட்டி மற்றும் ஆணி ஆகியவை வெவ்வேறு வடிவங்களைக் கொண்ட வெவ்வேறு பொருள்கள். ஆனால் அவை அனைத்தும் ஒரே பொருளால் ஆனது, அதாவது இரும்பினால் ஆனது. இரண்டு வகையான பொருட்கள் உள்ளன: மூலக்கூறுகள் மற்றும் கலவைகள்.

ஒவ்வொரு பொருளிலும் எப்போதும் மாற்றங்கள் நிகழும். உதாரணமாக, அது அசையலாம்; அதன் இடத்தை மாற்றலாம் அல்லது பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ மாறலாம். அதன் நிறம் மாறலாம். அது ஒரு உயிரினமாக இருந்தால் அது நோய்வாய்ப்படலாம் அல்லது இறக்கலாம். இந்த மாற்றங்கள் நிகழ்வுகள் என அழைக்கப்படுகின்றன. வெளிப்புற விளைவு இல்லாவிட்டால் பொருளில் எந்த மாற்றமும் ஏற்படாது. பொருளின் மூல அம்சத்தில் எந்த மாற்றமும் செய்யாத நிகழ்வு பௌதீக நிகழ்வு எனப்படும். ஒரு காகிதத்தைக் கிழிப்பது ஒரு பௌதீக நிகழ்வாகும். சில சக்திகள் ஒரு பொருளைப் பாதிக்க வேண்டும், அதனால் அந்தப் பொருளுக்கு ஒரு பௌதீக நிகழ்வு ஏற்படலாம். பொருட்களின் கலவை அல்லது மூல அம்சத்தை மாற்றும் நிகழ்வுகள் இரசாயன நிகழ்வுகள் எனப்படுகின்றன. ஒரு துண்டு காகிதம் எரிந்து சாம்பலாக மாறும்போது, ஒரு இரசாயன நிகழ்வு நடைபெறுகிறது. ஒரு பொருள் மற்றொரு பொருளால் பாதிக்கப்பட வேண்டும், அதனால் அந்தப் பொருளில் ஒரு இரசாயன நிகழ்வு ஏற்படலாம். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருட்கள் தொடர்பு கொண்டு ஒவ்வொன்றிலும் ஒரு இரசாயனவியல் நிகழ்வு நிகழும்போது, அது இரசாயனவியல் எதிர்வினை எனப்படும்.

பொருட்களுக்கு இடையேயான இரசாயன எதிர்வினை, அதாவது, அவை ஒன்றையொன்று தாக்கம் செலுத்தும் நிகழ்வு அணுக்கள் எனப்படும் அவற்றின் மிகச்சிறிய அலகுகளுக்கு இடையில் (இரசாயனவியல் மாற்றத்தில் பங்கேற்றலால்) நிகழ்கின்றன. ஒவ்வொரு பொருளும் அணுக்களால் ஆனது. அணுக்களின் கட்டமைப்புகள் ஒரே மாதிரியாக இருந்தாலும், அவற்றின் அளவுகள் மற்றும் எடைகள் வேறுபட்டவை. எனவே, இன்று நூற்று ஐந்து வகையான அணுக்களை நாம் அறிவோம். மிகப்பெரிய அணு கூட மிகவும் சிறியது, அதை மிக சக்திவாய்ந்த நுணுக்குக்காட்டி மூலமும் பார்க்க முடியாது. ஒத்த அணுக்கள் ஒன்று சேரும்போது அவை ஒரு தனிமத்தை உருவாக்குகின்றன. நூற்று ஐந்து வகையான அணுக்கள் இருப்பதால், நூற்றைந்து தனிமங்கள் உள்ளன. இரும்பு, சல்பர், பாதரசம், ஒக்ஸிஜன் மற்றும் கார்பன் ஆகியவை ஒவ்வொன்றும் ஒரு தனிமம். வெவ்வேறு அணுக்கள் ஒன்று சேரும்போது அவை ஒரு கலவையை உருவாக்குகின்றன. அவ்வாறு பல்லாயிரக்கணக்கான

கலவைகள் உள்ளன. நீர், மது, உப்பு மற்றும் சுண்ணாம்பு ஆகியவை கலவைகள். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமங்கள் அல்லது அணுக்களின் சுருக்கத்தால் கலவைகள் உருவாகின்றன.

அனைத்துப் பொருட்களும், உதாரணமாக, மலைகள், கடல்கள், அனைத்து வகையான தாவரங்கள் மற்றும் விலங்குகள் நூற்று ஐந்து கூறுகளால் ஆனவை. அனைத்து உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்களின் கட்டமைப்பும் நூற்று ஐந்து கூறுகளால் உருவானவை. இந்த நூற்று ஐந்து தனிமங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அணுக்களின் கலவையால் அனைத்துப் பொருட்களும் உருவாகின்றன. காற்று, மண், நீர், வெப்பம், ஒளி, மின்சாரம் மற்றும் கிருமிகள் ஆகியவை சேர்மங்களைப் பிரிக்கின்றன அல்லது பொருட்களை ஒன்றுடன் ஒன்று இணைக்கின்றன. "காரணம் இல்லாமல் எந்த மாற்றமும் நடக்காது." இந்த மாற்றங்களில், அணுக்கள், தனிமங்களின் அலகுகள், ஒரு பொருளிலிருந்து மற்றொரு பொருளுக்கு இடம்பெயர்கின்றன அல்லது ஒரு பொருளை விட்டு வெளியேறி சுதந்திரமாகின்றன. பொருள்கள் மறைந்து போவதை நாம் காண்கிறோம். ஆனால், அவற்றின் வெளிப்புறத்தின் மூலம் நாம் மதிப்பிடுவதால், நாம் தவறாக நினைக்கிறோம். ஏனெனில் இந்த வெளிப்புற "மறைதல்" அல்லது "தோன்றுதல்" என்பது மற்ற பொருட்களாக மாறுவதைத் தவிர வேறில்லை; ஒரு பொருளின் மறைவு, உதாரணமாக. மண்ணறையில் உள்ள ஒரு சடலம், நீர், வாயுக்கள் மற்றும் மண் பொருட்கள் போன்ற புதிய பொருட்களாக மாறுகிறது. ஒரு மாற்றத்தின் மூலம் உருவாகும் புதிய பொருட்கள் நமது புலன்களை எட்டவில்லை என்றால், அவை உருவாகின்றன என்பதை நாம் உணர முடியாது. இதனால்தான், முந்தைய பொருள் மறைந்துவிட்டது என்று கூறுகிறோம். அதே நேரத்தில் அது ஒரு மாற்றத்திற்கு உட்பட்டது. நூற்று ஐந்து தனிமங்களின் தன்மை மாறுவதையும், ஒவ்வொரு தனிமத்திலும் பௌதீக மற்றும் இரசாயன நிகழ்வுகள் நடப்பதையும் காண்கிறோம். ஒரு தனிமம் ஒரு சேர்மத்தில் மற்றொன்றுடன் (அல்லது பிற ஒன்றுடன்) இணைந்தால், அது அயனியாக்கம் அடைகிறது. அதாவது, அதன் அணுக்கள் இலத்திரன்களை இழக்கின்றன அல்லது பெறுகின்றன. இதனால் தனிமத்தின் பல்வேறு பௌதீக மற்றும் இரசாயனப் பண்புகள் மாறுகின்றன. ஒவ்வொரு தனிமத்தின் அணுவும் ஒரு அணுக்கரு மற்றும் இலத்திரன்கள் எனப்படும் பல்வேறு சிறிய துகள்களால் ஆனது. அணுவின் மையத்தில் கரு உள்ளது. ஹைதரசனைத் தவிர அனைத்து தனிமங்களின் அணுக்களின் அணுக்களும் புரோத்திரன்கள் எனப்படும் துகள்களால் ஆனவை. நேர்மறை மின்சாரம் மற்றும் நியூத்திரன்கள் மின் கட்டணம் இல்லாதவை. இலத்திரன் என்பது கருவைச் சுற்றி நகரும் எதிர்மறை-மின்சாரம் நிறைந்த துகளாகும். இலத்திரன்கள் ஒவ்வொரு கணமும் அவற்றின் சுற்றுப்பாதைகளில் சுற்றுவதில்லை; அவை தமது சுற்றுப்பாதையை மாற்றுகின்றன.

அணுக்களின் உட்கருக்களிலும் பிளவுகள் எனப்படும் மாற்றங்கள் நடைபெறுகின்றன என்பது கதிரியக்கத் தனிமங்களில் சான்று பகர்கின்றன. இந்த அணுக்கரு பிளவுகளில் ஒரு தனிமம் மற்றொன்றாக மாறுகிறது; மற்றும் சில சடப்பொருட்கள் இல்லாமல் போய் சக்தியாக மாறுகின்றன, இந்த மாற்றம் யூத பௌதீகவியல் விஞ்ஞானி ஐன்ஸ்டீனால் (இறப்பு: ஹி.1375 [கி.பி 1955]) வடிவமைக்கப்பட்டது. எனவே, சேர்மங்களைப் போலவே, தனிமங்களும் மாறி, ஒன்றிலிருந்து மற்றொன்றாக மாறலாம்.

உயிருள்ள அல்லது உயிரற்ற ஒவ்வொரு பொருளும் மாறுகிறது, அதாவது பழையது மறைந்து புதியது உருவாகிறது. இன்று இருக்கும் ஒவ்வொரு உயிரினமும், தாவரமும் அல்லது விலங்குகளும் இல்லாமல் இருந்தன, மற்ற உயிரினங்களும் இருந்தன. மேலும் எதிர்காலத்தில், தற்போது இருக்கும் உயிர்கள் எதுவும் இருக்காது, மேலும் சில உயிரினங்கள் உருவாகும். உயிரற்ற அனைத்து படைப்பினங்களின் நிலையும் இதுதான். அனைத்து உயிருள்ள மற்றும் உயிரற்ற படைப்பினங்கள், உதாரணமாக: இரும்பு மூலக்கூறு, கலவைகள், கல், எலும்பு, மற்றும் அனைத்து துகள்களும் எப்போதும் மாறுகின்றன. அதாவது பழையவை மறைந்து, மற்றவை உருவாகின்றன. உருவாகும் பொருளின் தனித்தன்மையும் மறைந்து போகும் பொருளின் தனித்தன்மையும் ஒரே மாதிரியாக இருக்கும்போது, மனிதன் இந்த மாற்றத்தைக் கவனிக்க முடியாமல், பொருள் எப்போதும் இருப்பதாக எண்ணுகிறான். இதற்கு ஒரு உதாரணம் ஒரு திரைப்படத்தில், குறிப்பிட்ட குறுகிய இடைவெளியில் ஒரு வித்தியாசமான படம் கண் முன் வரும்; இன்னும், இதைக் கவனிக்க முடியாமல், அதே படம் திரையில் நகர்கிறது என்று பார்வையாளர்கள் நினைக்கிறார்கள். ஒரு காகிதம்

எரிந்து சாம்பலாக மாறும்போது, இந்த மாற்றத்தைக் கவனிப்பதால், காகிதம் மறைந்து சாம்பல் வந்தது என்று சொல்கிறோம். பனி உருகும்போது பனி மறைந்து தண்ணீர் வந்தது என்று சொல்கிறோம்.

ஷரஹ் அல்-அகாஇத் நூலின் தொடக்கத்தில் கீழ்வருமாறு எழுதப்பட்டுள்ளது: "எல்லா உயிரினங்களும் அல்லாஹு தஆலாவின் இருப்பைக் குறிப்பதால், அனைத்து உயிரினங்களும் 'ஆலம்' என்று அழைக்கப்படுகின்றன. ஒரே வகையான உயிரினங்கள் ஒவ்வொன்றும் ஒரு 'ஆலம்' என்று அழைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, மனிதர்களின் 'ஆலம்', வானவர்களின் 'ஆலம்', 'விலங்குகளின் 'ஆலம்', 'உயிரற்றவற்றின் 'ஆலம்'. அல்லது ஒவ்வொரு பொருளும் 'ஆலம்' என்று அழைக்கப்படுகிறது.

ஷர்ஹ் அல்-மவாகிப் என்ற நூலின் 441ஆவது பக்கத்தில் கீழ்வருமாறு எழுதப்பட்டுள்ளது:[1]

"ஆலம் என்பது ஹாதிஸ் ஆகும். அதாவது எல்லாமே படைப்பாகும். வேறுவிதமாகக் கூறினால், அவை இல்லாத நிலையில் பிற்காலத்தில் தோன்றின. [உயிரினங்கள் எப்போதும் ஒன்றிலிருந்து ஒன்று உருவாகின்றன என்பதை மேலே விளக்கியுள்ளோம்.] சடப்பொருள் மற்றும் பொருட்களின் தனித்தன்மை இரண்டும் ஹாதிஸ்களாகும். இந்த விடயத்தில், நான்கு வெவ்வேறு நம்பிக்கைகள் உள்ளன:

1) முஸ்லிம்கள், யூதர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் நெருப்பு வணங்கிகளின் (மஜூஸிகள்) கருத்துப்படி சடப்பொருள் மற்றும் பொருட்களின் தனித்தன்மை இரண்டும் ஹாதிஸ் ஆகும்.

2) அரிஸ்டாட்டில் மற்றும் அவரைப் பின்பற்றும் தத்துவவாதிகளின் கூற்றுப்படி, சடப்பொருள் மற்றும் பொருட்களின் தனித்தன்மைகள் இரண்டும் நித்தியமானவை. அவை சூன்யத்திலிருந்து தோன்றவில்லை என்றும், அவை எப்போதும் நிலையாக இருப்பதாகவும் அவர்கள் சொன்னார்கள். இந்த வாதம் தவறு என்பதை நவீன இரசாயனவியல் சாதகமாக நிரூபிக்கிறது. அவ்வாறு நம்பும் அல்லது சொல்லும் ஒருவர் இஸ்லாத்தை விட்டு வெளியேறி இறை மறுப்பாளராக மாறுகிறார். மேலும், இப்னு சீனா[2] (அவிசென்னா) மற்றும் முஹம்மத் பாராபி (இறப்பு: டமஸ்கஸ், ஹி. 339 [கி.பி 950]) இவ்வாறு கூறினார்கள்.

3) அரிஸ்டாட்டிலுக்கு முந்தைய தத்துவஞானிகளின் கூற்றுப்படி, பொருள் நித்தியமானது, ஆனால் தனித்தன்மைகள் ஹாதிஸ் ஆகும். இன்று பெரும்பாலான விஞ்ஞானிகள் இந்தத் தவறான நம்பிக்கையைக் கொண்டுள்ளனர்.

4) பொருள் ஹாதிஸ் என்றும், தனித்தன்மைகள் நிரந்தரமானவை என்றும் யாரும் சொல்லவில்லை. இந்த நான்கு வகைகளில் எதையும் கலினோஸால் தீர்மானிக்க முடியவில்லை."

பொருள் மற்றும் அதன் தனித்தன்மைகள் ஹாதிஸ்கள் என்பதை முஸ்லிம்கள் பல வழிகளில் நிரூபிக்கின்றனர். முதல் வழி, பொருள் மற்றும் அதன் அனைத்து துகள்களும் எப்போதும் மாறிக்கொண்டே இருக்கும் என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டது. மாறும் ஒன்று நித்தியமாக இருக்க முடியாது; அது ஹாதிஸாக இருக்க வேண்டும். ஏனென்றால் ஒவ்வொரு பொருளும் அதற்கு முந்தைய ஒன்றிலிருந்து உருவாகும் செயல்முறையானது நித்திய கடந்த காலத்திற்குப் பின்னோக்கிச் செல்ல முடியாது. இந்த மாற்றங்கள் ஒரு தொடக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். அதாவது சில ஆரம்பப் பொருட்கள் ஒன்றுமில்லாமல் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

---

[1] ஷரஹ் - மவாகிப் என்ற நூலின் ஆசிரியரான செய்யத் ஷரிப் அலி ஜுர்ஜானி ஹி. 816 [கி.பி 1413] இல் ஷீராஸில் வபாத்தானார். இந்த நூலே மவாகிபுக்கு ஒரு ஷரஹ் (விளக்கம்) ஆகும். இதனைக் காழி அதூத் அப்துல் ரஹ்மான் பின் அஹ்மத் அலாவுதீன் ஐஜி ரஹ்மதுல்லாஹி அலைஹ் (ஹி 700 ஐஜ், ஷீராஸ், ஹி.756 [கி.பி 1354]) எழுதியுள்ளார். அவர் தனது சொந்த நூலிற்கு ஒரு சுருக்கப்பட்ட பதிப்பை எழுதி அதற்கு ஜவாஹிர் என்று பெயரிட்டார். பின்னர் ஷம்ஸ்-அத்தீன் பெனாரி 'ரஹ்மதுல்லாஹி 'அலைஹ்' (ஹி. 751-834 [கி.பி 1431]) சுருக்கப்பட்ட பதிப்பிற்கு ஒரு விளக்கத்தை எழுதினார்.

[2] இப்னு சீனா ஹுசைன் ஹி. 428 [கி.பி 1037] இல் மரணித்தார்.

ஒன்றுமில்லாதவற்றிலிருந்து ஒரு ஆரம்பப் பொருள் உருவாக்கப்படவில்லை என்றால், அதாவது, ஒரு பொருள் அதற்கு முந்தைய மற்றொரு பொருளிலிருந்து உருவாகும் வாரிசுச் செயல்முறை முடிவில்லாத கடந்த காலத்திற்கு சென்றால், ஒன்றிலிருந்து வரும் பொருட்களுக்கு ஒரு தொடக்கமே இருக்காது. மற்றொன்று, இன்று எந்த பொருளும் இருக்காது. பொருட்களின் தற்போதைய இருப்பு மற்றும் அவை ஒன்றிலிருந்து மற்றொன்று தோன்றுவது, அவை ஒன்றுமில்லாமல் உருவாக்கப்பட்ட ஆரம்பப் பொருட்களிலிருந்து பெருகிவிட்டன என்ற உண்மையைக் காட்டுகிறது.

மேலும், வானத்திலிருந்து விழும் ஒரு கல் எல்லையற்ற, முடிவற்ற வெளி (முடிவிலி) அல்லது நேரம் (நித்தியம்) ஆகியவற்றிலிருந்து வந்தது என்று கூற முடியாது, ஏனெனில் இந்த வார்த்தைகள் 'ஆரம்பம் அல்லது பிணைப்பு இல்லாததைக் குறிக்கிறது. முடிவிலியில் இருந்து வருவது என்றால், இல்லாமையிலிருந்து வருவது என்று பொருள்படும். முடிவிலியிலிருந்து வந்ததாகக் கூறப்படும் ஒன்று வரவே முடியாது. "அது முடிவிலியில் இருந்து வருகிறது" என்று கூறுவது அறியாமை மற்றும் அபத்தமானது. அதுபோலவே, மனிதர்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் பெருகுவது நித்தியத்தில் இருந்து வர முடியாது. ஒன்றுமில்லாமல் படைக்கப்பட்ட முதல் மனிதனில் தொடங்கி அவை பெருகியிருக்க வேண்டும். ஒன்றுமில்லாததில் இருந்து ஒரு முதல் மனிதன் படைக்கப்படாமலும், மனிதர்கள் ஒருவரிடமிருந்து மற்றொருவர் பெருகுவதும் நித்தியத்திலிருந்து வந்திருந்தால், இன்று எந்த மனிதனும் இருந்திருக்க மாட்டான். எல்லா உயிரினங்களுக்கும் இதே நிலைதான். ஒன்றிலிருந்து பிறக்கும் பொருள்கள் அல்லது உயிரினங்கள் பற்றி, "அது வந்துவிட்டது, அதுவும் போய் விடும். ஒன்றுமில்லாததிலிருந்து உருவான ஆரம்பப் பொருள் எதுவும் இல்லை" என்று கூறுவது அறிவீனமாகவும், அறிவியலுக்குப் பொருந்தாததாகவும் இருக்கும். மாற்றம் நித்தியமாக இருப்பதைக் குறிப்பதில்லை, மாறாக அது ஒன்றுமில்லாமல் உருவாக்கப்பட்டதைக் காட்டுகிறது; அதாவது, இது வாஜிப் அல்-வுஜூத் என்ற தரத்தை அல்ல, மாறாக முமkின் அல்-வுஜூத் என்பதையே காட்டுகிறது.

கேள்வி: "ஆலமை உருவாக்கியவனும் அவனது பண்புக்கூறுகளும் நித்தியமானவை. அவனது 'படைப்புத்தன்மை' நித்தியமானது என்பதால், ஆலமும் நித்தியமாக இருக்க வேண்டும் அல்லவா?"

பதில்: நித்தியமான படைப்பாளன், பல்வேறு வழிகள் அல்லது காரணங்களால் பொருள்களையும் துகள்களையும் மாற்றமடையச் செய்கிறான் என்பதை நாம் எப்போதும் சாட்சியாகக் காண்கிறோம்; அதாவது அவற்றை அழித்து அவற்றுக்குப் பதிலாக மற்றவற்றைப் படைக்கிறான். நித்திய படைப்பாளன் அவன் விரும்பும் போதெல்லாம் படைக்கிறான்; அதாவது எப்பொழுதும் ஒன்றிலிருந்து மற்றொரு பொருளை உருவாக்குகிறான். ஒவ்வொரு ஆலத்தையும், ஒவ்வொரு பொருளையும், ஒவ்வொரு துகளையும் சில காரண காரியங்களைக் கொண்டு அவன் உருவாக்குவது போல், எந்தக் காரண காரியமும் இல்லாமலும் விரும்பும் போதெல்லாம் அவனால் அவற்றை உருவாக்கவும் முடியும்.

படைப்பினங்கள் ஹாதிஸ்கள் என்று நம்பும் ஒருவர், அது மீண்டும் அழிந்துவிடும் என்றும் நம்புவார். ஒரு காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட உயிர்கள், இல்லாது இருந்த நிலையில் மீண்டும் இல்லாது போகும் என்பது வெளிப்படை பல படைப்பினங்கள் அழிந்து போவதையும் அல்லது இன்னொரு நிலைக்கு மாறுவதையும் நாம் இப்போது காண்கிறோம், அவற்றை நம் புலனுணர்வால் உணர இயலாது.

ஒருவர் முஸ்லிமாக இருந்தால், சடப்பொருட்கள், பொருள்கள் மற்றும் அனைத்து உயிரினங்களும் ஒன்றுமில்லாத நிலையில் இருந்து உருவாக்கப்பட்டன, மேலும் அவை மீண்டும் இல்லாமல் போகும் என்ற உண்மையை நம்ப வேண்டும். பொருட்கள் தொடக்கத்தில் இல்லாமையில் இருந்து மீண்டும் இருப்பு இல்லாமல் போவதை நாம் பார்த்து வருகிறோம்; அதாவது, அவற்றின் வடிவங்கள் மற்றும் பண்புகள் மறைந்து வருகின்றன. பொருள்கள் இல்லாமல் போகும் போது அவற்றின் மூலக்கூறுகள் அப்படியே இருக்கும். எனினும், நாம் மேலே விளக்கியது போல், இந்தப் பொருட்கள் நித்தியமானவை அல்ல; அவை மிக நீண்ட காலத்திற்கு முன்பு அல்லாஹ் தஆலாவால் உருவாக்கப்பட்டன, மேலும் உலக முடிவு வரும்போது அவன் அவற்றை மீண்டும் அழிப்பான். இன்றைய அறிவியல் அறிவு இந்த உண்மையை நம்புவதிலிருந்து நம்மைத்

தடுக்காது. நம்பக்கூடாது என்பது அறிவியலை இழிவுபடுத்துவதாகவும் இஸ்லாத்திற்கு எதிரான விரோதத்தையும் குறிக்கிறது. அறிவியல் அறிவை இஸ்லாம் நிராகரிக்கவில்லை. இது மார்க்க அறிவைக் கற்றுக்கொள்வதையும் வழிபட வேண்டிய கடமைகளையும் புறக்கணிக்கும் நிலையைத்தான் நிராகரிக்கிறது. விஞ்ஞான அறிவும் இஸ்லாத்தை மறுப்பதில்லை. மாறாக, அது இஸ்லாத்தை உறுதிப்படுத்துகிறது.

ஆலம் என்பது ஹாதிஸ் என்பதால், அதை ஒன்றுமில்லாமல் உருவாக்கிய ஒரு படைப்பாளி இருக்க வேண்டும், ஏனெனில், நாம் மேலே விளக்கியது போல், எந்த நிகழ்வும் தானாக நடக்காது. இன்று, ஆயிரக்கணக்கான மருந்துகள், வீட்டு உபயோகப் பொருட்கள், தொழிற்துறை மற்றும் வணிகப் பொருட்கள், மின் உபகரணங்கள் மற்றும் ஆயுதங்கள் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படுகின்றன. அவற்றில் பெரும்பாலானவை அதிநவீன கணக்கீடுகள் மற்றும் நூற்றுக்கணக்கான சோதனைகளுக்குப் பிறகு தயாரிக்கப்படுகின்றன. அவற்றில் ஒன்று கூட தானே உருவானது என்று சொல்கிறார்களா? இல்லை, இவை விழிப்புணர்வோடும் விவேகத்துடனும் செய்யப்பட்டவை என்றும் அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு தயாரிப்பாளர் தேவை என்றும் கூறுகிறார்கள்; அத்துடன், உயிருள்ள, உயிரற்ற மற்றும் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட மில்லியன் கணக்கான பொருட்கள், அவற்றின் கட்டமைப்புகள் இன்னும் அறியப்படவில்லை. அவை தற்செயலாக, சுயமாக உற்பத்தி செய்யப்பட்டன என்று அவர்கள் கூறுகின்றனர். இது பாசாங்குத்தனமாக, முரட்டுத்தனமான பிடிவாதமாக அல்லது சுத்த முட்டாள்தனமாக இல்லையென்றால் என்னவாக இருக்க முடியும்? ஒவ்வொரு பொருள் மற்றும் இயக்கத்தின் இருப்பை சாத்தியமாக்கும் படைப்பாளன் ஒருவனே என்பது தெளிவாகிறது. இந்தப் படைப்பாளி வாஜிப் அல்-வுஜூத். அதாவது அவன் இல்லாத நிலையிலிருந்து உருவாகவில்லை; அவன் நித்தியமாக இருக்க வேண்டும். அவனுடைய இருப்புக்கு எதுவும் தேவையில்லை. அவன் நித்தியமாக இருந்திருக்க வேண்டிய அவசியமில்லை என்றால், அவன் மும்கின் அல்-வுஜூத் அல்லது ஹாதிஸ், 'ஆலம்' போன்ற ஒரு படைப்பினமாக இருந்திருப்பான்; ஒரு உயிரினத்தைப் போலவே, அவன் ஒன்றுமில்லாமல் அல்லது மாற்றங்களின் மூலம், மற்றொரு உயிரினத்திலிருந்து உருவாக்கப்பட்டிருப்பான், அதுவும் மற்றொரு படைப்பாளரால் உருவாக்கப்பட வேண்டியிருந்தது, இதனால் எண்ணற்ற படைப்பாளிகள் தேவைப்படுகிறார்கள்; உயிரினங்களில் ஏற்படும் மாற்றங்கள் எல்லையற்றதாக இருக்க முடியாது என்பதை நாம் மேலே விளக்கியதைப் போலவே சிந்தித்தால், எண்ணற்ற படைப்பாளிகள் இருக்க முடியாது என்பதும், முதல் மற்றும் ஒரே படைப்பாளனால் உருவாக்கம் தொடங்கியது என்பதும் புரியும். ஏனென்றால், படைப்பாளிகள் ஒன்றன் பின் ஒன்றாக உருவாக்குவது நித்தியத்திற்குச் சென்றிருந்தால், தொடங்குவதற்கு ஒரு படைப்பாளி இருந்திருக்க முடியாது. எனவே, படைக்கப்படாத முதல் படைப்பாளி அனைத்துப் படைப்பினங்களின் தனித்துவமான படைப்பாளி. அவனுக்கு முன்னும் பின்னும் படைப்பாளி இல்லை. படைப்பாளி படைக்கப்படவில்லை. அவன் எப்போதும் இருக்கிறான். அவன் ஒரு கணம் இல்லாமல் போனால், அனைத்து உயிரினங்களும் இல்லாமல் போய்விடும். வாஜிப் அல்-வுஜூதுக்கு எந்த வகையிலும் எதுவும் தேவையில்லை. பூமி, விண்ணுலகம், அணுக்கள் மற்றும் உயிர்களை இப்படி ஒரு முறையான மற்றும் கணக்கிடப்பட்ட வரிசையில் படைத்தவன், சர்வ வல்லமையுள்ளவனாகவும், எல்லாம் அறிந்தவனாகவும், தான் விரும்பியதை ஒரே நேரத்தில் உருவாக்கக்கூடியவனாகவும் இருக்க வேண்டும். அவன் தனித்தவனாக இருக்க வேண்டும். ஆனால் அவனிடம் எந்த மாற்றமும் இருக்கக்கூடாது. அவனுடைய சக்தி எல்லையற்றதாக இல்லாவிட்டால், அவன் சர்வஞானம் பொதிந்தவனாக இல்லாவிட்டால், அவனால் இப்படி ஒழுங்கான மற்றும் கணக்கிடப்பட்ட வரிசையில் உயிரினங்களைப் படைக்க முடியாது. ஒன்றுக்கு மேற்பட்ட படைப்பாளிகள் இருந்திருந்தால், ஏதாவது ஒன்றை உருவாக்குவதற்கான அவர்களின் விருப்பங்கள் ஒத்துப்போகாதபோது, யாருடைய விருப்பங்கள் நிறைவேறாமல் விடப்பட்டதோ அவர்கள் படைப்பாளிகளாக இருக்க மாட்டார்கள். அத்துடன் படைப்புகள் அனைத்தும் கலந்து சிக்கல் மிகுந்து போயிருக்கும். மேலதிக விளக்கங்களை அறிய, தயவு செய்து அலி ஊஸ்ஹீயின் (இறப்பு: ஹி 575 [கி.பி 1180]) காஸிதாத் அல்-ஆமாலி நூலுக்கான அரபு மற்றும் துருக்கிய விளக்கங்களை வாசிக்கவும்.

படைப்பாளியில் எந்த மாற்றமும் ஏற்படாது. பிரபஞ்சத்தை உருவாக்குவதற்கு முன்பு அவன் இப்போது இருப்பதைப் போலவே இருந்தான். அவன் அனைத்தையும் ஒன்றுமில்லாமல் படைத்தது

போல, அவன் எப்பொழுதும் தொடர்ந்து அனைத்தையும் நிலையாக உறுதிப்படுத்துகிறான். அவ்வாறு இல்லையெனில், மாற்றம் ஏற்படுவது ஒரு படைப்பு என்பதையும், ஒன்றுமில்லாமல் உருவாக்கப்பட்டதையும் குறிக்கும். அவன் எப்பொழுதும் இருக்கிறான், என்றும் அழியமாட்டான் என்பதை மேலே விளக்கியுள்ளோம். எனவே, அவனிடம் எந்த மாற்றமும் ஏற்படாது. சிருஷ்டிகளுக்கு ஆரம்பத்தில் அவன் தேவைப்பட்டது போல, ஒவ்வொரு கணமும் அவர்களுக்கு அவன் தேவை. அவன் மட்டுமே எல்லாவற்றையும் உருவாக்குகிறான், ஒவ்வொரு மாற்றத்தையும் நிகழ்த்துகிறான். மனிதர்கள் வாழவும் நாகரீகமாக இருக்கவும், எல்லாம் ஒழுங்காக செயற்படுவதற்காகவும், அவன் எல்லாவற்றையும் ஒரு வழிமுறையின் மூலம் உருவாக்குகிறான். அவன் காரணங்களை உருவாக்குவது போல், காரணங்களின் விளைவாக சக்தியையும் உருவாக்குகிறான். மனிதனால் எதையும் உருவாக்க முடியாது. மனிதனின் வேலை, காரணங்களில் தாக்கம் செலுத்தும் பொருட்களில் ஒரு ஊடகமாக செயற்படுவது மட்டுமே.

பசிக்கும் போது சாப்பிடுவது, உடல் நலக் குறைவின் போது மருந்து உட்கொள்வது, மெழுகுவர்த்தி ஏற்றுவதற்கு தீப்பெட்டியை அடிப்பது, ஹைதரசனைப் பெறுவதற்கு துத்தநாகத்தின் மீது சிறிதளவு அமிலத்தை ஊற்றுவது, களிமண்ணுடன் சுண்ணாம்பைக் கலந்து, சிமெந்து தயாரிக்கும் கலவையை சூடாக்குவது, பால் பெறுவதற்காக மாட்டுக்கு உணவளிப்பது, மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான நீர்-மின் நிலையத்தை உருவாக்குவது மற்றும் பல்வேறு வகையான தொழிற்சாலைகளை உருவாக்குவது என்பன மனிதன் காரணங்களைப் பயன்படுத்தி ஊடகங்களாக செயற்படுவதற்கான எடுத்துக்காட்டுகள். அவ்வாறுதான் அல்லாஹ் தஆலா புதிய விடயங்களை உருவாக்குகிறான், மனிதனின் விருப்பமும் சக்தியும் கூட இறைவனால் உருவாக்கப்பட்ட வழிமுறைகளாகும். மனிதர்கள் அல்லாஹ் தஆலாவின் படைப்பிற்கான வழிமுறைகள். அல்லாஹ்த்தஆலா இந்த வழிமுறையில்தான் படைக்க விரும்புகிறான். இந்த வகையில் பார்க்கும் போது, "தானாக உருவாகியது" அல்லது "நாம்தான் உருவாக்கினோம்" என்று மனிதர்கள் சொல்வது பகுத்தறிவுக்கும் அறிவியலுக்கும் பொருந்தாத ஒரு அறியாமையாகவும் அபத்தமான வார்த்தையாகவுமே இருக்கும்.

மனிதர்கள் தம்மைப் படைத்து, உயிர்வாழச் செய்து, அவர்களுக்குத் தேவையான பொருட்களை உருவாக்கி அனுப்பும் தனித்துவமான படைப்பாளனை நேசிக்க வேண்டும். அவர்கள் அவனுடைய பணியாற்களாகவும் அடிமைகளாகவும் இருக்க வேண்டும். அதாவது, ஒவ்வொரு உயிரினமும் அவனை வணங்க வேண்டும், கீழ்ப்படிந்து, மதித்து நடக்க வேண்டும். இந்த உண்மை இந்த நூலின் அறிமுகத்தில் உள்ள கடிதத்தில் விரிவாக எழுதப்பட்டுள்ளது. இந்த வாஜிப் அல்-வுஜூதின், இந்த இறைவனின், இந்தக் கடவுளின், இந்த ஏகனின் பெயர் அல்லாஹ் என்று அவனே அறிவித்தான். அவனே அறிவித்த அவனுடைய பெயரை மாற்ற மனிதர்களுக்கு உரிமை இல்லை. செய்ய உரிமை இல்லாமல் செய்யப்படும் ஒரு செயல் மிகவும் தவறான, அருவருப்பான செயலாகும்.

கிறிஸ்தவர்களும் அவர்களின் பாதிரியார்களும் மூன்று படைப்பாளிகள் இருப்பதாக நம்புகிறார்கள். மேலே நாம் முன்வைத்த வாதங்கள், படைப்பாளி ஒருவனே என்பதையும், கிறிஸ்தவம் மற்றும் பாதிரியார்களால் முன்வைக்கப்படும் வாதங்கள் போலியானவை மற்றும் மதவாதம கொண்டவை என்பதை வெளிப்படுத்துகின்றன.

அறிவு போய்விட்டால் இஸ்லாமும் போய்விடும்; பின்னர், இந்த வெறுமையை, நாம் அறியாமை என்று அழைக்கிறோம்,

நாடு தழுவிய அளவில் நம்மை நாமே கட்டுக்குள் வைக்க முயற்சிக்க வேண்டும். சமீபத்திய பேரழிவு தந்த ஆலோசனை குறைவாக உள்ளதா?

அந்தக் கணிப்பின் விலை என்ன என்று நீங்கள் நினைத்திருப்பீர்களா! உங்கள் மூளை உருகும், கண்ணீர் அதன் சீரம் மாற்றப்படும்!

சமீபத்திய நிகழ்வுகள் என்ன சொல்கிறது, நீங்கள் அறிந்திருக்க வேண்டுமென நான் விரும்புகிறேன்! அவர்கள் சீரடையாவிட்டால் தேசம் அழிந்துவிடும்!

ஏனெனில், ஒரு புதிய நிலநடுக்கம் அரிதாகவே பாதிப்பை ஏற்படுத்தும். இந்த நேரத்தில் தூக்கம் என்பது ஈடு கட்ட முடியாத மரணத்தையே குறிக்கும்!

உங்கள் தார்மீக நடத்தையை சரிசெய்து, அறிவியலில் மூழ்குங்கள்; அணுகுண்டுகளைக் கொண்ட இராணுவம் மற்றும் போராளிகள்தான் பக்தி வாய்ந்தவர்கள்!

அவர்கள் இஸ்லாத்திலும் போரிலும் முன்னேற வேண்டும்; இவை இரண்டும் சேர்ந்து ஒரு தேசத்தை அமைதிக்கு இட்டுச் செல்லும்.

"ஸலபிய்யா"

அஹ்ல் அஸ்ஸுன்னா அறிஞர்களால் 'ரஹ்மதுல்லாஹி தஆலா அலைஹிம் அஜ்மஈன்' எழுதப்பட்ட நூல்களில் "ஸலபிய்யா" என்ற பெயரிலோ அல்லது "ஸலபிய்யா மத்ஹப்" என்ற பெயரிலோ எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதை ஆரம்பத்திலேயே கூறுக் கொள்கின்றோம். இந்தப் பெயர்கள் பிற்காலத்தில் லா-மத்ஹபிகளால் உருவாக்கப்பட்டவை. மார்க்கம் தெரியாத மனிதர்களால் அரபியிலிருந்து துருக்கிக்கு மொழிபெயர்க்கப்பட்ட லா-மத்ஹாபிகளின் நூல்கள் மூலம் துருக்கியர்களிடையே இது பரவியது. அவர்களது நிலைப்பாடு கீழ்வருமாறு:

"அஷ்அரிய்யா மற்றும் மாதுரீதிய்யா ஆகிய மத்ஹபுகள் நிறுவப்படுவதற்கு முன்னர் அனைத்து ஸுன்னிகளும் பின்பற்றி வந்த மத்ஹபின் பெயர்தான் ஸலபிய்யா. அவர்கள் ஸஹாபாக்கள் மற்றும் தாபியீன்களைப் பின்பற்றுபவர்கள். ஸலபிய்யா மத்ஹப் என்பது ஸஹாபாவின் மத்ஹபாகும். தாபிஈன், தபஉ அத்-தாபிஈயின் நான்கு பெரிய இமாம்கள் இந்த மத்ஹபைச் சேர்ந்தவர்கள். ஸலபிய்யா மத்ஹபைப் பாதுகாக்கும் முதல் நூல் அல்-இமாம் அல்-அஃழம் எழுதிய பிக்ஹ் அல்-அக்பர் ஆகும். அல்-இமாம் அல்-கஸ்ஸாலி தனது இல்ஜாம் அல்-அவாம் அனில்-கலாம்' என்ற நூலில் ஸலபிய்யா மத்ஹப் ஏழு அடிப்படைகளைக் கொண்டிருப்பதாக எழுதினார். முதஅஃகிரீன் (பின்னர் வந்தவர்களிடம்) 'இல்ம் அல்-கலாம்' என்பது அல்-இமாம் அல்-கஸ்ஸாலியுடன் தொடங்கியது. கலாமின் ஆரம்பகால 'உலமாக்களின்' மத்ஹபுகள் மற்றும் இஸ்லாமிய தத்துவஞானிகளின் கருத்துக்களைக் கற்றுத் தேர்ந்த அல்-இமாம் அல்-கஸாலி, 'இல்ம் அல்-கலாம்' முறைகளில் மாற்றங்களைச் செய்தார். அவர் முன்னைய கருத்துக்களை மறுக்கும் நோக்கில் 'இல்ம் அல்-கலாமில்' தத்துவப் பாடங்களைச் செருகினார். அர்-ராஸியும் அல்-ஆமிதியும் கலாமையும் தத்துவத்தையும் இணைத்து அவற்றை அறிவின் ஒரு கிளையாக ஆக்கினர். மேலும் அல்-பய்ழாவி கலாமையும் தத்துவத்தையும் பிரிக்க முடியாததாக ஆக்கினார். முதஅஃகிரீன்களுடைய இல்ம் அல் கலாம் என்பது ஸலபிய்யா மத்ஹப் பரவுவதைத் தடுத்தது. இப்னு தைமிய்யா மற்றும் அவரது மாணவர் இப்னு அல்- கய்யிம் அல்-ஜவ்ஸியா ஆகியோர் ஸலபிய்யா மத்ஹபை வளப்படுத்த முயன்றனர். அது பின்னர் இரண்டு பகுதிகளாக உடைந்தது; ஆரம்பகால ஸலபிகள் அல்லாஹ் தஆலாவின் பண்புகள் அல்லது முதஷாபிஹ் நஸ் பற்றிய விவரங்களை ஆராய முற்படவில்லை. பிற்கால ஸலபிகள் அவற்றைப் பற்றி விவரிப்பதில் ஆர்வம் காட்டினர். இப்னு தைமிய்யா மற்றும் இப்ன் அல்-கய்யிம் அல்-ஜவ்ஸியா போன்ற பிற்கால ஸலபிக்களுடன் இந்த வழக்கு மிகவும் வெளிப்படையானது. ஆரம்ப மற்றும் பிந்தைய ஸலபிகள் அஹ்ல் அஸ்-ஸுன்னத் அல்-ஃகாஸ்ஸா என்று அழைக்கப்படுகிறார்கள். அஹ்ல் ஸுன்னாவைச் சேர்ந்த கலாமின் ஆண்கள் சில நஸ்களுக்கு விளக்கம் அளித்தனர். ஆனால் ஸலபியாக்கள் அதனை எதிர்த்தனர். அல்லாஹ்வின் முகமும் அவனது வருகையும் மனிதர்களின் முகங்களைப் போலவும் அவர்களின் வருகையைப் போலவும் இல்லை என்று கூறினர். ஸலபிய்யாக்கள் முஷப்பிஹாவிலிருந்து வேறுபடுகிறார்கள்."

அல்-அஷ்அரி மற்றும் அல்-மாதுரீதியின் மத்ஹபுகள் பிற்காலத்தில் நிறுவப்பட்டது என்று கூறுவது சரியல்ல. அந்த இரண்டு பெரிய இமாம்களும் இஃதிகாத் மற்றும் ஈமான் பற்றிய அறிவை ஸலப் அஸ்-ஸாலிஹின்களிடம் இருந்து பெற்று விளக்கி, வகுப்புகளில் ஒழுங்கு செய்து வெளியிட்டு, இளைஞர்களுக்குப் புரியும்படி செய்தார்கள். அல்-இமாம் அல்-அஷ்அரி அல்-இமாம் அஷ்-ஷாபிஈயின் மாணவர்களின் வரிசையில் இருந்தார். அல்-இமாம் அல்-மாதுரீதி அல்-இமாம் அல்-அஃழம் அபூ ஹனீபாவின் மாணவர்களின் சங்கிலித் தொடரில் ஒரு சிறந்த இணைப்பாக இருந்தார். அல்-அஷ்அரி மற்றும் அல்-மாதுரீதி ஆகியோர் தமது ஆசான்களின் பொதுவான மத்ஹபை விட்டு வெளியேறவில்லை; அவர்கள் புதிய மத்ஹபுகளைக் கண்டுபிடிக்கவில்லை. இந்த இருவரும் அவர்களது ஆசிரியர்களும் நான்கு மத்ஹபுகளின் இமாம்களும் ஒரு பொதுவான மத்ஹபைக் கொண்டிருந்தனர்: அது நம்பிக்கையில் மத்ஹப் அஹ்ல் அஸ்-ஸுன்னத் வல்-ஜமாஆ என்ற பெயரில் நன்கு அறியப்பட்டதாகும். இந்தக் குழுவின் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக் கோட்பாடுகள், ஸஹாபத் அல்-கிராம், தாபிஈன் மற்றும் தபஉ அத்-தாபிஈன் ஆகியோரின் நம்பிக்கைக் கோட்பாடுகளைப் போலவே உள்ளன. அல்-இமாம் அல்-அஃழம் அபூ ஹனீபா எழுதிய பிக்ஹ் அல்-அக்பர் என்ற நூல், அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் மத்ஹபைப் பாதுகாக்கிறது. 'ஸலபிய்யா' என்ற

வார்த்தை அந்த நூலிலோ அல்லது அல்-இமாம் அல்-கஸ்ஸாலியின் இல்ஜாம் அல்-அவாம் அனில்-கலாமிலோ இல்லை. இந்த இரண்டு நூல்கள் மற்றும் கவ்ல் அல்-ஃபஸ்ல்,[1] பிக்ஹ் அல்-அக்பர் நூலின் விளக்கங்களில் ஒன்றாகும். அந்நூல் அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் மத்ஹபைக் கற்பிக்கிறது; மதவாதக் குழுக்களுக்கும் தத்துவவாதிகளுக்கும் பதிலளிக்கிறது. அல்-இமாம் அல்-கஸ்ஸாலி தனது இல்ஜாம் அல்-அவாம் நூலில் பின்வருமாறு எழுதுகிறார்: "ஸலப்களின் மத்ஹப் சரியானது என்பதை இந்த நூலில் நான் தெரிவிக்கிறேன். இந்த மத்ஹபை விட்டு விலகியவர்கள் பித்அத் உடையவர்கள் என்பதை விளக்குகிறேன். ஸலப்களின் மத்ஹப் என்றால் ஸஹாபத் அல்-கிராம் மற்றும் தாபிஈயின் மத்ஹப் என்று பொருள். இந்த மத்ஹபின் அடிப்படைகள் ஏழாகும்." அந்த வகையில், இல்ஜாம் என்ற நூல் 'ஸலபுகளின்' மத்ஹபின் ஏழு அடிப்படைகளை எழுதுகிறது. அதனை "ஸலபிய்யா"வின் அடிப்படைகள் என்று கூறுவது, அந்நூலின் கருத்தைத் திரிபுபடுத்தி அல்-இமாம் அல்-கஸ்ஸாலி மீது அவதூறு சொல்வதாகும். அஹ்லுஸ்ஸுன்னாவின் அனைத்து நூல்களிலும் போல, பிக்ஹின் மிகவும் மதிப்புவாய்ந்த நூலான துர் அல்-முஃக்தார் நூலில் "சாட்சியளித்தல்" என்ற அத்தியாயத்தில் 'ஸலப்' மற்றும் 'ஃகலப்' என்ற பதிவுகளுக்குக் கீழே பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது: "ஸலப் என்பது ஸஹாபா மற்றும் தாபிஈன்களைக் குறிக்கும் ஒரு அடைமொழியாகும். அவர்கள் ஸலப் அஸ்-ஸாலிஹீன் என்றும் அழைக்கப்படுகிறார்கள். ஸலப் அஸ்-ஸாலிஹீனுக்குப் பின் வந்த அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் 'உலமாக்கள்' 'ஃகலப்' என்று அழைக்கப்படுகிறார்கள்." அல்-இமாம் அல்-கஸ்ஸாலி, அல்-இமாம் அர்-ராஸி மற்றும் அல்-இமாம் அல்-பய்ழாவி, ஆகியோர் தப்ஸீரின் 'உலமாக்கள்' மூலம் எல்லாவற்றிற்கும் மேலாக நேசிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் ஸலப் அஸ்ஸாலிஹீனின் மத்ஹபில் இருந்தனர். அவர்களின் காலத்தில் தோன்றிய பித்ஆவின் குழுக்கள் 'இல்ம் அல்-கலாமை' தத்துவத்துடன் கலந்தனர். உண்மையில், அவர்கள் தமது ஈமானை தத்துவத்தில் கண்டு கொண்டனர். அல்-மிலல் வன்-நிஹல் என்ற புத்தகம் அந்த மதவாதக் குழுக்களின் நம்பிக்கையைப் பற்றிய விரிவான தகவல்களை வழங்குகிறது. அந்த வழிகெட்ட குழுக்களுக்கு எதிராக அஹ்லுஸ்ஸுன்னாவின் மத்ஹபைப் பாதுகாத்து, அவர்களின் மதவாதக் கருத்துக்களை மறுத்து, அவர்களின் தத்துவத்திற்கு இந்த மூன்று இமாம்களும் விரிவான பதில்களை வழங்கினர். இந்தப் பதில்களைக் கொடுப்பது என்பது அஹ்லுஸ்ஸுன்னாவின் மத்ஹபுடன் தத்துவத்தை கலப்பதாக அர்த்தமல்ல. மாறாக, அவர்கள் கலாம் பற்றிய அறிவை அதில் இடைச்செருகப்பட்ட தத்துவ சிந்தனைகளிலிருந்து அகற்றினர். அல்-பய்ழாவியின் படைப்பிலோ அல்லது ஷைக்-ஸாதாவின் தப்ஸீரிலோ, மிகவும் பெறுமதி வாய்ந்த அதன் சிறுகுறிப்புகளிலோ எந்த தத்துவ சிந்தனையோ அல்லது தத்துவ முறையோ இல்லை. இந்த உயர்ந்த இமாம்கள் தத்துவத்தை எடுத்துக் கொண்டார்கள் என்று சொல்வது மிகவும் கேவலமான அவதூறாகும். இந்தக் களங்கம் முதன்முதலில் அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் 'உலமா' மீது இப்னு தைமியாவால் தனது அல்-வாசிதா நூலில் சேர்க்கப்பட்டது. மேலும், இப்னு தைமியாவும் அவரது மாணவர் இப்னுல்-கய்யிம் அல்-ஜவ்ஸியாவும் ஸலபிய்யா மத்ஹபை வளப்படுத்த முயன்றனர் என்று கூறுவது, சரியான வழியில் இருப்பவர்களும் தவறிழைத்தவர்களும் ஒருவருக்கொருவர் வேறுபடும் ஒரு மிக முக்கியமான பிரிகோட்டை வெளிப்படுத்துவதாகும். அந்த இரண்டு பேருக்கும் முன்பு "ஸலபிய்யா" என்ற ஒரு மத்ஹப் இருக்கவில்லை. 'ஸலபிய்யா' என்ற வார்த்தை கூட இல்லை; அவர்கள் அதை வளப்படுத்த முயன்றதாக எப்படிக் கூற முடியும்? அந்த இருவருக்கும் முன், ஒரே ஒரு சரியான மத்ஹப் மட்டுமே இருந்தது, ஸலப் அஸ்-ஸாலிஹீனின் மத்ஹப். அதற்கு அஹ்ல் அஸ்-ஸுன்னா வல்-ஜமாஆ' என்று பெயரிடப்பட்டது. இப்னு தைமியா இந்த சரியான மத்ஹபை சிதைக்க முயன்றதுடன் பல பித்அத்துக்களைக் கண்டுபிடித்தார். இன்றைய லா-மத்ஹபி மக்கள் மற்றும் மத சீர்திருத்தவாதிகளின் நூல்கள், வார்த்தைகள் மற்றும் வழிகேடான, போலி சிந்தனைகளின் ஆதாரம் இப்னு தைமியாவால் கண்டுபிடிக்கப்பட்ட பித்அத்கள் மட்டுமே. முஸ்லிம்களை ஏமாற்றுவதற்காகவும், அவர்களின் வழிகேடுதான் சரியான வழி என்று இளைஞர்களை நம்பவைப்பதற்காகவும், இந்த மதவாதிகள் ஒரு பயங்கரமான தந்திரத்தை வகுத்தனர்; அவர்கள் இப்னு தைமிய்யாவின் பித்அத்கள் மற்றும் வழிகெட்ட கருத்துக்களை அங்கீகரிப்பதற்காகவும், இளைஞர்களை அவரது புரட்சியில்

[1] பிக்ஹ் அல்-அக்பர், இல்ஜாம் மற்றும் கவ்ல் அல்-பஸ்ல் ஆகிய நூல்கள் இஸ்தான்பூலில் உள்ள ஹகீகத் கிதாபவியால் மீள் பதிப்புச் செய்யப்பட்டுள்ளன.

தள்ளுவதற்காகவும், "ஸலப் அஸ்-ஸாலிஹீன்" என்ற வார்த்தையிலிருந்து "ஸலபிய்யா" என்ற பெயரை உருவாக்கினார்கள்; அவர்கள் ஸலப் அஸ்-ஸாலிஹீனின் வாரிசுகளான இஸ்லாமிய அறிஞர்கள் மீது தத்துவம் மற்றும் பித்ஆவின் களங்கங்களை இணைத்தனர். அவர்கள் கண்டுபிடித்த பெயரான ஸலபிய்யாவிலிருந்து விலகியதற்காக அவர்களைக் குற்றம் சாட்டினர்; அவர்கள் இப்னு தைமியாவை முஜ்தஹிதாக முன்னிறுத்தி, ஸலபிய்யாவை உயிர்ப்பித்த வீரராக முன்வைத்தனர். உண்மையில், ஸலப் அஸ்-ஸாலிஹீன் என்று அழைக்கப்படும் அறிஞர்களின் வாரிசுகளான அஹ்ல் அஸ்-ஸுன்னா அறிஞர்கள்தான் ரஹ்மதுல்லாஹி தஆலா அலைஹிம் அஜ்மஈன், அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் இஃதிகாத் போதனைகளைப் பாதுகாக்கிறார்கள், இதுதான் ஸலப் அஸ்-ஸாலிஹீனின் மத்ஹபாகும். அவர்கள் எமது காலமான இன்றுவரை எழுதிவரும் நூல்களில் இப்னு தைமிய்யா, அஷ்-ஷவ்கானி போன்றவர்கள் ஸலப் அஸ்-ஸாலிஹீன் வழியிலிருந்து விலகி முஸ்லிம்களை அழிவு மற்றும் நரகம் நோக்கி இழுத்துச் சென்றுள்ளனர் என்பதை தெரிவிக்கின்றனர்.

அத்-தவஸ்ஸுலி பின்-நபிவ பிஸ்-ஸாலிஹீன், உலமா அல்-முஸ்லிமீன் வ அல்-முஃகாலிபூன், ஷிபா அஸ்-ஸிகாம் மற்றும் அதன் முன்னுரை, தத்ஹீர் அல் புஆத் மின் தனஸ்-அல் இஃதிகாத் ஆகிய நூல்களைப் படிப்பவர்கள் "புதிய ஸலபிய்யா" என்ற போலி நம்பிக்கைகளை கண்டுபிடித்தவர்கள் முஸ்லிம்களை அழிவை நோக்கி இட்டுச் செல்வதையும் உள்ளிருந்து இஸ்லாத்தை இடித்துத் தள்ளுவதையும் உணர்வார்கள்.

இப்போதெல்லாம், சில வாய்கள் அடிக்கடி 'ஸலபிய்யா' என்ற பெயரைப் பயன்படுத்துகின்றன. இஸ்லாத்தில் ஸலபிய்யாவின் மத்ஹப் என்ற பெயரில் எதுவும் இல்லை என்பதை ஒவ்வொரு முஸ்லிமும் நன்கு அறிந்திருக்க வேண்டும். மாறாக ஹதீஸ் ஷரீபில் போற்றப்பட்ட முதல் இரண்டு இஸ்லாமிய நூற்றாண்டுகளில் முஸ்லிம்களாக இருந்த ஸலப் அஸ்ஸாலிஹீன்களின் மத்ஹப் மட்டுமே உள்ளது. (இஸ்லாத்தின்) மூன்றாம் மற்றும் நான்காம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த இஸ்லாமிய அறிஞர்கள் ஃகலப் அஸ்-ஸாதிகீன் என்று அழைக்கப்படுகிறார்கள். இந்த மரியாதைக்குரியவர்களின் இஃதிகாத் அஹ்ல் அஸ்-ஸுன்னத் வல்-ஜமாஆவின் மத்ஹப் என்று அழைக்கப்படுகிறது. இது ஈமானின் மத்ஹபாகவும், இறை நம்பிக்கையின் கோட்பாடுகளாகவும் உள்ளது. ஸஹாபத் அல்-கிராம் மற்றும் தாபிஈன்களால் பேணப்பட்ட ஈமான் ஒன்றுதான். அவர்களின் நம்பிக்கைகளுக்கு இடையே எந்த வித்தியாசமும் இருக்கவில்லை. இன்று பூமியில் உள்ள பெரும்பாலான முஸ்லிம்கள் அஹ்ல் ஸுன்னாவின் மத்ஹபில் உள்ளனர். பித்ஆவின் எழுபத்திரண்டு மதவாதக் குழுக்களும் இஸ்லாத்தின் இரண்டாம் நூற்றாண்டுக்குப் பிறகே தோன்றின. அவர்களில் சிலவற்றின் ஸ்தாபகர்கள் முன்பு வாழ்ந்தனர். ஆனால் தாபிஈனுக்குப் பிறகுதான் அவர்களின் நூல்கள் எழுதப்பட்டன. அவர்கள் குழுக்களாகத் தோன்றி அஹ்ல் அஸ்ஸுன்னாவை விட்டும் வழிதவறினர்.

ரஸூலுல்லாஹ் 'ஸல்-அல்லாஹு அலைஹி வஸல்லம்' அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் நம்பிக்கைகளைக் கொண்டு வந்தார். ஸஹாபத் அல்-கிராம் ஈமானின் இந்தப் போதனைகளை மூலத்திலிருந்து பெற்றனர். மேலும் தாபிஈன் இமாம்கள் இந்தப் போதனைகளை ஸஹாபத் அல்-கிராமிடமிருந்து கற்றுக்கொண்டனர். அவர்களிடமிருந்து அவர்களின் வாரிசுகள் கற்றுக்கொண்டனர்; இதன் மூலம் அஹ்ல் ஸுன்னாவின் போதனைகள் பரிமாற்றம் மற்றும் தவாதுர் மூலம் நம்மை வந்தடைந்தது. இந்தப் போதனைகளை பகுத்தறிவு மூலம் ஆராய முடியாது. அறிவாற்றலால் அவற்றை மாற்ற முடியாது. அது அவற்றைப் புரிந்துகொள்ள மட்டுமே உதவும். அதாவது, அவற்றைப் புரிந்து கொள்ளவும், அவை சரியானவை என்பதை உணரவும், அவற்றின் மதிப்பை அறியவும் புத்தி அவசியம். அனைத்து ஹதீஸ்துறை அறிஞர்களும் அஹ்ல் அஸ்ஸுன்னாவின் நம்பிக்கைகளைக் கொண்டிருந்தனர். செயல்களில் நான்கு மத்ஹபுகளின் இமாம்களும் இந்த மத்ஹபில் இருந்தனர். மேலும், நம்பிக்கைகளில் நமது மத்ஹபின் இரண்டு இமாம்களான அல்-மாதுரீதி மற்றும் அல்-அஷ்அரி ஆகியோர் அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் மத்ஹபில் இருந்தனர். இந்த இரண்டு இமாம்களும் இந்த மத்ஹபை பிரச்சாரம் செய்தனர். அவர்கள் எப்பொழுதும் இந்த மத்ஹபை மதவாதிகளுக்கு எதிராகவும், பண்டைய கிரேக்க தத்துவத்தின் புதைகுழியில் சிக்கிய சடவாதிகளுக்கு எதிராகவும் நின்று பாதுகாத்தனர். அவர்கள் சமகாலத்தவர்கள் என்றாலும், இருவரும் வெவ்வேறு இடங்களில் வாழ்ந்தார்கள். அவர்களின் சிந்திப்பும் அவர்கள் சந்திக்க நேர்ந்த குற்றவாளிகளைக் கையாளும் முறைகளும் வேறுபட்டிருந்தன. எனவே பயன்படுத்திய தற்காப்பு முறைகளும் அஹ்ல் அஸ்-

ஸுன்னாவின் இந்த இரண்டு சிறந்த அறிஞர்களின் பதில்களும் வேறுபட்டவை. ஆனால் அவர்கள் வெவ்வேறு மத்ஹபுகளைச் சேர்ந்தவர்கள் என்று அர்த்தமில்லை. இந்த இரண்டு உயர் கற்றறிந்த இமாம்களுக்குப் பிறகு வந்த பல்லாயிரக்கணக்கான ஆழமாகக் கற்றறிந்த அறிஞர்களும் அவ்லியாக்களும் அவர்களிருவரது நூல்களைப் படித்து, அவர்கள் இருவரும் அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் மத்ஹபைச் சேர்ந்தவர்கள் என்று ஒருமித்த கருத்துடன் தெரிவித்தனர். அஹ்ல் அஸ்ஸுன்னாவின் அறிஞர்கள் வெளிப்புற அர்த்தங்களுடன் நஸ்ஸை எடுத்துக் கொண்டனர். அதாவது, அவர்கள் ஆயத்கள் மற்றும் ஹதீஸ்களுக்கு அவற்றின் வெளிப்புற அர்த்தங்களைக் கொடுத்தனர். மேலும் அவ்வாறு செய்வதற்கு ஒரு ழரூரா இருந்தால் தவிர, அவர்கள் நஸ்ஸை (தஃவீல்) விளக்கவோ அல்லது இந்த அர்த்தங்களை மாற்றவோ இல்லை. அவர்கள் தமது தனிப்பட்ட அறிவு அல்லது கருத்துக்களால் எந்த மாற்றமும் செய்யவில்லை. ஆனால், மதவாதக் குழுக்களிலும் லா-மத்ஹபியிலும் இருந்தவர்கள், இஸ்லாத்தின் எதிரிகளான கிரேக்கத் தத்துவஞானிகளிடமிருந்தும் போலி விஞ்ஞானிகளிடமிருந்தும் கற்றுக்கொண்டபடி, ஈமான் மற்றும் இபாதத்தின் போதனைகளை மாற்றத் தயங்கவில்லை.

இஸ்லாத்தின் பாதுகாவலர்களாகவும், அஹ்ல் அஸ்ஸுன்னா அறிஞர்களின் சேவகர்களாகவும் இருந்த உஸ்மானியர்களின் அரசு, பிரீ மேசன்கள், மிஷனரிகள் மற்றும் அனைத்து சடரீதியான படைகளையும் திரட்டிய பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் கீழ்த்தரமான கொள்கைகளின் பல நூற்றாண்டு சூழ்ச்சிகளுக்கு அடிபணிந்தனர். லா-மத்ஹபி இந்த வாய்ப்பைப் பயன்படுத்தினர். தீய பொய்களாலும் தந்திரங்களாலும் அஹ்லுஸ்ஸுன்னாவைத் தாக்கி இஸ்லாத்தை உள்ளிருந்தே தகர்க்கத் தொடங்கினர், குறிப்பாக சவூதி அரேபியா போன்ற நாடுகளில் அஹ்லுஸ்ஸுன்னாவின் அறிஞர்கள் சுதந்திரமாகப் பேச தடைவிதித்தனர். வஹ்ஹாபிகள் வழங்கிய அளவிட முடியாத தங்கம் இந்த ஆக்கிரமிப்பு உலகம் முழுவதும் பரவ உதவியது. பாகிஸ்தான், இந்தியா மற்றும் ஆபிரிக்க நாடுகளின் அறிக்கைகளிலிருந்து புரிந்து கொள்ளப்பட்டபடி, இந்த ஆக்கிரமிப்பாளர்களை ஒடுக்குவதற்கு ஈடாக, குறுகிய மார்க்க அறிவுள்ள, அல்லாஹ்வுக்கு அஞ்சாத சில மதவாத மனிதர்களுக்கு பதவிகளும் அடுக்குமாடி வீடுகளும் வழங்கப்பட்டன. குறிப்பாக, இளைஞர்களை ஏமாற்றி, அஹ்லுஸ்ஸுன்னாவின் மத்ஹபை விட்டு விலக்கிய அவர்களின் துரோகத்தால் அவர்களுக்கு அந்த அருவருப்பான நன்மைகள் கிடைத்தன. மத்ரஸாக்களில் படிக்கும் மாணவர்களையும், முஸ்லிம்களின் குழந்தைகளையும் தவறாக வழிநடத்தும் வகையில் அவர்கள் எழுதிய நூலொன்றில், "நான் இந்த நூலை எழுதியது மத்ஹபுகளின் ஆதிக்கத்தை அகற்றி, ஒவ்வொருவரும் தமது மத்ஹபுகளில் நிம்மதியாக வாழ உதவும் நோக்கிலாகும்" என அதன் ஆசிரியர் கூறுகிறார். அத்துடன் அந்த நபர், மத்ஹபுகளின் மதவாதத்தை ஒழிப்பதற்கான தீர்வு அஹ்லுஸ்ஸுன்னாவைத் தாக்குவதும், அஹ்லுஸ்ஸுன்னாவின் அறிஞர்களை இழிவுபடுத்துவதும்தான் என நாடுகிறார். முஸ்லிம்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதற்காக இதைச் செய்கிறேன் என்று கூறுகிறார். நூலின் மற்றொரு இடத்தில் அவர் கூறுகிறார்: "ஒரு சிந்தனையுள்ள நபர் தனது சிந்தனையிலால் சரியானை அடைந்தால் அவருக்கு பத்து மடங்கு வெகுமதி கிடைக்கும். தவறினால், அவருக்கு ஒரு வெகுமதி கிடைக்கும்." அதன்படி, அவர் ஒரு கிறிஸ்தவராக இருந்தாலும் சரி, பல தெய்வ வழிபாட்டாளராக இருந்தாலும் சரி, ஒவ்வொருவருக்கும் அவரது ஒவ்வொரு எண்ணத்திற்கும் வெகுமதி கிடைக்கும்; மேலும் அவர் தனது சரியான எண்ணங்களுக்கு பத்து ஸவாப்களைப் பெறுவார்! அவர் எவ்வாறு எமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹதீஸ் அஷ்-ஷரீபை மாற்றி, தந்திரமாக விளையாடுகிறார் என்பதைப் பாருங்கள்! ஹதீஸ் அஷ்-ஷரீப் கூறுகிறது: "ஒரு முஜ்தஹித் ஒரு ஆயத் கரீமாவிலிருந்து அல்லது ஒரு ஹதீஸ்-ஷரீபிலிருந்து சட்ட விதிகளைப் பிரித்தெடுக்கும்போது சரியாக செய்தால், அவருக்கு பத்து ஸவாப்கள் வழங்கப்படும். அவர் தவறாக இருந்தால் அவருக்கு ஒரு ஸவாப் வழங்கப்படும்." இந்த ஸவாப்கள் சிந்திக்கும் அனைவருக்கும் வழங்கப்படாது, ஆனால் இஜ்திஹாத் தரத்தை எட்டிய ஒரு இஸ்லாமிய அறிஞருக்கு வழங்கப்படும், மேலும் அவை அவருடைய ஒவ்வொரு எண்ணத்திற்கும் அல்ல, மாறாக நஸ்ஸிலிருந்து சட்ட விதிகளைப் பிரித்தெடுக்கும் அவரது பணிக்காக அவருக்கு வழங்கப்படும் என்று ஹதீஸ் அஷ்-ஷரீப் காட்டுகிறது. அவருடைய அப்பணி ஒரு 'இபாதா'. மற்ற 'இபாதா'வைப் போலவே அதற்கும் ஸவாப் வழங்கப்படும்.

ஸலப் அஸ்ஸாலிஹீன் மற்றும் முஜ்தஹித் அறிஞர்களின் காலத்தில், அவர்களின் வாரிசுகளாக இருந்தவர்கள், அதாவது இஸ்லாத்தின் நான்காம் நூற்றாண்டின் இறுதி வரை, வாழ்க்கைத் தரம் மற்றும் நிலைமைகள் மாறியதன் விளைவாக ஒரு புதிய விஷயம் வரும் போதெல்லாம், முஜ்தஹித் அறிஞர்கள் இரவும் பகலும் உழைத்து, அல்-அதில்லாத் அஷ்-ஷரஇய்யா எனப்படும் நான்கு ஆதாரங்களில் இருந்து இந்த விஷயத்தை எவ்வாறு கையாள வேண்டும் என்பதைப் பெற்றனர். மேலும் அனைத்து முஸ்லிம்களும் தமது மத்ஹபின் இமாமின் வழியைப் பின்பற்றுவதன் மூலம் அது தொடர்பான தமது நடைமுறைகளைச் செய்தனர். அவ்வாறு செய்த பெரிய அறிஞர்களுக்கு பத்து ஸவாப்கள் அல்லது ஒன்று வழங்கப்பட்டது. நான்காம் நூற்றாண்டிற்குப் பிறகு, மக்கள் இந்த முஜ்தஹித்களின் வழிகளைப் பின்பற்றினர். இத்தனை காலம் சென்ற போதும் எந்த ஒரு முஸ்லிமும் தனது வணக்கத்தை எப்படிச் செய்வது என்ற குழப்பத்திலோ, சிக்கலிலோ இருக்கவில்லை. காலப்போக்கில், இஜ்திஹாதின் ஏழாவது வகுப்பை அடைய எந்த அறிஞர்களும் அல்லது முஃப்திகளும் கல்வி கற்கவில்லை; எனவே, இன்று நான்கு மத்ஹபுகளில் ஒன்றின் அறிஞர்களில் ஒருவரின் நூல்களைப் படித்து புரிந்து கொள்ளக்கூடிய ஒரு முஸ்லிமிடமிருந்தும், அவருடைய மொழிபெயர்ப்புகளிலிருந்தும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும். மேலும் நமது இபாதத்தையும் அன்றாட வாழ்க்கையையும் அதற்கேற்ப சீரமைக்க வேண்டும். அல்லாஹ் தஆலா குர்ஆன் அல்-கரீமில் அனைத்து சட்ட விதிகளையும் அறிவித்தான். அவனது உயர்ந்த நபி முஹம்மத் 'அலைஹிஸ்-ஸலாம்' அவர்கள் அவை அனைத்தையும் விளக்கினார்கள். அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் அறிஞர்கள் ஸஹாபத் அல்-கிராமிடமிருந்து அவற்றைக் கற்றுக்கொண்டு அவர்கள் தமது நூல்களில் எழுதினார். இந்த நூல்கள் இப்போது உலகம் முழுவதும் உள்ளன. இறுதிநாள் வரை உலகின் எந்தப் பகுதியிலும் வரும் ஒவ்வொரு புதிய நடைமுறையையும் இந்த நூல்களில் உள்ள ஒரு போதனையில் எடுத்துக்காட்டலாம். இந்த சாத்தியம் குர்ஆன் அல்-கரீமின் முஃஜிஸா மற்றும் இஸ்லாமிய அறிஞர்களின் கராமா ஆகும். ஆனால் அதனை ஒரு உண்மையான ஸுன்னி முஸ்லிமிடம் கேட்டுக் கற்றுக்கொள்வது அவசியம். நீங்கள் ஒரு லா-மத்ஹபி மதவாத மனிதரிடம் கேட்டால், அவர் உங்களுக்கு பிக்ஹ் நூல்களுக்கு முரணான பதிலைக் கொடுத்து உங்களைத் தவறாக வழிநடத்துவார்.

அரபு நாடுகளில் சில வருடங்கள் தங்கி, அரபு மொழி பேசக் கற்றுக் கொண்டு, கேளிக்கை, இன்பங்கள், பாவம் என்று வாழ்க்கையைக் கழித்துவிட்டு, அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் லா-மத்ஹபி எதிரியிடமிருந்து முத்திரையிடப்பட்ட காகிதத்தைப் பெற்று, பாகிஸ்தானுக்கோ அல்லது இந்தியாவிற்கோ திரும்பிச் சென்ற லா-மத்ஹபி அறிவிலிகளால் இளைஞர்கள் எப்படி ஏமாறுகிறார்கள் என்பதை முன்னர் விளக்கியுள்ளோம். இவர்களின் போலி பட்டங்களைப் பார்க்கும் இளைஞர்கள், அரபு மொழி பேசுவதைக் கேட்கும் இளைஞர்கள் அவர்களை மார்க்க அறிஞர்கள் என்று நினைக்கிறார்கள். ஆயினும், அவர்களால் ஒரு பிக்ஹ் நூலைக் கூட புரிந்து கொள்ள முடியாது. மேலும் அவர்களுக்கு நூல்களில் உள்ள பிக்ஹ் போதனைகள் எதுவும் தெரியாது. உண்மையில், அவர்கள் இந்த மத போதனைகளை நம்புவதில்லை; அவற்றை அவர்கள் மதவாதம் என்கின்றனர். பழைய இஸ்லாமிய அறிஞர்கள் பிக்ஹ் நூல்களில் அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்களைப் பார்த்து, அவர்கள் கண்டறிந்த பதில்களை கேள்வி கேட்போருக்கு வழங்கினர். ஆனால் மதத்தின் லா-மத்ஹபி மனிதர், பிக்ஹ் நூல்களைப் படிக்கவோ அல்லது புரிந்துகொள்ளவோ முடியாதவர்களாக இருப்பதால், தமது அறியாமை மற்றும் குறைபாடுள்ள மனதிற்கு என்ன தோன்றுகிறதோ அதனைக் கொண்டு, கேள்வி கேட்பவரை தவறாக வழிநடத்துவார்கள். மேலும் அவரை நரகத்திற்குச் இட்டுசெல்வார்கள். இதைத்தான் நமது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "நல்ல அறிஞன் மனித குலத்தில் மிகச் சிறந்தவன். கெட்ட அறிஞன் மனித குலத்தில் மிகக் கெட்டவன்." எனக் கூறினார்கள். இந்த ஹதீஸ்-ஷரீப், அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் அறிஞர்கள் மனிதகுலத்தில் சிறந்தவர்கள், லா-மத்ஹபிகள் மனிதகுலத்தில் மிகவும் மோசமானவர்கள் என்பதைக் காட்டுகிறது. ஏனெனில் முந்தையவர்கள் ரஸூலுல்லாஹ்வைப் பின்பற்ற அதாவது சுவர்க்கத்தை நோக்கி மக்களை வழிநடத்துகிறார்கள். பிந்தையவர்கள் அவர்களை அவர்களின் மதவாத எண்ணங்களை நோக்கி, அதாவது நரகை நோக்கி வழிநடத்துகிறார்கள்.

ஜாமிஉ அல்-அஸ்ஹரின் இஸ்லாமியப் பல்கலைக் கழகத்தில் பட்டதாரியான உஸ்தாத் இப்னு கலீஃபா அலீவி, தனது நூலான அகீதத் அஸ்-ஸலபி வல்-ஃகலப் இல் எழுதுகிறார்: "அல்லாமா அபூ ஸுஹ்ரா அவர்களின் தாரிக் அல்-மதாஹிபி அல்-இஸ்லாமிய்யாவில் எழுதுகிறார், ஹிஜ்ராவின் பிறகு

நான்காம் நூற்றாண்டில் ஹன்பலி மத்ஹபிலிருந்து மாறுபட்ட சிலர், தம்மை ஸலபிய்யீன் என்று அழைத்தனர். அபுல்-பரஜ் இப்னுல்-ஜவ்ஸி மற்றும் ஹன்பலி மத்ஹபில் உள்ள மற்ற அறிஞர்களும், அந்த ஸலபீக்கள் ஸலப் அஸ்ஸாலிஹீன்களைப் பின்பற்றுபவர்கள் அல்ல என்பதனையும் அவர்கள் முஜஸ்ஸிமாவின் குழுவைச் சேர்ந்த பித்ஆ சார்ந்தவர்கள் என்பதனையும் பிரகடனப்படுத்தி இந்த பித்னா பரவாமல் தடுத்தனர். ஏழாம் நூற்றாண்டில் இப்னு தைமியா மீண்டும் இந்த பித்னாவை ஏற்படுத்தினார்."[1]

லா-மத்ஹபிகள் 'ஸலபிய்யா' என்ற பெயரைக் ஏற்றுக்கொண்டதுடன் இப்னு தைமியாவை ஸலபிகளின் பெரிய இமாம் என்று அழைக்கிறார்கள். இந்த வார்த்தை ஒரு வகையில் உண்மை. ஏனெனில் அவருக்கு முன்பு ஸலபி என்ற சொல் இல்லை. ஸலப் அஸ்-ஸாலிஹீன்கள்தான் இருந்தனர். அவர்களுடைய மத்ஹப் அஹ்ல் அஸ்-ஸுன்னாவாகும். இப்னு தைமியாவின் வழிகேட்டு நம்பிக்கைகள் வஹ்ஹாபிகளுக்கும் மற்ற லா-மத்ஹபி மக்களுக்கும் ஆதாரமாக அமைந்தன. இப்னு தைமியா ஹன்பலி மத்ஹபில் கல்வி பெற்றவர், அதாவது அவர் ஸுன்னியாக இருந்தார். எனினும், அவர் தனது அறிவை அதிகப்படுத்தி, பத்வா வழங்கும் தரத்தை அடைந்து, தன்னிறைவை அடைந்தார். அவரது அறிவின் அதிகரிப்பு அவரிடம் மதவாதத்தை ஏற்படுத்தியது. அஹ்ல் அஸ்ஸுன்னாவின் அறிஞர்களை விட தன்னை மேன்மை அடைந்தவராகக் கருதினார். ஹன்பலி மத்ஹபில் இருந்த அவர் இப்போது ஹன்பலி மத்ஹபில் இல்லை. நான்கு மத்ஹபுகளில் ஒன்றைப் பின்பற்றினால் அவர் அஹ்ல் அஸ்ஸுன்னாவின் நம்பிக்கைக் கோட்பாடுகளை வைத்திருக்க வேண்டும்.

லா-மத்ஹபிகள் தமது சொந்த நாட்டில் மார்க்கப் பணிகளில் ஈடுபடும் ஸுன்னி மக்களை இழிவுபடுத்த ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஸுன்னி நூல்கள் படிக்கப்படுவதையும், அஹ்ல் அஸ்ஸுன்னாவின் போதனைகளை கற்றுக்கொள்வதையும் தடுக்க அவர்கள் எல்லாவிதமான தந்திரங்களையும் நாடுகிறார்கள். உதாரணமாக, ஒரு லா-மத்ஹபி நபர், ஒரு உண்மையான அறிஞரின் பெயரைக் குறிப்பிட்டு, "மத அறிவில் ஒரு மருந்தாளர் அல்லது இரசாயனவியலாளரின் வேலை என்ன? அவர் தனது சொந்தத் துறையில் வேலை செய்ய வேண்டும், எமது துறையில் தலையிடக்கூடாது." எனக் கூறுவார். என்ன ஒரு அறியாமை மற்றும் முட்டாள் கூற்று! ஒரு விஞ்ஞானிக்கு மத அறிவு இருக்காது என்று அவர் நினைக்கிறார். முஸ்லிம் விஞ்ஞானிகள் ஒவ்வொரு நொடியும் இறை படைப்பை அவதானித்து, படைப்பு நூலில் வெளிப்படுத்தப்பட்டுள்ள படைப்பாளனின் பரிபூரண பண்புகளை உணர்ந்து, அல்லாஹ் தஆலாவின் எல்லையற்ற சக்தியுடன் ஒப்பிடும்போது படைப்பினங்களின் இயலாமையைக் கண்டு, அதைத் தொடர்ந்தேர்ச்சையாக உணர்கிறார்கள். அல்லாஹ் தஆலா எதனையும் போல் இல்லை. அவன் அனைத்து குறைபாடுகளிலிருந்தும் வெகு தொலைவில் இருக்கிறான். பிரபல ஜெர்மன் அணு விஞ்ஞானி மேக்ஸ் பிளாங்க் தனது *Der Strom* (டெர் ஸ்ட்ரோம்) என்ற படைப்பில் இதை நன்றாக வெளிப்படுத்தினார். ஆயினும், இன்னும் இந்த லா-மத்ஹபி அறிவிளி, தன்னைப் போன்ற ஒரு மதவாதியிடமிருந்தும், மதவெறியர்களாலும் வழங்கப்பட்ட நாற்காலியின் மீதும் அவர் பெற்ற ஆவணத்தின் மீதும் நம்பிக்கை வைத்து, ஒருவேளை வெளிநாட்டில் இருந்து கிடைக்கும் தங்கத்தின் ஆடம்பரத்தைக் கொண்டு மகிழ்ந்திருக்கலாம். அத்துடன் மத அறிவு அவரது சொந்த ஏகபோகத்தில் இருப்பதாகக் கருதி அவர் கருதுகிறார். அல்லாஹ் தஆலா இந்த கேடுகெட்ட மனிதனுக்கும் நம் அனைவருக்கும் நேர்வழி காட்டுவானாக. இந்த மதச் சான்றளிக்கப்பட்ட திருடர்களின் வலையில் இருந்து அப்பாவி இளைஞர்களையும் அவன் காப்பாற்றட்டும். ஆமீன்.

உண்மையில், கூறப்பட்ட அறிஞர் தனது தேசத்திற்கு முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக மருந்தியல் மற்றும் இரசாயனப் பொறியியல் துறையில் பணிவுடன் பணியாற்றினார். இன்னும், அதே நேரத்தில், மார்க்கக் கல்வியைப் பெற்று, ஏழு ஆண்டுகள் இரவும் பகலும் உழைத்து, ஒரு சிறந்த இஸ்லாமிய அறிஞர் வழங்கிய 'இஜாஸா' அவருக்கு வழங்கப்பட்டது. விஞ்ஞான மற்றும் மார்க்க

[1] *340* பக்கங்கள் கொண்ட அந்த நூலில், ஸலபிகள் மற்றும் வஹ்ஹாபிகளின் பல பித்அத்கள், அஹ்லுஸ் ஸுன்னாவைப் பற்றிய அவர்களின் அவதூறுகள் மற்றும் அவற்றுக்கான பதில்கள் விரிவாக எழுதப்பட்டுள்ளன. இது ஹி.*1398* [கி.பி *1978*] இல் டமஸ்கஸில் அச்சிடப்பட்டது.

அறிவின் பேராற்றலால் நசுக்கப்பட்ட அவர், தனது இயலாமையை முழுமையாகக் கண்டார். இந்த உணர்தலுக்கு அவர் ஒரு சேவகனாக இருக்க முயன்றார். அவரது பயம் மற்றும் கவலைகளில் மிகப் பெரிய விடயம் யாதெனில், அவருடைய பட்டப் படிப்புகள் மற்றும் 'இஜாஸாவின் வசீகரத்தில் விழுந்து, தான் இந்தப் பாடங்களில் அதிகாரம் பெற்றவன் என்று ஊகிப்பேனோ என்று அவர் அஞ்சினார். அவருடைய எல்லா நூல்களிலும் அவருடைய பயத்தின் மகத்துவம் வெளிப்பட்டது. அவருடைய எந்த நூலிலும் தன் சொந்தக் கருத்துகளையோ அபிப்பிராயங்களையோ எழுதும் தைரியம் அவருக்கு இல்லை. அவர் எப்போதும் தனது இளம் சகோதரர்களுக்கு அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் அறிஞர்களது, அவர்களைப் புரிந்துகொள்ளும் மக்களால் பாராட்டப்பட்ட மதிப்புமிக்க எழுத்துக்களை அரபு அல்லது பாரசீக மொழியிலிருந்து மொழிபெயர்ப்பதன் மூலம் வழங்க முயன்றார். அவரது பயம் அதிகமாக இருந்ததால், அவர் பல ஆண்டுகளாக நூல்களை எழுத நினைக்கவில்லை. அவர் ஸவாயிக்-உல் முஹ்ரிகாவின் முதல் பக்கத்தில், "பித்னா பெருகும்போது, உண்மையை அறிந்தவர் மற்றவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால், அவர் அல்லாஹ்வாலும், எல்லா மக்களாலும் சபிக்கப்பட்டவராக இருக்கட்டும்! " என்ற ஹதீஸ் அஷ்-ஷரீப்பைப் பார்த்தபோது, அவர் சிந்திக்கத் தொடங்கினார். ஒருபுறம், அஹ்ல் அஸ்-ஸுன்னா அறிஞர்களின் புரிதலையும் மார்க்க அறிவிலும் அவர்களின் கால விஞ்ஞான அறிவிலும், 'இபாதத் மற்றும் தக்வா' ஆகியவற்றிலும் அவர்களின் விடாமுயற்சியின் மனத் திறனின் மேன்மையையும் அவர் கற்றுக்கொண்டபோது, அவர் தனது பணிவான நிலையைக் கண்டார்: கடலுக்கு நிகராக அந்த பெரிய அறிஞர்களிடம் இருந்த அறிவின் முன்னே, அவர் தனது சொந்த அறிவை வெறும் துளியாகவே கருதினார். மறுபுறம், அஹ்லுஸ்ஸுன்னாவின் அறிஞர்களால் எழுதப்பட்ட நூல்களைப் படிக்கவும் புரிந்துகொள்ளவும் குறைவான பயபக்தியுடையவர்களே இருப்பதையும், அறியாத வழிகேடர்கள் மார்க்கப் பணியாளர்களுடன் தங்களைக் கலந்து, ஊழல் மற்றும் வழிகேடான நூல்களை எழுதியதைக் கண்டு அவர் வருத்தப்பட்டார். ஹதீஸ் அஷ்ஷரீபில் அறிவிக்கப்பட்ட அழிவின் அச்சுறுத்தல் அவரை திகைக்க வைத்தது. மேலும் அவர் தனது அன்பான இளம் சகோதரர்கள் மீது கொண்ட கருணை மற்றும் இரக்கத்தால் அவர்களுக்கு சேவை செய்யத் தூண்டப்பட்டார். அவர் அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் அறிஞர்களின் நூல்களிலிருந்து தனது தேர்வுகளை மொழிபெயர்த்து வெளியிடத் தொடங்கினார். தொடராக அன்றும் இன்றும் அவருக்குக் கிடைத்த எண்ணற்ற வாழ்த்துக் கடிதங்களோடு சேர்த்து, லா-மத்ஹபியின் தரப்பில் விமர்சனங்களையும் அவதூறுகளையும் அவர் எதிர்கொண்டார். ஏனென்றால், அவர் தனது இக்லாஸ், அவரது ரப்பு மற்றும் அவரது மனசாட்சியின் உண்மைத்தன்மையைப் பற்றி எந்த சந்தேகமும் இல்லாமல், அல்லாஹ் தஆலா மீது நம்பிக்கை வைத்து, அவனுடைய தூதர் 'ஸல்லல்லாஹு தஆலா' அலைஹி வஸல்லம்' அவர்களின் ஆன்மாவுக்கும் அவனது அர்ப்பணிப்புள்ள அடிமைகளின் ஆன்மாக்களுக்கும் தவஸ்ஸுல் செய்தார். அத்துடன் அவர் தனது சேவையைத் தொடர்ந்தார். அல்லாஹ் தஆலா நம் அனைவரையும் அவன் மகிழ்ச்சியடையும் உண்மையான வழியில் நடத்துவானாக! ஆமீன்.

எகிப்தில் உள்ள ஜாமிஉ அல்-அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான சிறந்த ஹனபி அறிஞர் முஹம்மத் பாஹித் அல்-முதீஈ, தனது நூலான தத்ஹீர் அல்-புஆத் மின் தனஸில் இஃதிகாத் இல் பின்வருமாறு எழுதினார்:

"எல்லா மக்களுக்கு மத்தியிலும், நபிமார்கள் "அலைஹிமுஸ்-ஸலாத்து வஸ்ஸலாம்' உயர்ந்த மற்றும் முதிர்ச்சியடைந்த ஆத்மாக்களைக் கொண்டிருந்தனர். அவர்கள் தவறு, பிழை செய்தல், அறியாமை, துரோகம், மதவாதம், பிடிவாதம், நப்ஸைப் பின்பற்றுதல், வெறுப்பு மற்றும் குரோதம் போன்றவற்றிலிருந்து விடுபட்டவர்களாக இருந்தனர். நபிமார்கள் அல்லாஹ் தஆலாவுடன் தொடர்புகொண்டு, அவன் அவர்களுக்கு வெளிப்படுத்திய விடயங்களை விளக்கினார்கள். இஸ்லாத்தின் போதனைகள், கட்டளைகள் மற்றும் அவர்கள் மூலம் தெரிவிக்கப்பட்ட தடைகள் அனைத்தும் உண்மையானவை. அவர்களில் ஒருவர் கூட தவறானவர் அல்லது ஊழல் செய்தவர் அல்ல. நபிமார்களுக்குப் பிறகு, உயர்ந்த மற்றும் முதிர்ச்சியடைந்த மக்கள் அவர்களின் ஸஹாபாக்கள் (தோழர்கள்) ஆவர். ஏனெனில் அவர்கள் நபிமார்களின் ஸுஹ்பாவில் பயிற்சி, முதிர்ச்சி பெற்று, தூய்மைப்படுத்தப்பட்டனர். அவர்கள் எப்பொழுதும் நபிமார்களிடமிருந்து கேட்டதைத் திரும்பத் திரும்பச் சொல்லி விளக்கினார்கள். அவர்கள் தெரிவித்த அனைத்து விடயங்களும்

உண்மையானவை. அவை மேற்கூறிய தீமைகளிலிருந்து வெகு தொலைவில் உள்ளன. அவர்கள் மதவாதம் அல்லது பிடிவாதத்தால் ஒருவருக்கொருவர் முரண்படவில்லை, அவர்கள் தமது நப்ஸைப் பின்பற்றவில்லை. அஸ்-ஸஹாபத் அல்-கிராம்கள் ஆயத்கள் மற்றும் ஹதீஸ்களை விளக்குவதும், அல்லாஹ் தஆலாவின் மார்க்கத்தை அவருடைய அடிமைகளுக்குத் தெரிவிக்க இஜ்திஹாத் பயன்படுத்துவதும் இந்த உம்மாவின் (முஸ்லிம்கள்) மீது இறைவன் செய்த மாபெரும் அருளும், அவனது அன்பிற்குரிய நபியான முஹம்மத் ஸலல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது அவன் கொண்டிருந்த பரிவுமாகும். ஸஹாபத் அல்-கிராம்கள் காபிர்களிடம் கடுமை மிக்கவர்களாகவும், ஆனால் தம்மிடையே ஒருவரையொருவர் அன்பாகவும் பரிவாகவும் நடந்து கொண்டிருந்தனர் என்றும், அவர்கள் தொழுகையை விடாமுயற்சியுடன் செய்தார்கள் என்றும், அவர்கள் அல்லாஹ் தஆலாவிடமிருந்தான் அனைத்தையும் சுவர்க்கத்தையும் எதிர்பார்க்கிறார்கள் என்றும் குர்ஆன் அல்-கரீம் அறிவிக்கிறது. இஜ்மாவை அடைந்த அவர்களது இஜ்திஹாத்கள் அனைத்தும் தரியானவை. உண்மை ஒன்றே என்பதால் அனைவருக்கும் தவாப் வழங்கப்படுகிறது.

"ஸஹாபத் அல்-கிராமுக்குப் பிறகு மிக உயர்ந்த மனிதர்கள் யாரெனில், அவர்களைப் பார்த்து அவர்களின் ஸுஹ்பாவில் பயிற்சி பெற்ற முஸ்லிம்கள் ஆவர். அவர்கள் தாபிஈன்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் ஸஹாபத் அல்-கிராம் மூலம் தமது மார்க்க அறிவைப் பெற்றனர். தாபிஈக்கு அடுத்த உயர்ந்த மக்கள், தாபியீனைப் பார்த்து அவர்களின் ஸுஹ்பாவில் பயிற்றுவிக்கப்பட்ட முஸ்லிம்கள் ஆவர். அவர்கள் தபஉ அத்தாபிஈன் என்று அழைக்கப்படுகிறார்கள், அவர்களுக்குப் பிறகு இறுதிநாள் வரை பல நூற்றாண்டுகளில் வரும் மக்களில், மிக உயர்ந்த மற்றும் சிறந்தவர்கள் யாரெனில், ஸலபுகளான அவர்களுக்கு ஏற்ப தம்மை மாற்றிக் கொண்டு, அவர்களின் போதனைகளைக் கற்று, அவற்றைப் பின்பற்றுபவர்களேயாவர். ஸலப் அஸ்-ஸாலிஹீனுக்குப் பிறகு வரும் மார்க்க அதிகாரம் கொண்ட மனிதர்களில், ஒரு புத்திசாலியான அறிவார்ந்த நபர், தனது வார்த்தைகளும் செயல்களும் ரஸூலுல்லாஹ்வினதும் ஸலப் அஸ்-ஸாலிஹீனினதும் போதனைகளுடன் ஒத்துப்போகின்றவராகவும் இருப்பதுடன், நம்பிக்கைகள் மற்றும் செயல்களில் அவர்களது வழியிலிருந்து ஒருபோதும் வேறுபடுவதில்லை. அவர் இஸ்லாத்தின் வரம்புகளை மீறுவதில்லை. அத்துடன் அவர் மற்றவர்களின் இழிவுகளுக்கு அஞ்சமாட்டார். அவர்களின் வழிகேட்டிற்கு அடிபணிய மாட்டார். அறிவிலிகளின் பேச்சைக் கேட்க மாட்டார். அவர் தனது மனதைப் பயன்படுத்துவதுடன் முஜ்தஹித் இமாம்களின் நான்கு மத்ஹபுகளிலிருந்து வெளியேற மாட்டார். முஸ்லிம்கள் அத்தகைய அறிஞரைக் கண்டுபிடித்து, அவரிடம் தங்களுக்குத் தெரியாததைக் கற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் செய்யும் எல்லாவற்றிலும் அவருடைய ஆலோசனையைப் பின்பற்ற வேண்டும். ஏனென்றால் இந்தத் திறன் கொண்ட ஒரு அறிஞர் அல்லாஹ் தஆலா உருவாக்கிய ஆன்மீக மருந்துகளை மக்களுக்குத் தெரியப்படுத்துவார். அடியார்கள் தவறு செய்வதிலிருந்து அவர்களை எப்போதும் சரியாகச் செயல்பட வைப்பது; அதாவது ஆன்மாவின் நோய் தீர்க்கும் மருந்துகளை இறைவன் அறிவான். அதன் மூலம் மனநோயாளிகளையும் அறிவற்றவர்களையும் குணப்படுத்துவான். இந்த அறிஞர் தான் சொல்வதிலும், செய்வதிலும், நம்புவதிலும் இஸ்லாத்தைப் பின்பற்றுவார். அவருடைய புரிதல் எப்போதும் சரியாக இருக்கும். ஒவ்வொரு கேள்விக்கும் சரியான பதிலளிப்பார். அல்லாஹ் தஆலா அவருடைய எல்லா செயல்களையும் விரும்புவான். அல்லாஹ் தஆலா தனது அன்பிற்கு வழி தேடும் மக்களுக்கு வழிகாட்டுவான். அல்லாஹ்த்தஆலா ஈமான் உள்ள மக்களையும், ஈமானின் தேவைகளை நிறைவேற்றுபவர்களையும், நெருக்கடி மற்றும் பிரச்சினையிலிருந்து பாதுகாப்பான். அவன் அவர்களை நூர், மகிழ்ச்சி மற்றும் மனநிறைவு அடையச் செய்வான். அவர்கள் செய்யும் எல்லாவற்றிலும் அவர்கள் நிம்மதியையும் வசதியையும் அடைவார்கள். மீளெழுப்பப்படும் நாளில், அவர்கள் நபிமார்கள், ஸித்தீக்கள், தியாகிகள் மற்றும் ஸாலிஹ் (பக்தியுள்ள) முஸ்லிம்களுடன் இருப்பார்கள்.

"எந்த நூற்றாண்டாக இருந்தாலும் சரி, மார்க்க நிலைப்பாட்டில் உள்ள ஒருவர் நபிகள் நாயகம் மற்றும் ஸஹாபாக்களின் கூற்றுகளைப் பின்பற்றவில்லை என்றால், அவருடைய வார்த்தைகள், செயல்கள் மற்றும் நம்பிக்கைகள் அவர்களின் போதனைகளுடன் ஒத்துப்போகவில்லை என்றால், அவர் தனது சொந்த எண்ணங்களைப் பின்பற்றி வரம்பு மீறினால். இஸ்லாத்தின் நான்கு மத்ஹபுகளை மீறினால், அவர் மார்க்க நிலைப்பாட்டில் ஒரு குழப்பவாதி என்று தீர்ப்பளிக்கப்படுவார். அல்லாஹ்

தஆலா அவரது இதயத்தை மூடிவிட்டான். அவரது கண்கள் சரியான வழியைக் காணவில்லை. காதுகள் சரியான வார்த்தையைக் கேட்காது. மறுமையில் அவருக்குக் கசப்பான வேதனை இருக்கும். அல்லாஹ் தஆலாவுக்கு அவரைப் பிடிக்காது, இந்த மாதிரியானவர்கள் நபிமார்களின் எதிரிகள், அவர்கள் சரியான வழியில் இருப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் தமது சொந்த நடத்தையை விரும்புகிறார்கள். இருப்பினும், அவர்கள் ஷைத்தானைப் பின்பற்றுபவர்கள். அவர்களில் மிகச் சிலரே சுயநினைவுக்கு வந்து சரியான வழியில் செல்கிறார்கள். அவர்கள் சொல்வது எல்லாம் கண்ணியமாகவும், மகிழ்ச்சியாகவும் அல்லது பயனுள்ளதாகவும் அவர்களுக்குத் தெரிகிறது. ஆனால் அவர்கள் நினைக்கும் விரும்பும் அனைத்தும் தீயவை, அவர்கள் முட்டாள்களை ஏமாற்றி மதத் துரோகத்தினதும் அழிவினதும் பக்கம் வழிநடத்துகிறார்கள். அவர்களின் வார்த்தைகள் பனி போல பிரகாசமாகவும் களங்கமற்றதாகவும் இருக்கும், ஆனால், சத்தியத்தின் சூரியனுக்கு வெளிப்படும் போது அவை உருகிவிடும். அல்லாஹ் தஆலாவால் இதயங்கள் கறுக்கப்பட்டு முத்திரையிடப்பட்ட மார்க்க நிலைகளைக் கொண்ட இந்தத் தீய மனிதர்கள் அஹ்ல் அல்-பித்ஆ அல்லது லா-மத்ஹபி மனிதர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் நம்பிக்கைகள் மற்றும் செயல்கள் குர்ஆன் அல்-கரிம், ஹதீஸ் அஷ்-ஷரிப்கள் அல்லது இஜ்மா அல்-உம்மா ஆகியவற்றுடன் ஒத்துப்போவதில்லை. அவர்கள் சரியான வழியிலிருந்து விலகி, முஸ்லிம்களையும் தவறாக வழிநடத்துகிறார்கள். அவர்களைப் பின்பற்றுபவர்கள் நரகத்திற்குத்தான் செல்வார்கள். ஸலப் அஸ்ஸாலிஹீன் காலத்திலும், அவர்களுக்குப் பின் வந்த மார்க்க அதிகாரம் படைத்தவர்களிடத்திலும் இப்படிப் பல வழிகேடர்கள் இருந்தனர். முஸ்லிம்களிடையே அவர்களின் இருப்பு உடலின் ஒரு பாகத்தில் ஏற்படும் [புற்றுநோய்] போன்றது. நோயை ஒழிக்காவிட்டால், ஆரோக்கியமான பாகங்கள் பேரழிவிலிருந்து தப்ப முடியாது. அவர்கள் ஒரு தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்கள் போன்றவர்கள். இவர்களுடன் தொடர்பில் இருப்பவர்களுக்கும் அதனால் பாதிப்பு ஏற்படும். அவர்களால் நாம் பாதிக்கப்படாமல் இருக்க அவர்களிடமிருந்து விலகி இருக்க வேண்டும்."

மார்க்க நிலைப்பாட்டில் ஊழல், மதவாதம் கொண்ட மனிதர்களில், இப்னு தைமியா மிகவும் ஆபத்தானவர் ஆவார். அவரது நூல்களில், குறிப்பாக அல்-வாசிதாவில், அவர் இஜ்மா அல்-முஸ்லிமீனுடன் உடன்படவில்லை. குர்ஆன் அல்-கரிம் மற்றும் ஹதீஸ் அஷ்-ஷரீப்களில் உள்ள தெளிவான அறிவிப்புகளுக்கு முரணாக அவர் இருந்தார். ஸலப் அஸ்ஸாலிஹீன் வழியை அவர் பின்பற்றவில்லை. அவரது குறைபாடுள்ள மனதையும், கெட்ட எண்ணங்களையும் பின்பற்றி, அவர் மதவாதம் பக்கம் திரும்பினார். அவர் பரந்த அறிவுடையவராக இருந்தார். அல்லாஹ் தஆலா அவரது அறிவையே அவரது மதவாதத்துக்கும் அழிவுக்கும் காரணமாக்கினான். அவர் தனது நப்ஸின் ஆசைகளைப் பின்பற்றினார். அவர் தனது தவறான மற்றும் மதவாதக் கருத்துக்களை சத்தியத்தின் பெயரில் பரப்ப முயன்றார்.

சிறந்த அறிஞர் இப்னு ஹஜர் அல்-மக்கி 'ரஹ்மதுல்லாஹி தஆலா அலைஹ்' தனது நூலான பதாவா அல்-ஹதிதிய்யாவில் பின்வருமாறு எழுதியுள்ளார்:

"அல்லாஹ் தஆலா இப்னு தைமியாவை மார்க்கத் துரோகத்திலும் அழிவிலும் தள்ளினான். அவன் அவரை குருடனாகவும், செவிடாகவும் ஆக்கினான். பல அறிஞர்கள் அவரது செயல்கள் ஊழல் மற்றும் அவரது அறிக்கைகள் பொய்யானவை என்று தெரிவித்தனர், மேலும் அவர்கள் அதை ஆவணங்களுடன் நிரூபித்தார்கள். இஸ்லாமிய அறிஞர்களான அபூ ஹஸன் அஸ்-ஸுப்கி, அவரது மகன் தாஜ்-அத்-தீன் அஸ்-ஸுப்கி மற்றும் இமாம் அல்-இஸ் இப்னு ஜமாஆ போன்ற பெரியவர்களின் நூல்களைப் படித்து, ஆய்வு செய்பவர்கள் அவருடைய காலத்தில் வாழ்ந்த ஷாபிஈ, மாலிகி மற்றும் ஹனபி அறிஞர்கள் அவருக்குப் பதிலளித்திருப்பதை நன்றாகக் கண்டு கொள்வார்கள். அப்போது நாம் சொல்வது சரிதான் என்பதை நன்றாக விளங்கிக் கொள்வார்கள்.

"இப்னு தைமிய்யா தஸவ்வுப் அறிஞர்கள் மீது மோசமான அவதூறுகளை வீசினார். மேலும், அவர் இஸ்லாத்தின் முக்கிய தூண்களாக இருந்த ஹஸ்ரத் உமர் மற்றும் ஹஸ்ரத் அலி ஆகியோரைத் தாக்கவும் தயங்கவில்லை. அவரது வார்த்தைகள் நல்லொழுக்க விதிகளால் நிரம்பி வழிகின்றன. அவர் செங்குத்தான பாறைகளில் கூட அம்புகளை வீசினார். பித்அத் புரிவோர், வழிகேடர்கள் மற்றும் அறிவிலிகள் என்று நேர் வழியிலுள்ள அறிஞர்களை அவர் களங்கப்படுத்தினார்.

"இஸ்லாத்துடன் உடன்படாத கிரேக்க தத்துவஞானிகளின் ஊழல் கருத்துக்கள் தஸவ்வுபின் பெரிய மனிதர்களின் நூல்களில் பதியப்பட்டன" என அவர் கூறினார். அவரது தவறான, மதவாத எண்ணங்களால் அதை நிரூபிக்கப் பாடுபட்டார். உண்மையை அறியாத இளைஞர்கள் இவரது தீவிரமான, வஞ்சகமான வார்த்தைகளால் தவறாக வழிநடத்தப்படலாம். உதாரணமாக, அவர் கூறினார்:

> தஸவ்வுப் மனிதர்கள் தமது லவ்ஹ் அல்-மஹ்பூழைப்[1] பார்க்கிறார்கள் என்று கூறுகிறார்கள்." இப்னு ஸீனா (அவிசென்னா) போன்ற சில தத்துவவாதிகள் இதை அன்-நப்ஸ் அல்-பலகியா என்று அழைக்கிறார்கள். மனிதனின் ஆன்மா முழுமை அடையும் போது, ஆன்மா நப்ஸ் அல்-பலகிய்யா அல்லது அல்-அக்ல் அல்-பஃஆல் என்பதுடன் ஒன்றுபடுகிறது என்று கூறுகிறார்கள். விழித்திருக்கும் போது அல்லது தூங்கும் போது ஒரு நபரின் ஆன்மா உலகில் நடக்கும் அனைத்துக்கும் காரணமான இந்த இரண்டோடும் ஒன்றுபடுகிறது. அதன்மூலம் அவர் அவற்றில் உள்ளவற்றைப் பற்றி அறிந்து கொள்கிறார். இது கிரேக்க தத்துவஞானிகளால் கூறப்படவில்லை, அவை இப்னு ஸீனா மற்றும் பிற்காலத்தில் வந்தவர்களால் கூறப்பட்டன. மேலும், இமாம் அபூ ஹாமித் அல்-கஸ்ஸாலி, முஹ்யித்தீன் இப்னு அல்-அரபி மற்றும் அந்தலூசிய தத்துவஞானி குத்ப் அத்-தீன் முஹம்மத் இப்னு ஸாபீன் ஆகியோர் இவ்வாறான கூற்றுக்களை வெளியிட்டனர். இவை தத்துவவாதிகளின் கூற்றுக்களாகும். இஸ்லாத்தில் இது போன்ற விடயங்கள் இல்லை. இவ்வாறான வாதங்களால் அவர்கள் நேர்வழியில் இருந்து விலகி ஷீயா, இஸ்மாஈலிய்யா, கராமிதிகள், பாதினிகள் எனப்படும் முல்ஹித்களைப் போன்று முல்ஹித்கள் ஆனார்கள். அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் அறிஞர்கள், (அறிவியல் என்று அழைக்கப்படும்) ஹதீஸ் துறை அறிஞர்கள் மற்றும் புழைல் இப்னு இயாழ் போன்ற தஸவ்வுபின் ஸுன்னி மனிதர்களின் சரியான வழியை விட்டும் அவர்கள் வெளியேறினார்கள். ஒருபுறம் தத்துவத்தில் மூழ்கி, மறுபுறம் முஃதஸிலா மற்றும் குராமிய்யா போன்ற குழுக்களுக்கு எதிராக அவர்கள் போராடினர். தஸவ்வுபில் மூன்று குழுக்கள் உள்ளனர்: முதல் குழு ஹதீஸ் மற்றும் ஸுன்னாவைப் பின்பற்றுகிறது. இரண்டாவது பிரிவினர் குராமிய்யா போன்ற வழிகேடர்கள். மூன்றாவது குழு இஃக்வான் அஸ்-ஸபாவின் நூல்களையும் அபுல்-ஹய்யானின் வார்த்தைகளையும் பின்பற்றுபவர்கள். இப்ன் அல்-அரபி மற்றும் இப்னு ஸாபீன் போன்றோர் தத்துவவாதிகளின் கூற்றுக்களை ஏற்றுக்கொண்டு அவற்றை தஸவ்வுப் மனிதர்களின் கூற்றுக்களாக ஆக்கினர். இப்னு ஸீனாவின் நூல் ஆகிர் அல்-இஷாராத் அலா மகாமில் ஆரிபீன் போன்ற பல கூற்றுக்கள் உள்ளன. மேலும், அல்-இமாம் அல்-கஸ்ஸாலி தனது சில நூல்களான அல்-கிதாப் அல்-மஸ்னூன் மற்றும் மிஷ்காத் அல்-அன்வார் போன்றவற்றில் இதே போன்ற கூற்றுக்களை வெளியிட்டார். உண்மையில், அவரது நண்பர், அபூபக்கர் இப்னு அல்-அரபி, தத்துவத்தை எடுத்துக் கொண்டதாகக் கூறி அவரை அதிலிருந்து காப்பாற்ற முயன்றார். ஆனால் அவர் தோல்வியடைந்தார். மறுபுறம், அல்-இமாம் அல்-கஸ்ஸாலி, தத்துவவாதிகள் நம்ப மறுப்பவர்கள் என்று கூறினார். அவரது வாழ்வின் இறுதிக் காலத்தில் அவர் அல்-புகாரி[யின் ஸஹீஹைப்] படித்தார். இது அவர் எழுதிய கருத்துக்களில் இருந்து அவரை நிறுத்தியது என்று சிலர் சொன்னார்கள். இன்னும் சிலர், அந்தக் கூற்றுக்கள் அல்-இமாம் அல்-கஸ்ஸாலி மீதான அவதூறு எனக் கூறினர். இந்த வகையில் அல்-இமாம் அல்-கஸ்ஸாலியைப் பற்றி பல்வேறு செய்திகள் உள்ளன. சிசிலியில் படித்த மாலிகி அறிஞரான முஹம்மத் மாஸரி, அந்தலூசிய அறிஞரான துர்தூஷி, இப்ன் அல்-ஜாவி, இப்னு உகைல் மற்றும் பலர் பல விடயங்களைச் கூறியுள்ளனர்."

"இப்னு தைமியாவின் மேற்கோள்கள், அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் அறிஞர்களைப் பற்றிய அவரது தவறான எண்ணங்களைத் தெளிவாகக் காட்டுகின்றன. அவர் ஸஹாபத் அல்கிராமில் மிகப் பெரியவர்கள் மீது கூட இத்தகைய அவமானப்படுத்தலைச் செய்தார். அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் பெரும்பாலான அறிஞர்களை அவர் களங்கப்படுத்தினார். இதற்கிடையில், பெரும் வலீயும் குத்ப் அல்-ஆரிபீனுமான ஹஸ்ரத் அபூ அல்-ஹஸன் அஷ்-ஷாதிலி அவர்களை அவரது நூல்களான ஹிஸ்ப் அல்-கபீர் மற்றும் ஹிஸ்ப் அல்-பக்ர் ஆகியவற்றின் காரணமாகக் கடுமையாக இழிவுபடுத்தியதுடன்

[1] லவ்ஹ் அல்-மஹ்பூழ் பற்றிய விரிவான தகவலுக்கு, *Endless Bliss, III* இல் அத்தியாயம் 36 ஐப் பார்க்கவும்.

முஹ்யித்தீன் இப்னு அல்-அரபி, உமர் இப்னு அல்-பாரித், இப்னு ஸாபீன் மற்றும் ஹல்லாஜ் ஹுஸைன் இப்னு மன்ஸூர் போன்ற தஸவ்வுப் துறையின் பெரும் மகான்கள் மீது இழிவான அபிலாஷைகளை ஏற்படுத்தினார். அவரது காலத்திலேயே அன்றைய இஸ்லாமிய அறிஞர்கள் அவர் ஒரு பாவி, மதவாதி என்பதனை ஒருமனதாக அறிவித்தார்கள். உண்மையில் அவர் ஒரு காபிர் என்று பத்வா வெளியிட்ட அறிஞர்களும் இருந்தார்கள்.[1] ஹிஜ்ரி 705 இல் (கி.பி1305) இப்னு தைமிய்யாவுக்கு எழுதப்பட்ட ஒரு கடிதம் பின்வருமாறு: 'தன்னை ஒரு சிறந்த அறிஞராகவும், இக்கால இமாமாகவும் கருதும் என்னுடைய இஸ்லாமிய சகோதரரே, அல்லாஹ்வுக்காக உம்மை நேசித்தேன். உங்களுக்கு எதிரான அறிஞர்களிடம் நான் விதிவிலக்கு எடுத்துக் கொண்டேன். ஆனால் இரக்கத்திற்கு ஒத்துவராத உமது வார்த்தைகள் என்னைக் குழப்பியது. சூரியன் அஸ்தமிக்கும் போது இரவு தொடங்குகிறது என்பதில் ஞானமுள்ள ஒருவருக்கு சந்தேகம் இருக்கிறதா? நீங்கள் சரியான பாதையில் செல்கிறீர்கள் என்றும், அல்-அம்ரு பில்-மஃரூப் வன்-நஹி அனில்-முன்கர் செய்கிறீர்கள் என்றும் சொன்னீர்கள். உங்கள் நோக்கங்களும் எண்ணங்களும் என்ன என்பதை அல்லாஹு தஆலா அறிவான். ஆனால் ஒருவருடைய இஃக்லாஸ் அவருடைய செயல்களிலிருந்தே விளங்குகிறது. உங்கள் செயல்கள் உங்கள் வார்த்தைகளின் வெளி அட்டையைக் கிழித்துவிட்டன. தமது நப்ஸைப் பின்பற்றும் நம்பத்தகாத வார்த்தைகளைப் பேசும் மக்களால் நீங்கள் ஏமாற்றப்பட்டு, உங்கள் காலத்தில் வாழும் மக்களை இழிவுபடுத்தியது மட்டுமல்லாமல், இறந்தவர்களையும் இறை நிராகரிப்பாளர்கள் என்று இழிவுபடுத்தியுள்ளீர்கள். ஸலப் அஸ்-ஸாலிஹீனின் வாரிசுகளைத் தாக்குவதில் திருப்தி காணாத நீங்கள், ஸஹாபத் அல்-கிராமை, குறிப்பாக மிகப் பெரியவர்களை அவதூறாகப் பேசினீர்கள். அந்த மகத்தான மக்கள் மீளெழுப்பப்படும் நாளில் தமது உரிமைகளைக் கோரும்போது நீங்கள் என்ன நிலையில் இருப்பீர்கள் என்று உங்களால் கற்பனை செய்ய முடியவில்லையா? ஸாலிஹிய்யா நகரில் உள்ள ஜாமிஉ அல்-ஜபலின் மின்பரில், ஹஸ்ரத் உமர் ரழியல்லாஹு தஆலா அன்ஹ் அவர்கள் சில தவறான கூற்றுகளையும் பேரழிவு தருபவற்றையும் முன்வைத்ததாக நீங்கள் சொன்னீர்கள். அந்தப் பேரழிவுகள் என்ன? இதுபோன்ற எத்தனை பேரழிவுகளை ஸலப் அஸ்-ஸாலிஹீன்கள் உங்களுக்குத் தெரிவித்தனர்? ஹஸ்ரத் அலி ரழியல்லாஹு தஆலா அன்ஹில் முன்னூறுக்கும் மேற்பட்ட பிழைகள் இருப்பதாக நீங்கள் கூறுகிறீர்கள். ஹஸ்ரத் அலிக்கு இது உண்மையாக இருந்திருந்தால், நீங்கள் சரியாகச் சொன்னதற்கு ஒரு சந்தர்ப்பம் இருக்க முடியுமா? இப்போது நான் உங்களுக்கு எதிராக செயல்பட ஆரம்பித்துள்ளேன். உங்கள் வில்லத்தனத்திலிருந்து முஸ்லிம்களைப் பாதுகாக்க நான் முயற்சிப்பேன், ஏனென்றால் நீங்கள் அளவை மீறிவிட்டீர்கள். உங்கள் சித்திரவதை உயிருள்ளவர்கள் மற்றும் இறந்தவர்கள் அனைவரையும் சென்றடைந்துள்ளது. விசுவாசிகள் உங்கள் தீமையைத் தவிர்க்க வேண்டும்.'

"தாஜ் அத்-தீன் அஸ்-ஸுப்கி, ஸலப் அஸ்-ஸாலிஹீனுடன் இப்னு தைமியா கருத்து வேறுபாடு கொண்ட விஷயங்களைப் பட்டியலிட்டார். அவை பின்வருமாறு:

1 - "தலாக் (இஸ்லாம் விதித்துள்ள விவாகரத்து) உண்மையானது அல்ல; [அது நடந்தால்,] உறுதிமொழிக்காக கப்பாரா (செலுத்தப்பட்டதற்குச் சமமாக) செலுத்த வேண்டியது அவசியம்." என்று அவர் கூறினார். அவருக்கு முன் வந்த இஸ்லாமிய அறிஞர்கள் எவரும் கப்பாரா வழங்கப்படும் என்று கூறவில்லை.[2]

2- "ஹைழ் (மாதவிடாய்) நிலையில் பெண்ணுக்கு வழங்கப்படும் தலாக் உண்மையாகாது." என்று அவர் கூறினார்.

---

[1] ஆழ்ந்த இஸ்லாமிய அறிஞரான 'அப்துல்-கனி அன்-நப்லுஸி, தஸவ்வுபின் இந்த சிரேஷ்டர்களின் பெயர்களை தனது அல்-ஹதீகாத் அந்-நதியா என்ற நூலின் 363 மற்றும் 373 ஆவது பக்கங்களில் எழுதி, அவர்கள் அவ்லியா என்றும் அவர்களைப் பற்றிக் குறைபேசுபவர்கள் அறியாதவர்களாகவும் பொடுபோக்காளர்களாகவும் இருந்தனர் என்பதையும் இணைத்துள்ளார்.

[2] தலாக் என்பது Endless Bliss இன் ஆறாவது பாகத்தின் பதினைந்தாவது அத்தியாயத்திலும், ஐந்தாவது பாகத்தின் ஆறாவது அத்தியாயத்திலும் வரைவிலக்கணப்படுத்தப்பட்டு, விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

3- "வேண்டுமென்றே தவிர்க்கப்பட்ட தொழுகைக்கு கழா செய்ய வேண்டிய அவசியமில்லை." என்று அவர் கூறினார்.

4- "ஹைழ் நிலையில் பெண் கஅபாவை தவாப் செய்வது முபாஹ் (அனுமதிக்கப்பட்டது) ஆகும். [அவள் அவ்வாறு செய்தால்] அவள் கப்பாரா செலுத்த வேண்டியதில்லை." என்று அவர் கூறினார்.

5- "மூன்று தலாக் என்ற பெயரில் வழங்கப்படும் ஒரு தலாக் ஒரு தலாக்காகவே கொள்ளப்படும்" என்று அவர் கூறினார். இருப்பினும், அவ்வாறு கூறுவதற்கு முன்பு, அவர் பல ஆண்டுகளாக இஜ்மா அல்-முஸ்லிமீன் அவ்வாறு கூறவில்லை என்று பலமுறை கூறினார்.

6- "இஸ்லாத்தில் ஏற்றுக் கொள்ளப்படாத வரிகள் அறவிடுவது அதனை அறவிடுவோருக்கு ஹலாலானது" என்று அவர் கூறினார்.

7- "வர்த்தகர்களிடம் இருந்து வரி வசூலிக்கப்படும் போது, அவர்கள் [ஸகாத்] நோக்கமாக இல்லாவிட்டாலும் கூட ஸகாத்திற்காக நிற்கிறார்கள்" என்று அவர் கூறினார்.

8- "எலி அல்லது அது போன்றது இறக்கும் போது தண்ணீர் நஜ்ஸ் ஆகாது." என்று அவர் கூறினார்.

9 "ஜுனுப் ஆன ஒருவர் இரவில் குஸ்ல் (குளிப்பு) செய்யாமல் உபரியான தொழுகை தொழுவது அனுமதிக்கப்படுகிறது." என்று அவர் கூறினார்.

10 "வாகிஃப் (சொத்தை வக்ஃபுக்கு அர்ப்பணிப்பவர்) வகுத்துள்ள நிபந்தனைகள் கருத்தில் கொள்ளப்படுவதில்லை." என்று அவர் கூறினார்.[1]

11 - "இஜ்மா அல்-உம்மாவுடன் உடன்படாத ஒருவர் காபிராகவோ அல்லது பாவியாகவோ ஆக மாட்டார்." என்று அவர் கூறினார்.

12 - "அல்லாஹ் தஆலா மஹல்- ஹவாதிஸ் மற்றும் அவர் துகள்கள் ஒன்று சேர்ந்து உருவாக்கப்பட்டவன்." என்று அவர் கூறினார்.

13 அவர் கூறினார்: "குர்ஆன் அல்-கரீம் அல்லாஹ் தஆலாவின் ஸாத்தில் (சாரம், நபர்) உருவாக்கப்பட்டது." என்று அவர் கூறினார்.

14 - "ஆலம், அதாவது அனைத்து உயிரினங்களும் அவற்றின் வகைகளுடன் நித்தியமானவை" என்று அவர் கூறினார்.

15 "அல்லாஹ் தஆலா நல்லவற்றைப் படைக்க வேண்டும்." என்று அவர் கூறினார்.

16 "அல்லாஹ் தஆலாவுக்கு ஒரு உடல் மற்றும் திசைகள் உள்ளன; அவன் தனது இடத்தை மாற்றிக் கொள்கிறான்." என்று அவர் கூறினார்.

17 - "நரகம் நித்தியமானது அல்ல; அது கடைசியில் மறைந்துவிடும்" என்று அவர் கூறினார்.

18 - நபிமார்கள் பாவம் புரியாதவர்கள் என்ற உண்மையை அவர் மறுத்தார்.

19 "ரஸூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு தஆலா 'அலைஹி வஸல்லம்' மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவர் அல்ல. அவருடைய பரிந்துரையின் மூலம் பிரார்த்தனை செய்ய அனுமதி இல்லை" என்று அவர் கூறினார்.

20- "ரஸூலுல்லாஹ்வை தரிசிக்கும் நோக்கத்துடன் மதீனா செல்வது பாவம்" என்று அவர் கூறினார்.

---

[1] *தயவு செய்து 'வக்ஃப்', 'வாகிஃப்' போன்றவற்றுக்கான விளக்கத்தை அறிய, Endless Bliss இன் ஐந்தாவது பாகத்தில் நாற்பத்தி நான்காவது அத்தியாயத்தைப் பார்க்கவும்.*

21- மேலும் "ஷபாஆ (பரிந்துரை) கேட்க அங்கு செல்வது ஹராம்" என்று அவர் கூறினார்.

22- "தவ்ராத் மற்றும் அல்-இன்ஜீல் ஆகிய வேதங்கள் சொற்களால் வேறுபடவில்லை. அவை பொருளில் வேறுபட்டன" என்று அவர் கூறினார்.

"மேற்கோள் காட்டப்பட்ட பெரும்பாலான கூற்றுகள் இப்னு தைமியாவுக்கு சொந்தமானவை அல்ல என்று சில அறிஞர்கள் கூறினார்கள். ஆனால் அல்லாஹ் தஆலாவுக்கு திசைகள் உள்ளன என்றும் அவன் துகள்கள் ஒன்றிணைந்து உருவாக்கப்பட்டவன் என்றும் அவர் கூறியமையை மறுத்தவர்கள் யாரும் இல்லை.

இருப்பினும், அவர் 'இல்ம், ஜலாலா மற்றும் தியானாவில் உயர்ந்தவர் என்று ஒருமித்த கருத்துடன் அறிவிக்கப்பட்டது. ஃபிக்ஹும், அறிவும், நேர்மையும், பகுத்தறிவும் உள்ளவர் முதலில் ஒரு விடயத்தைக் கவனித்து, பிறகு விவேகத்துடன் முடிவு செய்ய வேண்டும். குறிப்பாக, ஒரு முஸ்லிமின் இறைநிராகரிப்பு அல்லது மதமாற்றம் அல்லது மதத்துரோகம் அல்லது அவர் கொல்லப்பட வேண்டும் என்று தீர்ப்பதற்கு மிக நுணுக்கமான அவதானிப்புகளும் முழுமையான கவனிப்பும் தேவை."

சமீபத்தில் இப்னு தைமியாவைப் பின்பற்றுவது நாகரீகமாகிவிட்டது. அவர்கள் அவருடைய மதவாத எழுத்துக்களை பாதுகாத்து அவருடைய நூல்களை, குறிப்பாக அல்-வாசிதாவை மீள்பதிப்பு செய்கிறார்கள். ஆரம்பம் முதல் இறுதி வரை, குர்ஆன் அல்-கரீம், ஹதீஸ் அஷ்-ஷரீப்கள் மற்றும் இஜ்மா அல்-முஸ்லிமீன் ஆகியவற்றுடன் உடன்படாத அவரது கருத்துக்களால் இந்த நூல் நிறைந்துள்ளது. இது வாசகர்களிடையே பெரும் பித்னாவையும் பிரிவையும் தூண்டுகிறது. சகோதரர்களிடையே விரோதத்தை ஏற்படுத்துகிறது. இந்தியாவில் உள்ள வஹ்ஹாபிகளும், மற்ற முஸ்லிம் நாடுகளில் தமது வலையில் சிக்கிய மதம் தெரியாத மனிதர்களும் இப்னு தைமியாவை தமக்கு ஒரு இலச்சினையாக ஆக்கி, அவருக்கு 'பெரிய முஜ்தஹித்' மற்றும் 'ஷேஹ் அல்-இஸ்லாம்' போன்ற பெயர்களை சூட்டினர். விசுவாசம் மற்றும் ஈமானின் பெயரால் அவர்கள் அவருடைய மதவாத சிந்தனைகளையும் ஊழல் எழுத்துக்களையும் ஏற்றுக் கொள்கிறார்கள். முஸ்லிம்களுக்குள் பிரிவினையை உண்டாக்கி இஸ்லாத்தை உள்ளிருந்தே தகர்க்கும் இந்தப் பயங்கரமான நீரோட்டத்தை நிறுத்துவதற்கு, அஹ்லுஸ்ஸுன்னாவின் அறிஞர்கள் எழுதிய மதிப்புமிக்க நூல்களைப் படிக்க வேண்டும். இந்த இலக்கியங்களில், பெரிய இமாம் மற்றும் ஆழ்ந்த கற்றறிந்த அறிஞரான தகீ அத்-தீன் அஸ்-ஸுப்கி 'ரஹ்மதுல்லாஹி தஆலா அலைஹ்' என்பவரால் எழுதப்பட்ட ஷிபா அஸ்-ஸிகாம் பீ ஸியாரத்-கைரில்-அனாம் என்ற அரபு நூல் இப்னு தைமிய்யாவின் வழிகெட்ட சிந்தனைகளை முறியடிக்கிறது. அவரது பிரிவினைவாதத்தை நீக்கி அவரது பிடிவாதத்தை அம்பலப்படுத்துகிறது. இது அவரது தீய எண்ணங்கள் மற்றும் தவறான நம்பிக்கைகள் பரவுவதைத் தடுக்கிறது.

அரும்பதங்கள்

தஸவ்வுப் உடன் தொடர்பான பதிவுகள் ஹஸ்ரத் அஹ்மத் அல்-பாரூகீ அஸ்-ஸிர்ஹிந்தீ அவர்களின் மக்தூபாத்திலிருந்து சிறப்பாகக் கற்கப்பட முடியும்.

-அதில்லத் அஷ்-ஷரியய்யா: இஸ்லாத்தின் நான்கு மூலாதாரங்கள்: அல்-குர்ஆன் அல்-கரீம், ஹதீஸ் அஷ்ஷரீப்கள், இஜ்மா அல்-உம்மா மற்றும் கியாஸ் அல் புகஹா.

அஹ்ல்: மக்கள்; அஹ்ல் அல்-பைத்: இறைத்தூதரின் நேரடி உறவினர்கள்: (பெரும்பாலான இஸ்லாமிய அறிஞர்களின் கருத்துப்படி) அலி (முதலாவது சித்தப்பாவின் மகனும் மருமகனும் ஆவார்), பாதிமா (மகள்), ஹஸன் மற்றும் ஹுஸைன் (பேரப்பிள்ளைகள்); அஹ்ல் அஸ்-ஸுன்னா வல்-ஜமாஆ.

அஇம்மத் அல்-மதாஹிப்: இமாம் அல்-மத்ஹப் என்பதன் பன்மை.

அல்லாஹ்: அல்லாஹு அக்பர், அல்லாஹு தஆலா, சகல உயர்வும் சொந்தமான அல்லாஹ்.

ஆமீன்: (அல்லாஹு தஆலாவுக்கு) "எனது பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வாயாக"

-அம்ரு பில் மஃரூப் (வ-அன்-நஹ்யு அனில் முன்கர்): அல்லாஹு தஆலாவின் கட்டளைகளைப் போதிக்கும் கடமை (மற்றும் இறைவன் தடைசெய்தவற்றை பிறர் செய்வதை விட்டும் தடுத்தல் அல்லது விலக்குதல்)

அன்ஸார்: மதீனாவைச் சேர்ந்த, மக்கா வெற்றிக்கு முன்பு இஸ்லாத்தைத் தழுவிய மக்கள்.

அகாஇத்: விசுவாசம், நம்பிக்கைகள், நம்பிக்கைக் கோட்பாடுகள், சமயக் கொள்கை.

அரபாத்: மக்காவுக்கு வடக்கே 24 கிலோமீட்டர்கள் தொலைவில் அமைந்துள்ள திறந்த வெளி

ஆரிப்: மஃரிபாவை அறிவைப் பெற சாத்தியமானவற்றை அறந்துள்ள ஓர் ஆலிம். பார்க்க: மஃரிபா

அர்ஷ்: ஏழு வானங்களின் உச்சியில் அமைந்துள்ள வஸ்து மற்றும் குர்ஸீ என்பது ஏழாவது வானம் தவிர்ந்த, அர்ஷ் உடனுள்ள அம்சம்

அஸ்ஹாப் அல்-கஹ்ப்: (தர்ஸுஸ் என்ற பகுதியிலுள்ள ஒரு குகையில் இருந்த) ஏழு இறை விசுவாசிகள். அவர்களது நிலங்களை இறைநம்பிக்கையற்றோர் ஆக்கிரமித்த போது தமது இறைநம்பிக்கையைப் பாதுகாப்பதற்காக அவர்கள் வேறோர் இடத்திற்கு இடம்பெயர்ந்ததன் மூலம் உயர் நிலையை அடைந்தனர்.

-பஸ்மலா: "பிஸ்மில்லாஹி அர்-ரஹ்மான் அர்-ரஹீம்" (கருணை நிறைந்த, அருளாளன் அல்லாஹ்வின் பெயரைக் கொண்டு) என்ற அறபு வசனத் தொடர்.

பாதினீ: பாதினிய்யா என்ற வழிதவறிய கொள்கையைப் பின்பற்றும் ஒருவர்.

-பழீலா, -வஸீலா: சுவனத்தில் உள்ள மிக உயர்ந்த இரு அந்தஸ்துகள்.

பகீஹ் (பன்மை: புகஹா): பிக்ஹ் துறையில் ஆழ்ந்த புலமையுள்ள அறிஞர்; புகஹா அஸ்-ஸஹாபா.

பர்ள்: அல்லாஹு தஆலாவின் மூலம் அல்குர்ஆன் அல்கரீமில் ஏவப்பட்ட (செய்கை, நடத்தை, வார்த்தை)

பத்வா : 1. (ஒரு முஜ்தஹிதின்) இஜ்திஹாத், 2. பிக்ஹ் நூல்களிலிருந்து (ஒரு முப்தி) பெற்ற - அனுமதிக்கப்பட்டதா இல்லையா என்பது அந்த நூல்களில் இடம்பெறாத - ஒரு தீர்ப்பு; மார்க்கத்துடன் தொடர்பான கேள்விகளுக்கு இஸ்லாமிய அறிஞர்களால் வழங்கப்படும் பதில்கள்.

பிக்ஹ்: முஸ்லிம்கள் செய்ய அவசியமான மற்றும் செய்யக் கூடாத அம்சங்கள் தொடர்பான அறிவு; இபாதாத், அஃமால்.

பித்னா: முஸ்லிம்களுக்கும் இஸ்லாத்திற்கும் தீங்கு விளைவிக்கும் கூற்றுக்களும் செயற்பாடுகளும் பரவலடைதல்.

குஸ்ல்: பிக்ஹில் விவரித்துள்ளதைப் போன்று முழு உடலையும் கழுவி நீராடுதல்.

ஹதீஸ் (ஷரீப்): 1) இறைத்தூதரின் வார்த்தைகள்; அல்-ஹதீஸ் அஷ்-ஷரீப்: மொத்தமாக சகல ஹதீஸ்களும்; 2) ஹதீஸ் நூல்கள் அல்லது ஹதீஸ் கலை; ஹதீஸ் ஸஹீஹ்: ஹதீஸ் துறை அறிஞர்களால் இடப்பட்ட நிபந்தனைகளின் படி ஆதாரபூர்வமான, தெளிவான ஒழுங்கில் நகர்த்தப்பட்ட ஹதீஸ்.

ஹஸ்ரத்: இறைத்தூதர்கள் மற்றும் இஸ்லாமிய அறிஞர்களின் பெயர்களுக்கு முன்னால் உபயோகிக்கப்படும் கௌரவப் பெயர்.

ஹலால் : இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட (செயல், பொருள்).

ஹனபி: இமாம் அபூ ஹனீபாவால் ஸ்தாபிக்கப்பட்ட மத்ஹபின் (ஓர் உறுப்பினர்).

ஹன்பலி: இமாம் அஹ்மத் இப்னு ஹன்பலால் ஸ்தாபிக்கப்பட்ட மத்ஹபின் (ஓர் உறுப்பினர்).

ஹராம்: இஸ்லாத்தில் தடுக்கப்பட்ட (செயல், பொருள்)

ஹிஜாஸ்: அரேபிய தீபகற்பத்தில் செங்கடற் கரைப் பகுதியில், மக்கா, மதீனா அமைந்துள்ள பிரதேசம்.

இஜாஸா: உரியவரின் இஸ்லாமிய அறிவு பற்றிய ஆதாரத்தன்மையைப் பரீட்சித்து வழங்கப்படும் பட்டச் சான்றிதழ்

இஜ்மா (அல்-உம்மா, அல்-முஸ்லிமீன்): ஸஹாபத் அல்கிராம்களதும் தாபிஈன்களதும் பொதுச் செயற்பாடு அல்லது ஒரு விடயம் பற்றிய ஒருமித்த, அதாவது உடன்பாடான, ஏகோபித்த தீர்ப்பு.

இஜ்திஹாத்: ஒரு ஆயத் அல்லது ஹதீஸில் உள்ள மறை பொருளைப் புரிந்து கொள்வதற்காக முயற்சித்தல் (ஊடாக ஒரு முஜ்தஹித் பெற்றுக்கொள்ளும் கருத்து அல்லது முடிவு)

இபாஹதீஸ்: "ஹராமான" விடயங்களான முஸ்லிம்களைக் கொலை செய்தல் அல்லது கொள்ளையடித்தல் ஆகியவற்றை "ஹலால்" என்று கூறும் மக்கள், உ.ம்: வஹ்ஹாபீஸ்

இக்லாஸ்: அல்லாஹ் தஆலாவின் திருப்திக்காக மாத்திரம் சகல காரியங்களையும் செய்தல் (என்ற எண்ணம் அல்லது பண்பு)

இல்ம்: அறிவின் (கிளை); இல்ம்; இல்ம் அல்-ஹால்: ஒவ்வொரு முஸ்லிமும் கற்க வேண்டும் என்று ஏவப்பட்ட (ஒரு மத்ஹபின்) இஸ்லாமியப் போதனைகள் அடங்கிய (நூல்கள்); இல்ம் அல்-கலாம்: ஈமான் பற்றிய அறிவு; இல்ம் அல்-லதுன்னீ: அல்லாஹ் தஆலாவால் அவ்லியாக்களின் உள்ளங்களில் உதிக்கச் செய்யப்படும் அறிவு

இமாம்: i) ஆழ்ந்த அறிவுபெற்ற 'ஆலிம்; ஒரு மத்ஹபை நிறுவியவர் (இமாம் அல்- மத்ஹப், முஜ்தஹித் இமாம்), அல்-இமாம் அல்-அஃழம், ii) ஜமாஅத்தில், தொழுகையில் வழிநடாத்தும் தலைவர்; iii) கலீஃபா.

இன்ஷா அல்லாஹ்: "அல்லாஹ் தஆலா விரும்பினால்".

இஸ்திஃபார்: அல்லாஹ்த்தஆலாவிடம் மன்னிப்புக் கோருதல்.

ஜலாலா: மகத்துவம்.

ஜமாஆ: சமூகம்; முஸ்லிம்களின் தொகுதி (இமாமைத் தவிர) பள்ளிவாசல்; தோழர்கள்; சங்கம்; தொழுகையை ஜமாஅத்தாக நிறைவேற்றல்

ஜுனுப்: ஒரு முஸ்லிமின் குஸ்ல் (குளிப்பு) தேவைப்படும் நிலை.

கஅபா: மக்காவில் உள்ள பெரிய பள்ளிவாயலில் அமைந்துள்ள அருள்மயப்பட்ட கட்டமைப்பு.

கலிமத்: சொல் அல்லது கூற்று.

கராமா: (பன்மை: கராமாத்) ஒரு வாலி (இறைநேசர்) மூலம் அல்லாஹ் தஆலா நிகழ்த்திய அற்புதம்.

கரீம்: கருணை.

குத்பா: வெள்ளிக்கிழமை மற்றும் இஸ்லாமியப் பெருநாட்களில் தொழுகையின் போது பிரசங்க பீடத்தில் இமாம் ஆற்றும் பிரசங்கம், இது உலகம் முழுவதும் அரபு மொழியில் ஓதப்பட வேண்டும் (வேறொரு மொழியில் ஓதினால் பாவம்).

குர்ஸீ: 'அர்ஷ்' ஐப் பார்க்கவும்.

மதீனத் அல்-முனவ்வாரா: ஒளிமயமான மதீனா நகரம்.

மஹ்ஷர்: இறுதித் தீர்ப்பு.

-மக்கத் அல்-முகர்ராமா: மக்கா நகரம்.

மக்ரூஹ்: முறையற்ற, விரும்பத்தகாத மற்றும் இறைத்தூதரால் தவிர்க்கப்பட்ட (செயல், விடயம்).

மாலிகி: இமாம் மாலிக் நிறுவிய மத்ஹபின் (உறுப்பினர்).

மன்துப்: செய்தால் ஸவாப் (நன்மை) கிடைக்கும், ஆனால் தவிர்க்கப்பட்டால் பாவம் இல்லாத;அல்லது வெறுத்தால் குஃப்ர் ஆக அமையாத (செயல், விடயம்); அதப், முஸ்தஹாப்.

மஃரிபா: அறிவு, அல்லாஹ்த்தஆலாவின் தாத் மற்றும் ஸிஃபாத் பற்றி அவ்லியாவின் உள்ளங்களில் உதித்தவை.

மீலாதீ: கிறிஸ்தவ காலம்; கிரிகோரியன் நாட்காட்டி.

மின்பர்: பள்ளிவாயலில் அமைந்துள்ள படிக்கட்டுகளால் ஏறக்கூடிய பிரசங்க மேடை, அங்குதான் குத்பா ஓதப்படும்.

முஆமலாத்: ஃபிக்ஹின் ஒரு பிரிவு.

முபாஹ்: கட்டளையிடப்படாத அல்லது தடை செய்யப்படாத (செயல், விடயம்); அனுமதிக்கப்பட்டது.

முதர்ரிஸ்: மத்ரஸாவில் (இஸ்லாமியப் பள்ளி அல்லது பல்கலைக்கழகத்தில்) பேராசிரியர்.

முபஸ்ஸிர்: தஃப்ஸீரில் பாண்டித்தியம் பெற்ற ஆலிம்.

முப்தீ: ஃபத்வா வழங்க அங்கீகரிக்கப்பட்ட பெரிய ஆலிம்.

முஹாஜிரூன்: மக்கா வெற்றிக்கு முன் இஸ்லாத்தைத் தழுவிய மக்கா மக்கள்.

முஃஜிஸா: ஒரு நபி மூலம் அல்லாஹ்த்தஆலா நிகழ்த்திய அற்புதம்.

முஜ்தஹித்: இஜ்திஹாத் பணியில் ஈடுபடும் ஆற்றல் பெற்ற பெரிய ஆலிம்; முஜ்தஹித் இமாம், முஜ்தஹித் முஃப்தி.

முனாபிக்: ஒரு முஸ்லிமைப் போன்று நடிப்பவர், ஆனால் இஸ்லாத்தை மறுப்பவர்; நயவஞ்சகர்.

முர்ஷித்: வழிகாட்டி, இயக்குனர்.

முதஷாபிஹ்: புரியாத, மறைவான பொருள் கொண்ட (ஒரு ஆயத் அல்லது ஹதீஸ்) ; முதஷாபிஹாத்.

முஷ்ப்பிஹா: அல்லாஹ் தஆலா ஒரு சடப்பொருள் என்று நம்பும் மக்கள்.

நஜ்ஸ்: மார்க்க ரீதியாக தூய்மையற்ற விடயம்.

நப்ஸ்: மார்க்க ரீதியாக மனிதன் தனக்குத்தானே தீங்கு செய்து கொள்ள விரும்பும் ஒரு தூண்டுதல்.

நஸ்: ஒரு ஆயத் அல்லது ஒரு ஹதீஸுக்கான (பொதுச் சொல்); நஸ்.

கழா: ஒரு 'இபாதா' அதன் பரிந்துரைக்கப்பட்ட நேரத்தில் செய்யப்படாது, நேரம் முடிந்த பிறகு அதனை நிறைவேற்றல்.

கிப்லா: (இஸ்லாத்தில், கஃபாவை நோக்கி) தொழுகையின் போது திசை திரும்புதல்

கியாஸ் (அல்-புகஹா): ஒப்புமை; நஸ் மற்றும் இஜ்மாவில் தெளிவாகக் கூறப்படாத ஒரு விஷயத்தை தெளிவாகக் கூறப்பட்ட ஒன்றோடு ஒப்பீடு செய்து (ஒரு முஜ்தஹித் மூலம் எடுக்கப்பட்ட முடிவு); இஜ்திஹாத் (செய்யும் ஒரு வடிவம்) .

குத்ப் அல்-ஆரிபீன்: உயர்ந்த நிலையிலுள்ள ஒரு 'வாலி'.

ரப்: அல்லாஹ் தஆலா, படைப்பாளன் மற்றும் "பயிற்றுவிப்பாளர்."

ரமழான்: முஸ்லிம் நாட்காட்டியில் புனிதமான மாதம்.

ரஸூல்: (பன்மை: ருஸூல்), இறைத்தூதர், நபி; (ரஸூல்-அல்லாஹ்), முஹம்மத், அல்லாஹ் தஆலாவின் இறைத்தூதர்.

ரியாதா: நஃப்ஸ் விரும்புவதைச் செய்யாமல் இருத்தல்; சிக்கனம்.

ஸஹாபா: ஓர் இறைத்தூதரை நம்பிக்கை கொண்ட, அவரைக் கண்ட சமூகம்; அஸ்-ஸஹாபாத் அல்-கிராம், ரஸூலுல்லாஹ்வின் தோழர்கள்.

சலாம்: i) வாழ்த்து, அமைதி, நல்வாழ்த்து; ii) "அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹ்" என்று ஸலாத்தின் (தொழுகையின்) முடிவில் கூறும் சொற்றொடர்.

ஸாலிஹ்: (பன்மை: ஸுலஹா) பக்தியுள்ளவர் மற்றும் பாவங்களிலிருந்து விலகி இருப்பவர்.

ஷாபிஈ: அல்-இமாம் அஷ்-ஷாபிஈ ஆல் நிறுவப்பட்ட மத்ஹபின் (உறுப்பினர்).

ஷெய்க் அல்-இஸ்லாம்: இஸ்லாமிய விவகார அலுவலகத்தின் தலைவர்.

சித்தீக்: இறைத்தூதருக்கு உண்மையாக விசுவாசமுள்ளவர்; உயர் நிலையிலுள்ள ஒரு வாலி.

ஸூபீ: முத்தஸவ்விஃப், ஒரு தஸவ்வுஃப் ஒழுங்கில் பயிற்சி பெற்று நிறைவு பெற்றவர்.

ஸுஹ்பா: தோழமை; ஒரு நபி அல்லது வாலியின் தோழமை.

ஸுலஹா: 'ஸாலிஹ்' இன் பன்மை.

ஸுன்னா: அல்லாஹ் தஆலாவால் கட்டளையிடப்படாத, நபியவர்களால் இபாதாவாக செய்து விரும்பப்பட்ட (செயல், விடயம்). (செய்தால் ஸவாப் (நன்மை) கிடைக்கும்; விட்டு விட்டால் பாவமில்லை; தொடர்ந்து புறக்கணித்து அவநம்பிக்கை கொண்டால் பாவமாகும்); ஸுன்னா: i)

(பர்ளுடன்) ஒட்டுமொத்தமாக அனைத்து ஸுன்னாக்களும் ; ii) (வேதநூல் அல்லது குர்ஆன் அல்-கரீம் உடன்) ஹதீஸ் அஷ்-ஷரீப்; iii) ஃபிக்ஹ், இஸ்லாம்.

ஸூரா(த்): அல்-குர்ஆன் அல்-கரீமின் ஒரு அத்தியாயம்.

தக்வா: அல்லாஹுு தஆலாவுக்கு அஞ்சி; ஹராம்களில் இருந்து விலகி இருத்தல்.

தஸவ்வுஃப்: அறிவு, (தன்னை ஃபிக்ஹிற்குத் தகவமைத்துக் கொண்ட பிறகு) ஈமானைப் பலப்படுத்தும் இறைத்தூதரின் பழக்கவழக்கங்கள், அது ஃபிக்ஹின் நடைமுறையை எளிதாக்குகிறது மற்றும் மஃரிபாவை அடைய உதவுகிறது.

தவாஃப்: ஹஜ்ஜின் போது மக்காவில் கஅபாவைச் சுற்றி வரும் 'இபாதா'.

தவ்பா: பாவ மீட்சி; தவ்பா செய்யுங்கள்: பாவங்களுக்காக அல்லாஹுு தஆலாவிடம் மன்றாடி, அவற்றை மீண்டும் செய்ய மாட்டேன் என்று அவனிடம் உறுதியளியுங்கள்.

தவாப்: (அலகு) வெகுமதி, வாக்குறுதியளிக்கப்பட்டது, மறுமையில் அல்லாஹுு தஆலாவால் அவன் விரும்பியதைச் செய்ததற்கும் சொன்னதற்கும் பிரதிபலனாக வழங்கப்படுவது.

'உலமா': 'ஆலிம்' இன் பன்மை

உம்மா: ஒரு நபியைப் பின்பற்றிய விசுவாசிகள்; உம்மா, முஸ்லிம் உம்மா.

வஹி: அல்லாஹுத்தஆலா மூலம் நபிக்கு வெளிப்படுத்தப்பட்ட அறிவு.

வாஜிப்: நபியவர்களால் ஒருபோதும் தவிர்க்கப்படாத (செயல், விடயம்), எனவே கிட்டத்தட்ட பர்ள் போன்று கட்டாயமான ஒன்று; தவிர்க்கப்படக்கூடாதது; அல்-வாஜிப், வாஜிப் அல்-வுஜூத்: இருப்பு இன்றியமையாதது மற்றும் இல்லாதிருப்பது சாத்தியமற்றது.

வாலி (பன்மை: அவ்லியா) அல்லாஹுு தஆலாவால் நேசிக்கப்பட்டு, காக்கப்பட்ட ஒருவர்.

விலாயா: வாலியாக உள்ள நிலை.

ஸுஹ்த்: உலக விடயங்களில் ஒருவரின் இதயத்தை நிலைநிறுத்தாமல் இருத்தல்; முபாஹானவற்றை விட்டும் (கூட) விலகி இருத்தல்.